# பெரிய எழுத்து

# சித்திரபுத்திரன் கதை

## சித்திரப்படங்களுடன்

ஆர். ஜி. பதி

கம்பெனி,

உ

புகழேந்திப் புலவர் இயற்றிய

# சிறுத்தொண்டபத்தன்

## கதை




பிரசுரித்தவர் :

**ஆர். ஜி. பதி கம்பெனி,**

4, வெங்கட்ராமய்யர் தெரு,

இதன் விலை] சென்னை-1. [பை[illegible]

உ

கடவுள் துணை

# சிறுத்தொண்டபத்தன் கதை

—•※•—

விநாயகர் தோத்திரம்

முன்னின்றுவரந்தாரும் பிள்ளையாரேகந்தா
முக்கணனார்பெற்றெடுத்த முதலோனே
சென்றுதிசைவென்றுவரும் பிள்ளையாரேகந்தா
தீங்கொன்றும்வாராமல் காத்தளிப்பாய்
கொம்பனேவுமைவாழும் சிறியோனேயின்னம்
குஞ்சரமுகந்தனின் மூத்தோனே
நம்பினேன்நாரணன் மருகோனேயின்னம்
நல்லுமையாள்பெற்றெடுத்த நாதனாரே
தம்பியைவுலகேழும் வலமாய்வரச்சொன்ன
தந்தையைவலமாய் வந்தகதிரோனே
ஈசன்மகனாரே பிள்ளையாரேகந்தா
ஈரேழுலகுக்கொரு தனிமுதலே
மாயன்மருகோனே பிள்ளையாரேகந்தா
வளருங்குழந்தைகுரு பரனையா.

சரஸ்வதி தோத்திரம்

வாணிகலைவாணி சரஸ்வதியேயெங்கள்
மறையவனாரிட தேவியம்மா
நான்முகனாருடைய நாவிலேநின்றுதமிழ்
நான்மறையோதுவிக்கும் தேன்மொழியே
சிறுத்தொண்டனார்தமிழ் யானுரைக்கதினம்
சிந்தையில்வந்திருந்து தெளிவுசொல்லாய்
கன்னகரிப்பாலகனும் கலியாணச்சோழனும்
அவனிடவம்மிஷங்கள் மிகவாழ்க
தென்னகரிப்பாலகனும் திருநீற்றுச்சோழனும்
செங்கோல்முறைமைகட்டி யரசாண்டார்
ஆறிலொன்ருகவே வரங்கொண்டான்சோழன்
அனபானராச்சியபாரந் தன்னையாண்டான்
எழிலொன்ருகவேவரங் கொண்டான்சோழன்
எண்ணியராச்சியபாரந் தன்னையாண்டான்

## கதையின் வரலாறு

மன்னவனேஐந்து பாண்டவரைவரில்
வணங்காதமுடிபெற்ற கருணராஜன்
காசிநதிதனிலே போயிருந்தகர்ணனவன்
கையில்சிவலிங்கப் பூசைசெய்தார்
திருசெங்காட்டிலே சின்னமெடுத்தல்லோ
சிறுத்தொண்டனென்று பெயரெடுத்தான்
சிவபூஜையரிபூஜை குருபூஜை மறவாமல்
திருவெண்காட்டுநங்கையுடன் வாழ்ந்திருந்தான்
சிவனர்வரமளித்த கட்டளைப்படியாக
சீராளதேவனையும் பெற்றெடுத்தார்
சீராளதேவனும் பிறந்தேழுவயதாகி
திருப்பள்ளிக்காளாகி தான்படித்தான்
இப்படியிருக்கின்ற நாளையிலே வெண்காட்டா
ளேதுசொல்வாள்தன் புருஷன்முகம்நோக்கி
நீதேடினதிரவியம் வேணதுண்டுபத்தா
திருப்பரங்களுக்கன்னம் நீரிடுங்காண்
பொன்னைத்தான்பொருளைத்தான் தின்னலாமோபத்தா
அன்னங்கொடுங்காணும் அன்பனே
காசுபணத்தைத்தான் தின்னலாமோபத்தா
கடைத்தெருவிலன்னக்கொடி கட்டுமென்றான்
அன்னக்கொடிகட்டுமென்றாய் வெண்காட்டுநங்கையே
அனந்தவுறுதிகள் வேணும்பெண்ணே
உன்மனமானாற்போல் என்மனமானாலே
உறுதிதவம் நிலைக்கும் பெண்ணேயென்றான்
என்மனமானாற்போல் உன்மனமானாலே
எள்ளளவுந்தவங் குறையாது
நானுண்டிக்கிடச்சொன்னால் நீதாதனுக்கிட்டாலே
அதனால்தவங்கள் புண்ணியம்வருவதுண்டோ
அப்படிதவறுவேனே அடியாள்நீர்சொன்னசொல்
ஆதிசிவனறியச் சொல்லுகிறேன்
அருமைபிள்ளையொருவன் சீராளன்தனை
அதிகதவவுறுதி கொள்ளுமென்றார்
அப்படியேயாகுதென்று சிறுதொண்டபத்தனர்
அன்னக்கொடியெடுத்து கட்டுவாரும்

வருவார்க்குப்போவார்க்கும் அமுதுபடைப்பேனென்று
தலைவாசலன்னக்கொடி காட்டுவானும்
நின்றநின்றசங்கமர்க்கு அமுதுபடைப்பேனென்று
நிலையாக அன்னக்கொடி கட்டுவானும்
சென்றசென்றசங்கமர்க்கு அமுதுபடைப்பேனென்று
தெருவிலே அன்னக்கொடி கட்டுவானும்
அன்னக்கொடி நின்றதங்கே வாவென்றழைக்குமாம்
அழகியசிறுதொண்டர் வாசலிலே
அன்னக்கொடிவிருதும் ஆராய்ச்சிப்பொன்மணியும்
அறையுதவனுடைய வாசலிலே
ஆயிரம்பேர்க்கன்னம் சரியாய் நிறைந்தபின்
அரசாட்சிமணியொன்று அடிபடுமாம்
ஐயாயிரம்பேர்க்கன்னம் சரியாய் நிறைந்தாலே
ஐந்துகொத்துநவமணிகளடிபடுமாம்
ஆயிரம்பேர்க்கொருவர் குறைந்ததேயுண்டானால்
அசையாமலாராட்சி மணியிருக்கும்
ஆயிரம்பேர்களுண்டானால் இலையின்பரிகலத்தில்
அவர்களிருவரும் புசித்திடுவார்
ஆயிரம்பேரிலே ஒருவர்குறைத்தாலே
அருந்தார்களிருவரும் ஜலபானம்
விரதங்கள்குறையாமலே சிறுத்தொண்டபத்தனும்
வெண்காட்டுநங்கையுடன் வாழ்ந்திருந்தான்
இப்படியிருக்கின்ற நாளையிலீஸ்வரன்
ஏதுசொல்வாருமையவள் தன்னுடனே
எனக்குநிகரானோ ரில்லையென் றுதொண்டன்
எடுத்தானே அன்னக்கொடி விருதுமணி
அன்னக்கொடிவிருதை அறுப்போமேபெண்ணே
அவனுடையஅன்புபக்தி சோதிப்போமே
அன்னக்கொடிவிருதை அறுப்பாரோசுவாமி
அவனுடையன ன்புபக்தி சோதியென்றாள்
பக்தனைப்போவேனடி பார்வதியுமையே
சித்தனைப்போவேனடி சிவத்தெளிவே
பக்தனைப்போனாலும் தம்பிரானேவுமைமை
பகவனென்றறியார்கள் மானிடர்கள்
சித்தனைப்போனாலும் தம்பிரானேசிவனே
சென்றேரவொட்டார்கள் மானிடர்கள்

மண்ணிலுள்ளமனிதர்கள் மகிழும்படியாக
வைரவர்வேஷத்தைக் கொள்ளுமென்றார்
கண்டவர்களுனைப்பார்த்து மகிழும்படியாகக்
கங்காளவேஷத்தைக் கொள்ளுமென்றார்
உமையவள்சொல்புத்தி நிசமென்றுயெண்ணி
உத்திராட்சத்தாவடந் தரிப்பாராம்
கோங்குகுருந்தமலர் சாத்துவாராமையர்
குவளம்பூவன்னிமலே வன்னிப்பாராம்
வேங்கையுடனே நல்ல நானலும்பன்னீரும்
விதவிதபுஷ்பமாக தரிப்பாராம்
விரித்தசடையும் வெண் பொறிகள்வொளியும்
மேலெங்குமேறிவிட்ட விற்படுமே
ஆதித்தன்முகம் அதிமுத்துதாவடமும்
அலங்காரத்துடனே குண்டலமும்
வடித்தபொருளென்றே சிறுத்தொண்டதேவனே
வன்மைகள்போதிக்க வேண்டுமென்று
கலியுகதிசைநோக்கி நடக்குமளவினில்
காலிலேயிட்டதொரு பொன்சிலம்பு
காலிலேயிட்டதொரு பொன்சிலம்பாமையர்
மார்பிலேபூண்டதொரு சங்கநாதம்
கலீர்கலீரென்று நடப்பாராமையர்
கால்பிணிநூல்பிணி வாராமலே
காணச்சிவன்பாதம் வேணியில்பார்வதி
காவேரியார்வந் துள்ளங்குளிர்வாளாம்
கொங்குகுடகிலே மழைபொழியவெள்ளம்
குமரிகாவேரிநதி வெள்ளம்பெருக
முல்லைவனத்துமலைக் கொள்ளைகொண்டுவெள்ளம்
மூங்கில்வனத்துக்களை முறிக்கடித்து
சந்தனமரத்தை தறித்தடுக்கிவெள்ளம்
தாருள்ளவாழை நடத்திக்கொண்டு
மஞ்சளிஞ்சிமணமுள்ள மல்லிகையுடன்
மாதளங்காய்வூமத்தை மிதந்திடுமாம்
மேட்டிலேயுள்ளதொரு மேனிபூசுமுதலை
முழிகள்சிவக்கசெங்கை மிதந்திடுமாம்
காட்டிலேவாழுகின்ற கரடிபுலிசெந்நாய்
கண்கள்சிவக்கசெங்கை மிதந்திடுமாம்

கல்லுருகிவெள்ளிமலை யுருகிக்கைலாச
பர்வதத்தைவலம்வந்து சூழ்ந்திடுமாம்
அத்தனையும்வகுத்தல்லோ ஐயருடபாதத்தை
புஷ்பமாகநின்றங்கே பணிந்திடுமாம்
வந்ததொருகாவேரியை கையாலேயமர்த்தி
தம்பிரான்கரைவிட்டு யேறுவாராம்
அப்பன்சிறுத்தொண்டன் மனமறியசுவாமி
யாருமில்லாதசிவ னொருவனுனர்
அந்நேரம்சிவனடியார்களைக்காணுதான்
அவருடதேவியுட னேதுசொல்வான்
இந்நேரந்திருபேருக் காயிரம்பேர்க்கன்னம்
ஈந்திடுவோம்பெண்ணே நாமென்னசெய்வோம்
இன்றைக்கொருவரும் இல்லாமற்போச்சுது
இப்பொழுதேதேடிக்கொண்டு நான்வருவேன்
வந்ததொருசங்கமர்க் கன்னங்கொடுத்துபெண்ணே
மலர்பாதம்பணிந்தே தொழுதிடவும்
திருபெருமடம்களைத் தேடப்போனனன்பன்
சிவனுருமந்தவேளை வருகலுற்றார்
திருவடிக்கமலமுந் திருச்சிலம்போசையும்
கையினில்சூலமும் டமரகமும்
ஆடியடமரகம் சாடிப்பாராமையர்
அண்டபகிரண்ட மதிர்ந்திடவே
திருக்கையில்டமரகம் சாடிப்பாராமையர்
தெய்வலோகபுவனங்க ளதிர்ந்திடவே
தெருவிலேவிளையாடும் சிறுபிள்ளைகள்தம்பி
சிறுத்தொண்டன்மடமேது சொல்லுமென்றார்
அறியார்க்கறியவேதான் தம்பிரானேசிவனே
அதோவல்லோதோணுதுபார் அன்னக்கொடி
தெரியார்க்குத்தெரியவேதான் தம்பிரானேசிவனே
தெருவிலேஅன்னக்கொடி தோணுதுபார்
சிறுத்தொண்டனரன்மனை தெருவாசல்வந்து நின்று
ஜெயகண்டிகைவாத்தியத்தை தானடித்தார்
அதுகேட்டாளம்மை வெண்காட்டுநங்கையுடன்
சந்தனநங்கையுந் தானுமாக
சுத்திவந்தாரம்மை சூழவந்து நின்று
சீர்பாதம்போற்றியென்று தாள்பணிந்தாள்

வந்தபொழுதிலே தெண்டனிட்டாளம்மை
வருந்தியேமடத்திலே அழுதுஞ்சொன்னுள்
கண்டபொழுதிலே தெண்டனிட்டாளம்மை
கடுகியேமடத்திலே அழுதுஞ்சொன்னுள்
உருக்கியநெய்களுடன் பொரிக்கறியாம்பின்னும்
உளுந்துவடைகளுடன் மாங்கனியும்
கொத்தமாங்கனிபலாக் கனியுடனேவமுது
கொள்ளவேமடத்திற்கு வாருமையா
வந்துபணிந்ததொரு வெண்காட்டுநங்கையை
வாயாரவாழ்த்தியே பேர்க்கொடுத்தார்
மங்கிலியம்வாழ்ந்திருப்பாய் மாதாவேதாயே
மகாதேவரருள்பாதம் போற்றிவாழ்வாய்
சந்தானம்வாழ்ந்திருப்பாய் மாதாவேதாயே
சாகாதஆண்பிள்ளையை பெற்றுவாழ்வாய்
நீயுமுன்கணவனும் உன்னுடையசுற்றத்தாரும்
உமையவரருள்பாதம் போற்றிவாழ்வாய்
நீதானிங்கேவந்து கும்பிட்டாயேதாயே
உன்கணவனெங்கேயென்று கேட்பாரும்
இரப்பார்பரப்பாராம் ஈசனடியாரை
இட்டுவாப்போனுர் அடியார்களை
ஆளனில்லாமனையி லுண்ணேமம்மாதாயே
அவ்விடத்திலன்னமிட்டால் கொள்ளேனென்றூர்
புருஷனில்லாமனையி லுண்ணேமம்மாதாயே
பொற்கலத்திலன்னமிட்டால் கொள்ளேனென்றூர்
தருக்கிலேபொன்னிலே தங்கக்கட்டித்தந்தாலுந்
தலைவனில்லாமனையி லுண்ணேனென்றூர்
உருக்கியபொன்னிலே ஒருபடிதந்தாலும்
உளவனில்லாமனைதனி லுண்ணேனென்றூர்
எங்கேயெழுந்தருளி யிருப்பிரோவையா
அங்கேவாச்சொல்லுகிற னும்மடியாரை
கோவில்மதிலோரம் சார்ந்திருப்பேனம்மா
கோலமானதிருஆத்தி அடியிருப்பேன்
அப்படியேநல்லதென்று வெண்காட்டுநங்கைக்
கருளியதிருஆத்தி அடிவந்தார்
திருஆத்திமாத்தடியில் தேடிவந்தாரய்யர்
சிறுபுலியாசனத்தைப் போட்டமர்ந்தார்

ஆத்திமரத்தடியில் வீற்றிருந்தபொழுதிலே
　　காற்றுமழைகளும் உண்டாச்சு
காற்றுமழைகளும் கடுங்காற்றுமின்ன
　　கடுகியமங்கிளங்கள் சேறிடவே
இலைகள்கருகிநின்ற திருவையாத்திமரம்
　　இலைதழைத்தோர்மரம் நிழலிடுமாம்
பூவாதேநின்றதொரு கயிலாயஆத்திமரம்
　　பூத்தல்லோபுட்பமாய்ச் சொரிந்திடுமாம்
காயாதநின்றதொரு கருவையாத்திமரம்
　　காய்த்துகனிபழமாய்ச் சொரிந்திடுமாம்
ஒருபக்கம்செண்பகம் பூர்த்திடுமாம்
　　ஒருபக்கம்பாதிரி பூர்த்திடுமாம்
ஒருபக்கம்மல்லிகைப்பூ பூர்த்திடுமாம்
　　ஒருபக்கமிருவாட்சி பூர்த்திடிமாம்
அப்படிக்கொற்றதொரு ஆத்திமரத்தண்டை
　　ஐயர்பரமசிவன் வீற்றிருந்தார்
தேடப்போனவந்த சிறுத்தொண்டதேவனையன்
　　திகைத்து மயங்கிடவே மடத்தில்வந்தான்
கத்திதாராய்பெண்ணே நீ கத்திதர்ராயடிபெண்ணே
　　கழுத்தையறுத்துக்கொள்ள கத்திதாராய்
ஒற்றியூர்சிற்றம்பலம் ஓடினேன் தேடினேன்
　　அங்கேயொருசங்கமரைக் கண்டதில்லை
குற்றாலங்குறநாடு ஓடினேன்தேடினேன்
　　குருபரனவரைக் கண்டதில்லை
வண்ணாப்பெண்ணுக்காக மணம்புகுந்தாரையா
　　அண்ணாமலைப்பழனி தேடிவந்தேன்
அண்ணாமலைப்பழனி ஓடினேன்தேடினேன்
　　அங்கேயொருசங்கமரைக் கண்டதில்லை
கழுக்கள்வளலமாய்வந்து நயினாயினைபூசிக்கும்
　　திருக்கழுகுன்றபதியே தேடிவந்தேன்
திருக்கழுக்குன்றபதியே ஓடினேன்தேடினேன்
　　சிவபூஜைசெய்வாரைக் கண்டதில்லை
குளங்கள்குளக்கரைகள் ஓடினேன்தேடினேன்
　　ஒருமகாதேவரையுங் கண்டதில்லை
மடங்கள்மடப்பள்ளிகள் ஓடினேன்தேடினேன்
　　ஒருமகாதேவரையுங் கண்டதில்லை

ஆயிரஞ்சங்கமருக் கமுதளிப்போம்பெண்ணே
அவர்கள்வைத்தபரிகலத்தை யடியேன்கொள்வே [ன்
இன்றைக்கொருசங்கமரும் வாருமற்போனது
ஈஸ்வரனார்தம்முடைய செயலிதுவோ
விரதங்கள்முடியாமல் போச்சுதேயாமாகில்
விடுவேனேயென்னுடைய வுயிரையென்றார்
கத்திதாராய்பெண்ணே நீகத்திதாராய்
கழுத்தையறிந்துகொள்ள கத்திதாராய்
கத்தியேன்கேட்கிறீர் அன்பனாரேபத்தா
கருமபலன்கள்தன்னை தேடுகின்றீர்
மஞ்சாறுபெருகிய பொய்கையிலேபெண்ணே
மடுவிலேயடைந்தசெந் தாமரைபோல்
துஞ்சாமல்முகங்குளிர்ந் திருந்தாரேபெண்ணே
வந்தாருண்டோ திருப்பேர் மடந்தனில்
வந்தாருண்டன்பனே வந்தாருண்டொருவர்
மகாதேவர்தன்னைப்போல் வந்தாருண்டு
வந்தவொருசங்கமனை யெங்கேயோபோகவிட்டு
வாழ்ந்தவலக்கரமோ பேசுகிறாய்
என்தாரமென்றல்லோ நானிருந்தேன்பெண்ணே
பிறர்தாரமானதை நானறியேன்
வீட்டிலில்லாளென்றல்லோ நானிருந்தேன்பெண்ணே
வேசியாளானதை நானறியேன்
சிவனடியாளென்றல்லோ நானிருந்தேன்பெண்ணே
சிவத்துரோகியானதை நானறியேன்
உன்தாரமென்பதற்கு ஒருகுறைவுமில்லை
உத்தமரேயொன்றுசொல்லக் கேளுமென்றாள்
பள்ளியிற்படிக்கிற சீராளன்தன்னை
பதறாதேயொருவார்த்தை சொல்லுகிறேன்
வந்தார்வந்தாரொரு சங்கமனார்வந்தார்
மகாதேவர்தன்னைப்போல வந்தாரையா
அவரேநமதுவீட்டில் அமுதுண்பாராமாகில்
ஆயிரம்சங்கமர்க்கு ஒவ்வுமென்றாள்
அங்கொருவர்க்கமுது நாம் கொடுப்பேமேயாகில்
ஒருகோடிசங்கமர்க்கு ஒவ்வுமென்றாள்
அவரைக்கண்டபொழுதில் தெண்டனிட்டடியேன்
கடுகியேமடத்தில் அமுதுசொன்னேன்

வந்தபொழுதிலே தெண்டனிட்டேனடியேன்
வருந்தியேமடத்தில் அமுதுசொன்னேன்
ஆளனில்லாமடந்தனி லுண்ணேனென்றுரையயர்
அவ்விடத்திலன்னமிட்டால் கொள்ளோமென்றார்
கோவில்மதிலோரஞ் சேர்ந்திருப்பேனென்றார்
கோலமானதிருவாத்தி யடிதனிலே
அத்திமரத்தடியில் வீற்றிருப்பேனென்றார்
அன்பனார்வந்தாலங்கே வரவேசொன்னார்
சாழத்தாலுலைகட்டி சமையடிபெண்ணே நீ
கடுகியேசங்கமரைக் கொண்டுவாரேன்

சிறுத்தொண்டபத்தன் சங்கமவேஷம்பூண்ட
சுவாமியைத் தேடப்போகிறது

ஒருசுற்றுவேஷ்டியும் தரித்தாராமன்பன்
ஒருபக்கப் பூநூலே போடுவாராம் [ன்
திருவெண்ணீறைந்தெழுத்தை யோதுவானும்தொண்ட
திருக்கொன்றைமாலையொன்று போடுவாராம்
திருக்கொன்றைமாலையொன்று மார்பிலசைந்தாட
திருவாத்திதிசைநோக்கி நடப்பாராம்
திருவாத்திமரந்தனில் தேடிவந்துபத்தன்
தெண்டநமஸ்காரஞ் செய்குவானும்
ஆதியேயுன்பாதம் போற்றிபோற்றிசிவனே
அம்பலவாணனாரே போற்றியையா
சோதியேயுன்பாதம் போற்றிபோற்றிசிவனே
சிதம்பரதேவனாரே போற்றியையா
திருக்கொன்றைமாலையொன்று மார்பிலசைந்தாட
திருவாத்திதிசைநோக்கி நடப்பாராம்
திருவாத்திமரந்தன்னை தேடிவந்துபத்தன்
தெண்டநமஸ்காரம் செய்குவானும்

சிவவேடம் பூண்ட பண்டாரத்தை சிறுத்தொண்ட
பத்தன் காணுதல்

ஆதியேவுன்பாதம் போற்றிபோற்றிசிவனே
அம்பலவாணனாரே போற்றியையா
சோதியேவுன்பாதம் போற்றிபோற்றிசிவனே
சிதம்பரதேவனாரே போற்றியைய்யா

ஆதியேயமுதுண்ண வாருமையாசிவனே
அரனுரேயமுதுண்ண எழுந்தருளும்
சோதியேயமுதுண்ண எழுந்தருளும்தேவா
சிதம்பரதேவனுரே வாருமையா
போற்றியிடுகிற சத்தந்தன்னைகேட்டு
புலிமுகவாணனுர் முகம்பார்த்தார்
அழுதகள்ளாதொழுதகள்ளா எழுந்திரடாபத்தா
ஆசாரக்கள்ளனுரே எழுந்திரடா
கும்பிடுங்கள்ளா நீ எழுந்திரடாபத்தா
குழத்திடுங்கள்ளா நீ யெழுந்திருப்பத்தா
அன்புள்ளகள்ளா நீ யெழுந்திரும்பத்தா
ஆசாரமுள்ளவனே யெழுந்திரடா
உன்னைத்தானு சிறுத்தொண்டனுரென்பது
உலகமெல்லாம் பெரியவார்த்தையானதுவும்
ஆமாங்காணுமாங்கான் தம்பிரானேசிவனே
அகத்துகருமப்படி யடியேனென்ருன்
அமுதுக்கழைக்கவந்த சிறுதொண்டபத்தா நீ
அகத்திலேயென்னகறி சமைத்தாயோடா
விரும்பியழைக்கிருயே சிறுதொண்டபத்தா நீ
வீட்டிலேயென்னகறி சமைத்தாயோடா
மண்டலத்தில்மனிதர்கள் வழங்குங்கறிவகை
மண்டலத்தில்சமைத்திருக்கும் சாமியென்ருன்
இச்சையானகறிவகை இவ்வுலகிலுண்டானேர்
ஏதேதோ பலவகைபுசித்திடுவார்
உந்தன்மடந்தனிலே சமைக்குங்கறிவகை
உறுதியாகவே நீதான் சொல்லுமென்ருர்
ஆனுலுரைக்கிறேன் தம்பிரானேசிவனே
அறியவேகறிவகை சொல்லுகிறேன்

சிறுத்தொண்டபத்தன் சிவவேடம் பூண்ட பண்டாரத்துக்கு
பதார்த்தவகை சொல்லல்

பூசனிக்காய்கறிவகை சமைத்திருக்கும்மடத்தில்
புடலங்காய்கறிவகை சமைத்திருக்கும்சுவாமி
பாவற்காய்கறிவகை சமைத்திருக்கும்சுவாமி
பயத்தங்காய்கறிவ்கை சமைத்திருக்கும்சுவாமி
வாழைக்காய்கறிவகை சமைத்திருக்கும்சுவாமி
வழுதலங்காய்பச்சடி செய்திருக்கும்

பீர்க்கங்காய்கறிவகை சமைத்திருக்குஞ்சுவாமி
துவட்டல்செய்தவரைக்காய் பொரித்திருக்கும்
இத்தனைகறிவகைகள் எந்தன்மடத்திலே
இப்போதுசமைத்திருக்கும் வாருமையா
போதும்போதும்சிறுத்தொண்டா சொன்னகறிவகை
பொல்லாதவிதங்களைச் சொன்னாயடா
பூசனிக்காயாவது அன்பனாரேகேளும்
அய்யருடதிருத்தொப்பை வயிரல்லவோ
புடலங்காயாவது அன்பனாரேகேளும்
அய்யருடஉச்சிசடை தானல்லவோடா
பாவற்காயானது அன்பனாரேகேளும்
ஐயருடருத்திராட்ச மாலையடா
அவரைக்காய்கறி பொறித்தேனென்றாயன்பா
ஐயருடபத்துவிரல் நகமல்லவோ
சுரைக்காய்கூட்டமுது செய்தேனென்றாய்பத்தா
ஐயருடகமண்டலம் தானல்லவோ
பீர்க்கங்காயாவது அன்பனாரேகேளும்
ஐயருடவிபூதியை தானல்லவோ
கத்தரிக்காயாவது அன்பனாரேகேளும்
ஐயருடதிருபூஜைமணி தானல்லவோ
வாழைக்காயாவது அன்பனாரேகேளும்
ஐயருடதிருநெற்றி சமைத்தாயோடா
நன்றாய்ச்சுநன்றாய்ச்சு சிறுதொண்டபத்தா நீ
நல்லவிதக்கறிகள் சொன்னாயோடா
என்னையறுத்துபத்தர் யெனக்குமேயிட்டு நீ
என்னையும்கொல்லவகை பார்த்தாயோடா
இத்தனைகறிவகை சமைத்துக்கொல்லவேதான்
எத்தனைபரதேசியைக் கொன்றாயோடா
தன்னையறுத்துதவ முணர்ந்தமகத்துளோ
தானரிந்தரிந்த கறிவகை
மீதெல்லாம்வேண்டாமல் போனாலுமைய்ரே
இன்னமொருவிதங்களைச் சொல்லுமென்றார்
ஆட்டிலொருகோடி நான்பொரிப்பேன் சிவனே
மாட்டிலொருகோடி நான்பொரிப்பேன்
பாலுண்டுபழமுண்டு பண்டாரமேசிவனே
பசியாறிப்போகவல்லோ வாருமென்றான்

ஆட்டைத்தான்கொல்லுகிற அரும்பாவிமனையிலே
அறியாதேயமுதுண்ண வந்தேனென்ருர்
மாட்டைத்தான்கொல்லுகிற மாபாவியிடத்தில்
மத்தியானவிருந்துக்கு வந்தேனென்ருர்
ஆட்டையுங்கொல்வதில்லை மாட்டையுங்கொல்வதில்லை
ஆவும்பசுக்களையும் நானறியேன்
புல்லைதின்னுமது நீரைக்குடித்தல்லோ
போததனங்கள் தம்மைக்கொண்டாடும்
அல்லற்படாமலே மேய்ந்துவந்தொடுங்கும்
ஆவும்பசுக்களையும் நானறியேன்
காட்டுமாங்கனியும் கொத்துமாங்கனிகளும்
சர்க்கரைகற்கண்டு பலாக்கனியும்
பாலுண்டுபழமுண்டு தம்பிரானே சிவனே
பசியாறிப்போகவல்லோ வாருமையா
பாலும்பழமெனக்கு வேண்டாமோடாபத்தா
பந்துஜனமுண்டோடாபத்தா யிவ்வூரிலே
இச்சையானகறிவகை பித்தனுரோ இன்னம்
எடுத்துரைத்தால் வந்துதருவேனென்ருன்
சிவவேடம்பூண்ட பரமசிவன் சிறுத்தொண்டபத்தனை
பிள்ளைகறி கேட்பது
உமக்கும்நமக்கும் நலம்பெறவேணுமென்ருல்
இளமனிதன்கறி வேணுமென்ருர்
அருளச்சொன்னபடி காப்பாயோபத்தா
அறிவுடன் நினைவாய் நீ கேட்பாயடா
ஒருதாய்க்கொருபிள்ளை யாகவேணும்பத்தா
உண்மையானபாலகனுய் வேணுமடா
தாய்க்குத்தலைமகனுய் வேணுமடாபத்தா
தான்பெற்றபாலகனுய் வேணுமடா
வயதிலே அஞ்சாக வேணுமடாபத்தா
வம்மிசபதினேராய் வேணுமடா
குடிக்குஒருவனுய் வேணுமடாபத்தா
கிளைக்குமொருவனுய் வேணுமடா
காலையிலேநாலுவேதம் ஓதவேண்டும்பத்தா
சீராளதேவனுக வேண்டுமடா
இப்படிக்கொத்தபிள்ளை யிருந்ததேயுண்டானுல்
இட்சணமுண்ண நான்வருவேனென்ருர்

தப்பிரான் சொல்லைக்கேட்டு சிறுதொண்டபத்தன்
தவக்குறைவாராமல் ஏதுசொல்வான்
அப்படிக்கொற்றபிள்ளை அடியேன் தருகிறேன்
ஆரானாலுமசெய்யும்வகை சொல்லுமென்றார்
உச்சிதமாகவே உடனேபள்ளியிற்சென்று
உண்ணும்வகையாய்ப்பிள்ளையை யழைத்துவந்து
மஞ்சள் நீர்ச்சாலையிலே வசந்த நீர்ப்பாலித்து
மாதாமடியில்வைத்து திலர்தமிட்டு
பொட்டிட்டுமையிட்டு தாயார்கரத்தாலே
பொன்தொட்டிலிலே தான்வளர்த்தி
தாலாட்டிபிள்ளைதனை தாயார்கரத்தாலே
தங்கப்பலகையினிற் தானமர்த்தி
தாயாரும்கைகாலும் பிடிக்கவேண்டும்பத்தா
பெற்றதகப்பனார் கழுத்தையறுக்கவேண்டும்
கழுத்தையறுத்து கழன்றவுதிரத்தை
கறிசட்டிதனிலேவேறே வாங்கவேண்டும்
உரலிலேதலைபோட்டு துவைக்கவேண்டும்பத்தா
உருப்பானமூளைபத்து வாங்கவேண்டும்
கண்ணுக்கறிகள்வேறே பொறிக்கவேணும்பத்தா
கால்கறிகள்வேறே சமைக்கவேண்டும்
பதினொருவிதமாக தலைக்கறிதன்னாலே
பக்குவமாகவே சமைக்கவேண்டும்
அறுத்தமுண்டந்தனை குளிப்பாட்டித்தாயார்
குழிகாலுசட்டியில்வைத்து அவிக்கவேணும்
அவித்தமுண்டந்தனை பெற்றதாயாரெடுத்து
அறுவாமனையில்வைத்து அரியவேண்டும்
ஈரல்பிளந்துவேறே சமைக்கவேணும்பத்தா
யிரைச்சிவிதவிதமாய் பொரிக்கவேணும்
நஞ்சிநினைகுடல் வாங்கவேணும்பத்தா
நினைகுடலொருசட்டி சமைக்கவேண்டும்
பொன்பூண்டமார்பையும் நெஞ்சாங்குடலையும்
பொறிக்கறியாகவே சமைக்கவேண்டும்
முழங்காலெலும்புகள் முன்னெலும்பெல்லாம்
மிளகுநீராகவே செய்யவேண்டும்
கணுக்காலெலும்புகள் காலெலும்பெல்லாம்
கமுகமுவர்ணமாகப் பொரிக்கவேண்டும்

பாடகமிட்டிருந்த கணுக்காலிரண்டையும்
பட்டாடைமேல்வைத்து தரிக்கவேண்டும்
மோதிரமிட்டிருந்த மூன்விரல்பத்தையும்
முழுமுழுவர்னமாகப் பொரிக்கவேண்டும்
போானபெருந்துடை சதைகள்வகுத்தல்லோ
பொன்போல்பொரித்தெடுத்து சமைக்கவேண்டும்
மார்புதசைகள்வேறே பொரிக்கவேண்டும்
வலதுதுடைகள்வேறே பொரிக்கவேண்டும்
ஆறுபொரியலும் அவட்டலும்துவட்டலும்
பணியார்விதத்துடன் பலவகையிலும்
எண்ணியெண்ணியொரு யிருபத்தொருவிதமாக
இன்பமாகயெந்தனுக்கு சமைக்கவேணும்
பலபலவிதக்கறிகள் சமைக்கவேணும்பத்தா
மூணுபாண்டம் வேறேசாதம் சமைக்கவேண்டும்
இப்படிக்கறிதேடி படைப்பார்களெங்கள்
சித்திரப்புவியிலுள்ள மனிதரெல்லாம்
பெற்றபோதுண்டான சந்தோஷபோல
பிள்ளையை அழைக்கவேணுமடா
அழைக்கும்போதுண்டான சந்தோஷம்போல
பிள்ளையைஅறுக்கும் போதுண்டாகவேணுமடா
அறுக்கும்போதுண்டான சந்தோஷப்போல
அவிக்கும்போதுண்டாக வேணுமடா
அவிக்கும்போதுண்டான சந்தோஷம்போல
அறியும்போதுண்டாக வேணுமடா
சமைக்கும்போதுண்டான சந்தோஷம்போல
அமுதுபடைக்கும்போ துண்டாகவேணுமடா
அமுதுகறியுமாக நிளவுமளவிலே
தமிழுங்கிரந்தமுமாய் மணக்கவேண்டும்
தமிழுங்கிரந்தமுமாய் மணக்கவேண்டுமமடா
தையநல்லாள்சம்மதிக்க வேண்டுமடா
அப்படிக்குகறிதேடி படைக்கிறேன்சுவாமி
அடியனுர்மடத்துக்கு வாருமையா
காலங்கலிகாலம் கெட்டகாலம்பத்தா
கடன்சொன்னவார்த்தையை மறக்குங்காலம்
தம்பியைத்தமையன் பகையாளிபெற்ற
தானேபெரியவன் கோலமாகி

காடுசிறுத்தல்லோ நாடுபெறுத்து
கடுகியேவருகிற கலியுகம்
குருவிருந்த ஆசனத்தில் சிஷன்யிருந்து
கூறுங்கலையுரைக்கும் கொடியகாலம்
கொடுத்தகடன்கேழ்ப்பாரை கொல்லும்காலம்பத்தா
கூசாமல்பெரியோரை வையுங்காலம்
பெற்றதாய்புத்திசொன்ன லுதைக்கும்காலம்கொண்ட
பெண்ஜாதிமயிர்பிடித்தால் பொறுக்குங்காலம்
கற்றவரைக்கல்லா லெரியும்காலம்பத்தா
காலம்கலியுக காலந்தானே
பிள்ளைகறியுஞ்சோறும் போடுகிறேனென்று
போதவேயெமக்கு நீர்தாரைவாரும்
சத்தியப்பிரமாணிக்கச் செய்யவேண்டுமோசுவாமி
ஓமென்றசொல்லுனக்குப் போதாதோ
அய்யர்க்கைதிரிச்சங்கு செயகண்டிவாங்கி
காவேரிசலந்தன்னைக் கொண்டுவந்தார்
ஐயர்கைமேலுமாய் அன்பன்கைதாழவுமாய்
ஐயர்கைமேலுமாய் அன்பன்கைதாழ்வுமாய்
அள்ளியேவிபூதி தானளித்தார்
அள்ளியெமக்குநீர் தாரைவாரும்
உச்சிக்குமுன்னலே அமுதுபடைப்பேனென்று
சத்தியமாய்முகந்து நீர் தாரைவார்த்தால்
உச்சியாலோரடி தாழ்ந்ததேயுண்டானல்
உண்ணேனடா உன்னிடமனையிடத்தில்
உச்சிக்குமுன்னலே அமுதுபடைப்பேனென்று
சத்தியமாய்முகந்து நீர் தாரைவார்ந்தால்
மூக்காலுமுகந்து நீர் வார்த்தசிறுத்தொண்டன்
நடந்தானே திருமடந் தன்னைநோக்கி
வேண்டியமடத்துக்கு நடக்குமளவிலே
வேறேகிலேசங்களை மனதிலெண்ணுன்
பெண்ஜாதிவெண்காட்டாள் மனதையறியாமலே
பிள்ளைக்கறியுஞ்சோறுஞ் சொல்லிவந்தேன்
மனையாட்டிவெண்காட்டாள் மனதையறியாமல்
மைந்தன்கறியுஞ்சோறுஞ் சொல்லிவந்தேன்
பெற்றவருத்தந்தன்னை பார்ப்பாளோ அவள்
பிள்ளைதன்னை நானறியே னென்பாளோதான்

வளர்த்த அருமைதன்னை பார்ப்பாளோதான்
　　அவள்மைந்தனை நானறியேனென்பாளோதான்
அடிகெட்டேன்படிகெட்டே னென்பாளோதான்
　　அசலார்கள்சொல்பேச்சைக் கேட்பாளோதான்
எடுத்தவக்குறைக ளின்றைக்குப்பொய்யானு
　　விட்சணமேயுயிரை விடுவோமென்று
மனதில்கிலேசமெண்ணி வருகிறவழிதனிலே
　　வந்தமர்ந்தார்விக்கின விநாயகரும்
தொப்பைமுப்புரிநூல் லிலங்கிவர அவர்
　　தும்பிக்கையிருபுறமும் குலுங்கிவர
சங்குசக்கரம் சதுர்புசமீதிலங்க
　　மேலில்தரித்தவுத்திரம் துவண்டிலங்க
திங்களிலங்கத் திருநயனமிலங்கிட
　　செஞ்சிலம்போசை நின்றுகுலுங்கிட
வந்தமனதார சிறுத்தொண்டன்வரும்வழி
　　வழங்கும்பிரார்த்தனைகள் செய்வாரென்று
கண்டானேசிறுத்தொண்டன் பிள்ளையார்கோவில்
　　என்கலிகள் குறைதீர்க்கவந்தவரே
மூக்காலம்வலம்வந்து மூணுகுட்டுகுட்டி
　　மூஷிகவாகனரே தஞ்சமையா
என்பெண்ஜாதிமனம் என்மனதுபோலானால்
　　பொற்குடங்கவிழ்க்கிறேன் பிள்ளையாரே
பொற்குடங்கவிழ்க்கிறேன் பிள்ளையாரே
　　போதபொரியவல் படைத்திடுவேன்
கூரையால்கட்டியிருந்த பிள்ளையார்கோவில்தன்னை
　　கல்லாலேகட்டிவைப்பேன் பிள்ளையாரே
கல்லாலேகட்டிவைத்த பிள்ளையார்கோவிலே
　　செம்பாலேகட்டிவைப்பேன் பிள்ளையாரே
செம்பாலேகட்டிவைத்த பிள்ளையார்கோவிலே
　　தங்கத்தாலேகட்டிவைப்பேன் பிள்ளையாரே
தங்கத்தினுலிழைத்த பிள்ளையார்கோவிலே
　　மாணிக்கத்தாலிழைப்பேன் பிள்ளையாரே
சாலக்கிண்ணிபாலக்கிண்ணி பதித்திடுவேனுமக்கு
　　தையநல்லாள்சம்மதிக்க வேணுமையா
பொற்குடங்கவிக்கிறேன் பிள்ளையாரேஉமக்கு
　　என்பெண்ஜாதி சம்மதிக்கவேணுமையா

இப்படியாகவே பிள்ளையாரைவேண்டி
வெண்காட்டுநங்கைதன்னை மிகவருந்தி
திரும்பிவருகையில் சிறுத்தொண்டபத்தன்
திருவெண்காட்டுநங்கை மனதிலெண்ணுள்
தம்பிரானைத்தேடிப்போன அன்பரைக்காணுமென்று
தானுமேதேடியே வருகலுற்ருள்
வேண்டியமடத்துக்கினி னடக்குமளவில்
வெண்காட்டுநங்கையம்மா ளெதிரேவந்தாள்
கண்டான்சிறுத்தொண்டன் வெண்காட்டுநங்கையை
கைதொழுதாளம்மன் கணவன்முன்னே
பொற்றுரும்பைக்கிள்ளப் போடுவானும்பத்தன்
பொற்றுரும்பாகமனதை சோதிப்பானும்
பொன்னுனமேனியெல்லாம் புழுதிபடிந்ததென்று
பொய்சொல்லிமெய்யாகத் துடைப்பானும்
தாலிசரட்டைமெள்ளத் தடவுவானும்பத்தன்
தலைமேல்துரும்பைக்கையா லெடுப்பானும்
கணவன்மாரிசங்களைக் கண்டல்லோவெண்காட்டாள்
கலுக்கென்றெடுத்துமவ ளேதுசொல்வாள்
அஞ்சுபிராயத்திலே கையுந்தந்தேன்பத்தா
ஆயிரம்பெருந்தெருவு வலமாய்வந்தேன்
சின்னவயதினிலே கைதந்தேனடியேன்
சீராளதேவனையும் பெற்றெடுத்தேன்
பாலகன்சீராளன் பிறந்துசமர்த்தனும்
பள்ளிக்குள்விசித்திரனும் தானவளர்ந்தான்
இதுநடுவிலிதுவளவி லில்லாதகாரியம்
ஏத்தவந்தகாரிய மேதோவென்ருள்
ஏத்தவந்தகாரியங்கள் மெத்தமெத்தபெண்ணே
உன்னுலேயென்னுலே முடியாது
முடியாதகாரியங்கள் முடியாதுபத்தா
முளையில்லாப்பயிரது விளையாது
இடியிடித்தால்மழை பொழியாதநாட்டிலே
யெழுதாதசித்திரங்க ளுலகிலுண்டோ
கட்டியடியாத கள்ளனுண்டோபத்தா
கலங்கித்தெளியாத தண்ணீருண்டோ
தாரையறியாதகுளமுமுண்டோ பத்தாவே
தமனையறியாம லுயிர்போமோ

என்னையறியாதகாரியங்கள் வேறுமுண்டோ
யேத்தவத்தகாரியங்கள் சொல்லுமென்றாள்
தம்பிரான்சொன்னசொல்லை கேட்டையானல்பெண்
சலிப்பாக விழுந்தழுவாயடி [ணே
மறப்பாயோமறந் திருப்பாயோடிபெண்ணே
வரத்தினுல்செய்ததொரு தவத்தாலே
பெற்றவருத்தந்தன்னைப் பார்ப்பாயோபெண்ணே
மைந்தன் தன்னை நானறியே னென்பாயோபெண்
வளர்த்த அருமைதன்னை பார்ப்பாயோபெண்ணே [ணே
பிள்ளைதன்னை நானறியேன் னென்பாயோடி
அடிகெட்டேன்பிடிகெட்டே னென்பாயோடிபெண்
அசலார்கள்சொல்வார்த்தை கேட்பாயோடி [ணே
அப்படிக்கொருநாளும் வருவதில்லைதேவா
ஐயர்சொன்னவார்த்தை சொல்லுமென்றாள்
பிள்ளைகறியுஞ்சோறும் போடுகிறேனென்று
பொருந்திவந்தேன் திருவெண்காட்டுநங்கையென்
மைந்தன்கறியுஞ்சோறும் போடுகிறனென்று [றன்
வருந்திவந்தேன் திருவெண்காட்டு நங்கையென்ற
விரதவரத்தாலே நமக்கென்னகாரியம் [ன்
இதுவொருபெரிதாகச் சொல்லவந்தாய்
விட்டகுறைவந்தால் விதியின்பயனல்ல
வேறொருகாரியங்க ளெண்ணப்போமோ
நட்டவன் அறுக்கிற பருவங்கள்வந்தாலே
நற்போகம்சரிபோகம் தானல்லவோ
பிள்ளைக்கறியுஞ்சோறும் போடுகிறேனென்று
பொய்யாதவரந்தன்னை நிலைநிறுத்தும்
இன்னமிவள்மனஸை சோதிப்போமென்று
என்னசொல்வான் சிறுதொண்டபத்தனவன்
பொன்னைபொருளைக்கொஞ்சம் தருவாயடிபெண்ணே
பூமியிலேபுத்திரனை கொண்டுவாறேன்
காசுபணத்தைகொஞ்சம் தருவாயடிபெண்ணே
கண்ணரியபாலகனைக் கொண்டுவாறேன்
தேடியதிரவியந் தாராயோபெண்ணே
சிறுபிள்ளையாராய்ந்து கொண்டுவாறேன்
பொன்னைப்பொருளைத்தான் தந்தாலுமன்பா
பூமியிற்புத்திரனை தருவாருண்டோ

காசுபணத்தைத்தான் தந்தாலுமன்பா
கண்ணறியபாலகனைத் தருவாருண்டோ
அப்படியல்லவென்று தந்தாலுமன்பரே
பிள்ளையையறுத்துக்கறிசமைக்கத்தருவாருண்டோ
அறுத்துக்கறிசமைக்க தந்தாலுமன்பா
அடியார்க்குஅன்புடனே படைப்பாருண்டோ
தோட்டமரத்துக்கறி யிங்கிருக்கபத்தா
தெருவெங்குந்தேடியே போவாருண்டோ
அகத்துமரக்கறி யிங்கிருக்கபத்தா
அங்காடிகறிதேடி போவாருண்டோ
நங்கையடிகறிகள் இங்கிருக்கபத்தா
நாட்டிலேகறிதேடி போவாருண்டோ
தோட்டத்துமரக்கறி யாவதும்பெண்ணே
சொன்னரேஉடற் கூறுகாதென்றார்
அகத்துமரக்கறி யாவதும்பெண்ணே
ஐயருடற்கூறுகாதென்றார்
தோட்டத்துமரக்கறி யாவதுமன்பா
நமக்கும்நம்மிடபிள்ளை சீராளன்தான்
நங்கையடிக்கறிய வாவதுமன்பா
நமக்கும்நம்மிடபிள்ளை சீராளன்தான்
நாய்பெற்றபிள்ளையை நாமேயறுத்துவிட்டால்
நமக்கேதவங்கள்வந்து சேருமென்றாள்
பத்திரமும்முக்கணையு மெடுத்துக்கட்டிபிள்ளை
பள்ளிக்குதோழன்பின்னே நடைசூழ்ந்தான்
இப்போவுண்டுயிப்போபோன தம்பிசீராளனை
என்னசொல்லிநானழைப்பேன் பெண்ணேயென் [றான்
அறுக்கப்பொருந்திவந்த அன்பனுரே
அழைக்கமதிகள்சற்று மறியாயோ
அச்சுடர்வனத்துக்குள் ளிருந்துவுங்க
ளம்மான்வந்தாரென் றெனவழையும்
அம்மான்வந்தாரென சொல்லுகையில்பத்தா
அதிசயமென்னகொண்டு வந்தாரென்பான்
பொன்பெரியபுத்தகங்கள் கொண்டுவந்தார்
பொன்னுலேயெழுத்தாணி கொண்டுவந்தார்
நீலக்கண்ணுடிகள் கொண்டுவந்தார்
கோலச்சித்தாடைகள் கொண்டுவந்தார்

தேமாங்கனிப்பழங்கள் கொண்டுவந்தார்
திருநீற்றுண்டைப்பழம் கொண்டுவந்தார்
இத்தனைப்பணிவகைச் சித்தாகச்சொல்லி
ஏந்தியழைத்தோடி நீவாருமென்றாள்
திருமதுரைபள்ளிக்கு சிறுத்தொண்டபத்தன்
சீராளனையழைக்க தானடந்தார்
ஆத்திமரத்தடியில் வீற்றிருக்கும்சுவாமி
அறியாதகுழந்தைமனஞ் சோதிப்பாராம்
அங்குமொருசீராளன் மனமறியவென்று
அனுப்பினார் நித்திரா தேவிதன்னை
நித்திராதேவிவந்து நினைவைக்குலைக்கின்றாள்
நீங்காதசரஸ்வதி விலகிடவே
சிந்தைகலங்கியபிள்ளை சீராளதேவனும்
சீக்கிரத்தில்வாத்தியாரை தெண்டம்பண்ணுன்
ஒருநாளும்வருகாத நித்திரைகள்சுவாமி
உண்டாகிஐயரிவு மழியுதையா
காலப்பொழுதில் பாலன்னம்புசித்தல்லோ
காலங்கள்வேறுபட வந்ததினால்
மயக்கங்கள்வந்தாலே சீராளதேவனே
மைந்தர்கோன்மடியில் பள்ளிகொள்ளும்
பள்ளிக்குபடிக்கிற தோழர்மடியிலே
பாலகன்சீராள்ன் நித்திரைசெய்தான்
நித்திரைமயக்கத்திலே பொல்லாதசொர்ப்பனம்
நிணயப்படியாகக் கண்டுவிட்டான்
அல்லல்கணவுகண்டு சீராளதேவனும்
அலறியும்புலம்பியல்லோ தானெழுந்தான்
பொல்லாதகினவுகண்டு சீராளதேவனும்
புலம்பியலறியல்லோ தானெழுந்தான்
கண்ணீர்ததும்பியிரு கால்நடுங்கமனம்
கைசோரமெய்சோரத் தலைநிமிழ
தூங்கியெழுந்திருந்து சீராளதேவனும்
குருசுடன்வாத்தியாரை சரணம்பண்ணுன்
இன்னாளும் நித்திரைசெய்தால் தம்பிசீராளா
இலங்குஞ்செந்தாமரைப்போல் முகமிருக்கும்
முகவாடல்பட்டதொரு காரியமென்ன
புயங்கள்துடிக்க விதங்களென்ன

தூங்கினேன்பின்னே தான் கண்டகனவையா
திடுக்கென்ருப்போல் சந்தேகந்தோனுதையா
என்னென்னசொற்பனங் கண்டாயோ அப்பா
என்னோடேயொளியாதே சொல்லுமென்ருர்
ஆறுபெருகக்கனு கண்டாயோ தம்பி
அரசயிலைவிற்கக்கனு கண்டாயோடா
ஏரிபெருகக்கனு கண்டாயோடா தம்பி
எருக்கனிலைவிற்கக்கனு கண்டாயோடா
குளங்கள் நிறையக்கனு கண்டதில்லைசுவாமி
கொட்டமுளைக்கக்கனு கண்டதில்லை
தாயார்க்கொருகுறைகள் கண்டதில்லைசுவாமி
தாய்தகப்பனுக்கொருதோஷங் கண்டதில்லை
ஊருக்கொருகுறைகள் கண்டதில்லைசுவாமி
உந்தனுக்கொருதோஷங் கண்டதில்லை
என்னோடேதான்போகக் கண்டகனவை
எனக்கென்னகுறையுமோ தானறியேன்
கன்னிகையாகவே கலியுகந்தன்னில்
என்னையெடுத்து அப்பன் தோளில்வைத்து
என்னையெடுத்து அப்பன் தோளின்மேலேவைத்து
எழில்பெரியமாளிகைக்கு கொண்டுசென்ருர்
எங்கள்மாதாபுலம்பிவந்து எதிராகவாங்கி
மடிதனில்வைத்துப்பால் கொடுக்கக்கண்டேன்
மடியிலிருந்ததொரு மைந்தனைக்கொண்டுசென்று
மாணிக்கத்தொட்டிலிலே வளர்த்தக்கண்டேன்
காம்பரிந்தமல்லிகைப்பூ மல்லிகைமெத்தையின்மேல்
கைகளெல்லாமுடக்கியென்னை வளர்த்தக்கண்டே [ன்
சந்தனநங்கையென்னுந் தாதியொருபுரம்
தாயாரொருப்புரந் தாலாட்டக்கண்டேன்
தாலாட்டுப்பிள்ளையைத் தாயாரெடுத்தல்லோ
தங்கப்பொற்பலகையிலிருத்தக்கண்டேன்
தாயாருங்கைகால் பிடிக்கக்கண்டேன்பெற்ற
தகப்பனுமென்கழுத்தை யறுக்கக்கண்டேன்
கழுத்தையறுத்து அதில் கழன்றவுதிரத்தை
கறிசட்டிதன்னில்வேறே வறுக்கக்கண்டேன்
உலாஉலாவறுத்ததை நெய்தனில்விட்டு
உதிரப்பொரியல்வேறே சமைக்கக்கண்டேன்

உரலிலேதலைபோட்டு துவைக்கக்கண்டேன்சுவாமி
　　உறுப்பானமூளைபத்தும் வாங்கக்கண்டேன்
கண்ணுக்கறிகள்வேறே சமைக்கக்கண்டேன்
　　காதுகறிகள்வேறே பொரிக்கக்கண்டேன்
மூக்குக்கறிகள்வேறே சமைக்கக்கண்டேன்
　　நாக்குக்கறிகள்வேறே பொரிக்கக்கண்டேன்
பதினொருவிதமாக தலைக்கறியானதை
　　பாங்குடனேவேறே ராதி சமைக்கக்கண்டேன்
அறுத்தமூண்டந்தனைக் குளிப்பாட்டித்தாயார்
　　குழித்தாளிதன்னில் அவிக்கக்கண்டேன்
கொத்தியகறிதன்னை யிருதாளில்வைத்து
　　குலுங்கவேதிமூட்டி அவிக்கக்கண்டேன்
அவித்தமூண்டந்தன்னை யிறக்கியேதாயார்
　　அருவாமனையில்வைத்து அரியக்கண்டேன்
ஈரல்பிளந்துசமைக்கக் கண்டேன்சுவாமி
　　இறைச்சிகள்விதவிதமாய்ப் பொரிக்கக்கண்டேன்
பக்கத்தெலும்புகள் பழுவெலும்பதை
　　பதைக்கப்பதைக்கப்பிடித் தறுக்கக்கண்டேன்
நெஞ்சடிநிணக்குடல் வாங்கக்கண்டேன்சுவாமி
　　நிணக்குடல்வேறேசட்டி சமைக்கக்கண்டேன்
பொன்பூண்டமார்பையும் நெஞ்சாங்குடலையும்
　　பொறிக்கறியாகவே சமைக்கக்கண்டேன்
பாடகமிட்டிருந்த கணுக்காலுமட்டிலே
　　பட்டாடைமேலேவைத்து தரிக்கக்கண்டேன்
மோதிரமிட்டிருந்த மூனைவிரல்பத்தையும்
　　முழுமுழுவர்ணமாக பொரிக்கக்கண்டேன்
எண்ணிஎண்ணிசெய்வதெல்லாம் இருபத்தோர் தினு [சாக
　　பலபலவிதமாய்ச் சமைக்கக்கண்டேன்
பலபலவர்க்கமாகச் சமைக்கக்கண்டேன்
　　பாண்டத்திலவேறேசாதம் சமைக்கக்கண்டேன்
ஆறும்பொரியலும் அவட்டல்துவட்டலும்
　　பணியாரவிததுடன் பலவகையும்
உருக்கியநெய்களுடன் பொறிக்கறியாஞ்சுவாமி
　　உளுந்துவகைகளுடன் மாங்கனியாம்
வருந்திவருந்திபொரு விருந்துக்கோலையபைப்
　　பண்டாரந்தனை வீட்டி லழைக்கக்கண்டேன்

ஐயரும்உள்ளேவந் திருக்கக்கண்டேன்சுவாமி
எங்களப்பாவும்எதிர்பட்டு வரவுங்கண்டேன்
போதும்போதும்பிள்ளாய் நீ கண்டகனவப்பா
பொல்லாதசொற்பனத்தை கண்டாயோடா
நீகண்டசொற்பனங்கள் நீங்கும்படிக்கல்லோ
கைலாயந்திருமுறை யோதுமென்றார்
ஆயிரந்திருமுறை யோதினாலுஞ்சுவாமி
அறுக்கத்தவறுமோ சொல்லுமென்றார்
கோடித்திருமுறை யோதினாலுஞ்சுவாமி
என்னைக்கொல்லத்தவறுமோ சொல்லுமென்றார்
ஆனாலுங்குருமொழி தவறவொண்ணாதுகாண்
அப்படியேதிருமுறை யோதுவேன்காண்
அரியோம்அரியென்று வேதப்பெரும்புராணம்
கைலாயத்திருமுறை யோதுவானும்
கைலாயத்திருமுறை யோதுமளவில்
தமிழான சிறுத்தொண்டன் மகனேயென்றான்
தகப்பனைக்கண்டல்லோ தம்பிசீராளனும்
தன்பள்ளிகூடத்திலே போயொளித்தான்
வந்தசிறுத்தொண்டன் பள்ளிக்கூடந்தேடி
வாசிக்கும்பிள்ளைகளைத் தானழைத்து
எங்கள்குடிப்பிள்ளை யிங்கில்லையோதம்பி
எங்களுக்குப்பாலகனு ரிங்கில்லையோ
பள்ளியிலேகூடி விளையாடுகிறதம்பி
பட்சமுடன்தகப்பனழைக்கின்றார்
சிந்தைதெளிந்து சீராளதேவனும்
சீக்கிரத்தில்வாத்தியார் தன் முன்னேவந்தான்
வாத்தியாரைத்தெண்டம் பண்ணுவானும் தம்பி
தோழமாரைகோடிவந்து கட்டுவானும்
கள்ளமுண்டோசுவாமி கள்ளமுண்டோவையா
கண்டகனவிலேகொஞ்சம் பழுதுண்டோ
பழுதுண்டோசுவாமி சொன்னதளவிலே
கண்டகனவிலேகொஞ்சம் பழுதுண்டோ
பொய்களுண்டோசுவாமி சொன்னதள்விலே
அழுதல்லோயெங்களப்பா வந்தாரையா
அழைக்கின்றதகப்பனே யவன்பின்னேபோனாலே
அடியேன்வந்துன்பாதங் காண்பேனோதான்

முத்துக்கடுக்கன் கழற்றுவானும்மைந்தன்
மோகனமாலைதன்னை வாங்குவானும்
அஷ்டாபரணமெல்லாம் கழற்றுவானுந்தம்பி
அபரஞ்சிமாலைதன்னை வாங்குவானும்
தாளிப்பதக்கங்களுஞ் சரிகைதுப்பட்டாக்கள்
சந்திரஹாரந்தன்னை வாங்குவானும்
பொன்னுபரணங்கள் பட்டாடைகழற்றிப்
போற்றிசெய்துவாத்தியார்கள் முன்னேவைத்தான்
கண்ணேடேகட்டிடவே பால்பசுபத்தெட்டும்
வாத்தியார்தனக்குகந்து சரணமென்றான்
மூக்கால்வலம்வந்து சீராளதேவனும்
முத்தமிழ்வாத்தியார்க்கே தெண்டனிட்டார்
வந்தாலேயிங்குவந்து வாசிக்கிறேன்யான்
வருகாமற்போனலீசன் பதமடைவேன்
சேர்ந்தல்லோதான்காம் பதவிக்கிடமாகும்
தெய்வலோகப்பதவி பெற்றுவாழ்வேன்
தந்தைவந்தழைக்கிறார் வெகுநேரமாயிற்று
தாமதங்களில்லாமலே சிலவருளும்
அறிவுள்ளசீராளா உன்னைப்போல்கல்விகள்
ஆயிரம்பிள்ளைகளில் நானறியேன்
அறியென்றசொல்லுனக்கு சொன்னதேயல்லாமல்
ஆயிரஞ்சுருதிநூல் நீபடித்தாய்
ஆயிரஞ்சுருதிநூல் நீபடித்தாய்தம்பி
அய்யருக்கொருகுறைவு வாராமலே
குறைவில்லாபாக்கியங்கள் எனக்களித்துதம்பி
கூடியிருந்துபா லடிசலுண்டு
விட்டுப்பிரியவல்லோ சீராளதேவா நீ
வேறானசொற்பனங்கள் கண்டுசொன்னய்
அறியாதான்கண்டகனு சீராளதேவா நான்
அஞ்சலார்க்குதாங்குமென்றே நானிருந்தேன்
பாலகன்கண்டகனு சீராளதேவா நான்
பலபேர்க்குசாருமென்றே நானிருந்தேன்
நீகண்டசொற்பனங்க ளுனக்கேபலித்தது
நின்னடசிவன்செய லென்னமோதான்
ஆலைரச்சதமென்பேன் சீராளதேவா
அன்னியலைரத்தஞ்சமென்று நான்வளைப்பேன்

எவரைச்சதமென்பேன் சீராளதேவா
இனியாரைத்தஞ்சமென்று நான்வளப்பேன்
போரீரோயென்னைவிட்டு சீராளதேவா தம்பி
புண்ணியவானே நானென்னசெய்வேன்

சீராளதேவன் வாத்தியாருக்கு மனந்தேறச் சொல்லல்

தங்கள்மனதிலென்ன சுவாமிவுனக்கையம்
தலைமுறைமூன்றுக்குந் தவமிருக்க
ஏங்கியிருக்கவேண்டாம் என் தலைவிதியைத்தான்
எவரால்விலக்கவசஞ் சொல்லுமையா
என்னையறுத்துக்கறி சமைத்து ஆண்டிக்கிடவே
ஆதியிலயன்விதிப் படியானால்
உன்னாலுமென்னாலு மாவதுண்டோசுவாமி
ஊழ்வினைப்பயன்றனை விலக்கவென்றால்
மண்டையிலேயெழுதி மயிரால்மறைத்தல்லோ
வைத்தாரேஎன்னுடைய தலைவிதியை
மண்ணோடுமண்ணாக மறைந்துவிடுந்தேகம்
வளர்க்கின்றஅக்கினியா லெரிந்துவிடும்
காக்காய்கழுகுகள் நாய்நரிபுழுக்களும்
கலந்துபிடுங்குமந்த தேகந்தனை
வீணாகப்போகாம லுனக்குதவியாய்
விருந்துக்குஉபயோகாயிருந்தேன்
கழுத்தையறுக்கவர் வருகின்றவேளையிலே
கர்த்தாவைநினைத்தொரு மந்திரஞ்சொல்லும்
கத்தியோடிகழுத்திலே வைக்குமளவிலே
பத்திமுத்திஓம்நமசி வாயாவென்னும்
ஐந்தெழுத்துமந்திரத்தை நெஞ்சினில்தியானித்தால்
அதிலுள்ளகர்மமெல்லாம் மகன்றுவிடும்
ஆளவருந்தேவா அப்படியேயாகுதென்று
அய்யருக்குதீர்க்க நமஸ்காரஞ்செய்தான்

சீராளதேவன் தோழன்மாருக்குப் புத்திகூறல்

வாத்தியாரைத்தெண்டஞ் செய்தல்லோதம்பி
தோழன்மாரையோடிவந்து கட்டிக்கொள்வான்
என்னுடன்வாசிக்கின்ற தோழமாரேதம்பி
ஏழையல்லதய்யிட குருக்களையா
பள்ளிக்கூடங்கலையாமல் கற்றுக்கொள்ளுங்கள் தம்பி
சனியென்னைப்படிவரட்டி தண்டிக்கொடுங்கள்

மாதவரிப்பணங்கள் தண்டிக்கொடுங்கள்
வாவு அரிசிப்படி தான்கொடுங்கள்
நவமிக்கொருதரம் ஐயருக்குபொன்பணம்
நலமாகத்தான்கொடுத்து காத்திடுங்கள்
நானிருந்தபாவனையாய் நீங்களிருங்கள்
அரியென்கிறவாத்தியாருக்கு தடைசொல்லாமல்
சீராளன் வாத்தியார் பிள்ளைகளிடத்தில் செலவுபெற்று
தன்மடத்துக்கு வருவது
ஐயரும்பிள்ளைகட்கும் ஆறுதலைச்சொல்லி
ஐயனார்முன்னேவந்து தெண்டஞ்செய்தான்
தன்னைப்பெற்றதகப்பனார் முன்னேவந்துசீராளன்
தயவுடனேயவ னேதுசொல்வான்
வழியில்கல்லுமுள்ளு பில்லுகள் கண்டாலவன்
உள்ளங்கால்முள்ளோடி தைக்குமென்றான்
உள்ளங்கால்முள்ளோடி தைக்குமேயானால்
உண்ணாரோ அய்யர் வுந்தன்மடத்திலேதான்
என்னையெடுத்துவுந்தன் தோளின்மேலேவைத்து
எழில்பெரியமாளிகைக்கு நடவுமென்றான்
சிறியவர்சொல்லும் புத்தி நிசமென்றுஎண்ணியே
பெரியவர்தோளின்மே லெடுத்துக்கொண்டார்
பெரியவர்தோளின்மேலே யெடுக்கும்பொழுதிலே
பெருஞ்சுனையில்தாயார் முழுகுவாளாம்
வெள்ளையானவஸ்திரத்தை கட்டுவாளாம்நங்கை
மெய்யானபுஷ்பங்களை முடித்துக்கொள்வாள்
திருவெண்காட்டுநங்கை சிறுத்தொண்டபத்தனையும்
சீராளதேவனையும் காணாமல் வருந்துதல்
அன்பன்வருகின்ற வழிக்குமுன்பாகவந்து
ஆலோசனைகள்செய்து ஏதுசொல்வாள்
பிள்ளையழைக்கப்போன சிறுத்தொண்டனாரை
யின்னம் வரக்காணேன் என்செய்வேனென்பாள்
கத்தியிருந்தங்கே உலாவுதென்பாள் நங்கை
கறிகூட்டுவர்க்கமெல்லாம் புளிக்குதென்பாள்
ஆத்தியடிதனில் வீற்றிருக்குமையர்
அவர்பசியாலென்ன சாபந் தருவாரோவென்பாள்
பள்ளிகூடம்நோக்கி வெண்காட்டுநங்கைதானும்
பாலகனைப்பார்த்து தானழைப்பாள்

நான்பெற்றமகனுரே வாராயோடாதம்பி
நல்லறிவுசீராளதேவா வாராயோடா
பள்ளிக்குப்பிள்ளையே நீ வாராயோடாதம்பி
பாலகன்சீராளதேவா வாராயோடா
கூவியழைக்கும்போது வெண்காட்டுநங்கைதானும்
கொழுநன் சிறுத்தொண்டன் முன்னேவாரான்
தாயாரழைக்குஞ்சத்தந் தனைக்கேட்டுசீராளன்
தகப்பன்தோள்மீதிருந்து யேதுசொல்வான்
வந்தேனம்மாபிள்ளை வந்தேனம்மாதாயே
வருந்தாதேவிருந்திட வாருமென்ருன்
வந்தவொருபிள்ளை தன்னை மருங்கழைத்துதாயார்
வர்ணமடியில்வைத்து பால்கொடுத்தாள்

திருவெண்காட்டுநங்கை சீராளனைக் குளிப்பாட்டி
தொட்டியில் வைத்து தாலாட்டுதல்

வர்ணமடியில்வைத்து பால்கொடுத்துபிள்ளையை
மஞ்சள் நீர்சாலைக்குக் கொண்டுசென்ருர்
சப்பங்கியெண்ணெகொண்டு தாயுந்தகப்பனும்
தளரவேகூந்தற்கோதி காப்புமிட்டார்
பூவாசனை எண்ணெயும் பொருந்தவேகைகட்டி
பிள்ளைப்பூமுடிக்கவர் காப்புமிட்டார்
சீக்காய்நெல்லுடன் சிறுபருப்புகஸ்தூரி
சீராகபிள்ளைதலைக் கள்ளிதெளித்தார்
வெந்நீர்விளாவி சிறுத்தொண்டன்தெளிக்கவே
வெண்காட்டுநங்கையம்மை தலைகோத
தாயுந்தகப்பனுமாக முழுக்காட்டிபிள்ளைதன்னை
சரிகைதுப்பட்டாகொண்டு தலைதுவட்டி
நெற்றிக்குவெற்றிபட்டங் கட்டுவாள்தாயார்
நேர்விழிக்குமையெழுதி பொட்டுமிட்டாள்
முத்துக்கடுக்கனைப் போடுவாளாந்தாயார்
மோகனமாலைதன்னைப் பூட்டுவாளாம்தாயார்
அஸ்தகடகங்கள் போடுவாளாந்தாயார்
அபரஞ்சிமாலைதன்னைப் பூட்டுவாளாம்
தாளில்பதக்கங்களைப் பூட்டுவாளாந்தாயார்
சந்திரபிறைசூரியபிறை தரிப்பாளாம்
பொன்னுபரணமெல்லாம் பூட்டுவாளாந்தாயார்
பிள்ளைமுகத்தையுற்று பார்ப்பாளாம்

தாயார்முகத்தையுற்றுபார்த்து நகைத்தல்லோ
சந்தோஷத்துடன்பிள்ளை யேதுசொல்லும்
இத்தனையும்வேண்டுமோ மாதாவேயிப்பொழுது
இறந்துபோகுப் பிள்ளை யெந்தனுக்கு
மதிக்கிலேனென்றுசொல்லி மயங்காதேமகனே
அறிந்தவயணந்தன்னைச் சொல்லாயோடா
சிரிப்பேனழுவேனென்று சொல்லவந்தாயே நீ
தெய்வங்களும் நீங்களும்உளவானல்
அப்பாடா அப்பாவென்று அழுதாரேயப்பன்
கழுத்தறுக்கக்கத்திகளை திட்டுவாரே
அம்மாடி அம்மாவென்று அழுதாலேயம்மா
வாயில்ஸ்தனத்தைக்கொண் டிடுக்கிவைப்பாள்
தெய்வமேதெய்வமென்று அழுதாலேயென்னை
அறுத்திடதின்னவந்த தெய்வந்தானே
யாரை நினைத்தழுவேன் சொல்லுமம்மா தாயே
ஆயுசுமுடிவிது சரியானல்
ஆத்தாளைசதமென்றல் அறைகுறைதிருமென்று
அதினல்சிரித்தேனென்னைப் பெற்றதாயே
சீராளனுரைகேட்டு திருவெண்காட்டுநங்கை
சிரித்துத்தன்மகனுட னேதுசொல்வாள்
கற்றதொருகல்விகளைப் பேசாதேயென்மகனே
காத்திருக்கிறரையர் பசியுடனே
இந்நாளுமழலைச்சொல் கேட்டிருப்பேன் மகனே
இன்றைக்குநேரமில்லை நித்திரைசெய்யும்
தூங்குதூங்குமகனே யென்றவள்தொட்டிலிலே
சொற்பெரியதொட்டிலிலே வளர்த்துவாளாம்
காம்பரிந்தஜங்கல மல்லிகைமெத்தையின்மேல்
கால்கோட்டைகைகோட்டை திண்டுமிட்டாள்
மல்லிகைமெத்தையின்மேல் மைந்தன்சீராளனை
மாதாவளர்த்தியே தாலாட்டலுற்றள்
சந்தனநங்கையெனுந் தாதியொருபுறம்
தாயாரொருபுறந் தாலாட்டுகின்றள்
நித்திரைபோமகனே நித்திரைபோ அப்பா
சித்திரைபொன்மகனே நித்திரைபோடா
கட்டிக்கரும்பே நீ நித்திரைபோமகனே
கணுவில்லாயெங்கரும்பே நித்திரைபோடா

வேலிக்கரும்பே நீ நித்திரைபோமகனே
விடாய்தீர்க்கும்செங்கரும்பே நித்திரைபோடா
பிள்ளையில்லையென் றுசொல்லி தில்லைவனம்போய்முழுகி
போதத்தவமிருந்தே னென்மகனே
மைந்தனில்லையென் றுசொல்லி வானவரைத்தானேக்கி
வருந்தித்தவமிருந்தே னென்மகனே
மழைமாசிபோல்வத்து வயிற்றிலவதரித்தல்லோ
மைந்தனெனவந்தகுறை தீர்த்தோனே
கொடிமாசிபோலேயல்லோ வயிற்றில்தரித்து நீ
கொஞ்சியேகலியெல்லாந் தீர்த்தவனே
பிள்ளைகலியெனக்கு தீர்க்கவந்தோனேயென்
பெருமாளே நீயும் நித்திரைபோடா
மைந்தன்கலியெனக்கு தீர்க்கவந்தோனேயென்
மகனுரே நித்திரைபோ கண்மணியே
வண்டினங்கள்பாட மரங்களிலேசோர
வாழுமன்னங்களது கலிப்பூட்ட
மாடப்புருக்களு மயிலுமொருபுறம்
மைந்தன சீராளனுக்குத் தாலாட்ட
தாலாட்டத்தாலாட்ட சீராளதேவனுக்கு
தாங்குகண் நித்திரைகள் வாராமல்
ஆதிசிவன்றன்னை அறிவில் நினைத்தல்லோ
அன்பானசீராள்தேவ னேதுசொல்வான்
நித்திரைவாராமல் வீற்றிருக்கநான்
நீங்களும்பசியுடன் காத்திருக்க
அறுத்துக்கறிசமைக்க சமயங்களில்லாமல்
ஆச்சிமாரிருந்தவர் தாலாட்டிருக்க
பாவங்கள்வந்தணுகாமல் தவங்கள்வந்தணுகவே
பாரும்கிருபைசெய்யும் பரமசங்கமரே
அரியும்பொழுதும் யெமவாதனையில்லாமல்
அந்நேரங்காலனை தியானஞ்செய்தார்
ஈசனை நினைத்துயிரு கண்களைமூடி
இருக்கின்றனே நித்திரைவந்தவன்போல்
சிறுத்தொண்டபத்தனும் திருவெண்காட்டு நங்கையும்
சீராளனை அறுக்கின்றது
சந்தனப்பலகையை தாழவைத்து அன்பன்
சதிருடனேகத்தியைத் தீட்டுவானும்



குங்குமப்பலகையை தாழவைத்து அன்பன்
குளிரகுளிரகத்தி தீட்டுவானும்
கத்தியைத்தீட்டி கையிற்பிடித்தானே
கண்காட்டிவெண்காட்டா ளென்னசெய்தாள்
மைந்தனைவாரியவள் மார்போடணைத்துவந்து
மாணிக்கபீடத்திலே வளர்த்தினளே
பொற்பலகைமீதி லிருத்திவைத்துதாயார்
பிராணமல்காலுங்கையுமே பிடித்தார்
கர்த்தனை நினைத்தல்லோ கத்தியெடுத்துபத்தன்
கழுத்தையறுக்கமனந் தான்துணிந்தான்
தாயாருங்கைகாலும் பிடிக்கவேபெற்ற
தகப்பனுங்கழுத்தை யறுப்பானும்
ஸ்ரீ அரிராமாவென்று சொல்லியேசீராளன்
ஊட்டியிலேகத்தி காட்டுவாரும்
அப்போதுசீராளன் அறிவுள்ளபாலகன்
அன்போடுதன்மனதி லென்னசொல்வான்
கத்தியோடிகழுத்தில் அறுக்குமளவிலே
பத்திமுத்திஓம்நமசி வாயாவென்பான்பிள்ளை
பத்திமுத்திஓம்நமசி வாயாவென்பான்பிள்ளை
உண்டபாலுதிரமாய் சொரிந்திடுமாம்
பால்வாயைக்கண்டல்லோ சிறுதொண்டபத்தன்
பதறிக்கத்தியைமெள்ள சோரவிட்டான்
என்றுதான்பெற்ற மகனேமகனேயென்று
சிறுத்தொண்டபத்தனும் புலம்புவானும்
எட்டென்றால்ரெண்டுமினி யறியாதபாலகனை
ஏட்டிலெழுதிவைத்துப் பார்த்தில்லை
பத்தென்றால்ரெண்டுமினி யறியாதபாலகனை
படத்திலெழுதிவைத்துப் பார்த்ததில்லை
புலம்பும்புருஷனைக்கண்டு திருவெண்காட்டாள்
புத்திமதிகள்திட மேதுசொல்வாள்
தலையறுந்துகட்டை தாழவிழப்போகுது
தவறாமலதுங்காணும் பிள்ளைதலையை
தூக்கிப்பிடித்தகொரு தலைதனையேயின்னங்
கொண்டதவங்களது குறையாமல்
தாயாருங்கைகாலும் பிடிக்கவேபெற்ற
தகப்பனும்கழுத்தை யறுப்பாரும்

கழுத்தையறுத்து கழன்றவுதிரத்தை
 கறிசட்டிதனில்வேறே வாங்குவாளாம்
எடுத்தபணியார பொரியல்சமைத்தல்லோ
 இடவந்தபெருஞ்சட்டியி லிறக்கிவைத்தாள்

திருவெண்காட்டுநங்கை தாதியை தலையை
புதைக்க சொன்னது

வாடிமகளாரே சந்தனநங்கையாரே
 தலையைத்தான்கொண்டுபோய் புதைத்துவாடி
மறந்தானேசிறுத்தொண்டன் சொன்னசொல்தனை
 மகாதேவரட்சணைமே யேதுசொல்வார்
சிரந்தனைகரங்கொண்டு சென்றதொருதிக்கு
 சீராளன்வாய்திறந் தேதுசொல்வான்
தாயுந்தகப்பனுக்கு மறதிகளுண்டானல்
 தாதியுனக்குமதி கெட்டுதோடி
என்சானுடம்பிற்கு சிரசேபிரதானம்
 இதையறியார்கள் மானிடர்கள்
சொல்லப்பட்டதிருநாவு யிங்கிருக்கதாயே
 சுகமறியமூக்கு யிங்கிருக்க
கேள்விபட்டதிருச்செவி யிங்கிருக்கதாயே
 எப்படிக்குநீபுதைக்கப் போறயம்மா
நாமல்லோமுண்டம் நாறுமுடலை
 நாதர்பொசிப்பதில்லை தாதியென்றுன்
சமைத்துவைத்தாயானல் தாதியுனக்கு
 சாகாமல்குருபாதம் வரமளிப்பார்
அருளருளுந்தம்பி அப்படிநான்செய்வேன்
 அந்நேரஞ்சந்தன நங்கையவள்
உரலிலேதலைபோட்டு துவைப்பாளாந்தாதி
 உருப்பானமூளைபத்தும் வாங்குவாளாம்
கண்ணுகறிகள்வேறே பொரிப்பாளாந்தாதி
 காதுக்கறிகள்வேறே சமைப்பாளாம்
அறுத்தமுண்டந்தன்னை கழுவிக்குளிப்பாட்டி
 அவிக்கவென்றேயிருவ ரெடுத்துவந்தார்
கொத்திக்கிளறியே பெருந்தாளியில்வைத்து
 குறுகவேதீமூட்டி அவிப்பாளாம்

அவித்தமுண்டந்தன்னை யிறக்கியேதாயார்
அரிவாமனைல்யில்வைத்து அரிவாளாம்
ஈரல்பிளந்துவேறே சமைப்பாளம்மாள்
இறைச்சிவிதவிதமாய் பொரிப்பாளாம்
பக்கத்தெலும்புகள் பழுவெலும்பானதை
பதைக்கபதைக்கபிடித் தறுப்பாளாம்
நெஞ்சடி நினைக்குடல் வாங்குவாளம்மாள்
நினைக்குடலொருசட்டி வாங்குவாளாம்
பொன்பூண்டமார்பையும் நெஞ்சாங்குடலையும்
பொரிக்கறியாகவே சமைப்பாளாம்
மார்புசதைகள்வேறே வாங்குவாளம்மாள்
வலதுதுடைகள் வேறேபொரிப்பாளாம்
பாடகமிட்டதொரு கணுக்கால்மட்டிலே
பட்டாடைமேல்வைத்து தரிப்பாளாம்
முழங்காலெலும்புகள் முதுவெலும்புகளெல்லாம்
மிளகுநீராகவே வைப்பாளாம்
கணுக்காலெலும்புகள் கணுவெலும்பெல்லாம்
கழுகழுவர்னமாகப் பொரிப்பாளாம்
எண்ணிஎண்ணியல்லோ யிருபத்தொருவிதமாய்
பலபலவர்னமாகச் சமைப்பாளாம்
பலபலவகைக்கறி சமைப்பாளாம்மூன்று
பாண்டத்திலேவேரேசாதம் சமைப்பாளாம்
ஆரால்பொறியலும் அவிட்டலும் துவட்டலும்
பணியாரவிதத்துடன் பலவகையும்
புத்துருக்குநெய்யுருக்கிக் காய்ச்சிவைத்தாளம்மாள்
போதவேசங்கமரை கூட்டிவாவென்றாள்
காராவின்நெய்யுருக்கிக் காய்ச்சிவைத்தாள்
கடுகியேசங்கமரை அழையுமென்றாள்
இந்நேரஞ்சங்கமரும் இளைப்போடிருக்கிறார்
இட்சணமேசங்கமரை கூட்டிவாவென்றாள்
ஒருசுற்றுவேஷ்டியுந் தரிப்பானம்பத்தன்
ஒருபக்கப்பூநூலும் போடுவானாம்
திருவெண்ணீறஞ்செழுத்தை ஓதுவானாம்பத்தன்
திவ்வியமனதடக்கி துதிப்பானாம்
திருக்கொன்றைமாலையொன்று மார்பிலசையவே
திருவாத்திதிசைநோக்கி நடப்பானாம்

சிறுத்தொண்டபத்தன் சுவாமியாகிய பண்டாரத்தைக் காணுதல்

திருவாத்திமரத்தே தேடிவந்துபத்தன்
தெண்டநமஸ்காரஞ் செய்குவானும்
ஆத்திமரந்தன்னைத் தேடிவந்துபத்தன்
அடியேன் நமஸ்காரம் போற்றி நின்றான்
ஆதியேஉன்பாதம் போற்றிபோற்றிசிவனே
அம்பலவாணனாரே போற்றிஐயா
சோதியேஉன்பாதம் போற்றிபோற்றிசிவனே
சிதம்பரதேவனாரே போற்றிஐயா
ஆச்சுதுபோஜனங்க ளப்பனாரேசிவனே
அமுதுண்ணமடத்துக்கு வாருமையா
ஆச்சுதுபோஜனங்கள் ஐயனாரேபரனே
அமுதுண்ணமடத்துக்கு வாருமையா
போற்றியிடுகின்ற சத்தந்தன்னைகேட்டு
புலிமுகவாணர் முகம்பார்த்தார்
அழுதகள்ளாதொழுதகள்ளா யெழுந்திரடாபத்தா
ஆசாரக்கள்ளனாரே யெழுந்திரடா
கும்பிடுங்கள்ளா நீ யெழுந்திரும்பத்தா
குழைத்திடுங்கள்ளனாரே யெழுந்திரும்பத்தா
அன்புள்ளகள்ளா நீ யெழுந்திரும்பத்தா
ஆசாரக்கள்ளா நீ யெழுந்திரும்பத்தா
உச்சிக்குமுன்னாலே அமுதுபடைப்பேனென்று
சத்தியமாய்முகந்து நீர் தாரைவார்த்தாய்
உச்சிக்குயோரடி தாழ்ந்துபோச்சுதுபத்தா
உன்னோடாபத்தா உன்னிடமனையிடத்தில்
உனக்கண்டைவீட்டுக்கார பத்தனொருவன்
அமுதுக்குவரச்சொன்ன னங்கேபோறேன்
மேலண்டைதெருவிலே பத்தனொருவன்
விபூதியையும்கொண்டு தருவேனென்றான்
இன்பமானபடிக்கு யிருந்தானொருவன்
இளைப்பாறிவந்தமர்ந்தே னப்பாவென்றார்
இப்படிதேவர்சொன்ன லேழைநானென்னசெய்வேன்
என்னாலேகுற்றமொன்று வருவதில்லை
போகவும்சென்றுதையா சிலநேரம்பிள்ளையை
அழைக்கவும்சென்றுதையா சிலநேரம்

அழைக்கவும்சென்றுதையா சிலநேரம்பிள்ளையை
அறுக்கவும்சென்றுதையா சிலநேரம்
அறுக்கவும்சென்றுதையா சிலநேரம்கறி
யறியவும்சென்றுதையா சிலநேரம்
அறியவும்சென்றுதையா சிலநேரம்கறி
சமைக்கவும்சென்றுதையா சிலநேரம்
கறிசமைக்கவுஞ்சென்றுதையா சிலநேரம்இங்கே
வருகவும்சென்றுதையா சிலநேரம்
அத்தாலும்குற்றமில்லை தம்பிரானேசிவனே
அடியேன்மடத்துக்கு தேவரீர்வாருமையா
பிள்ளையறுத்துக்கறி சமைத்தேனென்றுய்ப்பத்தாவுன்
பெண்சாதிநீயுமாய் கொள்ளுமென்றார்
இப்போவொருவன்வந்து போசனம்சொன்னான்
இதோபோறேனவனுடைய மாளிகைக்கு
பொய்யன்கள்ளன்சூதன் நீதான்பத்தா
யெழுந்திருமிந்த விடத்தைவிட்டு
பொய்யன்கள்ளன்சூதன் நானல்லசுவாமி
போசனங்களுண்ணுதற்கு வாருமையா
ஆறுகுற்றம்நூறுபிழை அடியேன்செய்தாலும்
ஐயர்மனம்பொறுத்து எழுந்தருளும்
இந்நேரம்தேவரீர் அமுதுண்ணுதற்கு
எழுந்திரும்தேவரீர் அமுதுண்ணுதற்கு
ஐயர்மனமிறங்கி சிறுத்தொண்டபத்தனே
ஆசனத்தையெட்டா வறேனென்றார்
இதுநல்லதருணங்க ளாச்சுதுஎன்று
எடுத்தார்புலித்தோ லாசனத்தை
ஆனைத்தோல்போட்டு ஆத்திரம்விட்டார்
அண்டர்முனிவர் கொண்டாட
இருத்தெருவுகோடியிலே வருவேண்டாபத்தா
அத்தெருவுகோடியிலே வருவேண்டா
இச்சையானவீதியிலே பித்தனுரேசிவனே
எழுந்திரும்தேவரே வாருமையா
திருமதுரைவீதியி லுள்ளோர்மனதறிய
திரும்பினூர்வேணுமென்று சங்கமரும்
கலீர்கலீரென்று நடப்பாராமையா
கால்பிணிநூல்பிணி வாராமலே

ஆடியடமரகஞ் சாடிப்பாராமையர்
அண்டரண்டபுவனங்க ளதிர்ந்திடவே
திருக்கையில்டமரகம் சாடிப்பாராமையர்
தேவாதிதேவரெல்லாம் திடுக்கிடவே
திருவடிக்கமலமுந் திருச்சிலப்போசையும்
திருக்கையினில்சூல கபாலமுமே
கையில்பிரம்பு கபாலந்தன்னை நோக்கி
கைலாசபிச்சை கேட்பாராம்
ஓலைக்கன்னமு தளிப்பாருண்டோவுலகில்
உத்தமமான தருமஞ் செய்வாருண்டோ
கூலிவித்து அன்னங் கொடுப்பாருண்டோவுலகில்
கொட்ட நூற்றுற்றன்ன தானங் கொடுப்பாருண் [டோ
தாலிவிற்றன்னங் கொடுப்பாருண்டோவுலகில்
சதா நித்தம் அன்னதானங் கொடுப்பாருண்டோ
கைலாசநாதர்பிச்சை கேட்குமளவிலே
கண்டார்கள் திருமதுரை வீதியுள்ளோர்
பிள்ளைதின்னுமாண்டி வாரானென்பார்சிலர்
பிணந்தின்னும்பித்தனிவர் வாரானென்பார்சிலர்
மைந்தர்தின்னும்ஆண்டி வாரானென்பார்சிலர்
மருளனிவன்பித்தனிவன் வாரானென்பார்
தன்பிள்ளை அசல்பிள்ளையை மறிப்பாராம்
தலைவாசல்கதவோடி அடைப்பாராம்
தங்கள் தங்கள்பிள்ளையை தாங்களெடுத்து
தலைக்கடைபுழக்கடையா லும் ஓடுவாரும்
இவர்கள் மனஞ்சோதிக்க ஈஸ்வரர்தான் கண்டு
என்னருபங்கொண்டா ரந்நேரம்
தலைக்கடையிலொரு ஆண்டியானூர்
புழக்கடைக்கிங்கேயொரு ஆண்டியானூர்
நாலைத்துபிள்ளையெனக்கு ஆகாரந்தந்தாலே
நான்போவேனிவ்விடம்விட்டு தம்பிரானும்
தலைக்கடையிலொருவன்வந்து ஆரையாவென்றூன்
தம்பிரான்பிள்ளைதின்ன வந்தேனென்றூர்
பின்னங்கதவடைத்து பேசாமலிவர்கள்
புழக்கடையிலொருவன் வந்துயாரையாவென்றூன்
பிள்ளைதின்னுமாண்டியிங்கே வந்தேனடாபத்தா
பேசாதேமூன்றுபிள்ளை வேணுமடா

பொல்லாதகாலங்கள் சொல்லாதேவந்ததென்று
    போதகதவடைத்துத் தானிருந்தார் [னென்று
பிணந்தின்னுமாண்டியென்று பிணந்தின்னும்பித்த
    பேய்கள்பிணத்துதேசுவாமியைக்கண்டு
நெற்றிக்கண்ணாலே பார்வையானார்சுவாமி
    நீராகபோச்சுதாந் திருமதுரை
திருமதுரைவீதியெல்லாம் நெருப்பாயெரித்து
    திரும்பினார்சிறுத்தொண்டன் வீதியிலே
மஞ்சள்பிளந்துவாழை நாட்டுவாருஞ்சிலபேர்
    மடந்தன்னில்வந்து தோரணங்கட்டுவாரும்
இஞ்சிபிளந்துவாழை நாட்டுவாருஞ்சிலபேர்
    எலுமிச்சந்தோரணங் கட்டுவாரும்
தண்ணீர்தெளித்து தலைக்கோலங்களிட்டு
    சாம்பிராணி தூபங்கொண்டு போடுவாரும்
அரசிலைதோரணங் கட்டுவாருஞ்சிலபேர்
    அய்யருக்குந்தூபங்கொண்டு போடுவாரும்
வெண்காட்டம்மன்வந்து பாதஞ்சொரிய அப்போ
    சிறுத்தொண்டபத்தன்வந்து பாதஞ்சொரிய
மல்லிகைமுல்லை யிருவாட்சியுடனே
    மருக்கொழுந்துமாக சாற்றுவாராமன்பன்
கோங்குகுடமல்லிகை சாற்றுவாராமன்பன்
    கொத்தோடேசெவ்வந்திப்பூ அணிகுவாரும்
பாதமதையர்ச்சித்து ஐயரைகூட்டியே
    பதினெட்டாங்கட்டுக்குள்ளே யிட்டுவந்தார்
தங்கப்பொற்பலகையுந் தான்வொளித்தான்
    தள்ளிவிட்டார்சுவாமி காலாலே
புலித்தோலாசனத்தைப் போட்டமர்ந்துசுவாமி
    கொக்கணத்தைக்கழட்டி பக்கம்வைத்தார்
ஆசனத்தைப்போட்டு தானமர்ந்தார்சுவாமி
    அண்டையிலேதிருவோடு மாத்திரையும்
தலைவாழையிலைகொண்டு மூன்றிலைபோட்டு
    தண்ணீர்தெளித்தெதிரே நில்லுமென்றார்
தெரியவுரைக்கிறேன் சிறுத்தொண்டபத்தாயெனக்கு
    தேவியரிருவண்டு பொல்லாதவர்
உன்பிள்ளையைகொன்றதொரு தோஷந்திர
    சாத்திரியொருவன் வேணுமென்றார்

அதிதிக்கும்ஆயிரம்பேர்க் கன்னங்கொடுப்பேன்
அரிதாச்சுஇன்றைக்கு ஒருவனென்ருர்
எங்கெங்குத்தேடிவந்தேன் சங்கமரைக்காணுமல்
இருந்திரொருவரிங்கே ஈஸ்வரன்போல்
நானென்னபாவந்தோஷம் செய்தேனோசுவாமி
தங்கையென்னதோஷங்கள் செய்தாளோதான்
யாருமகப்படாமல் போனதினுல்சுவாமி
ஆதரிக்கநீரொருவர் வந்ததினுல்
உம்மைவிடயெனக்கு வேறொருதெய்வ
முண்டோயெனக்குசுவாமி மண்டலத்தில்
ஆருமொருபண்டாரங்க ளகப்பட்டார்களேயென
அமாடா நீயாகிலும் பக்கம்வந்து
தன்பிள்ளைகறியைத்தான் பொசிப்பானோவென்று
சுவாமியவன்மனதை சோதிக்கின்ருர்
அப்படியானுலே பொசிக்கிறேனென்று
அமர்ந்தாளையருட பக்கலிலே
மூத்தபிள்ளையொருவன் பார்த்திருக்கும்வழியை
முன்னாலேவருகுமே யதுக்கிளையபிள்ளை
பொல்லாதபிள்ளையெனக் கொருவனுண்டு
போடடா அதுக்கொரு யிலையுமென்ருர்
ஐயருக்கோரிலை அஞ்சியுப்போட்டு
ஐயருடமுன்னாலே நங்கைசொல்வாள்
உண்ணவுண்ணபடைக்கட்டோ பண்டாரமேசிவனே
ஒருமுட்டாய்கொண்டுவந்து படைக்கட்டோ
ஒருக்காலேகொண்டு படையாயோதாயேயெங்கள்
தம்பிராட்டியம்மனுக்கு பூசையாக
தாங்கியெடுத்துவந்து படையாயோதாயேயெங்கள்
தம்பிராட்டியம்மனுக்குப் பூசையாக
உண்டானசோறுவகை கறிவகையத்தனையும்
ஒருமுட்டாய்கொண்டுவந்து படையுமென்ருர்
சமைத்தகறிவகைக ளன்னமூர்தங்கொண்டு
தாங்காமல்கொண்டுவந்து படைக்கின்ருர்
சிவிசுரண்டியம்மாள் பற்றென்றுமில்லாமல்
சேரவேதான்படைத்தா ளிலைதனிலே
இம்மட்டோதாயே இன்னமுண்டோசொல்லும்
எங்கள்குலதேவதைக்கு பூஜையாக



பாண்டத்தில்ஜலம்விட்டு பத்தில்லாமற்கழுவி
பாத்திரத்தில்கொண்டுவந்து வாருமென்ருர்
அப்படியேகொண்டுவந்து படைத்தேன்காண்சுவாமி
அமுதுண்டுந்தேவர் பசியாயிருக்கிறீர்
உன்னைநம்பலாமோடா சிறுத்தொண்டபத்தா
உன்பெண்சாதியை எள்ளளவும்நம்பொணுது
ஒருபந்தியிலிருவஞ்சனை செய்தாளடாபத்தா
உற்றுப்பாராயடாபத்தா யென்னிலையை
தலைக்கறிகளெல்லாம் உனக்குவைத்தாள்
நாரும்நரம்புமாக யெனக்குவைத்தாள்
வேருக்விறகுமாக எனக்குவைத்தாள்பத்தா
வேறேகறிளெல்லாம் உனக்குவைத்தாள்
உற்றமனுஷனென்று சொல்லிபெண்சாதி
உள்ளகறிகளெல்லாம் உனக்குவைத்தாள்
வஞ்சனைசூதுகள்பொய் வொருக்காலும்வாராது
மகாதேவரே அன்னங்கொள்ளுமென்ருர்
மாமிசமானதெல்லாம் உனக்கேவைத்தாள்பத்தா
முட்டியெலும்பையெல்லாம் எனக்கேவைத்தாள்
இச்சையிருந்துதே யாமாஞல்தேவர்
இந்தஇலைசாதங்கூட உண்ணுமென்ருர்
உண்ணுமென்றுபசார்ஞ் சொல்லாதேபத்தா
உன்னிலைசாதங்கூட எனக்குவையும்
அப்படியேயாகுதென்று அன்பனிலையையும்
அய்யருடமுன்னு விழுத்துவைத்தான்
கைகட்டிமுன்னுலே போற்றிநின்ருனன்பன்
கண்டல்லோசங்கமரு மனமகிழ்ந்தார்
பூசைகள்தூபதீப மானதேயாமாஞல்
பிள்ளைக்கொலைபிர்மஹத்தி சுற்றுமென்ருர்
தந்திரவார்த்தைசொல்லி தப்பிராணுமப்போ
தன்னுடனெதிரேவந்து நில்லுமென்ருர்
இளைப்பாயிருக்கிறீர் தப்பிரானேசிவனே
இந்நேரந்தேவாமுது கொள்ளுமென்ருர்
தாம்பூலந்தட்சணைகள் வையடாபத்தா
சாம்பிராணிகற்பூரங்கள் கொண்டுவாவென்ருர்
கண்டேனடாபத்தாவுன் சூதுகளனைத்தயும்
கைகாட்டியெந்தனுக்கு மோசஞ்செய்தீர்

எந்தனைச்சாக்கிட்டு உன்மைந்தனை நீதின்ன
எத்தனைநாள்தவங்கள் செய்திருந்தீர்
எனக்கிச்சையிருந்துபிள்ளைக் கறிக்கிங்கேவந்தேன்
இன்பமானகறியிங்கே காணேனடா
தலைக்கறியில்லாவிட்டால் சாதமுண்டேனடா
தவறுமல்நானெழுந்து போறேனப்பா
ஆசனத்தோலைத்தா னெடுப்பாராம்சுவாமி
அவருடையபாத்திரத்தை கையிலெடுப்பார்
கஞ்சாக்குடுக்கையும் மாத்திரக்கோலையும்
கமண்டலத்தேயெடுத்து தூக்கிவைப்பார்
ஐயர்பிணக்குக ளவர்பிரிவுங்கண்டு
அந்நேரந்திருவெண்காட்டு நங்கையம்மாள்
கையைநெறித்தாளம்மை கனகஞ்சொரிந்தாளம்மை
கணவன்பின்னேவந்து ஒளித்தாளாம்
தலையைப்புதையெனவே தாதிகையில்தந்தோம்
சமைத்துவைக்கச்சொன்னார் நாமறந்தோம்
புதைத்ததலையதனை எடுத்துச்சமைக்கவே
போதல்லோசிலநேரஞ் செல்லுமேதான்
தம்பிரானென்னசாபந் தருவாரோயினி
தப்பிதங்கள்நேர்ந்துதென்ன செய்வேனென்றாள்
அம்மன் துயரங்களை சந்தனநங்கை
அறிந்தல்லோயெதிரேவந்து தெண்டனிட்டாள்
மனதில்விசனமென்ன மாதாவேதாயே
மகாதேவரென்னசொன்னார் சொல்லுமம்மா
தலையைப்புதையெனவே உன்கையில்தந்தேன்
தலைக்கறிகேழ்க்கிறார் சங்கமரும்
சமைத்தேனம்மா தலை சமைத்தேனம்மா தாயே
எடுக்கமறந்தேனம்மா யிந்தாவென்றாள்
தலைக்கறிகொண்டுவந்தாள் சந்தனநங்கை
யெடுத்துப்படைத்தாளிந்த வெண்காட்டாள்
தலைக்கறிபடைத்திட்டோம் தம்பிரானேஉனக்கு
சாதங்கறியமுது வுண்ணுமென்றார்
இந்நேரமட்டுந்தேவ ரிளப்போடிருந்தீர்
இப்போதேவாமுது கொள்ளுமென்றார்
அறிந்தேண்டாஉங்களிட சிறுத்தொண்டபத்தரே
ஆசாரஉபசார மோசமெல்லாம்

உண்ணலாந்தலைக்கறி பின்னாலேயென்று
ஒளித்துவைத்திருந்தீர் ருசியறிந்து
தலைக்கறியானது தம்பிரானுக்கற்புதம்
தானறிந்தேயதை யொளித்துவைத்தீர்
நான்கேட்டதினால் தலைக் கறிகள்படைத்தீர்
கேளாமற்போனால் மோசஞ்செய்வீர்
அப்படிக்குந்துரோகஞ் செய்வதுமில்லை
தாதிபிசகினால் வந்துதையா
மனமறிந்தேதுரோகஞ் செய்வதுமில்லை
மகாதேவரேயமுது கொள்ளுமென்றார்
இன்னுமொருவசனங் கேளாய்பத்தா
யிவ்விடத்தில்வந்து வெகுநேரமாச்சுது
எழுந்தபொழுதிலே யிங்கேவந்தேன்பத்தா
விழுந்தபொழுதுமட்டே யிங்கேயிருந்தேன்
சித்தடிகள் நடமாட வில்லையோடாபத்தா
சிறுபிள்ளைக்குரலோசை கண்டதில்லை
தண்டைச்சதங்கைசத்தங் கேட்டதில்லைபத்தா
தாலாட்டுஞ்சத்தங்களைக் கேட்டதில்லை
மலடனும்மலடியும் வாழ்கிறவீட்டில்
வயிறுவளர்க்கக்கணக் கில்லையென்றார்
ஆண்மலடன்பெண்மலடன் சஞ்சரிக்குமிடத்தில்
அறியாதேயமுதுண்ண வந்தேனென்றார்
கேட்டாயோபெண்ணே வெண்காட்டுநங்கையேரே
கிழவனார்சொல்லுகிற சேதிதன்னை
பிசைந்தகெஞ்சாவெறியால் பித்தனாரையர்
ஓடியேவிருந்துண்ண வருவேனென்றார்
எந்தனுக்கொருபிள்ளை யிருக்குதுசுவாமி
யென்னவிதங்களதை செய்வதென்றேன்
அறுக்துக்கறிசமைக்கச் சொன்னாரேசுவாமி
அப்படியேஅவருக்கு செய்துவைத்தோம்
பிள்ளையில்லாவிடில் கொள்ளேனென்றாலன்னம்
பெண்ணேநான்மோசங்க லென்னசெய்வேன்
இல்லாதபிள்ளையிப்போ சொல்லாலேவருமோயினி
என்னசொல்லப்போகிறாய் பெண்ணேயென்றார்
சொன்னசொல்மறதியாய் பேசுகிறீர்சுவாமி
சொக்குப்பொடிமயக்கங் கொண்டவர்போல்

பொய்யாகிலுமிவர்க்கு சொன்னேமேயாகில்
போசனங்கொள்வாரிந்த சங்கமரும்
மலடனும்மல்லகாணிவ் வடியாள்சிவனே
மலடியுமல்ல கா ணிவ்வடியாள்
எங்கள்குடிக்கொரு பிள்ளையுமுண்டுசிவனே
தூரத்துக்கு தூரம்வழி யவன்போனான்
தூரத்துக்குதூரம்வழி யவன்போனான்சிவனே
உம்மிடகடந்தபசிக்கு வந்துதவமாட்டான்
காதத்துக்குகாதம்வழி யவன்போனான்சிவனே
உம்மிடகடந்தபசிக்கு வந்துதவமாட்டான்
மாமியார்வீட்டுக்கு மறுவுண்ணப்போனான்
வருகவென்றால்வெகு நேரஞ்செல்லும்
இந்நேரவேளைக்கு வந்துதவவுமாகாது
இப்போதேவரமுது கொள்ளுமென்றாள்
காதத்துக்குகாதம்வழி போனாலும்பத்தா
கடும்பசிக்குவந் துதவவேண்டும்
தூரத்துக்குதூரம்வழி போனாலும்பத்தா
என்னுடஉகந்தபசிக்குவந் துதவவேண்டும்
அறுக்கவுஞ்சொன்னதொரு மாய்கையானபடிசிவனே
அழைக்கவுஞ்சொல்லுகிறு ரென்னசெய்வோம்
இனியென்னசெய்வோமென்று இருவரும்பேசி
இருக்கிறசெய்கைகளைத் தானறிந்தார்
வெள்ளிப்பிரம்புதந்தார் சொம்பில்சலந்தத்தார்
வெண்காட்டுநங்கையுடன் கைகொடுத்தார்
வாடிமகளாரே வெண்காட்டுநங்கை
மத்தியானவாசலிலே நின்றுகொண்டு
மத்தியானவாசலிலே முத்துவாசல் நின்று
மகனேமகனேயென்று அழையும்மகனை
சொம்பில்சலந்தன்னை பூமியில்தெளித்து
திருக்கைபிரம்பினால் தட்டியல்லோ
அழையம்மாவெண்காட்டு நங்கைநீயென்றுசொல்ல
அந்நேரம்சுவாமி சொல்லைத்தான்கேட்டு
அவர்குற்றங்கள்பெண்ணே வாருமல்போய்நின்று
கூப்பிடுமென்றல்லோ அன்பன்சொன்னான்
ஐயர்சொல்தட்டாமல் வெண்காட்டுநங்கை
அந்நேரந்தெருவாசல் வந்துநின்று

ஒப்புக்குதிருவெண்காட்டு நங்கையும்போய் நின்று
உயர்ந்தகுரலாகத் தானழைப்பாள்

சீராளன் வருவது

நான்பெற்றமகனாரே வாராயோடா தம்பி
நல்லறிவுசீராளா வாராயோடா
பள்ளிக்குப்பள்ளனாரே வாராயோடா தம்பி
பாலகச்சீராளதேவா வாராயோடா
ஓங்கியகுரலாகத் தானழைப்பாளம்மாள்
ஓடிவருவதுபிள்ளை வீதியிலே
நீண்டதொருதெருவிலே நெடுத்தெருவுகோடியிலே
நிலையுள்ள அன்பன்மகன் வருகிறான்
நெடியபுத்தகத்தைக் கையில்பிடித்து
நெடுந்தெருகோடிவழி எழுந்துவாறான்
தண்டைசிலம்புகாலில் சதங்கைகுலுங்கவே
தம்பிசீராளன்தெருவில் எழுந்துவாறான்
அரைத்தபலகாயங்கள் மேலேமணக்கவே
அன்பன்மகனாரிங்கே எழுந்துவாறான்
அறுத்தபிள்ளை வரவே சுவாமியதுவறிந்து
அவர்மனதையங்கே சோதிக்கின்றார்
வந்ததொருபிள்ளையை வருங்கழைப்பாளேவென்று
தம்பிரானுங்கைலாயம் போயொளித்தார்
தம்பிரானைக்காணோமென்று சொன்னசொல்கேட்டு
தட்டிவிட்டாள்பிள்ளையை புறங்கையாலடித்தல்
வந்ததொருபிள்ளையை புறங்கையாலடித்தல்லோ [லோ
தேவரை நினைந்து தானழுவாள்
வெண்காட்டுநங்கையம்மா ளழுகிறசப்தம்
உமையவள்பார்வதிக்குக் கேட்டிடுமாம்
சந்தனநங்கையா ளழுகிறசப்தம்
அறுபத்தொருகோடிமுடி யதிர்ந்திடுமாம்
சிறுத்தொண்டபத்தனா ரழுகின்றசப்தம்
சிவனார்திருச்செவியி லடிபடுதாம்
சீராளதேவனா ரழுகின்றசப்தம்
கந்தன்கணபதிக்குங் கேட்டிடுமாம்
தான்பெற்றபிள்ளைதனை தாயுந்தகப்பனும்
தப்பாமலேயிவர்க ளடிக்கலுற்றார்

நீவந்தல்லோசுவாமி நில்லாமற்போனூர்
நிஷ்டூரப்பாலாயிங்கே நீயேன்வந்தாய்
இவர்கள்புலம்புகிற சத்தந்தன்னைகேட்டு
ஈஸ்வரியென்னசொல்வாள் சுவாமியுடன்
அன்னக்கொடிவிருதை அறுப்பேனென்றாய்சுவாமி
அவனுடையஅன்புபத்தி சோதியென்றேம்
ஆருமகப்படாமல் நீயேயொருவராய்
அவனுடையமடத்துக்கு நீர்போய்
வழங்குங்கறிவகைகள் வேண்டாமென்றுசொல்லி
வழங்காக்கறிவகை நீர்கேட்டீர்
பிள்ளைகறியுஞ்சோறும் போட்டாயானல்
போசனங்கொள்வோமென்றீர் அரண்மனையில்
பிள்ளையறுத்துக்கறி சமைத்துவுமக்கு
போசனந்தந்தவர்க்கு மோசம்பண்ணி
சிந்தைகலங்கியவள் தேடிப்புலம்ப
சிவனூரேவுந்தனைத்தான் காணமல்
அவர்கள்புலம்புகிற சத்தங்களில்லை
அறுபத்துநாலுகொடிமுடி அதிர்ந்திடுமாம்
வெள்ளைவிடையிலேறி சிறுத்தொண்டர்பக்கல்
விமலரேகாட்சிதர வேண்டுமென்றாள்
பிள்ளையறுத்துண்ணவரப் போனேனடிபெண்ணே
பொய்யன்மெய்யனே வென்றறியப்போனேன்
சொன்னசொல்தவறுண்டி சிறுத்தொண்டபத்தன்
சோதித்தேனென்னலே யானமட்டும்
அறுத்தபிள்ளையெழுப்பி அவன்வீட்டில்விட்டேன்
ஆருமறியாமலே வந்துவிட்டேன்
அவனுக்குமோட்சங் கொடுக்கவேணும்
ஆதியுமையவளே யெழுந்திரென்றூர்
வெள்ளைவிடையின்மீதில் விமலருமேறினூர்
வீற்றிருந்தாளுமையவளும் வகையாளே
மூஷிகவாகன மேறினூர்விநாயகர்
முருகர்மயில்வாகன மேறுகிறூர்
அன்னவாகனமேறி பிரம்மாவும்வாரூர்
அம்மன்சிம்மவாகன மேறினளே
மயானசிமவாகன மேறினளேஉமையாள்
வானவருடனிந்திரன் வருகிறூர்

ஆளிவாகனமேறி அழகாய்வீரபத்திரர்
அவரொருபுறமாக வருகிறார்
முப்பத்துமுக்கோடி தேவருடனே
முனிவரிஷிகளுடன் வருகிறார்
நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளொருபக்கம்
நாகலோகத்தாரொரு பக்கம்வருக
கின்னரர்கிம்புருடர் சித்தவித்தியாதரர்
கெருடகாந்தருவர் வருகிறார்
ஆதிசிவனுடனே அனைவருஞ்சூழ்ந்து
அரகராசத்தம்செய்து வருகிறார்
சங்கநாதத்தொனிகள் செயகண்டிவாத்தியம்
சத்தசமுத்திரம்போல் கோஷ்டமிட
ஆகாசவீதியிலே ஆதிசிவனுடனே
அனைவருங்கூடியங்கே வந்துநின்றார்
வெள்ளைவிடையைத்தைத்து விமலரிறங்கி
வேறொருசங்கமரைப் போலானார்
அழுகிறசிறுத்தொண்டன் பக்கலுக்குவந்து
ஆடாசிறுத்தொண்ட பத்தாவென்றார்
உம்மைப்போலேயொரு சங்கமனார்வந்தார்
உறுதியாய்ப்போஜனம் தருவேனென்றேன்
பிள்ளைகறியுடசாதந் தின்னவேயிங்கே
பொருந்தியிருந்தாரங்கே விரும்பவில்லை
அறுத்தபிள்ளையெழுந்து வந்ததுசுவாமி
அவர்வந்திருந்தவிடம் வனமாச்சு
ஈஸ்வரர்வந்திருந்தாரென்று தெரியாமல்போச்சுது
ஏமாந்திருந்தோமவர் வெளியானார்
மோசங்கள்செய்து மகாதேவரெங்களை
மோட்சங்கொடுக்காமலே அவர்போனார்
காண்போமேயானால் நாங்கள்கொண்டபலந்தீர்வோம்
காணமல்போனாலே உயிர்விடுவோம்
நான்தாண்டாசிறுத்தொண்ட பத்தாவுன்னிடத்தில்
நாதருஞ்சோதிக்க வந்தேனென்றார்
மண்ணுலகத்திலே வாழ்கிறையோபத்தா
பொன்னுலகத்திற்கு வாறாயோவென்றார்
மண்ணுலகத்திலேவாழ்ந்தாச்சுசிவனே
பொன்னுலகத்திற்கு வாறேனென்றார்

பொன்னுலகத்திற்கு வாராயோயுண்டானல்
ஏறும்பிள்ளாயிந்திர ரதமேறு
நானொருவனுமாக வருவேனேசுவாமி
நாதரேயொருவார்த்தை சொல்லுகிறேன்கேள்
உப்பிடுந்துணைகள்வேணும் தம்பிரானேயெனக்கு
உதவித்துணைகள்வேணுந் தம்பிரானே
நெருப்பிடுந்துணைவேணுந் தம்பிரானேசிவனே
நீடுந்துணைவேணுந் தம்பிரானே
அந்தண்டையேழு இந்தண்டையேழு
ஏழேழுபதினலாக வேண்டுமென்றான்
உன்னோடேபதினைந்து வீட்டோடேகைலாசம்
உன்புறம்வருவேனென்றான் சிறுத்தொண்டன்
தன்னோடேசெய்தபாவந் தன்னோடேயல்லாமல்
இன்னமொருவருக் குதவியுண்டோ
உந்தனைவாருமென்றால் சிறுத்தொண்டபத்தா
ஊரெல்லாங்கூட்டுகிறு யொன்றாக
நான்செய்ததவங்களிலே பாதிபகுந்திட்டு
நாதரேமோக்ஷந்தர வேணுமையா
மூவஞ்சுபதினைந்து வீட்டுக்காரருக்கு
மோக்ஷங்கொடுக்கவேண்டும் சுவாமியென்றார்
பார்த்தையோபெண்ணே உமையேபார்வதியாளே
பாலகன்சொன்ன வார்த்தைகளை
அன்பன்சொல்தட்டாதே ஆதிசிவனாரே
அறுபத்தொருகோடிமுடி யடங்குமென்றாள்
ஏறும்பிள்ளாயிந்திர ரதமேறும்பத்தா
ஏழும்யேழும்பதினலாக வந்தமரும்
சிறுத்தொண்டன்வீட்டோடே பதினைந்துவீட்டுக்காரர்
தெய்வபுரங்கூட்டி தான்வாரார்
ஆகாசகெந்திருவர் புட்பமதனைக்கொண்டு
அடர்ந்தயிருபுறமும் மழைபொழிய
ரம்பையூர்வசியாள் மேனகைதிலோர்த்தமை
நடனங்களாடியே முன்னேவர
அடுத்தான்கயிலாச முகசாலைவாசல்
அறிந்தாரேகணபதி எண்ணமிட்டார்
பெண்சாதிசம்மதிக்க சொன்னசொல்லெல்லாம்
பொய்யாகபோச்சுதென்று யேதுசொல்வார்

ஆரடாதெய்வபுரம் வாரவனென்று
அதட்டினார்வேழமுக முடையோனும்
சனியன்மகத்துவத்தால் சிறுத்தொண்டபத்தன்
தானென்றவானுவமா யேதுசொல்வான்
பிள்ளையறுத்துக்கறி சங்கமருக்கிட்டு
பேறுபெற்றிங்கேவாரேன் தெய்வபுரம்
ஆரடாயிங்கேவந்து அதட்டுபவனென்றார்
அறிந்தாரே ஆதிசிவனாரும்
பிள்ளையறுத்திட்ட பெருமைகள்சொன்னாய்
பொறுடாசிறுத்தொண்டா நில்லுமென்றார்
தேரையும்நிறுத்துமென்றார் சுவாமியந்நேரம்
சிந்தைகலங்கியர்மன் திகைத்துநின்றாள்
வரம்பெறவெண்காட்டு நங்கையுமந்நேரம்
வந்தாள்தேரைவிட்டு தானிறங்கி
மன்னவனார்சொன்ன பிழைபொறுத்துசுவாமி
மங்கிலியப்பிச்சை தாருமென்றாள்
அன்பனார்செய்தபிழை தேவர்பொறுத்து
அறுபத்துக்கொருகொடிமுடி இறங்குமென்றாள்
ஆதியிலேவுனக்கு வாக்குகள்கொடுத்தேன்
அழிப்பதுமொருக்காலு மில்லையம்மா
தெய்வபுரத்தைவிட்டு திரும்பென்றுசொன்னேன்
திருவாக்குத்தவற வொண்ணாதுகண்டாய்
புத்தியில்லாமனுஷன் சிறுத்தொண்டபத்தன்
பூலோகந்தன்னிலே கொண்டுபோய்
அவனைப்போல்சித்த னனேகம் அவனியில்
கொண்டுபோயறியவே தெரியவைத்து
தெரியப்படுத்தியல்லோ சிறுத்தொண்டபத்தனை
தெய்வபுரமிங்கே கூட்டிவாரேன்

மறுபடியும் சிறுத்தொண்டன் பூலோகம் வருகிறது

இங்கேயிரும்வெண்காட்டு நங்கையம்மாளென்று
இறங்கினாரிருவரும் பூலோகம்
பூலோகம்வந்திறங்கி யிருவருமாக
போனார்கள்காரைகாட் டம்மையண்டை
ஆதியிலேவேளாளர் குலத்தில்பிறந்து
அஞ்சுபிராயத்திலே விவாகஞ்செய்து

தவஞ்செய்தொரு பிள்ளையைபெற்றபலன்
பின்பல்லோதன்னுட கணவனரிவந்தார்
ஒருவர்பொருளெனக்கு வேண்டாமண்டோதரி
ஒருபிள்ளையுடனூரில் வாழ்ந்திருந்தாள்
கூலிகுத்தியல்லோ காரைக்காட்டம்மை
கொண்டுவந்துஒருக்காலே சேர்க்கிறது
அகத்திலொருவருக் கன்னங்கொடுப்பாள்
அதிதிபரதேசிக ளானவற்கு
தவிடும்நொய்யுமாகவே களியாய்க்கிளறி
தன்பிள்ளையுந்தானுமாய்க் கொள்கிறது
அமுதுபடியெடுத்து கறிகள்சமைத்து
அகத்திற்கொருவர்க்கன்னந் தான்கொடுப்பாள்
இப்படியிருக்கிற நாளையிலீஸ்வரர்
இவள்மனதைசோதிக்க வருகிறூர்
சிறுத்தொண்டனையழைத்து தெய்வபுரம்விட்டு
திருப்பினூர்பூலோகந் தன்னிலேதான்
தம்பிரான்போலேயல்லோ சுவாமிவடிவானூர்
தபசிபிள்ளையுமானு லன்பனவன்
காரைக்காட்டம்மைபதி தேடிவந்தாரிருவர்
காலிகள்மேய்ப்பா னவள்புத்திரனும்
ஊரார்காலிகள்மேய்க்க அவளுடபிள்ளை
ஒருவனுமேதனித்து போயிருப்பான்
அந்தவேளையில்சுவாமி சங்கமரைப்போல்வந்து
அடித்தாரேசெயகண்டி வாத்தியத்தை
சங்குத்தொனிகள் சத்தங்கள்செய்து
தலைவாசலிலிருவரும் வந்துநின்றூர்
கேட்டாளேகாரை காட் டம்மையுமன்னேரம்
கெண்டியில்சலமும் புஷ்பமுங்கொண்டு
பாதந்துலக்கியம்மா பட்டாலடிதுடைத்து
பாத்திரபுஷ்பங்கொண்டு அர்ச்சனைசெய்தாள்
கைகட்டிவாய்புதைத்து காரைக்காட்டம்மனும்
கர்த்தரைப்பார்த்து மொருவசனஞ்சொல்வாள்
எங்கெங்கும்நீயாகி தங்கினவாபோற்றி
ஏழையைக்காக்கவந்த தாள்போற்றி
திங்களணிந்தமுடி கெங்கையைத்தரித்த
செம்பொன்னம்பலவரே போற்றியையா

அடியேன்மடத்திலேதேவ ரமுதுக்கு நில்லும்
அதிதிக்குவொருவிரதம் சுவாமியென்றாள்
பனிரெண்டுமணிநேர மிங்கேவந்து
பசியாறிப்போங்களிருவர் சுவாமியென்றாள்
அப்படியேநல்லதம்மா அமுதுக்குவாரேன்
அடுத்ததெருவிலொருவ னமுதுசொன்னான்
அங்கையும்போய்பார்த்து வாரேன்தாயே
அரைநாழிகை செல்லுமென்றார்
அமுதுக்குச்சம்மதித்து அம்பலவாணர்
அவளுடையபிள்ளைபக்கம் தேடிப்போனார்
மாடுகள்மேய்த்தல்லோ மரத்துநிழலில்
மந்தைமடக்கியவ னங்கிருப்பான்
அஞ்சுபிராயப்பிள்ளை அறியாக்குழந்தை
அவனிடபக்கலுக்கு ஓடிவந்தார்
ஆரடாதம்பியுன் தாயாரழைக்கிறாள்
அமுதுபுசிக்கவுன்னை கூப்பிடுகிறாள்
ஆனால்கேள்தம்பிரானே அசலார்கள்
அடுத்தவயல்போரில் போய்விழுதல்லோமாடு
தெண்டம்பிடித்திடுவார் தீவாணத்தார்கள்
திருக்கையில்கோதண்டம் போட்டடிப்பார்
எப்படிக்குயான்போவே னென்றானேபிள்ளை
ஏதுக்குயான்போவே னென்றானேபிள்ளை
நீர்போய்வருமளவு மாடுகள்மேய்த்து
காவலாயிருக்கிறேன் தம்பியென்றார்
அமுதுவைத்துக்கொண்டல்லவோ அழைக்கிறாள்
அரைநாழிக்குள்ளாகத்தான் வாருமென்றார்
தான்போய்வருமளவு மிங்கேயிருமென்று
நடந்தானேயறியாத பிள்ளையுந்தான்
இவனங்கேபோகுமுன்னே காரைக்காட்டம்மை
யிருநாழிகையமுதுகொண்டு தான்சமைத்து
காரைகீரையும்தவிடும் களியாகக்கிளரி
கர்த்தருக்கற்புதமா யிறக்கிவைத்தாள்
சாத்தமுகத்துவைய லறைத்துவைத்து அம்மாள்
தண்ணீர்க்குடமெடுத்து புறக்கடைக்கு
தாம்புகயிறுமந்தத் தோண்டியுமெடுத்து
தண்ணீரெடுக்கக் கிணறருகில்வந்தாள்

அந்தவேளையில் சுவாமிய னுப்பிவைக்க
அவனிடமாளிகைக்கு வோடிவந்தான்
சாதம்வடித்துக்கொட்டி ஆறவைத்திருக்கும்
தவிடுக்களியுந்தின்ன பிள்ளையல்லோ
கண்டவுடனேபிள்ளை கலத்தையெடுத்தல்லோ
கையினல்சாதம்கொஞ்சம் அள்ளிவைத்து
ஆவலுடன்கீரையுஞ் சாதமும்பிசைந்து
அள்ளிஉண்ணையில்தாயார் வந்துவிட்டாள்
தண்ணிக்குப்போனதாயா ரந்நேரம்வந்து
தன்னிடபிள்ளைதனைக் கண்ணில்கண்டாள்
கண்கள்பொறிபறக்க கடுங்கோபமாகி
கையாலுலக்கையைத் தூக்கிவைத்து
சங்கமருக்கன்னமல்லோ சமையல்செய்துவைதுத்
சடுதியில்நாய்வந்து வாயைவைக்க
எந்தன்தவத்திற்கு இடர்வந்துதென்றல்லோ
இருகையாலுலக்கையைத் தான்சுழற்றி
அடித்தாளேபிள்ளையுட மூளைசிதற
ஆயிரஞ்சுக்கலாய்த் தான்பிளக்க
கண்ணுலுங்காதாலும் வாயாலுஞ்சீவன்
கதறிவுயிர்தானங்கே போகையிலே
அறிந்தாரேயந்நேரம் ஆதிசிவனும்
ஆகாசம்போமுயிரை வாருமென்றார்
செந்தாமரைச்சிமிளில் பதனங்கள்செய்து
சிறுத்தொண்டனையழைத்து சுவாமியாரும்
மந்தைக்குகாவல்சில தூதரைவைத்து
சுருக்காகவருகிறார் சுவாமியந்நேரம்

மறுபடியும் சுவாமி வருகிறது

தெருவாசல்வந்துநின்று இருவருமாக
செயகண்டிவாத்தியத்தைத் தானடித்தார்
அரகராசத்தஞ்செய்து ஆதிசிவனும்
அன்னங்கொடுமம்மா வென்றேவருவார்
பசிவேளைக்குத்தந்தால் அம்பலவாணர்
பாகதிதந்துனக்கே அன்னமளிப்பார்
அறிந்தாளேகாரைக்காட் டம்மையுமன்னேரம்
ஐயாறிந்தாலமுது கொள்ளேனென்றார்

எடுத்துப்புதைத்துஸ்நானஞ் செய்யவேணுமென்றால்
இதோவந்தார்சுவாமியா ரென்றுசொல்லி
ஐயாபோசனஞ்செய்து போனபிற்பாடு
ஆருமறியாமல்தாம் புதைக்கவேணும்
பாயில்சுருட்டியே வாரியெடுத்து
பாணையிலொளித்து ஓடிவந்தாள்
ஐயருக்குபூசைசெய்துமலர் அர்ச்சித்து
அவளுடையமாளிகைக்கு கூட்டிவந்தாள்
இந்நேரந்தேவரீ ரிளப்போடிருந்துவிட்டீர்
இப்போதுபோசனங்கள் கொள்ளுமென்றாள்

போசனம் பரிமாறுகிறது

வட்டமணைகொண்டு பாலித்திருவருக்கும்
வாழையிலையெடுத்து தான்போட்டாள்
தண்ணீர்தெளித்தல்லோ அன்னங்கள்பாலித்து
தவிட்டுக்கீரை துவையல் தான்படைத்தாள்
தாம்பூலந்தூபதீபந் தட்சணையும்வைத்து
தண்ணீரும்கையில் கொண்டுவந்தாள்
பசித்தவேளைக்கமுது யென்கையினாலாவது
பசியாறிப்போங்களிருவர் சுவாமியென்றாள்
கைகட்டிவாய்புதைத்து முன்னாலே நின்றாள்
கர்த்தரேதேவாமுது கொள்ளுமென்றாள்
போசனங்கொள்ளுமென்ற யென்தாயேகேளும்
பிள்ளையில்லாவீட்டி லுண்ணேனென்றார்
அழும்பிள்ளைகுரலோசை கேட்டதில்லையம்மா
அப்பாமகனேயென்று சொல்லுமில்லை
மலடியாய்க்காணவில்லை யென்தாயே நீதான்
மைந்தனையீன்றவள்போல் காணுதம்மா
பிள்ளையிருந்தாக்கால் யென்தாயே நீதான்
போசனங்கொள்ளுதற்கு அழையுமென்றார்
ஆனாலுரைக்கிறேன் தம்பிரானேசிவனே
அடியேனுக்கொருபிள்ளை யுண்டுகண்டாய்
எந்தன்புருஷனிறந்த பிற்பாடுபிள்ளை
யிருந்தது அஞ்சுபிராயமட்டுப்
கொண்டதவங்கள்பாதி குறையாகப்போச்சுது
கொள்ளுங்களமுது சுவாமியென்றாள்

எந்தனுக்கொருபிள்ளை யுண்டுதேவா
யிறந்துமடிந்துதெய்வபுரம் போனபிள்ளை
இனிதிரும்பியது வரப்போகுமோதான்
இப்போதுதேவர்க் குதவுமோதான்
அதனாலேகுற்றமில்லை தம்பிரானேசிவனே
அடியேன்மலடியல்ல வழுதுகொள்ளும்
மாண்டுமடிந்தாலும் வைகுந்தஞ்சேர்ந்தாலும்
வருந்திபசிக்குவந் துதவவேண்டும்
செத்துமடிந்தாலுஞ் சிவபுரஞ்சேர்ந்தாலும்
சிறுபிள்ளைபசிக்கு வந்துதவவேண்டும்
பிள்ளையில்லாவீட்டில் போசனஞ்செய்யேன்
பொற்கொடியேநானெழுந்து போறேனம்மா
கெஞ்சாக்குடுக்கையும் கையில்மாத்திரைக்கோலுங்
கமண்டலம்ஆசனத்தைத் தானெடுப்பார்
போசனங்கொள்வதில்லை போறேனம்மாவென்று
புலித்தோலாசனத்தைத் தானெடுப்பார்
ஐயர்பிணக்குகளை மெய்யாளறிந்தல்லோ
அரகராநாமிதற் கென்னசெய்வோம்
பிசைந்தகெஞ்சாமணத்துக் கிசைந்தபடியே
பேசுமணங்கொண்ட படியாக
மாண்டுமடிந்தபிள்ளை திரும்பவரவேணுமென்றால்
மண்டலத்திலில்லாத வார்த்தைசொன்னார்
செத்துமடிந்தபிள்ளை திரும்பிவரவேணுமென்றால்
தேசத்திலில்லாத வார்த்தைசொன்னார்
ஆனாலுரைக்கிறேன் தம்பிரானேசிவனே
அடியேன்வளர்த்த தொருநாயுமுண்டு
ஓசந்திபவாவென்று உந்தியிலென்றாலும்
ஓடிவந்துவாயை வைத்ததுகாண்
கூலிகுத்தின உலக்கையினாலே
கொண்டதுகொண்டபடி யாயடித்தேன்
கையாலடித்துவெள்ளக் காலைப்பற்றியிழுத்து
கண்காணுபிணமாகத் தானெறிந்தேன்
அந்தப்பலியேவும்மை நானடிப்பேனென்று
அவள்கைவுலக்கை தன்னைத்தானெடுத்தாள்
அன்னங்கொண்டால்தேவா ராச்சுதுசுவாமி
அகடுசெய்தாலுலக்கை யாலறப்பேன்

இல்லாதபிள்ளையிப்போ யெங்கேயிருந்துவரும்
என்னையனேஎங்களிட குலதெய்வமே
கையாலுலக்கைகொண்டு காலைகாட்டாள்நிற்க
கண்டல்லோசுவாமியு மேசிரித்தார்
அறிந்தாயோசிறுத்தொண்டபத்தா உன்மனதில்
அறுத்தேன்பிள்ளையையென்று பெருமைசொன்
உனக்காகிலுமொரு பிள்ளைபிறந்தாலுன் [னாய்
தேவியிருக்கப்பிள்ளை யுண்டுகண்டாய்
அவளுக்குமணக்கோல மில்லையடாபத்தா
ஆனாலும்புருஷனில்லா விதவையல்லோ
இறந்ததொருபிள்ளை இருந்ததொருபிள்ளை
இதைவிடவேறேகதி இல்லையோடா
நாயையடித்ததொரு தடியாலேயிங்கே
நாமுமடிபட வந்தோமடா
இவளைப்போல் தவமுள்ளவளேபத்தா
ஈரேழுலகந்தேடக் கிடையாது
பிள்ளையறுத்துக்கறி சமைத்திட்டேனென்று
பெருமையாய்ச்சொல்லவந்தாய் தெய்வபுரம்
உன்னிலுமிருந்தோ ருறுதிபடைத்தவர்
உலகத்திலேமேலான பேர்களுண்டு
இன்னுமிவள்மனதை சோதிப்போமென்று
ஏதுவாய்சொல்வாரவள் முகம்நோக்கி
அன்னமேதாயேநான் சொன்னசொல்தட்டாதே
ஆதிசிவத்துக்கொப்பாகச் சொல்லுகிறேன்
மகனேமகனேயென்று மூன்றுசொல்கூப்பிடும்
மாதாவேபோசனம்தான் கொள்வேனென்றார்
ஐயர்சொல்தட்டாமல் நானுமழைக்கிறேன்
பிள்ளையைத்தப்பாம லிப்பொழுது
அப்பாமகனேபரந் தாமாவென்றுபிள்ளை
அழைக்கிறாளதிக குரலோசையாய
பாயில்சுருட்டியல்லோ பரணையின்மேல்வைத்த
பிள்ளைதான்பிழைக்கவுயிர் வந்திடுமாம்
செந்தாமரைச்சிமிளியி லிருந்தவுயிரைப்போய்
பிள்ளையுடலிற்சுவாமி தான்விடுத்தார்
உயிரைவிடுத்தளவில் உருண்டுதிரண்டுபிள்ளை
உம்பர்பிரான்முன்னேவந்து தான்பணிந்தான்

அப்போதுஉம்பர்பிரா னென்றுமிகக்களித்து
மாதாவைத்தாமழைத்து யேதுசொல்வான்
எந்தனுக்காவுன்மைந்தன் தலையுடைத்தாய்
இப்போதுகயிலாசம் வாங்களென்றார்
அந்தவசனங்கேட்டு காரைக்காட்டம்மாளும்
அதிகமகிழ்ந்துதானு மேதுரைப்பாள்
அப்படியேநானுமுன் சொற்படியாகவே
நாதருடனேசபைக்கு வாரோமென்றார்
வாருமென்றுசொல்லி விமலருமப்போது
வானபுஷ்பவிமானத்தி லெழுந்தருளிச்
சிறுத்தொண்டபத்தனும் காரைக்காட்டம்மனும்
சிறுவனுமாகவேபோய் மறைந்தபோது
தம்பிரானப்போது சிறுத்தொண்டனைப்பார்த்து
தயவாகமுகம்நோக்கி யேதுசொல்வார்
உன்மைந்தனைக்கொன்று எனக்குவிருந்துசமைத்தது
மகாபெரியதவமென்று தானுரைத்தாய்
காரைக்காட்டம்மைசேதிகண்ட ாயோபத்தா
கனியுடனேஅன்பாயின்ன மெத்தவுண்டு
என்றுசொல்லிதம்பிரான் இத்யாதிபேருக்கும்
இந்திரனூர்லோக பதவிதன்னை
சிறுத்தொண்டபத்தனால் பூலோகத்தில்சிலபேர்
சேர்ந்தார்கள்சிவனது பதவியிலே
இந்தக்கதைதன்னை படித்தோர்கள்யாவரும்
இந்திரன்பதவிதன்னை யடைந்திடுவார்
சிறுத்தொண்டபத்தன்கதை சிறப்பாகக்கேட்டபேர்கள்
சீராகப்படிப்போர்கள் தான்வாழி
மண்டலத்தில்சிறுத்தொண்டன் கதைதன்னை
அச்சிலிட்டோர்பதம் பெற்றுவாழ்வார்
சீராளதேவன்கதை சிறப்பாகப்படிப்போர்கள்
செகத்திலென்னாளு மிகவாழி
திருவெண்காட்டு நங்கைகதைதன்னை
தான்படித்தோர்பூவுலகில் மிகவாழி
வாழிவாழியிந்த மண்டலந்தனிலுள்ள
தேவர்களும்மானிடருந் தான்வாழி

———

வாகீஸ்வரி அச்சகம், சென்னை-1 1970.

# பழைய கொக்கோகம்

அழகிய நிர்வான ஆப்டோன்

படங்களுடன் கூடியது

## விலை ரூபாய் 4-00

அதிவீரராம பாண்டியனுல் இயற்றப்பட்ட பழைய கொக்கோகத்தின் உண்மையான அச்சுப் பிரதி இதுவே, இரதி மன்மதன்சிங்கார இரகசியங் களும், சம்சாரசுக போகங்களும் குடும்ப இரகசி யங்களும், மணவாழ்க்கையின் மர்மங்களும், காதலன் காதலி சரசசல்லாப இன்பங்களும், காலதேசவர்த்த மானங்களுக்கேற்ப இன்றைய மேதாவிகளான காம கலா சாஸ்திரக்ஞர்களின் அபிப்பிராயங்களும் கலந்து பழமையோடு புதுமையும் கூடி பொன்மலர் வாசனை கொண்டதுபோல் உங்களைக் குதூகலிக்கச் செய்யும் பல அழகிய இயற்கை (உருவமைந்த ஆப்டோன் படங்களுடனும் கூடியது.

அழகிய பைண்டு; சிறந்த அச்சு; நல்ல வசனம் எல்லாம் கூடி ஒருங்கு அமைந்த பழைய கொக்கோகம் இதுவே,

*எமது விலாசம்:—*

ஆர். ஜி. பதி கம்பெனி,<br>
4, வெங்கட்ராமய்யர் தெரு,<br>
சென்னை-1.

# பெரியஎழுத்து

## கர்ண மகாராஜன் சண்டை

விலை அணா 12

சென்னை - இட்டா
பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்
நெ. 189, தங்கசாலை தெரு,
சென்னை-1

உ

கடவுள் துணை

புகழேந்திப் புலவர் இயற்றிய

# கர்ண மகாராஜன் சண்டை



சென்னை:

**இட்டா - பார்த்தசாரதி நாயுடு ஸன்ஸ்**

*சக்கரவர்த்தி பிரஸ்*

189, *தங்கசாலைத் தெரு, சென்னை*—1.

*இதன் விலை*] 1957. [*அணா*-**12.**

## மரகதசுந்தரம்

இது நமது பூர்வீக தேசாசாரங்களை விளக்கிக் காட்டும். இதில் கற்பிலக்கணத்தையும், ஆன்மார்த்தமான விஷயங்களைப் பற்றியும் அநேகம் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கின்றன. இதில் கதாநாயகி தான் காதலித்த புருஷன் இறந்துபோனதாக யாவராலும் கருதப்பட்டபோதும் தன் கற்புநிலை வழுவாது அவனையே பதியாய்க் கருதி வைராக்கியத்தோடு நடந்துகொண்டது எல்லா ஸ்திரீகளுக்கும் இன்றியமையாத கற்பிலக்கணத்தைக் கற்பிக்கும். இது நமது நாட்டு மாதர்கள் ஒவ்வொருவரும் அகத்தியம் வாசிக்கவேண்டிய புத்தகம். இதை வாசிப்போருக்கு இதன் அருமை எளிதில் விளங்கும்.

இதன் விலை ரூ. 1–4–0

---

## நாகபூஷணம்

இது நாவல் இரத்தினம். பாரத தேசத்து மாதர்கள் தங்கள் கற்பையும் புருஷரையும் காப்பாற்றுவதின் நிமித்தம் எவ்வித ஆபத்து வந்தாலும் கருதாமல் உண்மையை வெளிப்படுத்துவதில் மிக்க ஊக்கமுடையவர்கள் என்பதை விளக்க இந்த நாவல் பல அத்தாட்சிகளோடு விளங்குகின்றது. இக்கதாநாயகியாகிய நாகபூஷணம் தன் புருஷனுக்கு வந்த ஆபத்தைத் தடுக்க தானே வக்கீல் வேடம் பூண்டு, நீதி மன்றம் வியப்புறும்படி வாதித்து, ஆபத்தில் சிக்கிய தன் புருஷனைக் காப்பாற்றுவதோடு உண்மைக் குற்றவாளிகளையும் வெளிப்படுத்துகிறாள். கோர்ட் வாதம் வெகு ருசிகரமாயும் சாமர்த்தியமாயுமிருக்கும்.

இதன் விலை ரூ. 1–4–0

---

இட்டா - பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,
189, தங்கசாலைத் தெரு, சென்னை-1.

# கர்னமகாராஜன் சண்டை

—:(*):—

## விநாயகர் துதி

முந்திவிநாயகனே முருகுமலாள்புத்திரனே
கந்தருக்குமுன்பிறந்த கணபதியேமுன்னடவாய்
ஏடுதவருமல் எழுத்தாணிசாயாமல்
கோடுதவருமல் கொழுந்தோலைசாயாமல்
நாவுதவருமல் நல்லோசைதாருமையா
குரலில்குடியிருந்து குரலோசைதாருமையா
மரலியனுகாமல் வரமீய்ந்துகாருமையா
வெட்பாலைகீழிருக்குஞ் சப்பாணிபிள்ளையாரே
சப்பாணிபிள்ளையாரே பொற்பாதம்யான்மறவேன்
பொற்பாதம்யான்மறவேன் பொன்னின்கணபதியே
தாப்பாமலிக்கதைக்குத் தக்கோனேமுன்னடைவாய்
பஞ்சவர்கள்தன்கதையை பட்சமுடன்நான்படிக்க
செஞ்சொல்சிவனுடைய தேவித்திருமகனே
வர்னமருகநல்ல வளர்கொம்பொருகோனே
கர்னன்திருக்கதையைக் காசினியோர்தாம்படிக்க
குற்றங்கள்வாராமல் குறையொன்றுஞ்சேராமல்
கற்றபட்டும்யான்படிக்க கணபதியேமுன்னடவாய்

## சுப்பிரமணியர் துதி

தேவரெல்லாம்வணங்குந் தேவர்சேனுபதியே
மூவரெல்லாம்புகழும் முருகோனேமுன்னடவாய்
புள்ளிமயிலேறும் புனிதவடிவேலா
வள்ளிமணவாளா வந்தெனக்குமுன்னடவாய்
திருத்தணிவேலரேயுன் சீர்பாதம்நான்மறவேன்
கருத்துடனேநான்பாடக் கர்னன்திருக்கதையை
எம்பிரான்முன்னடக்க என்கதையும்பின்னடக்க
தம்பிராஞனசிவ சண்முகனேமுன்னடவாய்

## சரஸ்வதி துதி

நாவிற்சரஸ்வதியே நான்முகனூர்தேவியரே
பூவிற்பிறந்தவளே பூலோகரட்சகியே

மாசற்றதீபமே மன்னர்புகழ்விளக்கே
நேசத்துடனெனக்கு நெஞ்சில்குடியிருப்பாய்
வெற்றிக்கர்னன்கதையை விரும்பியேநான்படிக்க
பத்தியுடனிருந்து பார்வதியேமுன்னடவாய்

## ஈஸ்வரர் துதி

ஆதிபரஞ்சுடரே அரியசிவஞரே
சோதிமணிவிளக்கே தூயவருட்கடலே
கற்கண்டேசர்க்கரையே கனிவுள்ளமுக்கனியே
சொர்க்கப்பதியரசே தூண்டாச்சுடரொளியே
எள்ளுக்குளெண்ணைபோல் எங்கும்நிறைபொருளே
துள்ளுமெருதேறுந் தோன்றுதமெய்ப்பொருளே
மாலுமயனறியா வண்ணப்பரஞ்சுடரே
ஆலவிடமுண்ட ஐயனேமெய்ப்பொருளே
கர்னஞர்சண்டைதன்னை கர்த்தாவேநான்படிக்க
தருணமிதுசமயம் தயவுள்ளசங்கரனே
இகழ்ச்சிகள்வாராமல் இடும்பொன்றும்நேராமல்
மகிழ்ச்சியாயெந்தனுக்கு மகாதேவாமுன்னடவாய்

## மகாவிஷ்ணு துதி

அண்டமளந்தவரே ஆதிநாராயணரே
கொண்டல்நிறமுள்ள கோபாலமாயவரே
கஞ்சன்வலதழித்த கார்மேகாமுன்னடவாய்
செங்கோலசோதையெனுந் தேவிதன்பாலகனே
எல்லையளந்தவனே இரணியனைக்கொன்றவனே
கல்லைப்பெண்ணாக்கிவைத்த கர்த்தாவேமுன்னடவாய்
வெண்ணைத்திருடியே மிகவிடைச்சியர்களிடம்
வண்ணமுடனடியுண்ட மாயவனேமுன்னடவாய்
பாண்டவர்க்குத்தூதுபோன பகவானேமுன்னடவாய்
ஆண்டவனேயிக்கதைக்கு அருள்புரியவேண்டுமையா
வனவாசம்போன்றொரு மன்னவர்களைந்துபேரும்
தென்னமுடிவேந்தன் திரியோதிரனுடனே
பதினெட்டுநாள்சண்டையும் பாரதமுந்தான்முடிக்க
செஞ்சொல்சிவனுடனே தேர்விஜயன்வில்லெடுத்து
சண்டைகள்செய்தலவோ சங்கரனார்தன்னிடத்தில்
பாசுபதம்பேறுபெற்ற பார்த்திபனருச்சுனரும

மாசிலாமேனி மாயவனூர் தம்முடனே
வெற்றிமதயானை வீமனவன் தன்னுடனே
நகுலசகாதேவரென்னும் ராஜாக்களெல்லோரும்
வில்லெடுத்துவேலெடுத்து வீரவாள் தானெடுத்து
அம்பெடுத்துவில்லெடுத்து அம்புறுத்தூணியணிந்து
அவரவர்கள்தேரேறி அமர்பொருதவந்தார்கள்
மன்னன் திரியோதிரன் வண்ணப்படையுடனே
கர்னன்சகுனி காங்கேயன்தேத்தரசன்
வீஷ்மர் துரோணரும் விதுரனசுவத்தாமன்
பதினெட்டுஅக்ரோணி படைமன்னர் தாமும்நின்று
பன்னிரண்டுநாள் சண்டை பாங்குடனேசெய்தார்கள்
அச்சுதனூர்வில்லெடுக்க ஆயனவர்தேரோட்ட
மைத்துனருமைத்துனரும் மல்பொருதும்நாளையிலே
தேத்தரசனென்னும் தேர்வேந்தராசாவும்
சயிந்தவனென்றுசொல்லும் தார்வேந்தராசாவும்
வெற்றிபரிசுடைய விஜயன் திருமகனை
சுபத்திரையாள்பெற்றெடுத்த துய்யமணிவிளக்கை
பதின்மூன்றும்நாளையிலே பாலனபிமனைத்தான்
மாலையைக்குறுக்கிட்டு மதிபிசகாய்கொன்றுவிட்டான்
அபிமனன் தான்விழவே அருச்சுனனூர் தான்கேட்டு
ஆருதகோபங்கொண்டு அனலில்மெழுகாகி
காண்டீபன்வில்லெடுத்து காளையந்தஅர்ச்சுனரும்
என் மகனைகொன்றவனை இப்போதேகொல்வேனென்று
பதினன்காம்நாளையிலே பரிதிமறையுமுன்னே
எவ்விதமுங்கொல்வேனென்று இட்டான்சபதமன்னுள்
இல்லாமற்போனாலே அக்கினியில்விழுவேனென்று
இட்டசபதமது எம்பெருமாள் தான்கேட்டு
மைத்துனனூரிட்ட சபதம்முடிக்கவென்று
மாயன்சக்கரமெடுத்து மறைத்தார்பொழுதையப்போ
அர்ச்சுனனூர்கண்டு ஆயாசந்தானாகி
அக்கினிவளர்த்தி அதில்விழவுஞ்சென்றூனே
மாயவர்கண்டு வாள்விசயர்க்கேதுசொல்வார்
க்ஷத்திரியர்கையினூல் தார்வேந்தர் அர்ச்சுனனே
வில்வளைத்துநாணியேற்றி விசையப்பெருமாளும்
அக்கினியைச்சுற்றி அர்ச்சுனனூர்வருகையிலே
துரியோதனனுடைய சேனைகளெல்லோரும்

சகடயூகங்கட்டிநின்ற சமர்த்தனெனும்தேத்தரசன்
வேந்தர்களெல்லோரும் வேடிக்கைப்பார்க்கவந்தார்
அதுசமயம்பார்த்து ஆயர்பெருமாளும்
அர்ச்சுனனைப்பார்த்து அருளாளரேதுசொல்வார்
பொழுதிருக்குமானல் போர்விஜயா அர்ச்சுனனே
சயிந்தவனைகொல்ல சமர்த்துண்டோவென்றுரைத்தார்
அப்படியேசெய்வேனென்று அர்ச்சுனனுமுரைக்க
ஆயர்பெருமாளும் அன்புடனேசக்கரத்தை
வாங்கிவிட்டார்மாயவரும் வாள்விஜயன்வில்லெடுத்து
தேத்தரசர் தன்னை சிலைகவர்ந்தப்போது
அர்ச்சுனனார் அம்புக்கு ஆகாரந்தான்கொடுத்தான்
எக்காளைசின்னம் இயல்பெறவேஊதலுற்றார்
பேரிகைதான்முழங்க பெரியசின்னந்தானூத
மைந்தன் பகைமுடித்து வைத்தார்கள் மற்றுநாள்
பதினைந்தாநாளையிலே பகைசெய்ததுரோணரையும்
அரனார்அளித்ததொரு சிறுவனும் துஷ்டதூய்மன்
துஷ்டதூய்மன்கையாலே துரோணர்விழுந்துவிட்டார்
பதினாறும்நாளையிலே போரிட்டாரெல்லோரும்
வெற்றிமுரசறைய விருதுமேளந்தான்முழங்க
இப்படியாக இருக்கின்றவேளையிலே

இனிமேல் கர்னன் சண்டை செய்கின்றது

பதினேழாம்நாளையிலே பரிதிமகன்கர்னனுந்தான்
மல்யுத்தம்பொருதவென்று மணிமகுடந்தானணிந்து
ஆனைபரிசேனைதிரள் அனைவரையுந்தான்கூட்டி
வானமுங்கடலதிர வந்தான்படையெடுத்து
காசிநாடாளுங் கர்னர்பெருமாளும்
போருக்குத்தான்போகப் போர்மன்னர்தானிருந்தான்
பொன்னுருவியரண்மனைக்குப் போனாரேயன்னேரம்
தேவியரண்மனைக்குச் சென்றான் கர்னனுமே
மன்னர்வருகிறதை மங்கையர்கள் தான்கண்டு
பொன்னுருவிதாதியர்கள் பூவையர்கள்கண்டுவிட்டு
ஆஸ்தானமண்டபத்தை அலங்கரித்துமேடையிட்டார்
மாணிக்கப்பொற்பீடம் மங்கையர்கள் தான்போட்டார்
ஆசனமிட்டார்கள் அங்கராயன் தானிருக்க
சிங்காதனம்போட்டார் சேடியர்களந்நேரம்

அங்கவளநாடும் அரசர்பெருமாளும்
இட்டசிம்மாதனத்தில் ஏறியவர்வீற்றிருக்க
மனக்களிப்புதன்னுடனே மன்னவர்கர்னனுந்தான்
மாணிக்கப்பொற்றபீடத்தில் மன்னவர்வீற்றிருந்து
சேடியரைப்பார்த்து சொன்னுரொருவார்த்தை
தாதியரைப்பார்த்து தார்வேந்தரேதுசொல்வார்

**கர்னர் தாதியரையனுப்பி பொன்னுருவியை அழைக்கச் சொல்லுதல்**

அன்னமேதேனே அருகிருக்குந்தாதியரே
பொன்னுருவிநாயகத்தை போயழைத்துவாருமென்றார்
மாதரையுமைந்தரையும் வரவழைத்துவாருமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரிழைமாரோடிவந்து
பொன்னுருவிநாயகியைப் போற்றியடிபணிந்து
அடிகீழ்முடிசாய்த்து ஆரணங்கைத்தானோக்கி
திருவள்ருநாடு செல்வரிடதேவியரே
தனம்பொருந்தும்நாட்டுக்குத் தானேயதிபதியாய்
முத்தின்சூழ்நாட்டுக்கு முழுதுமுடையவளே
காசிநாடளுமந்த கர்னர்பெருமாளும்
அன்னமேஉன்னை அழைத்துவரச்சொன்னூர்காண்
ஆகையினுல்வந்தோங்காண் ஆரிழையேயிப்போது
இப்போதேநீரும் எழுந்தருளிவாருமென்றார்
அந்தமொழிகேட்டு ஆரணங்குபொன்னுருவி
கண்கள்சிவப்பெழும்பிக் காந்தாளமாகியவள்
சீறியவள்பற்கடித்துச் சேடியரைத்தான்பார்த்து
இழிகுலத்தார்வார்த்தையை எந்தனுக்குக்கூறவந்தாய்
தேர்ப்பாகன்வார்த்தையை தெரிவிக்கவந்தாயோ
இத்தனைநாளில்லாத இடும்புனக்குவந்ததென்ன
ஆகையினுலங்கனிட அவ்வார்த்தைநீயுரைத்தாய்
சிங்கத்தின்குட்டியைப்போல் சீறியவள்பற்கடித்தாள்
தெண்டனிட்டதாதியரும் திடுக்கிட்டுநடுக்கமுற்று
கால்நடுங்கிக்கைநடுங்கிக் கடுகியவள்பின்னிட்டு
வந்தவழியே மயங்கியவள் திருமபி

**தாதி பொன்னுருவியை அழைத்து வரவில்லையென்றது**

கர்னர்பெருமாளைக் கடுகிமிகத்தெண்டனிட்டு
கலத்துப்புழுநீக்குங் கர்னர்பெருமாளே

ஆச்சியரைநாங்கள் அழைத்துவரப்போனோமே
பூவணையில்பள்ளிகொண்டாள் பொற்கொடிஎன்னுச்சி
தழுவணையில்பள்ளிகொண்டாள் தையலருமென்னுச்சி
அனந்தல்வரவில்லை அங்கவளநாட்டாட்கு
என்றுசொல்லக்கேட்டு ஏதுரைப்பான்கர்னனுமே

கர்னர் தாதியரையனுப்பி மறுபடியும் பொன்னுருவியை அழைத்துவரச் சொல்லுதல்

பாங்கியவள்வரவை பைங்கொடியேகூறுவேன்கேள்
பாரதப்போர்செய்து படுகளத்தில்சென்றேறி
காண்டாவனமெரித்த கயனையுடஅம்பாலே
பட்டுமுயிர் துறந்து படுகளத்தில்நான்மடிந்தால்
கற்பகத்தேர்மேலே சாய்ந்தான்கர்னனென்றால்
அப்போதுசேதிகேட்டு ஆரிழைமாதுநல்லாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அன்னநடையாளும்
இழிகுலத்தான்பட்டால்எனக்கென்னவென்றிருப்பாள்
தேர்ப்பாகன்பட்டாலே தனக்கென்னவென்றிருப்பாள்
அப்படிதானிருக்க ஆச்சுதந்தஆரிழைக்கு
கைம்பெண சிறையிருக்கக் காரணங்கள்வந்ததடி
போர்களத்தில்செல்லவென்று புலிகரடி சேனைஎல்லாம்
ஆனை பரிசேனைமுதல் அத்தனையுங்கொண்டுவந்து
ஆசாரவாசல்முன்னே விட்டுவந்தேன்ஆரிழையே
நடப்பேண்டிபூசலுக்கு ரணக்களத்தில்மன்னருடன்
உயுத்தப்போருக்கு உத்தமியேநான்போறேன்
ஆகையினுல்தாதியரே ஆரணங்கேகூறுவேன்கேள்
காணுத்திருமுகத்தைக் கண்டுநான்போவதற்கு
பாராத்திருமுகத்தைப் பார்த்துநான்போவதற்கு
அன்னநடையாளை அழைத்தோடிவாருமென்றார்
பொன்னுருவியாளைப் பொற்கொடியையிட்டுவந்தால்
கண்டுவொருவார்த்தை கன்னியரேநான்பேசி
பார்த்துமொருவார்த்தை பாவையுடன்நான்பேசி
போகிறேன்நான் பொற்கொடியையழைத்துவாரும்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரிழைமாரோடிவந்து
பொன்னுருவிநாயகிக்குப் போற்றிமுடிசாய்த்து
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகமே
எழுந்துநடந்துவாரும் ஏந்திழையேமாதாவே

காசிநாடாளுங் கர்னர்பெருமாளும்
படுகளமேறுதற்குப் பாவையரேபொன்னுருவி
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்பூமுடிமேல்
மாண்டுண்டுபோவதற்கு மங்கையரேநாளாச்சு
அரவக்கொடியாட்கு ஆச்சுதுகாணின்றோடே
ஆச்சுதுநாளும் அரசாளப்பஞ்சவர்க்கு
பஞ்சவர்க்குப்பட்டம் பதிந்ததுஇப்பொழுது
ஆகையினால்சொல்லுகிறேன் அன்னமேநீர்கேளும்
தாமரைவேரிருந்தால் தண்ணீரேதாயாகும்
கமலமலர்ந்தால் கதிரவன்காத்துக்கொள்வான்
தாமரைவேரறுந்தால் தாயைப்பகையாக்கும்
கரைமீதிருந்தால் கதிரவன்காயந்துகொல்வான்
அப்படிபோலேயென் ஆச்சியரேபொன்னுருவி
ஈஸ்வரரும்பார்வதியும் எல்லோருந்தாமறிய
சந்திரருஞ்சூரியரும் தரணியாகாசமுதல்
இந்திரருமன்னவரும் இமையவருந்தாமறிய
கன்னிப்பிராயத்தில் கர்னரைமாலையிட்டீர்
நீ—மாலையிட்டஅப்பொழுதே மறைந்ததேமகாசேனை
தாலிகட்டும்போதே தவிர்ந்ததங்கேசேனையெல்லாம்
கைகொடுத்ததோஷம் கழிக்கணுமேபொன்னுருவி
வாள்கொடுத்தார்கையில் வாளுள்கொடுப்பதல்லால்
அங்கராயன்போலே ஆண்பிள்ளைபெற்றெடுத்தீர்
அங்கனிட்செல்வமென்று அறிந்ததுஅத்திநகர்
அத்திநகர்மன்னரல்லோ வெற்றிபெற்றிருந்தார்கள்
ஈரேழுலகத்து இராசாக்கள்வந்திருந்தார்
இன்னங்குறைவுண்டோ இளங்கொடியேயுந்தனுக்கு
அந்தக்குறைகளெல்லாம் ஆவதுண்டோமங்கையரே
என்றைக்கிருந்தாலும் இதுவேசதங்காணும்
பெற்றார்பிறந்தார் பிறந்திடத்தார்சுற்றமுள்ளோர்
அத்தனையுமிந்த அரசனுக்குஈடுமல்ல
கொற்றவரும்நீயும் கூடியுறவாடி
ஒத்துமிகப்பேசி உறவாடிவார்த்தைசொல்லி
செல்வனும்நீருமாய்ச் சேரும்வகைநீர்கேட்டு
சந்ததியும்நீரும் தங்குமிடம்தான்கேட்டு
மகனுக்குமுனக்குமொரு வகைகேட்கவாருமென்றார்

ஆதரவுகேட்க ஆரணங்கேவாருமென்றார்
வாருங்களென்று வணங்கியவர்தெண்டனிட்டார்

### பொன்னுருவி கர்னன் அரண்மனைக்கு வந்தது

அப்போதுபொன்னுருவி அரிவையர்சொன்னதெல்லாம்
ஒப்புடன்தான்கேட்டு உருகியந்தமாதுநல்லாள்
மனதுகலங்கி மதிமயங்கிமங்கையவள்
அண்டவொணுத்துக்கமது ஆனளேபொன்னுருவி
ஆசனத்தைவிட்டு இறங்கியந்தஆரணங்கு
சிம்மாசனத்தைவிட்டுத் திகழக்குதித்திறங்கி
காலிலிட்டகாற்சிலம்பு கலகலென்றுஓலமிட
கொஞ்சுங்கிளிபோலே கொம்பனையாள் தானடந்தாள்
சாய்ந்துவழிநடந்து தையநல்லாள்பொன்னுருவி
மாணிக்கத்தூணருகே மறைவாகவந்துநின்றாள்
பொற்றூண்மறைவாக பொற்கொடியும்வந்துநின்றாள்
காசிநாடாளுமந்த கர்னரவர்தாமறிந்து
அண்டவொண்ணுஓங்கார மாகியந்தஆணழகன்
கண்கள்சிவந்து கடுங்கோபந்தானுகி
மருவிமனங்கொதித்து மனமடக்கியேதுரைப்பான்
அன்னமேதேனே அமுர்தப்பசுங்கிளியே
பொன்னகராஜன்பெற்ற பூங்கிளியேபொன்னுருவி
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகமே
இன்னங்கபடங்கள் ஏனுனக்குஏந்திழையே
மௌனங்கள்தீர்ந்துநீ மங்கையரேஎன்னேடே
சங்கையற்றுவார்த்தை தையலரேபேசொணுதோ

### கர்னர் பொன்னுருவிக்குத் தன் வரலாறு கூறுதல்

ஆனலுமென்ன ஆரணங்கேநீகேளு
மாணுகங்கொண்ட மன்னன் திரியோதிரன்
சோற்றுக்கடன்கழிக்க தோகையரேநான்போறேன்
செஞ்சோற்றுக்கடனை செலுத்திவைக்கநான்போறேன்
பூசலுக்குநான்போறேன் பொன்னுருவிநாயகமே
போனபிறகு பொற்கொடியேயிங்கிருந்தால்
அரவக்கொடிபடைத்த அரசன்பெருமாளும்
சர்ப்பக்கொடிபடைத்த தார்வேந்தரிங்கேவந்தால்
மாளிகையில்வந்துஉன்னை வாவென்றழைத்தாலே
அன்னமேநீகேளும் அவர்பிறகேபோகாதே

இழிகுலத்தானென்று இருந்தாயிதுவரைக்கும்
தேர்ப்பாகனென்று தேன்மொழியேநீயிருந்தாய்
என்குலத்தையுந்தனுக்கு இளங்கொடியேகூறுகிறேன்
வங்கிஷத்தையுந்தனுக்கு வகையாகச்சொல்லுகிறேன்
பர்வமதயானை பஞ்சவர்களைவருடன்
குருகுலமதயானை கொற்றவர்களைவருந்தான்
கொற்றவர்களைவரையும் கொழுந்தரென்றுநீயறியும்
தக்கபுகழுடைய தருமரெனக்கிளையார்
வெற்றிமதயானை வீமனெனக்கிளையான்
ஆணுலழகுமன்னன் அருச்சுனனென்தம்பி
நாமக்கொடிவேந்தன் நகுலனெனக்கிளையான்
சாஸ்திரக்கொடிவேந்தன் சகாதேவனெனக்கிளையான்
பாருலகில்கீர்த்திபெற்ற பாண்டுவேந்தனென்தந்தை
கோணுதமாதவள் குந்தியம்மாளென்தாயார்
பேடைமலர்க்கண்ணுள் பெற்றுள்தலைமகனாய்
கன்னிப்பருவத்தில் காளையென்னையீன்றெடுத்தாள்
இரவியுடமந்திரத்தால் ஈன்றெடுத்தாள்என்னையவள்
சின்னவயதிலென்னை சிக்கெனவேபெற்றெடுத்தாள்
பெற்றமகன்குற்றமென்று பூதலங்களேசுமென்று
பேழையொன்றதனில் போட்டென்னைமுத்திரித்து
மாணிக்கப்பேழையிலே போட்டென்னைமுத்திரித்து
துங்கபத்திரிகோதாவரி சொல்பெரியஆற்றில்விட்டாள்
பாலாறுகங்கை பரவிவரும்ஆற்றில்விட்டாள்
ஆற்றுநீர்வெள்ளத்தில் அலையில்மிதந்துவர
அடுத்தநகராளும் அரசன்திருதராட்டிரனும்
தேர்ப்பாகன்தான்தேரேறி சென்றுர்கரையோரம்
அரசனும்அந்தகனாய் வருவதைத்தேர்ப்பாகன்
பெட்டியதுவருகின்ற புதுமையதைக்கண்டு
ஆற்றினில்பெட்டியவன் அதோவருகுதென்று
தேர்ப்பாகன்கூறவே தேர்வேந்தனேதுசொன்னுன்
பெட்டிஎன்னுதுகாண் புதுமையெல்லாமுன்னுதுகாண்
மாணிக்கப்பெட்டியில் வைத்ததெலாமுன்னுதென்றுன்
அப்போதுதேர்ப்பாகன் அலையில்வரும்பெட்டிதன்னை
சேரப்பிடித்து சேர்த்தெடுத்துக்கொண்டுவந்து
பெட்டியைத்திறந்து பூரித்தென்னையெடுத்தான்
அரசரின்சொற்படியே அவர்கையில்பெட்டிதந்தான்

வாரியெடுத்து வளர்த்தான்சிலகாலம்
செல்வமாய்சீராட்டி சிக்கெனவேதான்வளர்த்தான்
அவனியெங்குந்தானறிய அவர்மனையில்வளர்ந்தேன்
வளர்ந்தேன்சிலநாள் வலுமைகண்டுதேர்ப்பாகன்
ஆண்மையுஞ்சவுரியமும் அறிந்துமந்ததேர்ப்பாகன்
வில்வித்தைகற்பிக்க வேணுமென்றுதேர்ப்பாகன்
வல்லமையால்கீர்த்திபெற்ற மகாரிஷியின்புத்திரனார்
ஜெமதக்கினிமகாரிஷி செல்வன்பரசுராமன்
அவர்கையாலெந்தனுக்கு ஆயுதவித்தைகற்பித்தார்
ஆயுதவித்தைகற்று அவராலேசாபம்பெற்றேன்
அப்படிநானிருக்க அரவக்கொடிவேந்தன்
நூலால்கடுந்திரளார் நூற்றுவர்கள் தன்னைக்கண்டு
வணங்கியழைத்துவந்து வாள்விஜயனுக்கெதிராய்
தேசமறியச் சிகாமணியாய்த்தான்மதித்தார்
அன்றுமுதலின்றளவும் அல்லலாய்நின்றுவிட்டேன்
தம்பிமார்காணுமல் தங்கிவளர்ந்துவிட்டேன்
ஐவருக்கும்பகையாய் அல்லலாய்நான்வளர்ந்தேன்
பஞ்சவர்களைவருக்கும் பகையாளியாகிவிட்டேன்
உத்தமர்களைவரிட உறவிழந்துநானிருந்தேன்
ஆனாலுமென்னவிது ஆயன்செய்ததந்திரமிது
மாயனார்செய்த மகிமைகாண்பொன்னுருவி
பொன்னுருவிநாயகமே பூவையரேநீர்கேளும்
ஆளப்பிறந்த அபிமன்னனுன்மகண்டி
ஆருயிரவர்பெற்ற அல்லிமகனுன்மகண்டி
கடோர்கஜன்தான்பிறந்தான் கலந்தையுமுன்னுதடி
ஈரேழுபதினாங்கு லோகமுமுன்னுதடி
படுகளத்தில்சென்றாலும பாவையறிவையரே
அமர்க்களத்தில்மாண்டாலும் அன்னமேநீர்கேளும்
போர்க்களத்திலென்னுயிரும் போவதற்குமுன்னுகை
அண்ணனென்றுசொல்லி ஐவர்களுமோடிவந்து
தமையனென்றுசொல்லி தம்பியர்களோடிவந்து
மார்மேலுந்தோள்மேலும் வைப்பார்கள்ஐவரடி
மகுடமுடியெடுத்து மார்போடேசேர்த்தெடுத்து
அண்ணாவேயென்று அலறிடுவாரைவரடி
பொன்னூற்சிம்மாதனங்கள் போதுவேதானமர்த்தி
வாரியெடுத்துவைத்து வாழ்மகுடந்தான்பதித்து

கைகட்டிசேவிப்பார் கட்டழகரைவரடி
நூற்றுவர்கள் தனக்கும் ஏற்றமுள்ளதேவியர்க்கும்
எந்தனுக்குமேலாக இளங்கொடியேயுந்தனுக்கு
வானுலகம்புகழவழி காட்டுவாரைவரடி
ஆரோஎவரோவென்று எண்ணாதேஆரணங்கே
மன்னவர்களைவருந்தான் மைத்துனர்மாருந்தனுக்கு
ஆனாலுமின்னமொன்று ஆரணங்கேசொல்வேன்கேள்
காண்டாவனமெரித்த காளையுடஅம்பாலே
கற்பகத்தேர்மேலே கர்னனவன்சாய்ந்தானென்றால்
ஐவருமோடிவந்து ஆரிழையேஉன்னுடைய
பாதம்விளக்கி பனிநீரால்தான் துடைத்து
பூவும்புதுமலரும் பொன்னருகுஅட்சதையும்
பூசித்துஉந்தனைப் போற்றியடிபணிந்து
சிந்துபதிநாடு செல்வநகர் அத்திபுரி
அத்திபுரநாடும் ஐவர்குருநாடுகளும்
மெத்தப்புகழாக மேதினியோர்கொண்டாட
முத்துமணிமண்டபத்தில் முன்னாகவைப்பார்கள்
செங்கதிரோன்போல செங்கமலமும்போல
கண்காட்சியாகவுன்னை கனமுடனேவைப்பார்கள்
மைந்தனுக்குப்பட்டமும் மகுடந்தரிப்பார்கள்
உன்—செல்வருநீயுமாய்ச் சிறப்பாயிருப்பீர்கள்
மைந்தருநீருமே மகிழ்ந்திருப்பீரத்திநகர்
இழிகுலத்தானென்று எண்ணாதேஏந்திழையே
போகவிடைதருவாய் பொற்கொடியேபொன்னுருவி.

பொன்னுருவி தன் கணவன் வரலாறறிந்து ஒருமைப்பட்டது

என்றுசொல்லக்கேட்டு இரவிமருமகளும்
அனலில்மெழுகதுபோல் அங்கனிடதேவியரும்
இரும்பாயிருந்தநெஞ்சு இளகிமனமுருகி
எண்ணாதவெண்ணமெல்லாம் எண்ணியேஏந்திழையும்
நினையாத்துயரமெல்லாம் நினைந்துநிகர்வணையாள்
கொம்பிலிருந்தகனி குலுங்கிச்சொரிந்ததுபோல்
ஆறாதுதுக்கமொடு அழுதகண்ணீர்மார்புரள
பொற்கம்பத்திருவழகை விட்டுமந்தபொன்னுருவி
கற்றூண்மறைவைவிட்டு கர்னருக்குமுன்னேவந்து
அலைவந்துசேர்ந்ததுபோல் அங்கராயன்மேல்விழுந்து.

புல்லார்ந்தமோகமொடு புரண்டுஅலண்டெழுந்து
மன்னன்மடிமேல்விழுந்து மாதுபுலம்பியவள்
கன்னிமனதுருகி கர்னனைப்பார்த்துரைப்பாள்
இழிகுலத்தானென்று எண்ணினேனின்றுள்வரைக்கும்
தேர்ப்பாகனென்றும்மை சேராதிருந்தேனே
பெற்றார்பிறந்தமுகம் பிறவித்துணையமர்ந்த
இடையனார்கொண்டகொம்பாய் ஏங்கியிருந்தேனே
காட்டிலேகாய்ந்த நிலவானேன்கர்த்தாவே
கானலிலேபேய்ந்த மழையானேன்கண்ணாளா
ஆற்றில்கரைத்த புளியானேன் ஆரணங்கு
வாழாதிருப்பதற்கோ வைத்தாய்மகாதேவா
சேராதிருப்பதற்கோ செய்தாய்மகாதேவா
பூவால்குறைவாச்சோ புஷ்பத்தால்தாழ்வாச்சோ
மலரால்குறையாச்சோ வாழ்மலரால்தாழ்வாச்சோ
எல்லோருஞ்சாத்தாத எருக்கம்பூசாத்தினனோ
ஏதுகுறையாச்சோ ஈஸ்வரரேயுந்தனுக்கு
நான்-செய்தகுறையென்ன சிவனாரேயுந்தனுக்கு
ஆளனுடன்சேராமல் ஆகவைத்தாயெந்தனை நீ
புருஷனுடன்சேராமல் பிரித்துவைத்தாஎனையும்நீ
இழிகுலத்தானென்று இணங்காதிருந்தேனே
இழிகுலவன் தான்போய் என்கணவரிப்பொழுது
குருகுலத்தாராகிவிட்டார் கொற்றவனார்வீரியரும்
இருகுலமுமொன்றாச்சு என்னுடையநாயகரே
இந்நாள்வரைக்கும் இழிகுலத்தானென்றுசொல்லி
மறைவாயரசாணடீர் மன்னரேஇத்தனைநாள்
பருவமதயானை பஞ்சவர்களைவருடன்
உருவமதயானை உத்தமர்களைவருடன்
கூடியுமேவொன்றாசி குலாவியதிசயித்து
சுகமாயிருக்கலாம் சுந்தரரேவாருமென்றாள்
போவோம்நாம்வாருமென்று பொன்னுருவியழைக்க

**கர்னன் பொன்னுருவியைப் பார்த்து நீ ஏன் என்னை அவமானப்படுத்தினையென்று வினவுகிறது**

காசிநாடாளுமந்த கர்னரவர்தான்கேட்டு
கலகலென்றுதானகைத்துக் கன்னியரைப்பார்த்து
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகமே

கட்டாணிவார்த்தைகளும் கைநீட்டுப்பேச்சுகளும்
திட்டமுடனித்தனைநாள் தேன்மொழிஎங்குவைத்தாய்
இத்தனைநாளங்கே இளங்கொடியேகண்டமட்டில்
இழிகுலத்தானென்றெண்ணி இணங்காமலென்னுடன்
தேர்ப்பாகனென்றென்னை தீண்டாமல்நீயிருந்தாய்
மாயன்கிருபையினால் மகனென்றுண்டாச்சு
ஆயன்கிருபையினால் ஆணென்றுவுண்டாச்சு
ஒரு-மாம்பழத்தினாலேயுன் மதிமுகத்தைதானறிந்தேன்
அன்றுஅடிசிலிட்டு அடைக்காய்சுருளளித்தாய்
அல்லாரைப்போலேநீ ஆக்கியிட்டாயப்போது
அப்போதுகண்டேனுன் அழகுதிருமுகத்தை
ஏங்கிமயங்கிவிட்டேன் இளங்கொடியேகண்டமட்டும்
பார்த்துமயங்கிவிட்டேன் பைங்கிளியேயுன்முகத்தை
மறுகால்நான்பார்த்ததில்லை மங்கையரேவுன்வாசல்
உன்—வாசல்தோறும்நான் வாராமல்காவல்வைத்தாய்
அரண்மனைதோறும்நான் அணுகாமல்காவல்வைத்தாய்
காவலும்கட்டும் கடுஞ்சிறையும்வைத்தாயே
வைத்துமிருந்தாயே வஞ்சியரேபொன்னுருவி
ஏழுமுழமெத்தையிலே இருந்துநீபள்ளிகொண்டாய்
நான்—தாழப்படுத்திருந்தேன் தாமக்கருங்குழலே
ஆயன்கிருபையினால் அருகிலென்னை தூங்கவைத்தார்
மாயவனாரென்னையுந்தன் மஞ்சத்தில்தூங்கவைத்தார்
விடிந்தெழுந்திருந்து மெல்லிநீயுமென்னைப்பார்த்து
ஆர்ப்பரிதநுச்சீறி அலறியேகொக்கரித்து
பொன்சிலம்புபாதத்தால் பூங்குழலேநீயுதைத்து
ஆடைகளைந்தெறிந்து அழகுபணிதான்கழட்டி
வெவ்வேறுபணிபூண்டு விசித்திரப்பட்டுடுத்தி
அருகிருந்ததோழியரை அந்நேரங்காவல்வைத்து
இப்படியாகவேதான் இருந்தாய்நீசிலகாலம்
மாயன்கிருபையினால் மைந்தனைப்பெற்றெடுத்தாய்
புத்திரன்பிறந்தானென்று உத்தமர்தாமறிந்து
மானகமேந்தியதோர் மகாராசன்தாமறிந்து
அரவக்கொடியுடைய அரசன்மிகவறிந்து
கலத்துப்புழுநீக்கும் கர்னரிடசெல்வன்தன்னை
பார்த்துவருவோமென்று படைமன்னர்தன்னுடனே
கண்டுவருவோமென்று காளையர்தாமெழுந்து

என்னைவரவழைத்து இருவருமாய்கைகோர்த்து
மானுகனைவனுடனே வருகிறபொழுதினிலே
சிந்துபதியானுஞ் செல்வப்பெருமானும்
காசிநாடாளப் பிறந்தயொருகாளைதன்னை
தாதியர்கள்கொண்டுவந்து சந்தனமாமண்டபத்தில்
வைத்துவிளையாடி மங்கையர்கள்பார்த்திருந்தார்
முன்கட்டுமண்டபத்தில் முனைந்துவிளையாடினதை
கண்டந்தமானுகர் கண்கள்களிகூர்ந்து
வாரியெடுத்து மடிமீதில்தானிருத்தி
செல்வநவரத்தினமே சிங்காரப்பொற்கிளியே
வன்னப்பசுங்கிளியே மார்போடேதானணைத்து
கண்ணோடுகண்ணணைத்து கனிவாயைமுத்தமிட்டு
வங்காளதேசமும் மராட்டியர்தன்நாடும்
சிங்களதேசமும் சிந்துபதிநாடுகளும்
அங்காடிகொள்ள அளித்தார்காண்சீதனமாய்
ஆரப்பதக்கத்தை அளித்தார்கள்சித்தடிக்கு
இந்தவரிசையெல்லாம் மைந்தருக்குத்தான்போட்டு
சந்ததியைஎன்கையில் தார்வேந்தர்தான்கொடுத்தார்
இந்தாருமென்றுசொல்லி என்மடியில்தான்வளர்த்தி
கண்காட்சியைப்பார்க்க கண்ணற்றானேனே
வந்துஅரைநாழிகையில் மாதரசேநீபார்த்து
எட்டுமுழமெத்தைவிட்டு திட்டெனவேகுதித்து
ஓட்டமாயோடிவந்து ஒருநொடியில்பாலகனை
என்மகனைத்தீண்டாதே என்றுயேபொன்னுருவி
தேர்ப்பாகன்தீண்டினால் தோஷம்வருமென்றுயே
இழிகுலத்தான்தீண்டினால் ஈனம்வருமென்றுயே
தீண்டாதேஎன்றுசொல்லி சித்தடிபாலகனை
ஓடிவந்துசித்தடியை உதட்டியாய்நீஎடுத்து
விசையாகப்போம்போது வேல்பொருதுங்கண்ணாளே
தங்கத்தால்பொன்சரிகை தானிழைத்தமுந்தாணை
மாணிக்கப்பொற்சரிகை வைத்திழைத்தமுந்தாணை
சேர்ந்துவிழுந்ததடி சுந்தரியேயென்முடிமேல்
ஆணிப்பொன்பூமுடிமேல் ஆடைவந்துவிழுந்ததடி
சேரவேகண்டுமெத்த துகிலாடைஅறுத்தெறிந்தாய்
உள்ளாடையோடேநீ உட்கட்டுப்போய்நுழைந்தாய்
அப்போதுபெண்மயிலே ஆரிழையேநானுமங்கே

கண்டுமென்மேனியெல்லாம் கசங்கிமிகப்புலர்ந்து
என்கையில்குத்தியே ஆவியடியாமல்
மிஞ்சுமணிமுடியான் மேலுலகடையாமல்
ஏதுக்கிருந்தேன்நான் ஏந்திழையேபொன்னுருவி
மானுகனுக்காக இருந்தேன்மடியாமல்
மகராசனுக்காக இருந்தேன்மடியாமல்
சோர்ந்துமுகம்வாடி தோகையரேநானிருந்தேன்
அப்படிநானிருக்க அறிந்தான்மகாராசன்
மானுகமேந்தியதோர் மகாராசன் தானறிந்து
ஓடியேவந்தணைந்து ஒருகையால்நீர் துடைத்து
என்—அரசேபெருவாழ்வே ஐவருக்குங்கண்ணொளியே
என்றுசொல்லிராசமன்னன் என்மனதைதான்தேற்றி
ஆசாரமண்டபத்தில் வந்து அருங்கிளியே
அப்போதுஉன்நெஞ்சம் ஆரிழையேநானறிந்தேன்
நெஞ்சமறிந்தேன்காண் நிகர்காலைபூங்கொடியே
அத்தனையும்நீக்கியென்னை அருகாகவைத்திருந்தார்
பொற்கலமுதுண்ணப் போசனமும்பண்ணிவைத்தார்
தேசத்துக்கதிபதியாய்ச் சிகரம்பதித்துவைத்தார்
பட்டந்தரித்துவைத்தார் பாருலகந்தானறிய
தன்னைவணங்குவோரை என்னைவணங்கவைத்தார்
தனைப்பணியுமரசர்களை என்னைப்பணியவைத்தார்
நாகக்கொடியோன்செய்த நன்மைகளைநான்மறந்து
துரியோதனப்பெருமான் செய்தநன்றிநான்மறந்து
பூசலுக்குநான்பயந்து போவேனோஐவருடன்
சண்டைக்குநான்பயந்து சதிசெய்துபோவேனோ
அதுவுந்தானன்றியிலே ஆரணங்கேநீகேளும்

**கர்னன் பொன்னுருவிக்குச் சகல விபரமும் சொல்வது**

இன்னமவர்செய்த உதவிதனைநீகேளும்
தேசத்தழகன் துரியோதனப்பெருமான்
வேட்டைக்குப்போகவென்று விடிந்துஎழுந்திருந்து
கானகவேட்டைக்குக் கடுகவென்னைத்தானழைத்தார்
தாமக்குழலாளே தலைநோகுதென்றுசொல்லி
போகாமல்நானிருந்தேன் பூவையரேபொன்னுருவி
தேசத்தழகன் திரியோதிரப்பெருமான்

விடிந்துஎழுந்திருந்து வேட்டைக்குத்தான்போனார்
அப்படிநானிருக்க அரசனுடதேவியரும்
பேரில்பெரிய பெருந்திருவாள்நாயகியும்
ஓடியேவந்து உத்தமியாளந்தனைத்தான்
கலத்துப்புழுநீக்குங் கர்னப்பெருமானே
சொக்கட்டாணுடுவோம் சுந்தரரேவாருமென்றாள்
பாச்சிபகடைதன்னைப் பாவையருந்தான்பரப்பி
ஆசாரமண்டபத்தில் அமர்ந்தேயிருவருமாய்
மாசில்லாமேனி மங்கையரும்நானுமாய்
சங்கைகளற்று தனித்துவிளையாடும்போது
இருவருஞ்சொக்கட்டான் இருந்துவிளையாடும்போது
தேசத்தழகன் துரியோதனப்பெருமான்
வேட்டைகளாடி வேந்தர்கள்தன்னுடனே
மான்வேட்டையாடி மன்னவர்கள்தன்னுடனே
ஆசாரமண்டபத்தில் அனைவரையுந்தானிருத்தி
உட்கட்டுமண்டபத்தில் ஒருவருமாய்வந்துவிட்டார்
மானுகங்கொண்ட மகராஜன்தேவியரும்
அரசன்வரவுகண்டு ஆரணங்குதானெழுந்து
ஆடும்பகடைவிட்டு அலறியெழுந்திருந்தாள்
இராஜன்வருகிறதை நானுமங்கேபாராமல்
மகாராஜன்வருகிறதை மங்கையேநான்காணாமல்
தோர்வையாய்தானெழுந்து சுந்தரியும்போறாளென்று
என்–ஆட்டத்தைத்தந்துவிடு ஆச்சியரேஎன்றுசொல்லி
என்னாட்டந்தந்துநீ எழுந்திருந்துபோமென்று
முன்றானைபற்றி மொய்குழலேஇழுத்தேன்
பற்றியிழுத்திடவே பாவைநல்லாள்முன்றானை
முத்துநவரத்தின முழுவயிரப்பொற்சரிகை
தொத்தியிருந்ததுகாண் தேன்மொழியாள்பூவாடை
முத்துச்சரத்தை முடியவிழ்த்துவிட்டதுபோல்
ஆலித்துவிழுந்ததுகா ணாரணங்குபூவாடை
கலகலென்றுஅத்தனையுங் கழன்றுவிழுந்ததுகாண்
அத்தனையும்பாராம லன்னநடையாளும்
உள்ளாடையோடே உட்கட்டுப்போய்நுழைந்தாள்
தென்னுகங்கொண்டாரை திரும்பியங்கேநான்பார்த்து
அரசனைக்கண்டவுடன் அங்கம்நடுநடுங்கி
உள்ளம்நடுநடுங்கி உடம்புவிடவிடென்று

கால்நடுங்கிகைநடுங்கி கனத்தபுஜம்நடுங்கி
வாயும்வறண்டுமனம் வன்மைநாவுதடுமாறி
எண்ணுதுமெண்ணிநான் ஏங்கிமனம்வாடி
குண்ணுதுங்குண்ணிநான் குனிந்துதலையிறங்கி
அற்றதுஎன்தலைதான் அரசன்கைவாளாலே
மாண்டோமேயின்றேடே மறைந்ததுபூமுடிதான்
என்றுமேநானும் இருந்தேனிளங்கொடியே
அன்றுமனந்தளர்ந்த தறிந்துமகாராஜன்
மனதுதளர்ச்சிதன்னை மன்னவனார்தாமறிந்து
பின்னுகவந்துயென்னை பிரியமுடன்சேர்த்தணைத்து
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
வாரியணைத்து மடிமீதில்வைத்துக்கொண்டு
பூந்துகிலாடைதன்னல் பெருகியகண்ணீர்துடைத்து
கலத்துப்புழுநீக்கிய கர்னர்பெருமாளேயென்று
கண்டுனக்குஅச்சமென்ன கர்னரேயென்றுசொல்லி
அச்சமென்னவுந்தனுக்கு ஆணழகாவென்றுசொல்லி
ஆட்டத்தைப்பற்றி அழையுங்காணுரணங்கை
பகடையைப்பற்றி பைங்கொடியைஅழையுங்காண்
என்றுசொல்லிமானுகர் இருத்தியவர்தன்மடியில்
தேனுகங்கொண்டாரும் தேவியரைத்தானழைத்து
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
பின்னைக்குநானுவரோ பேடைமலர்க்கண்ணுளே
மைந்தனுக்குநானுவரோ மெல்லிமலர்கண்ணுளே
அவர்-ஆட்டத்தைநீதீர்த்து அப்பாலேபோமென்றார்
ஆட்டத்தைத்தாருமென்று ஆரிழையுமெந்தனையும்
ஆடுங்கள்என்றுசொல்லி அரசனும்பார்த்திருந்தார்
இருவரும்ஆடும்போது இராசாவும்பார்த்திருந்தார்
பேதங்களெண்ணுமல் பூரித்துப்பார்த்திருந்தார்
நாகக்கொடிவேந்தர் சதியொருக்காளெண்ணவில்லை
உண்மைகள்செய்தார்காண் உத்தமியேயெந்தனுக்கு
செய்தவுதவிதன்னைச் சொல்லவென்றால்வேணதுண்டு
பண்ணவுபகாரம் பார்க்கவென்றால்வேணதுண்டு
அத்தனையும்நான்மறந்து ஆரமுலையாளே
செய்தநன்றிநான்மறந்து சேர்வேனோஐவருடன்
நன்றியதுநான்மறந்து நான்சேரநீதியல்ல
இன்னம்நான்சொல்லுகிறே னேந்திழையேநீர்கேளும்

விடிந்துயெழுந்திருந்து வெய்யோனுதித்தபின்பு
இரவிலெழுந்திருந்து இருசாமவேளையிலே
பட்டர்புலவர் பாடுங்கவிப்புலவர்
வேதமறையோர் வேதியர்கள்சாத்திரிகள்
தேசத்திலுண்டான தியாகியர்க்கெல்லோரும்
எழுபதுயானை எடுத்துவரும்பொன்னையெல்லாம்
நானேசெலவழித்தேன் நாயகமேபொன்னுருவி
தேனின்மொழியாளே செலவழித்ததல்லாமல்
இட்டிருந்தஆபரண மெல்லாஞ்செலவழிப்பேன்
தேடும்திரவியம் செம்பொற்பணிதிகளும்
மாடைவிராகன்முதல் மத்தியானத்திற்குள்ளே
நானேசெலவழிப்பேன் நாயகமேயிருந்தமட்டும்
காசினியையாளும் கர்னர்கொடுத்தாரென்று
பூசுரர்கள்சொல்லப் புலவர்சொல்லநானிருந்தேன்
இத்தனையுமானக னென்னென்றும்தான்கேளார்
அப்படிக்கொத்ததொரு ஆணகழர்செய்தநன்றி
அந்நன்றிநான்மறந்து ஐவரோடுசேருவேனோ
செஞ்சோற்றுத்தன்கடனைத் தீர்ப்பேனுனின்றேடே
வளர்த்தசரீரத்தை மாய்ப்பேனுனின்றேடே
தஞ்சமுரைத்தார்க்கு வஞ்சனைகளாகாது
அவர்க்காகஎன்னுயிரை அமர்களத்தில்நான்மடிப்பேன்
அரவக்கொடிவேந்தன் அன்னத்தைநான்புசித்து
எண்ணங்கொண்டாரோடு எதிரிடவேணுங்கண்டாய்
ஐவரோடுசேர்ந்து அமர்செய்தேனுலே
வானவரும்தேவர்களும் மகாரிஷியோர்தானகைப்பார்
பூதலத்தில்வாழுமன்னர் புன்சொற்கள்சொல்லிடுவார்
ஈனமானவார்த்தைசொல்வார் இவ்வுலகிலுள்ளவர்கள்
மானுகர்செய்தநன்றி மறப்பேனுமங்கையரே
மறந்துவிடுமிவ்வார்த்தை வண்டார்குழலாளே
விட்டுவிடுமிவ்வார்த்தை வேல்பொருதுங்கண்ணாளே

### கர்னர் சொல்லி வந்ததைக் கேட்டு பொன்னுருவி அதிக துக்கப்படுதல்

என்றுசொல்லிதானுரைக்க ஏந்திழையாளப்போது
ஈரச்சுவரதுபோல் இடிந்தாள்மனந்தனிலே
கல்லாயிருந்தநெஞ்சங் கரைந்தாளேபொன்னுருவி

மண்ணோடே மண்ணாய் மாதுநல்லாள் தானிருந்தாள்
எண்ணாதுமெண்ணியவ ளேந்திழையாள் தானிருக்க
அப்போது கர்னரவ ரருங்கிளியைத்தான்பார்த்து
போய்வாரேனென் றுகூறி போற்றியெழுந்திருந்தார்
கடுகவெழுந்திருந்தார் கர்னர்பெருமாளும்
எண்ணாத்துயரமெல்லா மெண்ணியேஏந்திழையாள்
போறேனெனக்கூறவே பெண்ணரசிதான்கேட்டு
நினையாத்துயரமெல்லாம் நினைத்தந்தநெடுவனையாள்
காமவிகாரமதைக் கடுகியவள் தானினைந்து
ஆங்காரமாகியே அலறியவள் தானெழுந்து
போங்காரத்தோடே பொங்கியவளெழுந்து
குறுக்காகவந்துநின் று கொற்றவனை தான்பிடித்து
மானுங்கலையும் மருவியணைந்ததுபோல்
கொங்கைகள்மார்பழுந்தக் கொற்றவனை தான் தழுவி
செங்குவளைக்கையாலே சேர்த்துப்பிடித்தவரை
அங்கவளநாட்டாரை ஆரிழையாளிட்டுவந்து
மாணிக்கமிட்டிழைத்த மஞ்சத்திலிட்டுவந்து
ஆணிப்பொன்மேடையிலே ஆளனைத்தானிருத்தி
தனக்குக்கவரியிடுந் தாதிமுகம்நோக்கி
அடிசல்சமையுமென்றாள் அன்னநடையாளும்

**பொன்னுருவி தாதியை அழைத்து சமையல்
செய்யக் கட்டளையிட்டது**

என் றுசொல்லக்கேட்டு ஏந்திழைமார் தாதியர்கள்
போசனப்பெண்கள்வந்து பூரித்துஅந்நேரம்
பத்துவகைகறியும் பதினெட்டுப்பச்சடியும்
எட்டுவிதப்பொறியல் இயல்பாகத்தான்சமைத்தார்
புத்துருக்குநெய்யும் போனகத்திமார்சமைத்தார்
சொன்னகணப்பொழுதில் தோகையர்கள்சமைத்தார்
தேனூர்மொழியாளின் சிங்காதனத்தில்வைத்து
பொன்னுருவிநாயகமே போசனமாச்சுதென்றார்
அமுதுண்ணவாருமென் றடிபணிந்துதெண்டனிட்டார்
அமுதென் றுகூறுகையில் ஆரிழையாள்பொன்னுருவி
திக்கென்றெழுந்திருந்து சிம்மாசனம்போட்டார்
அங்கவளநாட்டாரை அருந்திடவேகைபிடித்து
அமுதுண்ணவாருமென்றழைத்தாளேயாரணங்கு

பேர்சனஞ்செய்யபோவோம் வாவென் றுரைத்தார்
வாவென் றழைக்கவே மன்னவரப்பொழுது
அங்கமெல்லாம்பொங்கி ஆச்சரியந்தானுகி
இன்பங்குளிர்ந்து இளங்கொடியைதானபார்த்து
கட்டியணைத்து கனிவாயைமுத்தமிட்டு
சேர்த்துஅணைத்து செம்பவளவாய்திறந்து
அன்னமேதேனே அமுர்தப்பசுங்கிளியே
தேனேரசமே தித்திக்குஞ்செங்கரும்பே
மானேகுயிலே வயிரமணிவிளக்கே
இந்நாள்நெடுநா ளிணங்காமலென் னுடனே
கல்லாகிநெஞ்சங் கரையா திரும்பாகி
வாழாமல்நீயிருந்தாய் மங்கயரே இந்நாளும்
அமுதுண் ணவாருமென் று அழைத்தாயேமங்கையரே
இழிகுலத்தான் பேச்சல்லோ ஏற்கா துஉந்தனுக்கு
தேர்ப்பாகனெச்சிலடி தேன்மொழியேயாகாது
அமையுங்காணெந்தனுக்கு ஆரிழையேபோய்வாரேன்
போய்வாரேனென் றுமந்த புண்ணியனுர் தான்கூற
போய்வாரேனென் றுசொல்ல புரிகுழலாள் தான்கேட்டு
மார்புரளக்கண் ணீரை மலர்க்கண்ணில்சோரவிட்டாள்
முத்துமுத்தாய்க்கண் ணீர் முன்மார்பில்சோரவிட்டாள்
சோரவிட்டகண்ணீரைச் சுந்தரருந்தான்பார்த்து
அங்கவளநாடாளும் அரசனுமேதான்பார்த்து
அழவேண்டாம்பூமாதே அரிவைசொல்லுகிறேன்கேள்
சமர்க்களம்போகிறபேர் சாப்பிட்டுப்போவாரோ
நாடுநகராண்டு நகர்தனிலேவாழ்வார்கள்
படுப்பவர்கள் பஞ்சணையில் பாவையுடன்கூடியப்போ
அடுக்காதடுக்காதே அமர்செய்யப்போவதற்கு
ஏதுபரியாசஞ்செய்தா யிளங்கொடியேபோவென்றார்
அந்தமொழிக்கேட்டு அரிவைநல்லாள்பொன்னுருவி
அனலில்மெழுகதுபோல் ஆயினுள்பொன் னுருவி
அக்கினியிற்பட்டதொரு புழுப்போற்பதைக்கலுற்றாள்
ஈரச்சுவரதுபோல் இடிந்துஇளங்கொடியாள்
அலைந்துசேர்ந்ததுபோல் அங்கனிடமேல்விழுந்து
மெல்லியவள்பொன் னுருவி போகவிட்டுநானிருக்கேன்
சண்டைக்குநீபோகத் தரிக்கேன்நான்பூமியிலே
என்னைவிட்டுநீர்போனு லும்மைவிட்டுநானிருக்கேன்

நானும்வருவேன்காண் ராசாவேயும்முடனேத்தாள்
என்றுமேபொன்னுருவி இதஞ்சொல்லியழை
அமுதுண்ணவாருமென்று அன்னநடையாளும்
கர்னரிடகச்சையைத்தான் காரிழையாள் தான்பிடித்து
வாருமென்றுசொல்லி வருந்தியழைக்கலுமே

கர்னரும் பொன்னுருவியம் போசனமுண்டது

காசிநாடாளுங் கர்னர்மனமகிழ்ந்து
மாசிலாமேனியந்த மங்கையரைக்கைபிடித்து
மன்னவருந்தேவியரு மடப்பள்ளியில்போய்புகுந்து
கொற்றவருந்தேவியருங் கூசாமல்போய்நுழைந்தார்
கைகழுவநீர்கொடுத்தார் கன்னியர்களந்நேரம
வாங்கியவர்கைகழுவி மனங்குளிரவீற்றிருந்தார்
மன்னர்க்குமாதினுக்கும் வாழையிலைபரப்பி
அமுதுகறிவகையு மறுசுவையுந்தான்படைத்தார்
அறுசுவைவகைக்கறியு மன்பானபச்சடியும்
பத்துவகைக்கறியும் பாங்குடனேதான்சமைத்து
பொரித்தபொரிக்கறியும் பொன்போல்சிறுபயறும்
புத்துருக்குநெய்யும் பூவையர்கள் தான்சொரிந்தார்
கட்டித்தயிருங் கற்கண்டுசர்க்கரையும்
மாங்கனியுந்தேங்கனியும் வாழைப்பலாக்கனியும்
கட்டுமாங்கனியும் கருவாழைப்பலாக்கனியும்
இட்டங்களிக்கவேதா னேந்திழைமார்தாதியர்கள்
உண்டுகளித்தார்கள் உள்ளமெல்லாம்பூரிக்க
கண்டுகளித்தார்கள் காளையருங்கன்னியரும்
கையலம்பநீர்கொடுத்தார் காரிழைமார்தாதியர்கள்
போசனமுண்டு பொடிகொண்டுகைப்பிடித்து
இருவருங்கைகோர்த்து இளைப்பாருமண்டபத்தில்
வந்துயிருந்தார்கள் வயிரமணிமேடையிலே
சந்தனமும்பனிநீரும் சாந்துப்புனுகுமங்கே
பூவும்புதுமலரும் பூவையர்கள்தான்கொடுத்தார்
வாங்கியிருவரும் மனமகிழ்ந்துதானிருந்தார்
அரிபிளவுவெற்றிலையும் ஆரிழையார்தான்கொடுத்தார்
சாம்பிராணிமொக்குடனே சாதிக்காய்வெள்ளிலையும்
ஏலம்லவங்கமுடன் ஏந்திழைமார்தான்கொடுத்தார்
கற்பூரஞ்சுண்ணாம்புங் கன்னியர்கள்முன்னேவைத்தார்

தாம்பூலந்தான்வாங்கிச் சந்தோஷமாயிருந்தார்
அப்போதுமன்னன் அரிவையரைத்தான்பார்த்து
காஞ்சிநாடாளுங் கர்னனுமேதுரைப்பான்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகமே
மன்னவர்க்குத்துரோகங்கள் வஞ்சனைகள்செய்வதில்லை
ஐவருடனாளும்அமர் பொருதும்வேளையிலே
காண்டாவனமெரித்த காளையுடஅம்பாலே
கற்பகத்தேர்மேலே சாய்ந்தானேகர்னனென்றுள்
கேட்டுமனதுருகிக் கிளிமொழிமாதுகனப்போ
வளர்த்தஅருமையினால் மாதுகனோடிவந்து
தமையினிடதேவியென்று தார்குழலேயுந்தனைத்தான்
வணங்கியழைத்தாலே வஞ்சியேநீபோகாதே
எவ்விதங்கள்சொல்லி யழைத்தாலும்போகாதே
கோணுதமாது குந்தியம்மாள்பெற்றெடுத்த
குந்தியம்மாள்பெற்றெடுத்த கொற்றவர்களோடிவந்து
மார்மேலுந்தோள்மேலும் வைத்தெடுத்துக்கொண்டு
மாணிக்கமெத்தையின்மேல் வைப்பார்களென்னையவர்
ஐவருக்குமூத்தவரெவன் றரசுமெனக்களிப்பார்
ஆசனத்தின்கீழிருந்து அடிபணிந்துபூசைசெய்வார்
இருபக்கந்தானிருந்து ஏவல்களைச்செய்திடுவார்
மங்கையரேயுன்னிடத்தே மன்னர்களோடி
அண்ணனிடதேவி அண்ணியென்றுமுன்னையவர்
சீக்கிரமாயோடிவந்து திருவடியைப்பூசைசெய்து
புத்திரர்தன்னுடனே பூமியுள்ளோர்தான்புகழ
எத்திசையும்மன்னர்களெல்லோருங்கொண்டாட
குருகுலத்தார்பட்டமுங் குழந்தைக்களிப்பார்கள்
தேசமறியச் சிகாமணியாய்வாழ்ந்திருப்பீர்
ஆகையினாலுந்தனுக்கு ஆபரணங்கேசொல்லுகிறேன்
அந்தநல்லபஞ்சவர்களைவருந்தன்மைத்துனர்காண்
கொற்றவர்களைவருந்தான் கொழுநன்மரருந்தனுக்கு
கோணுதமாதவள் குந்தியம்மாளுன்மாமி
தோராவடிவழகி திரௌபதையுனக்கிளையாள்
ஐவரிடதேவியர்களனைவருமுனக்கிளையார்
ஆளப்பிறந்த அபிமன்னனுன்மகண்டி
அரசுபுரிந்துவந்த அல்லித்திருமகனார்
பூமார்பழகன் புலந்திரனார்வீரியரும்

உன்-மைந்தனிலுந்தானதிகம் மாபாண்டிநாட்டாண்டி
உன்—பிள்ளையிலுந்தானதிகம் புலந்திரனர்வீரியரும்
அவருக்கு-வேணபிரியங்கள் கூறிவந்தேன்மெல்லியரே
அந்த—தார்வேந்தருன்னைத் தளரவிடார்மெல்லியரே
போர்க்களமுஞ்சென்று பூசல்முடிந்தாலே
நூலால்கடுந்திரளார் தூற்றுவர்கள்தேவியரும்
அத்திபுரத்தில்வாழ் பத்தினிமாரெல்லோரும்
முன்னுளிலிட்ட சபதம்முடிக்கவென்று
பாஞ்சாலிநாயகியாள் படுகளத்தில்பார்த்திருக்க
பார்த்திருக்கவெல்லோரும் படுகளத்தில்வந்துநின்று
அரசரிடதேவியர்க ளனைவரும்வந்து அன்று
தருமரவர்சொல்வதனுல் தார்வேந்தர்கன்னியர்கள்
ஆழவேகுழிவெட்டி அக்கினியைத்தான்மூட்டி
மாயன்சொல்வதனுல் மங்கையார்கள்வந்துநின்று
ஆயர்கிருபையினுல் அக்கினியில்தான்விழுவார்
மங்கையர்களெல்லோரும் வந்துஅனல்பாய்கையிலே
செங்கைவளைகன்னியர்கள் தீக்குழியில்பாய்கையிலே
ஐவருமுன்னை அனல்பாயவொட்டார்கள்
பஞ்சவர்களுன்னைப் படுகுழியில்பாயவொட்டார்
செல்வருக்காயுன்னையவர் தீக்குழியில்பாயவொட்டார்
மைந்தரையுமுந்தனையும் மாளிகையில்கொண்டுசென்று
மன்னவர்க்குமேலான மதனியென்றுசொல்லியுன்னை
அண்ணனுடதேவியென்று ஆரணங்கேயுன்னையவர்
போற்றிப்புகழ்ந்திருப்பார் பூவையரேபஞ்சவர்கள்
கண்டுகளித்திருப்பார் கன்னியரேயுன்னையவர்
புத்திரரும்நீயுமாய் புகழ்பெறவேவாழ்ந்திடுவீர்
மைந்தரும்நீயுமாய் மனங்களிக்கவாழ்ந்திருப்பீர்
சந்ததியும்நீயுமாய் தார்குழலேவாழ்ந்திருப்பீர்
நான்-இராச்சியமாண்டு நலமாயிருக்கையிலே
அரவக்கொடியோனுடனே அரசுசெலுத்துகையில்
நான்வாழும்நாளையிலே நாயகமேநீயும்நானும்
ஓராசனத்தில்தான் ஒருமித்திருவருமாய்
மருவிவிளையாடி சரசங்கள்தானுஞ்செய்து
பஞ்சணையில்பள்ளிகொள்ள பாக்கியமற்றுவிட்டேன்
இழிகுலத்தானென்றுசொல்லி இணங்காமல்நீயிருந்தாய்
தேர்ப்பாகனென்றுசொல்லி தீண்டாமல்நீயிருந்தாய்

ஆனாலும்என்னயினி ஆரணங்கேநீகேளும்
மஞ்சள்புனுகுடனே மைச்சாந்துபொட்டுடனே
பூவும்புதுமலரும் பொன்னருகுஅட்சதையும்
வாரிக்குழல்முடித்து வண்ணமாய்நீயிருந்தாய்
ஆபரணந்தான்பூண்டு அழகியபட்டுடுத்தி
அரிபிளவுதின்று இருந்தீரே இந்நாளும்
இனி-பூவின்மணமறந்தீர் பொன்சாந்துநீர்மறந்தீர்
மஞ்சள்குளிமறந்தீர் மணமறந்தீரின்றோடே
தாலிமறந்தீர் தரிபணிகள் தான்மறந்தீர்
சேலைமறந்தீர் செங்கழுநீர்பூமறந்தீர்
வண்ணத்துகிலாடை மறந்ததுதானின்றோடே
வெள்ளைத்துகிலாடை விதியாச்சுதுந்தனுக்கு
வெண்ணீறுகாப்பணிய வைத்தார்மகாதேவர்
கைம்பெண்சிறையாகக் காரணங்களாச்சுதடி
ஆனாலுமென்னயிது ஆயர்செய்தஉபாயமடி
மாயவனார்செய்த மகிமையிதுமங்கையரே
மஞ்சள்குளிமறந்து வாழ்வுகுறைந்தாலும்
இன்றுமுதல்மைந்தர் இவ்வுலகம்நீபெறுவாய்
தார்வேந்தர்உந்தனைத்தான் தளரவிடார்தையலரே
பேரைவர்தங்கள்முன்னே பெருந்தலையாய்நீயிருப்பாய்
மண்டலத்திலுள்ள மன்னவர்கள்கொண்டாட
செத்தானேகர்னன் சுகம்பெற்றாள்பொன்னுருவி
மாண்டானேகர்னன் வரிசைபெற்றாள்பொன்னுருவி
மைத்துனன்மாராலே வரிசைபெற்றாளென்றுசொல்வர்
அரசர்கள்தான்பெற்ற அரண்மனையில்வீற்றிருப்பாய்
மன்னவர்கள்பெற்ற மாளிகையில்மகிழ்ந்திருப்பாய்
தார்வேந்தர்மாளிகையில் தையலருநீருமங்கே
சுகமாயிருங்காணும் சுந்தரியேபொன்னுருவி
என்னைநினையாதே இளங்கொடியேசோராதே
இரவும்பகலும் எந்நேரஞ்சோராதே
ஐவரைப்பற்றிநீ ஆரணங்கேஇருங்காணும்
பஞ்சவரைப்பற்றி பைங்கொடியேநீயிருப்பாய்
புத்திரரைப்பற்றி பூங்கிளியேநீயிருப்பாய்
மாமியார்மைத்துனர்க்கு மனதுவரநீநடந்து
மாமிமார்க்கேற்ற மருமகளாமென்றுசொல்ல
பேர்பெற்றிருங்காணும் பொன்னுருவிநாயகமே

போகவிடைகொடுப்பாய் பூவையிளங்கொடியே
விடையதுகேட்கையிலே வேல்பொருதுங்கண்ணாளும்
கர்னர்முகம்பார்த்து காரிகையாளே துரைப்பாள்
போர்க்களத்தில்நீர்போய் போர்பொருதிமன்னனுடன்
அமர்க்களத்தில்நீர்போய் அருதியாய்தான்மடிந்தால்
பொன்னரசாள்வதற்குப் போர்வேந்தர்மன்னவர்கள்
குருகுலத்தானென்றுசொல்லுங் குறிப்பறியமுடியாமல்
இழிகுலத்தான்தன்கழுத்தில் இட்டானேமாலையென்று
நாடுநகரதனை நலமுடனேவிட்டுவிட்டு
காட்டகத்திற்போனாரே காதலருமாச்சியரும்
அவர்வாராதிருந்தால் மன்னவரேஎன்னசொல்வேன்
ஐயருக்கென்னசொல்வேனாச்சியர்க்கென்னசொல்வேன்
தமயருக்கென்சொல்வேன் தம்பியர்க்கேதுசொல்வேன்
ஏதுசொல்வேனென்று இளங்கொடியாள்தானுரைக்க
அவ்வார்த்தைதான்கேட்டு அரசனங்கேதுரைப்பான்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகமே
ஆனைமழகுமன்னன் அருச்சுனன்கையம்பாலே
கற்பகத்தேர்மேலே சாய்ந்தான்கர்னனென்றால்
பஞ்சவர்களோடிவந்து பரிவாயென்னையெடுத்து
கொண்டுபோய்தங்கள் கொலுவிலமர்த்தியபின்
உங்கள்-ஐயமார் ஆச்சியர்க்கு ஆளனுப்பிவைப்பார்கள்
கொற்றவர்களைவருந்தான் குறிப்பறியவைப்பார்கள்
அப்போ-உங்களிடதாய்தந்தைய ரறிவாரென்குலத்தை
குருகுலத்தானென்றுசொல்லி கொற்றவர்தானறிந்து
மருமகனுக்காக வரிசையனுப்பிவைப்பார்
ஈரேழுபதினாலு ராஜாக்கள்தானறிய
ஆனைபரிசேனையெல்லாம் அவர்க்கேற்றராச்சியமும்
பொன்னாபரணங்களும் போர்வைபட்டாடைகளும்
அரசர்கள்தான்மதிக்க அனுப்பிவைப்பாரெந்தனுக்கு
வேண்டும்வரிசையெல்லா மெல்லியனுப்பிவைப்பாள்
தருமருடன்ஐவர்களும் தார்வேந்தர்தங்களுடன்
வந்தவரிசையெல்லாம் வகையாகத்தானிறங்கி
அவர்களெல்லவர்க்கும் அரியவகைபடுத்தி
தார்வேந்தர்தங்களுடன் சம்பந்தந்தானாகி
உத்தமர்கள்தங்களுடன் உறவாகிஐவருந்தான்
வந்ததொருசம்பந்தி மார்களுக்குமந்நேரம்

வேண்டும்வரிசைகளும் வேண்டியது அவர்களுக்கு
மன்னவரையெல்லாம் மகிழ்ச்சிபெறதானனுப்பி
இன்னஞ்சுகமாக இருப்பார்களென்னருகில்
மனங்களிக்கஐவருந்தான் வந்திருப்பாரென்னருகில்
அப்போதெரியுமெங்கள் ஐவருக்குமென்பிறப்பு
ஈனகுலமென்பதுவும் என்குலமுமென்பிறப்பும்
தானேயறிவார்கள் தையலுந்தன் தாய்தகப்பன்
மாண்டால்தெரியுமடி மங்கையரே என்குலந்தான்
செத்தால்தெரியுமடி தெள்ளமிர்தேஎன்குலந்தான்
அப்போதுஉங்களையன் ஐவருடன்கூடியாடி
மனதுமகிழ்ந்திருப்பார் வஞ்சியேஅஞ்சாதே
மாதமொருபயணம் மாதாவின் தன்மனைக்கு
போய்வருவாய்நீயும் பொன்னுருவிநாயகமே
தாய்வீடுமாமிவீடுஞ் சந்தோஷமாயிருப்பாய்
மைந்தரும்நீயுமாய் மதிக்கவேவாழ்ந்திப்பாய்
புத்திரருநீயுமாய் பூரித்துவாழ்ந்திருப்பாய்
போகவிடைதாரும பூவையரேபொன்னுருவி
என்றுசொல்லக்கேட்டு எழுந்திருந்துபொன்னுருவி
மைந்தனைக்கொண்டுவந்து மன்னவர்கைகொடுத்தாள்
வாங்கியந்தப்பாலகனை மார்போடேதானணைத்து
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
கொஞ்சிவிளையாடிக் கோதாட்டிச்சீராட்டி
மைந்தன் தன்கவலையெல்லா மன்னவர் தான் தீர்ந்து
பிள்ளைகவலையெல்லாம் புண்ணியனார் தான் தீர்ந்து
ஏந்திழையாள்கையில் எடுத்துமவர் தான்கொடுத்து

**கர்னன் பொன்னுருவியிடம் விடைபெற்றுக்கொண்டு போர்க்களம் போகிறது**

போய்வாறேனென்று பொன்னரசைதான்கேட்க
போய்வாறேனென்றசொல்லை பொன்னுருவியுங்கேட்டு
அங்கம்பதைபதைக்க ஆறுதத்துக்கமுடன்
பொங்கிமனமுருகிப் புண்ணியனார்மேல்விழுந்து
ஆசையெல்லாந்தீர அவர்மேல்புரண்டழுது
மெத்தவருத்தமுடன் மெல்லியருந்தானெழுந்து
போய்வாருமென்று பொன்னுருவிதானுரைத்தாள்
மங்கையவளுரைக்க மன்னவனார் தானெழுந்து

சிம்மாசனத்தைவிட்டுத் திகைத்துமவளிறங்கி
வாசற்படி கடந்து மங்கைநல்லாள்கோவில்விட்டு
பதினெட்டுப்பரிகையும் படியும்பலகடந்து
ஆசாரசாவடிமுன் அங்கராயன்தான்வரவே
கர்னர்வருகிறதைக் காவலாளர்தானறிந்து
சின்னம்பிடித்தார்கள் செகதலங்கள்தானறிய
ஊதிஞர்சின்னம் உலகமெல்லாந்தானறிய
கற்பகத்தேர்மேலே ஏறிஞர்கர்னரவர்
அருகிருந்துமன்னவர்கள் அவரவர்வாகனத்தில்
ஏறியேஅங்கனுட இருபக்கஞ்சூழ்ந்துகொண்டார்
பாடகர்புலவர்களும் படைமன்னர்சேனைகளும்
கட்டியங்கள்கூறக் கவிவாணர்தான்புகழ
எக்காளையூத இராயக்கொடிமுழங்க
பேரிகைமுழங்க பெரியதாரையூதிவர
துந்துமிமுழங்க திருச்சங்குந்தானூத
பொற்சின்னந்தான்முழங்க புறப்பட்டார்கர்னரப்போ
காசிநாடாளும் கர்னரிடபொற்சின்னம்
ஊதென்றுசொல்லி ஊதிஞர்பொற்சின்னம்
சூரியன்புத்திரஞர் துலங்கும்மணிவிளக்கு
தயிலாடன்வாய்ப்பூழைவை தவிர்த்ததொருசஞ்சீவி
பஞ்சவர்க்கும்நூற்றுவர்க்கும் பட்டத்ததிபதியாம்
வருகிருரென்றுசொல்லி மகிழ்ச்சிசின்னந்தானூத
வீதிகடந்து வேந்தர்மனைகடந்து
கடையுங்கடைத்தெருவும் கன்னூரவீதிவிட்டு
தெத்துக்கடந்து தெருவும்பலகடந்து
போர்க்களத்தில்வந்து புகுந்தார்கர்னருமே
சமர்க்களத்தில்வந்து சதிராகமன்னவஞர்
சல்லியஞர்தேருடனே தார்வேந்தனப்போது
ஆனைபரிசேனை அணிவகுத்துநின்ருர்கள்
முன்னணியும்பின்னணியும் முதலணியும்பேரணியும்
ஒன்ருகத்தானிறுத்தி நடுவணையில்நின்ருர்கள்
அப்போதுபஞ்சவர்க ளவரவர்சேனையுடன்
சின்னம்பணிமாறத் திருச்சின்னந்தானூத
ஆயுதம்கட்டி அமர்க்களத்தில்வந்துநின்ருர்
போர்க்களத்தில்வந்து புண்ணியஞர்சேனையெல்லாம்
சக்கரயூகம்போலே தானிறுத்திசேனையெல்லாம்

பற்குணனுமப்போது படுகளத்தைப்பார்த்துநின்ருன்
அப்போதுமாயவனை ரைவருக்கேதுரைப்பார்
தக்கப்புகழுடைய தருமரைத்தானழைத்து
தாரார்மணிமார்பா தர்மரேநீர்கேளும்
ஆட்டின்மந்தைகண்டு ஆலிக்கும்வேங்கையைப்போல்
சூரியன்புத்திரனை துலங்குமணிமுடியோன்
அக்கினியைப்போலே அங்கராயர்வந்தார்காண்
செந்தணலைப்போலே வந்தானேகர்னனென்று
பருத்திப்பொதிதனிலே நெருப்புப்பொறியதுபோல்
ஐவரையுமின்ருேடே அனலாயெரிப்பான்காண்
ஆகையினுற்சொல்லுகிறே னவரேநீர்கேளும்
ஐவருமொன்ருக அணிவகுத்துநின்றிடுங்கள்
உங்களைக்கைவிட்டேனென் றெண்ணுதீர்பஞ்சவரே
அங்கராயனுக்கெதிரா யாலித்துநின்றிடுங்கள்
அந்தமொழிகேட்டு ஆயரைத்தான்பார்த்து
கலகலென்றுதானகைத்து காவலர்களேதுசொல்வார்
ஆழியைவென்றுவந்தோம் ஆறுகளைநீந்திவந்தோம்
ஏழுகடல்நீரு மேகவேநீந்திவந்தோம்
மண்ணெடுத்தபுற்குழிதான் மாயவரேயரிதாச்சோ
வீஷ்டுமர்துரோணர் விகர்னர்நூற்றுவரையும்
சேரவேகொன்றுவந்தோம் தீரஅமர்க்களத்தில்
ஆனையைக்கொன்றவர்க்குப் பூனையரிதாச்சோ
புலிகொன்றுவந்தவர்க்கு எலிகொல்லதானரிதோ
ஆயரேயுன்னருளா லலங்காரபூமுடியை
நூற்றுவர்களோடே காற்றில்பறக்கடிப்போம்
ஏதுகாணிவ்வார்த்தை ஏளிதமாய்சொல்லிவிட்டீர்
என்றுசொல்லக்கேட் டெம்பெருமாள்தானுரைப்பார்
தக்கப்புகழுடைய தருமரேநீர்கேளும்
காசினியையாளுங் கர்னப்பெருமாளும்
உதித்தெழுந்தகாதத்துக்கும் உத்தமர்களைவரையும்
கொன்றுதுரியனுக்குக் கொடிதருவேனென்றுசொல்லி
தார்வேந்தர்முன்பாகச் சபதமிட்டுவந்தார்காண்
ஆகையினுல்கர்னனை அமர்க்களத்தில்சாமத்துக்குள்
கொல்லவேணுமென்று கூறினுர்மாயவரும்
அவ்வார்த்தைதான்கேட் டாச்சரித்தாரைவரும்
கொற்றவர்களைவரும் கொக்கரித்துத்தானெழுந்தார்

மாயவரேஉன்னருளால் வஞ்சனையால்தானணைத்தான்
எமபுரத்துக்காளாக ஏற்றுகிறோம்பாருமென்று
கையில்சிலையெடுத்துக் காவலர்களும்புகுந்து
சேனைகளத்தனையும் சின்னபின்னமாகவே
தேரோடுதேரறுத்துச் சிதறடித்தார்பார்தனிலே
கரிகள்பரிசேனையுடன் கதறிமுறிந்திடவே
அர்சுனனுங்கர்னன்மேல் அதட்டிவருவதைக்கண்டு
தேர்விசையன்வில்வளைத்து சீறிவருகிறதை
சாரதியன்சல்லியனார் கர்னனைத்தான்பார்த்து

**கர்னரைச் சல்லியன் சமாதானமாகப்
போகச்சொன்னது**

கண்டீரோகர்னாநீ காளைவருகிறதை
எரிமுகந்துஅக்கினிபோ லெதிர்த்துவாரானருச்சுனனும்
முன்னாள்பரசுராமர்மொழிந்த நல்லவாய்மையினால்
கைசிலைகளெல்லாங் கடுகச்சமைந்தான்காண்
அஸ்திரங்களில்லைகா ணங்கராயாவுன்னிடத்தில்
ஆகையாலவர்பக்க மடைவாகச்சேருவோம்வா
வாருமென்றுசொல்லி வருந்தியழைக்கையிலே
அவ்வார்த்தைதானகேட் டங்கராயன்தானகைத்து
சல்லியனைத்தானோக்கித் தானங்கேயேதுரைப்பார்
உத்தரதேசத்து ராசாவேநீர்கேளும்
கர்பகத்தேரிருக்கக் கைதனிலேவேலிருக்க
அற்புதமாய்கொல்லவல்லோ சீர்ப்பக்கணையிருக்க
ஒப்பாகயெண்ணுமல் சொல்பமாய்நீயுரைத்தாய்
ஐவரையுமின்றேடே அடக்கிறேன்பாரென்று
பார்த்துரைத்துகர்னன் பாம்புக்கணையெடுத்தான்
சல்யனுமங்கே தானங்தேயேதுரைப்பான்
காசினியையாளும் கர்னப்பெருமாளே
முன்னாளில்பாஞ்சாலி முடிமன்னன்சபைதனிலே
ஈரேழுபதினாலு தேசத்திராசுமன்னர்
ஐயாயிரந்தேச ராசாக்கள்தானறிய
மாநாகந்தன்னுடனே மருஞ்சிலையைத்தான்வளைக்க
மாளாமல்வீட்டீர் மகாசபையோர்பார்த்திருக்க
வளைக்காமல்விட்டுவிட்டீர் மன்னவரேகர்னரேநீர்
அனைவரும்பார்த்திருக்க அருச்சுனனரப்போது

பத்துபேர் தான்பார்க்க பார்த்திபனுமோடிவந்து
அவ்வில்லைத்தான் வளைத்து அரைக்ஷணத்திலப்பொழுது
அனலிற்பிறந்தவளை அப்பொழுதேமாலையிட்டான்
தீயிற்பிறந்தவளை சிலைவளைத்துமாலையிட்டான்
வில்வளைத்துமாலையிட்டான் மெல்லியரப்பெண்மயிலை
கணைவளைத்துமாலையிட்டான். காளையவ்வருச்சுனனும்
அப்படிக்கொத்தவர்களைவரந்தப்பஞ்சவர்கள்
மச்சநாடெல்லையில் மாட்டைமடக்கையிலே
உத்தரனோடேயொரு தேர்மீதிலேறிவந்து
மாட்டைதிருப்பிவிட்டு மன்னர்க்கெதிரில்நின்று
சின்னபின்னமாகவே சேனையைப்பறக்கடித்து
மன்னவர்கள் பூமுடியில் மகுடம்பறித்தவனும
தேவர்கள் வாழ்ந்திடவே சென்றான்விலாடபுரம்
மகுடம்பறிகொடுத்து வந்தீர்கள் அத்திபுரம்
அப்போதுநானறிந்தே னுகாயவித்தையெல்லாம்
வேறென்னகண்டீர்காண் வீராநீவில்வித்தை
அதிகமாய்கற்றீரோ அங்கராயவில்வித்தை
மாயவனுரைவருக்காய் வலுவாயிருக்கையிலே
உன்—வாழ்பாம்பைவிட்டாலே சலியார்களைவருந்தான்
சர்பத்தைவிட்டாக்கால் வதைத்திடமாட்டாது
ஆகையினால்செல்லுகிறேனறிந்து திருப்புமென்றார்
அவ்வார்த்தைதான்கேட் டரசனங்கேதுரைப்பான்
காசிநகராளுங் கர்னனுமேதுரைப்பான்
கொல்லும்புலியதுபோற் கோபித்துக்கண்சிவந்து
எதிராளிக்காகவென்னை இகழ்ச்சியாய்நீயுரைத்தாய்
சீவனையாதரித்தாற் சேருந்துரியனோடே
என்றுசொல்லியங்கராய னெடுத்தானேசர்பந்தனை
சர்பக்கணையெடுக்கச் சுமலியனார் தான்பார்த்து
கர்னனைவிட்டுக் கடுகியேசல்லியனார்
மானுகனபக்கலிலே வந்துவிட்டாரப்பொழுது
சல்லியன்போனபின்பு தாக்குள்ள அங்கராயன்
சாரதியுமில்லாமல் தார்வேந்தர்கர்னரப்போ

### கர்னன் அருச்சுனன்பேரில் சர்ப்பக்கணை ஏவுதல்

வாழ்பாம்புஅஸ்திரத்தை மன்னவனார்தானெடுத்து
மந்திரங்களுச்சரித் திந்திரனார்பாலகன்மேல்

இந்திரனார்மைந்தனுக் கிசைவாக அம்புவிட்டார்
முந்திபகைமுடிக்க மூண்டதுசர்ப்பக்கணை
சிடசிடவென்று செந்தணலக்கினிபோல்
அக்கினிசெந்தணல்போல் அனலாய்வருகிறதை
ஆனைமுகுமன்ன ரருச்சுனனார் தான்பார்த்து
விஷநாகந்தான்விலக்க வேறுதுணையில்லாமல்
மாயவனைத்தான்பார்த்து மர்மமாய்நின்றுவிட்டான்
ஐவரையுங்காக்கவந்த ஆயருந்தாமறிந்து
மேகவர்ணன்தேர்மிதிக்க முன்சக்கரமுந்தானமுந்த
ஆழியமுந்தவே ஆணழகன்தான்சாய
அங்கராயன்விட்டகணை அருச்சுனனார்கிரீடமதை
காண்டீபன்கிரீடந்தன்னை கர்னன் முன்வைத்ததுகாண்
கதிரவன்புத்திரனும் கண்டுமனங்கலங்க
சூரியனார்புத்திரனே துலங்குமணிவிளக்கே
அமர்க்களமெல்லாந்தேடி அர்ச்சுனனைக்கண்டதில்லை
போர்க்களமெல்லாந்தேடி புண்ணியனைக்கண்டதில்லை
பாதாளலோகத்தில் பார்த்திபனார்போயிருப்பார்
பாதாளம்போயிருந்து பாரமுடிகொள்ளவல்லேன்
மறுகணைபோடுமென்று மானைகந்தான்கேட்க
சர்ப்பக்கணைவீணைச்சுதென்று தார்வேந்தனப்போது
மயங்கிமறுமனதாய் நின்றுவிட்டார்.கர்னரப்போ
சின்னப்பட்டுபோனேனென்று சினந்துமேஅங்கராயன்
முன்னாளில்குந்தியர்க்கு மொழிந்திட்டவாய்மையினால்
தாயாருக்குச்சொன்னமொழி தவறாமலங்கராயன்
மறுகணைநான்தொடுக்க மாட்டேனெனவுரைத்தார்
வேறொருகணைதொடுக்க வேண்டாங்காணென்றுகூற
அவ்வார்த்தைதான்கேட் டரவம்பெருநாகம்
பொங்கிமனமுருகி ஓங்காரந்தானாகி
அரனைரெழுத்தின்படி அந்நேரம்போச்சுதுகாண்
பாம்புமேபோனபின்பு பழுதில்லாஅங்கராயன்
சேனைகளுமில்லாமல் தேரொன்றாய்நின்றுவிட்டான்
பொதியில்கணைகளுந்தான் போய்விட்டதாகையாலே
கைவாளைக்கண்டு கர்னனுமர்ச்சுனன்மேல்
வாயுவேகமாகவே வருகையிலேமாயவரும்
கண்டுமேமாயவருங் காளையுடனேதுசொல்வார்
அங்கம்பழுதில்லா அருச்சுனனேவீரியனே

ஐவருடன்பிறந்த அழகுசிகாமணியே
பொங்கியேகர்னரும் புதுமையதுநீபாராய்
என்றுசொலிலியஞ்சலா யிருக்குமந்தவேளையிலே
அங்கராயன்ஓடிவந்து அருச்சுனரைத்தாக்கினான்
தாக்கியபோது தனஞ்செயனார்தானும்
ஏழுமார்தூரம் இடைந்ததன்பின்னாக
பின்னாகத்தானிடைய பெருமாளும்தான்பார்த்து
ஏழுலகையாண்ட எம்பெருமாள்தானகைத்து
காசினியையாளும் கர்னப்பெருமாளே
செமதக்கினிபயின்ற செல்வனார்தானளிக்க
ஆயுதவித்தையெல்லா மடையாளங்காட்டிவைத்தாய்
மெச்சினேனென்றுசொல்லி மேகவர்னர்தானுரைக்க
ஆனலழக னர்ச்சுனனுமேதுரைப்பான்
மாயவரேகர்னரிட வலிமைதனைநீயுரைப்பாய்
அடியேனுங்கர்னனை யமர்க்களத்தில்நில்லாமல்
எத்தனை தூர மெடுத்தெறிந்துபோட்டாலும்
ஆனாலுங்கர்னனைத்தா னமர்க்களத்துமன்னர்முன்னே
மெச்சினேனென்றுசொல்லி மாயவரேயுரைத்தீர்
பாசுபதாஸ்திரத்திற் கதிகமோபாசக்கனை
காண்டீபத்தைப்பார்க்கிலும் அதிகமோபாசக்கணை
என்றுசொல்லக்கேட்டே டேதுரைப்பார்மாயவனார்
தருமருடன்பிறந்த தனஞ்செயரேசொல்லக்கேள்
வீரியங்கள்பேசாதே வேந்தர்கள்முன்பாக
சவுரியங்கள்பேசாதே தார்வேந்தரருச்சுனரே
கற்பகத்தேரதனைக் காற்றாய்ப்பறக்கடித்து
ஏழோசனை தூர மெடுத்தெறிந்துபோட்டாலும்
கர்னனார்தேரதனைக் காப்பாரொருவருண்டோ
மூச்சுவிட்டால்கர்னன்தேர் முக்காதயோடிவிடும்
ஆகையினால்கர்னன்தேர் அரிதல்லவெந்தனுக்கு
என்னுடையதேராண்மை யுரைக்கிறேன்மன்னவனே
அந்தரலோகமெல்லாம் அதோகதியாக்கிடுவேன்
பூமியையழுத்திப் புதையமிதித்திடுவேன்
அனுமாருந்தேர்மேலே அவருடையவல்லமைகேள்
ஏழுகடலு மெடுத்தெறியவல்லவர்காண்
ஜெகஜாலம்பெற்றவர்காண் கெருடபகவானும்
இத்தனைபேரு மிருந்துமிதிக்கையிலே

பூமியிலேதேரைப் புதையமிதித்திருக்க
இத்தனைதேரோடே எடுத்தெறிந்தான்கைச்சிலையால்
கர்னன்திரேகமல்லோ காளையர்ச்சுனனே
ஆகையினால்கர்னனைத்தான் அர்ச்சுனாயிப்போது
விட்டுவிட்டீராமாகில் வேந்தருங்களைவரையும்
எமபுரத்துக்களாக்கி ஏகுவானத்திபுரம்

அர்ச்சுனன் கர்னன்மேல் கணை தொடுத்தது

என்றுசொல்லக்கேட்டு இந்திரனார்புத்திரரும்
கண்டீபந்தன்னைக் கடுகவேதான் வளைத்து
சந்தித்துக்கர்னனிட மார்புக்குவிட்டுவிட்டான்
காண்டீபன்விட்டகணை கர்னனப்போதானறுத்து
வாளால்விலக்குகையில் மட்டுப்படாமல்வந்து
மயிருக்கொருகணையாய் மன்னனுக்குத்தைத்ததுகாண்
அப்போதுகர்னனு மாயாசந்தானாகி
தேர்தட்டுபூசனையில் சேர்ந்திருந்தார்சோகமுடன்
செவ்வானமிட்டதுபோல் செவந்ததுமேனியெல்லாம்
கையெடுக்கமாட்டாமல் கர்னருஞ்சாய்ந்திருந்தார்
ஆனலழகுமன்ன னர்ச்சுனன்தானபார்த்து
கைச்சிலையைக்கீழேவைத்துக் காளையவரப்போது
தருமரைப்போலர்கத் தனஞ்சயர்க்குத்தோற்றுதென்று
அரைமனதுதுயரத்தா லர்ச்சுனனின்றுவிட்டான்
கர்னரேதருமரென்று காளையரும்நின்றுவிட்டான்
அப்போதுமாயவனார் அருச்சுனரைத்தானபாரத்து
கைசிலையைக்கீழேவிட்ட காரணங்கள்கூறுமென்றார்
வில்லதனைக்கீழேவிட்ட விதங்கூறுமென்றுகேட்டார்
அப்போதுஅர்ச்சுனனு மாயவருக்கேதுரைப்பார்
காசினியைத்தாளுங் கர்னரைப்பார்த்தாலே
தக்கபுகழுடைய தருமரைப்போல்தோற்றிடுது
தருமரைப்போல்சீர்வடிவுசுவாமியிதோகாணுதென்றார்
என்றுசொல்லக்கேட் டெம்பெருமாளேதுரைப்பார்
முன்னாள்கர்னன்செய்த முறையெலாம்கண்டிருந்தோம்
தோராவடிவழகி துரோபதையைமுன்னாளில்
அரசர்சபைநடுவே யம்பலத்திலேற்றிவைத்து
துகிலையுரியவைத்தான் துரியோதனப்பாவி
அப்போதுகிலுரிந்த அந்தவளநாட்டான்காண்
ஆயிரந்துரைகளுட னபிமன்னனைச்சூழ்ந்து

தந்தைமார்காணுமல் தகப்பனுர்மாலையினுல்
கொன்றைமாலையிட்டுக் கொன்றவனுங்கர்னனல்லோ
மைந்தனைக்கொன்றதொரு மாபாவிகர்னனல்லோ
உன்-பிள்ளைகளைக்கொன்ற பெரும்பாவிகர்னன்காண்
அபிமன்னனைக்கொன்ற அரும்பாவிகர்னனிவன்
மூர்ச்சைதெளிந்தெழுந்து முடுகிவந்தானுனைக்கால்
களைதெளிந்துகர்னனும் கையிலேவில்லெடுத்தால்
ஐவரையுங்கொன்று அதம்பண்ணிபோட்டிடுவான்
பஞ்சவரைக்கொன்று பரமபதஞ்சேர்த்திடுவான்
அப்போதுகொல்ல அரிதாயிருக்குமப்பா
முந்தித்துகிலுரிந்த முறையில்லாகர்னனல்லோ
இன்னமொருபாண மெய்யுமென்ருர்மாயவரும்
எய்யுமென்றவார்த்தையை எழில்விசையன்கேட்டு
அதிககோபந்தானுகி அர்ச்சுனனுமப்போது
கர்னன்மேல்சிலையெடுத்து கணையொன்றுதான்பூட்டி
மார்பளவுதானிழுத்து மன்னன்மேல்விட்டுவிட்டான்
விட்டகணையப்போது பட்டதுகர்னன்மேல்
கற்பகத்தேர்மேலே சாய்ந்தான்கர்னனப்போ
அந்தரத்திற்றேவதைகள் அப்பொழுதேதுரைப்பார்
முன்னுல்பரசுராமர் மொழிந்திட்டசாபத்தினுல்
பாணங்கள்கர்னனுக்குப் பலிக்காமற்போயினது
அருச்சுனன்கையம்பாலே அங்கதன்மடிந்தானென்று
பூலோகந்தான்புகழப் புட்பமழைப்பொழிந்தார்
பூமாரிகள்கர்னன்மேல் பொழிந்துநடந்தார்கள்
தேவர்மழைபொழிந்து தெய்வலோகந்தான்புகழ
கர்னனவிழுந்திடவே கதிரோனும்போய்மறைந்தான்
புத்திரனாதான்விழவே புண்ணியனுர்போய்மறைந்தார்
படைத்தலைவர்தான்விழவேபடைமன்னர்தாமுறிந்தார்
இருவரிடசேனைகளு மிடைந்தார்களந்நேரம்
அவரவர்கள்தேரை அமர்க்களத்தில்தானிறுத்தி
வெறுங்கையாய்தானடந்தார் வேந்தர்களெல்லோரும்
ஐவர்களுஞ்சேர்ந்தார்க ளவர்களிடமண்டபத்தில்

**கிருஷ்ணபகவான் பிராமண வேடம் பூண்டு**
**கர்னனைத் தியாகங்கேட்பது**

இப்படியாக இருக்கின்றவேளையிலே
அப்போ-மாயன்பெருமாளு மனதிலேகபடுகொண்டு

முதிர்ந்தவயதுடனே முந்நூலுமார்பிலங்க
வேதபிராமணர்போல் வேடங்கொண்டெம்பெருமாள்
ஐயமென்றுசொல்லியவர் அங்கருயன்முன்னேவந்து
ராசாதிராசாவே ராசமணிவிளக்கே
எதிராளிநெஞ்சிற் கிளையாதஆச்சரமே
கற்பகத்தருவைநிகர் கர்னப்பெருமாளே
கேட்பவர்க்கில்லையென்னுக் கீர்த்திமணிவிளக்கே
ஐயமென்றுவந்தேன்காண அங்கவளநாட்டானே
சேதியொன்றுவந்தேன்காண் தேவேந்திரராசமன்னு
என்றுசொல்லிமாயவனுர் எடுத்துரைத்தாரப்போது
மாயவனுர்கூறியதை மன்னவனுர்தான்கேட்டு
கணையால்களைத்திருக்குங் கர்னர்பெருமாளும்
மாயவனுர்சொல்மொழியை மனதிலேதான்கேட்டு
ஐயமென்றுகூறினதை அங்கராயன்தான்கேட்டு
அங்கமெடுத்துஇந்த ஆயரைத்தான்பார்த்து
மறையவனுகவந்த மாயவரைத்தான்பார்த்து
ஸ்ரீராமாவென்று தேர்வேந்தர்கர்னரப்போ
பிராமணரைப்பார்த்து புண்ணியனுரேதுரைப்பார்
பிர்மகுலத்துதித்த புண்ணியரேவேதியரே
பேய்கள்தழைக்க பெருபூதங்கொக்கரிக்க
இராஜாக்கள்நின்ருடும் இரணக்களத்திலிவ்வேளை
பயப்படாமலென்னருகில் பார்ப்பான்நீவந்ததென்ன
அமர்க்களத்துக்கஞ்சாம லையாநீவந்ததென்ன
என்றுசொல்லக்கேட் டேதுரைப்பார்மாயவனுர்
ஈரேழுதேசத்து ராசாதிராசர்முன்னே
கார்மேகந்தனில்மிச்சங் கர்னகொடைஎன்றுசொன்னுர்
ஆகையினுல்கர்னரே ஐயமென்றுவந்தேன்காண
என்றுசொல்லக்கேட் டெம்பெருமாள்வார்த்தைதனை
ஆயனுர்சொல்வார்த்தை அங்கராயன்தான்கேட்டு
காசினியாண்டதொரு கர்னனெடுத்துரைப்பான்
தேசத்தையாண்டுநான் தியாகமளிக்கையிலே
அப்போதுஐயமென்று அடியேனைநாடிவந்தால்
தேவரீர்தான்மகிழ்ந்து திரவியத்தைநானளிப்பேன்
அடியேனுன்செய்ததொரு அபசாரந்தன்னுலே
தம்பிமார்பாணத்தினுல் தாழாதிருக்கையிலே
தியாகமென்றுவந்தாலே தயாபரனேசொல்லுவேனுன்

### கிருஷ்ணபகவான் கர்னனிடத்தில் தியாகம் பெற்றுக்கொண்டது

ஆனாலுமென்னவினி ஐயமென்றுவந்தீரே
நவரத்தினத்தாலிழைத்த நல்லநல்லஆபரணம்
வாங்கியேதருகிறேன் மகிழ்ந்துகொண்டேகுமென்றார்
அவ்வார்த்தைத்தான்கேட் டாயரவரேதுசொல்வார்
ஆபரணம்வேண்டேன் அழகியபெண்வேண்டேன்
பூணாரமும்வேண்டேன் பொன்னும்பலவேண்டேன்
இந்நாளிதுவரைக்கு மிராச்சியத்தையாண்டிருந்தேன்
பண்ணினபுண்ணியத்தை யளியுமேயெந்தனுக்கு
நீர்செய்தபுண்ணியத்தை நின்னயமாய்தாருமென்றார்
இன்றைக்கேதாருமென் றியம்பவேதான்கேட்டு
கற்பகத்தேருடைய கர்னனுந்தான்மகிழ்ந்து
அப்படியேபுண்ணியத்தை ஐயாவேதாரேன்காண்
மார்பினில்தைத்திருந்த வன்சிலையைத்தான்பிடுங்கி
உதிரத்தையெடுத்து உற்றுமுன்நீசெய்ததொரு
தருமங்களத்தனையும் தானீந்தேனுந்தனுக்கு
வாங்கிக்கொண்டேகுமென்று மன்னவன்கொடுத்தான்
அங்கராயர்தருமமெல்லா மாயரவர்தான்வாங்கி
எண்ணவொண்ணாமன மகிழ்ச்சியாகியெம்பெருமாள்

### ஸ்ரீகிருஷ்ணபகவான் பிராமண ரூபம் நீங்கித் தன் சுயரூபமெடுத்து கர்னனுக்கு வரங்கொடுத்தது

கர்னன்மனமகிழக் காட்சிகொடுக்கவென்று
செங்கருடன்மீதேறி திருமாலெழுந்தருளி
சங்குஞ்சதுர்புஜமுஞ் சக்கரமுங்கையுடனே
கர்னனார்முன்பாகக் கரியமால்வந்துநின்றார்
காசினியையாளுமந்தக் கர்னர்கண்டுதான்மகிழ
ஈரேழுலகமாண்ட எம்பெருமாள்மேகவர்ண
அந்நாளில்தேவருக் கமுதம்பகுந்தவரே
அரிஅரிதேவாநீர் அச்சுதரேபோற்றியென்றார்
மாயவரேபோற்றி மாயாவுன்தாள்போற்றி
யாதவனேபோற்றி ஆண்டவரேபோற்றி
அடியேனொருபொருளாய் அபயமென்றுவந்தீரே
நாயேனொருபொருளாய் நாடிவந்தீரென்னிடத்தில்

சேயனுன்செய்தவினை தீர்ந்ததுஇன்றேடே
பஞ்சைநான்செய்தவினை பறந்ததுஇன்றேடே
எத்தனையோகோடி எண்ணுமோட்சம்பெற்றேன்
கிருபைஎன்மீதில்வைத்துச் சிறுமையகற்றிவைத்தீர்
என்றுசொல்லக்கேட்டு எடுத்துரைப்பார்மாயவரும்
கற்பகத்தேர்படைத்த கர்னப்பெருமாளே
இந்நாள்போலுன்னைநான் இதுநெடுநாள்வரைக்கும்
உறவுகலவாமல் உற்றுரறியாமல்
பிறப்புமறியாமல் பெற்றேருங்காணுமல்
மறைவாயுன்னைநான் வளர்த்தேன்காண்பஞ்சவர்க்காய்
அவமாகும்வேளையிலே ஆயுதமுதவாமல்
பாம்புமறுபடிக்கும் பகழிகொடுக்காமல்
குந்தியார்சொல்லுக்குநீ குறுக்கேநடவாமல்
மறைவாகக்குண்டலங்கள் வாங்கிக்கொண்டமாயவனுர்
அமர்க்களத்தில்பாம்புகணை அர்ச்சுனனைக்கொல்லாமல்
போர்க்களத்தில்கணைகளெல்லாம் பொருந்திநில்லாமல்
காளையுடபாணத்தால் களைத்துவிழுந்திடவே
மறையவராய்வந்துந்தன் மாதருமமத்தனையும்
வாங்கியேகொண்டதொரு மாதவனும்நான்காணும்
மனதுகுறைகளினுல் வஞ்சனைகள்செய்தேன்காண்
ஆசையினுலுன்பேரில் அதிகசந்தோஷமையா
கேட்டவரந்தரவே வந்தேன்காண்கீர்த்தியுடன்
வேண்டியதைக்கேளுமென்று மேகவர்னர்தானுரைக்க
அவ்வார்த்தைதான்கேட்டு அங்கராயரேதுரைப்பார்
காசினியையாளுமந்த கர்னப்பெருமாளும்
ஆனைபுரவிமற்ற அரசமக்கள்தன்னுடனே
எப்போகமெல்லாம்நான் இப்போதேதீர்த்துவிட்டேன்
மாயவரேயுந்தன்றுள் மலர்ப்பதத்தைக்கண்டமட்டில்
மூவுலகுங்கீர்த்தியுடன் முத்திப்பதம்பேறுபெற்றேன்
இந்தப்பதங்களெல்லாம் இருக்கட்டும்மாயவரே
ஆனுலுமின்னமொன்று அடியேன்சொல்விண்ணப்பம்
தேவரீர்முன்னுலே தூதுரைக்கவப்போது
அடியேனுரைத்த அவ்வார்த்தைவிட்டுவிட்டு
குருகுலத்துக்கர்னனென்று கொற்றவர்கள்தங்களுடன்
பெற்றெடுத்தகுந்தியென்று பிரபலமாய்காணவென்று
வந்துஎடுத்தென்னை மார்போடெடுத்தணைத்து

முடிமன்னர்கண்டவுடன் முலையமுதுதானளித்து
தம்பிமாரென்னைத் தழுவியெடுத்துப்போய்
மாணிக்கமேடையிலே வைத்துமுடிசூட்டி
கைகட்டிநின்றுதான் கர்மக்கடன்கழித்து
ஐவருக்குமூத்ததொரு அங்கராயனென்றுசொல்லி
ஈரேழுல்கத்து இராஜாக்கள்தான்புகழ
ம்ாதாவரும்வரையில் வல்லுயிர்தானிருக்க
இதுவுமேயல்லாமல் நானென்றுவேண்டேன்காண்
என்றுசொல்லக்கேட்டு எமபெருமாள்மகிழ்ந்து
அப்படியேயாகுதென்று அட்சயமென்றுரைத்தார்
கேட்டபடிவரமுங் கொடுத்தாரேஎம்பெருமாள்
கர்னன்மனமகிழக் காட்சிவரங்கொடுத்து
அவ்வேளைகுந்தியம்மாள் அரண்மனைக்குத்தான்போய்
அத்தைமார்தம்மோடே அங்கனிடசேதியெல்லாம்
அறியவசப்படுத்தி ஆயரவரப்பொழுது
ஆயரவர்தானுரைக்க அலறியெழுந்திருந்து
விட்டலறிகுந்தியம்மாள் விழுந்துவெறுநிலத்தில்
முட்டியேகையாலே முகத்தோடேதானறைந்தாள்
வாயிலடித்துக்கொண்டு வயிற்றினில்கையைவைத்து
மகனேமகனேயென்று மண்மேலேதான்விழுந்தாள்
ஆயர்பெருமாளு மத்தையரைத்தானெடுத்து
பூந்துகிலாடையினல் பெருகியகண்ணீர்துடைத்து
அத்தையரேநீர்கேளும் ஆயன்விதிதப்பாது
முன்னுள்விதிதவிர்க்க முடியுமோமூவரினல்
தலையின்விதிப்படிகள் தப்பாதுஅத்தையரே
பிரமாவெழுதியதோர் பிராப்தியிருக்கையிலே
தப்பவைக்கொண்ணுது தாரணிராசருக்கு
இனியான்படுந்துயர மேதுக்குஅத்தையரே
இங்கிருக்கநியாயமல்ல ஏறுஞ்சமர்க்களத்தே
கர்னனிடத்தில்நீர் கன்னியரேபோய்வருவாய்
போய்வாருமென்றுசொல்லிப் போனர்தன்பாடிமனை
மாயவனர்போன்பின்பு மாதுஎழுந்திருந்து

**குந்தியம்மாள் போர்க்களத்தில் வந்து கர்னனைக் கண்டு பரதவித்தல்**

அப்போதுகுந்தியரு மமர்க்களத்தைத்தான்தேடி
அப்போதுகுந்தியுடன் ஆரிழைமார்தாமெழுந்து

மகனுரைக்காணவென்று மாதுநடந்தாளே
கூடநடந்தார்கள் குந்தியுடதாதியர்கள்
ஒக்கநடந்தார்களூத்தமிமார்தாதியர்கள்
கர்னனுமாண்டதொரு களரியெவ்விடங்களென்று
அர்த்தராத்திரிவேளையில் அமர்களத்தில்குந்தியம்மாள்
பிணமுங்குறைத்தலையும் பின்னுமுன்னுந்தானிடற
உதிரக்கடல்நோக்கி ஓடுகிறசமுத்திரத்தில்
மாரளவாய்நீஞ்சியவள் மகனிடஆசையினால்
அடித்துப்புரண்டழுது அமர்களமெல்லாந்தேடி
கற்பகத்தேரோடே கண்டாளேகர்னனைத்தான்
கண்டுதான்தேடிக் கர்னனார்மேல்விழுந்து
வாயிலடித்துக்கொண்டு மார்மேலறைந்துகொண்டு
மகனேகருவிளமே மாகர்னப்பெருமாளே
பொன்னேமணிவிளக்கே பூவேகளஞ்சியமே
கன்னிக்குடலைக் கலங்கிவந்தகண்மணியே
சொர்னப்பசுங்கிளியே துலங்குநவரத்தினமே
முன்னேயொருநாளில் முனிவாய்மைத்தன்னாலே
ஐந்தாம்வயதிலே பஞ்சாட்சரமளித்தார்
செல்வத்திலேஎன் சிறுபுத்திதன்னாலும்
மனமகிழ்ச்சியினாலே மதிகெட்டுப்போனேனே
வலக்கையில்பாண்டமுடன் மந்திரத்தையுச்சரித்தேன்
சித்திபண்ணமந்திரத்தால் சூரியனுமவ்வேளை
பாசமாய்கர்னனென்று பாலனெனக்களித்தார்
அவ்வேளைமாயவனார் அறிந்துமவரோடிவந்து
பெற்றமகன்குற்றமென்று பேழையிலுன்னைவைத்து
முத்திரித்துப்பெட்டியைத்தான் முகமாயமில்லாமல்
கெங்கையிலேவிட்டுவிட்டார் கேசவனார்தானுமப்போ
அந்தப்புரஞ்சேர அனுப்பிவைத்தார்மாயவனார்
பெற்றுவளர்த்துநான் பெறுமகிழ்வுகொள்ளாமல்
கைவகையிலேவிட்டுவிட்ட மாபாவியானேனே
வைத்துவளர்த்துநான் வல்லமையைக்காணமல்
வாழவும்நான்மடியில் வைத்துவளர்க்காமல்
ஆற்றிலனுப்பிவிட்ட அரும்பாவிநான்தானே
பேழையிலேகட்டிவிட்டுப் பெருக்கத்தவித்தேனே
கும்பத்தின்முலைப்பால் கொடுத்துவளர்க்காமல்
அப்பிபால்வார்த்துநான் ஆற்றில்விட்டபாவியானேன்

பட்டம்பதித்துமுனைப் பாராளவையாமல்
பெட்டியில்வைத்துநான் பேராற்றில்விட்டுவிட்டேன்
முகத்தோடேமுகமணைத்து முலைப்பாலளியாமல்
ஜலத்திலேவிட்டுனக்குச் சிலப்பாலளித்தேனே
கட்டியணைத்துன்னைக் கண்குளிரப்பாராமல்
நட்டாற்றில்விட்டு நான்பாவியானேனே
பழுதில்லாமுத்தென்று பாருலகஞ்சொல்லாமல்
இழிகுலத்தானெனச்சொல்லி ஏசவுனைவைத்தேனே
குருகுலத்தான்மைந்தனென்று கூறுவாரில்லாமல்
சிறுகுலத்தானென்வுலகஞ் செப்பவுனைவைத்தேன்
ஐவருடன்கூடி அரசாளவில்லாமல்
தெய்வச்சிறுமையினாற் சீரைக்குலைத்தேனே
தம்பிமார்தன்னுடனே தனித்தரசாளாமல்
கும்பிமன்னருடன் கூடியரசாண்டீரே
குந்தியம்மாள்பிள்ளையென்று குருகுலத்தில்வாழாமல்
அந்தகனார்பக்கலிலே அரசாண்டீரப்பாவே
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்தங்களுடன்
மேலேயரசாண்டு வெட்கித்திருந்தாயே
இந்தவுலகத்து ராஜாக்கள்தானறிய
பந்திட ஐவரையும் பகையாக்கிக்கொண்டாயே
விஜயன்மேல்தான்பகையாய் மீண்டுவந்தநாகந்தன்னை
அசையாமலுனதருகி லமர்த்திவளர்த்தாயே
தம்பிவிசையனென்று தானறியமாட்டாமல்
வெம்பியநாகத்தை முடுக்காய்வளர்த்தாயே
மறுகணைதொடாதேயென்ற மாதாசொல்தள்ளாமல்
ஒருகணையைநீதொடுத்து உகந்துமடிந்தாயே
தம்பிதானென்றுசொல்லித் தானறியமாட்டாமல்
தம்பிகைபாணத்தால் தளர்ந்துமடிந்தாயே
காணுமலுன்பிறப்பைக் கார்வன்னர்தன்பொருட்டால்
மாணுகனுக்காக மாண்டாயோரணக்களத்தில்
நான்கூறியதைக்கேட்டு தொடர்ந்துவந்தாலென்பிறகே
மன்னருடன்நீயிருந்து மதிக்கவரசாளுவையே
தாழாமல்நீயுமிந்நாள் தன்பிறப்புக்காணுமல்
மாளாமலரசாண்டு மதிகெட்டானுனையே
அண்ணருந்தம்பியரும் அரசாண்டுவாழாமல்
தம்பிகைபாணத்தால் தளர்ந்துவிழுந்தாயே

அண்ணுனர்கர்னரென்று ஐவரறியாமம்
கொன்ருரேயுன்னையினிக் கொடும்பாவிபஞ்சவர்கள்
வீணுக்குவுன்னை விருதாவில்கொன்றேனே
சித்தமனங்குளிரச் சீராகப்பெற்றேனுன்னை
வைத்திருந்துபாராமல் மாபாவியானேனே
அண்ணனுர்கர்னரென்று ஐவருடன்சொன்னுலே
மண்ணில்விழுந்து மடிவார்கள்பஞ்சவர்கள்
அங்கராயனண்ணனென்று அறிந்தாரேயாமாகில்
தங்களிடகைச்சிலையால் தானேமடிவார்கள்
ஐவருக்கென்னசொல்வேன் அப்பாவென்கண்மணியே
பஞ்சவர்க்கென்னசொல்வேன் பைங்கிளியேகண்ணுளா
பொன்சொரிந்தவாளாலே புத்திஒன்றுசொல்லாயோ
என்றுகூறிகுந்தியம்மாள் ஏந்திழையாள் தான்புலம்பி
முட்டினுள்தேரோடே முழிகள்சிதறிடவே
அப்பினுள்மார்மேலே அங்கமெல்லாம்வியர்த்துவிட
கதறித்தலைமோதிக் கர்னனுர்மேல்விழுந்து
மயிருக்கொருபாணம் வகையாகத்தைத்திருக்க
அம்புகளெல்லா மருங்கையினுல்தான்பிடுங்கி
கும்பமுலைப்பால் கொடுத்தாளேயந்நேரம்
முத்தமிட்டுக்கொண்டு முகத்தோடுறவணைத்து
முந்தானையைப்பற்றி முடிமன்னன்மேலழுத்தி
உத்திரபுலனையெல்லா முத்தமியாள்தான்துடைத்து
மடியிலிருக்கின்ற மைந்தனைத்தானணைத்து
மைந்தனுர்கையெடுத்து மாதுநல்லாள்கண்ணிலொத்தி
மகனேமகனேயென்று மாதுநல்லாள்முத்தமிட்டாள்
மகனென்றசத்தமது மன்னவனுந்தான்கேட்டு
குந்திமுலைப்பாலை குளிரவேதான்குடித்து
அங்கங்குளிர அமுதுண்டுஅங்கராயன்
கலைகள்தெளிந்து கர்னனுரப்போது
குந்தியம்மாள் தன்முகத்தை குறிப்பாகத்தான்பார்த்து
கொற்றவனைப்பெற்றெடுத்த குந்தியருந்தான்பார்த்து
கட்டியுறவணைத்து கனிவாயைமுத்தமிட்டு
கன்னிகுடலைக் கலக்கிவந்தகண்மணியே
சின்னவயதில்தந்த செல்வத்திரவியமே
கர்னமணிவிளக்கே கயிலாசங்கொண்டாயோ
சிவனடியைக்கண்டுநீ திரும்பியிங்கேவந்தாயோ

தாயார்க்குந்தம்பியர்க்கும் தானுரைத்துவாரேனென்று
மாயாமலீசரண்டை வரங்கேட்டுவந்தாயோ
என்றுசொல்லிக்குந்தியம்மா ளேங்கியழுகையிலே
வகைவகையாய்ச்சொல்லி மாதுஅழும்போது

கர்னர் தாயாருக்குரைத்தல்

அழுகின்றதாயாரை அங்கராயன் தான்பார்த்து
காசினியையாண்டதொரு கர்னரெடுத்துரைப்பார்
சூரியமகாராசன் துதிபெறவேபெற்றெடுத்த
மாதாள்வதான்பார்த்து மன்னவரேதுரைப்பார்
சந்திரரும்வாழவந்த தாயாரேகேளுமம்மா
ஆயர்கிருபையினு லமர்க்களங்கள்சோதித்து
ஈரேழுதேசத்து ராசாக்கள்தங்களுடன்
பதினெட்டக்ரோணி படைகள்மடிந்ததம்மா
ஆனைபரிசேனைகளு மநேகமடிந்ததம்மா
பேய்கள்கத்திடவே பெரும்பூதம்கொக்கரித்து
கூளிகழுகுடனே கூடியிரைபுசிக்க
உதிரக்கால்நோக்கி ஓடுகின்றவெள்ளமதில்
தாளிப்பனைமேலே தானிருக்குங்காகமது
கழுத்தில்வழியும்ரத்தங் காகமதுதான்குடிக்க
நாற்பத்தெட்டோசைகாண ரணக்களத்திலேபெருமை
கேட்டவர்களெல்லாங் கிலிபிடித்துநின்றிடுவார்
பார்த்தவர்களெல்லாம் படுகளத்திலேமடிவார்
அப்படிக்கொத்ததொரு அமர்களத்திலின்னேரம்
பதினைந்துநாழிகையில் பயமொன்றுமில்லாமல்
பெற்றவருமையினால் பேராசைதன்னாலே
தாங்கிமுலைகொடுத்த தாயார்நீயானதினால்
இந்தமகனுவலினு லோடிவந்தாயென்தாயே
பிள்ளையிடஆசையினால் பெற்றவளேஎன்தாயே
மைந்தனிடஆசையினால் மாதாவேஎன்தாயே
ஆனாலுமின்னமொன்று அடியேனின்விண்ணப்பம்
அறியாதான்சொல்லுகிறேன் ஆச்சியரேநீர்கேளும்
தாயாரைநானறியேன் தகப்பனார்பேரறியேன்
பெற்றாரைநானறியேன் பிறவித்துணையறியேன்
உற்றாரைநானறியேன் உறவின்முறைநானறியேன்
வைத்திருந்தான்தானுழிய வளர்த்தாரைநானறியேன்

சோரிட்டார் தாமொழிய சுற்றத்தரையானறியேன்
ஈரேழுதேசத்து ராசர்கள் தாமொழிய
குருகுலத்தார்மைந்தரென்று கூறிவார்நானறிவேன்
இழிகுலத்தான்மைந்தனென்று ஏசவளர்ந்தேனன்
இப்படியாக யிருந்தரசாண்டிருந்தேன்
துரியனார்பாக்கியத்தை செலம்ழித்துநானிருந்தேன்,
மானைகனுக்காக மாண்டேன்ரணக்களத்தில்
செஞ்சோற்றுதன்கடனைத் தீர்த்தேனனுன்றேடே
ஆனாலுமின்னமொன்று ஆச்சியமேநீர்கேளும்
முன்னாலேநீர் தானு முடுகிவந்தேன்பக்கல்
பிள்ளைநீதானென்று பிறப்பறியப்பண்ணிவைத்தாய்.
பஞ்சவர்க்காக ஒருபாம்புக்கணையொழிய
மறுகணைவிடாயென்னும் மாதாவேநீயுரைத்துப்
போம்போதெந்தனுக்கு புகழ்ச்சிமகிழ்ச்சியினால்
வாழ்வுமெனக்களித்து மாதாவேபோனீரே
அந்தவரங்களைப்போல் அரசமக்கள் தானறிய
மகன்பேரிலர்சையினால் வந்தாயரணக்களத்தில்
இன்னமொருவரங்க ளேந்தனுக்குத்தாருமம்மா
தம்பிமாரைவர்களும் தார்வேந்தர் தங்கள்முன்னே
வந்துரணக்களததில் வருந்திஎனையெடுத்து
ஈரேழுதேசத்து ராசர்கள் தான்பார்க்க
அருமைபெறவெனக்கு உரிமைசெய்யவேணுமென்று
யான்கேட்கநீரளித்து ஆச்சியரேபோனீரே
அப்படியேவிப்பொழுது ஐவருமோடிவந்து
பாண்டுமகாராஜன்பெற்ற ப்ஞ்சவர்களோடிவந்து
மன்னவர்கள்காண வாரியென்னைததானெடுத்து
குருகுலத்துமைந்தனென்று வரிசைஎல்லாஞ்செய்தற்கு
ஐவரையுமிந்நேர மழைப்பிக்கவேணுமென்றார்

**குந்தியம்மாள் ஐவரையும் அமர்களத்திற்கு வாவழைத்தல்**

அந்தமொழிகேட்டு ஆபரங்குந்தியம்மாள்
மைந்தன்மனங்களிக்க மாதாமந்நேரம்
தனக்குகவரியிடுந் தாதியரைத்தானழைத்து
முத்தின்கவரியிடும் மூப்பிமுகம்நோக்கி
தர்மனார்வீமனார் தனஞ்செயனாரெட்டையனார்

ஐவரையுமிந்நேரம் அழைத்தோடிவாருமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரிழைமாரோடி
பாடியரண்மனையில் பஞ்சவர்கள்வீற்றிருக்கும்
சிங்காசனத்தருகே திகழவந்துதெண்டனிட்டு
தக்கபுகழுடைய தருமருந்தான்பார்த்து
ஆர்புணிதா திநீ யறியவுரையுமென்றார்
தாமக்கருங்கிழலார் த்ா தியருமேதுரைப்பாள்
பூமியோடத்ததொரு புண்ணியனேகேளுமயா
கொற்றவரைப்பெற்றெடுத்த குந்தியம்மாளென்னுச்சி
காசினியையாண்டிருந்த கர்னர்பெருமாளும்
சந்திரகுலம்வாழவந்த தருமருக்குமூத்தவராம்
ஆகையால்குந்தியம்மா யமர்களத்தில்தேடிபோய்
கற்பகத்தேருடைய கர்னனார்மேல்விழுந்து
அழுதிருக்குங்குந்தியம்மா ளவரைத்தானழைத்து
வாருமென்றுசொல்லி மாதுயனுப்பிவைத்தாள்
என்றுசொல்லக்கேட்டு ஏங்கியந்தபாண்டவர்கள்
ஓமப்புகையில்நெய்யை யூற்றினவாறதுபோல்
ஆருத்துயமுற்று அன்லில்மெழுகாகி
அண்ணவேயென்று அலறிப்புரண்டழுதார்
முட்டினார்மன்னரவர் முழிகள்சிதறிடவே
அடித்துப்புரண்டழுதா ராழிபலந்தான்சிதற
அருகிருக்குமன்னவர்க ளைவரையுந்தானெடுத்து
தார்வேந்தரைவருக்குந் தனிக்கவரிவீசலுற்றார்

பஞ்சவர் முதலானவ ரமர்க்களம்வந்து
கர்னரைப்பார்த்துப் புலம்பல்

ஐவருந்தானெழுந் தமர்க்களத்தைத்தான்தேடி
நடந்திடவேயந்நேரம் இராசாக்களெல்லோரும்
ஐவருங்கூட வலறியவர்தானடைந்தார்
பருவமதயானை பஞ்சவர்களைவர்களும்
பாதியிரவுதனிற் பதினைந்துநாழிகையில்
பேய்கள்பிணந்தின்னும் பிசாசுமிரண்டோடும்
கொள்ளிவாய்பேய்களது கோஷ்டங்கள்செய்துநிற்கும்
பிணந்தின்னும்கூளிகளும் பிதிகலங்கிஎழிந்திருக்கும்
அலறியழுதசத்தமமர்க்களங்கள் தான்திரும்
அண்ணவேகர்னவென் றைவர்களும்மப்போது

கன்றிழந்தப்சுவைப்போல் கதறியவர்தான்புலம்பி
குந்தியார்பேர்கூறிக் குறிப்பாகத்தானடந்தார்
குந்தியழுதசத்தங் கொற்றவர்கள் தான்கேட்டு
ஓடியேவந்துமிந்த உத்தமர்களைவருந்தான்
கற்பகத்தேர்மேலே கர்னரவர்மேல்விழுந்து
முட்டினார்தேரோடே முழிகள்சிதறிடவே
அறைந்தார்கள் தங்களிட ஆபரணங்களற்றுவிழ
வாயிலடித்துக்கொண்டு மண்மேல்புரண்டழுதார்
களைத்துமிகவெழுந்து கர்னனார்மேல்விழுந்து
அடிநாளிலிவ்வார்த்தை அறியாமற்போனேமே
மர்மமாய்தர்ணிருந்தாள் மாபாவிகுந்தியரும்
இப்போதுரைத்தவளு மப்போதுரைத்திருந்தால்
இந்தப்பெருவாழ்வும் இராச்சியமும்வேண்டாமல்
அரசும்பெருவாழ்வும் ஐவர்களும்வேண்டாமல்
காட்டகத்திற்போய்விடுவோம் கர்வலர்களைவர்களும்
ஐவருங்கூடிநாம் ஆலோசனை பேசி
அந்நேரங்கானதத்தில் ஐவருடனேகுவோம்
தாயல்லகுந்தியம்மாள் தாயாதிஎங்களுக்கு
படுபாவிகுந்தியம்மாள் படுகளத்தில்சொன்னாளே
மாபாவிகுந்தியம்மாள் மனதிலேவைத்திருந்தாள்
குந்தியரைப்பார்த்துக் கோவென்றுபஞ்சவர்கள்
அழுதாரேபஞ்சவர்கள் மேனியெல்லாம்வியர்த்துவிட
முட்டிக்கொண்டார்பஞ்சவர்கள் முழிகள்சிதறிடவே
அறைந்துகொண்டார்தங்கள் அடிவயிற்றிலேதான்
அண்ணன்கர்னனென்று அவர்களறியாமல்
கர்னனைத்தான்செயிக்க கண்டங்கருத்தாரை
அடுத்தகணைவாங்கி அமர்செய்வோமண்ணாவே
சிறுபுத்திதன்னாலே செய்துவிட்டோமண்ணாவே
கர்னனார்மேல்விழுந்து கதறிப்புலம்பிடவே
களையால்களைத்திருந்த கர்னர்களைதெளிந்து
மூர்ச்சைகளைதெளிந்து முகத்தையவர்பார்த்து
தம்பிமாரைவரையும் தழுவியெடுத்தணைத்து
பூந்துகிலாடையினால் பெருகியகண்ணீர்துடைத்து
துக்கத்தைத்தானாற்றி தூயபெருமாளும்
அண்டையிலேதானழைத்து அண்ணன்பெருமாளும்
முன்னாள்விதிவசத்தை மொழிந்திடவுமாமோதான்

அருச்சுனன்கையம்பாலே யென்னையிழக்கவென்று
மனதிலேஎண்ணிவஞ்சம் மாயவனுர்செய்ததல்லால்
பின்னொருவர்செய்த பிழையல்லதம்பியரே
குருகுலபாண்டுவின் குமாரர்களென்றுசொல்லி
ஒருகுளத்துநீரதுபோ லுடனிருந்துவாழாமல்
மாயவனுர்செய்த வஞ்சனைகளல்லாமல்
மற்றொருவர்செய்ததல்ல வஞ்சனைகள்மன்னவரே
ஆண்டாண்டுதோறு மழுதுபுரண்டாலும்
மாண்டார்வருவதுண்டோ மன்னர்மணிவிளக்கே
இத்தையறியாம லேதுக்குஇத்தூரம்
பாதிப்பொழுதிலே பதினெட்டுநாழிகையில்
கல்லோடுகல்லுரையும் காரிருளில்வந்தீரே
விடிகிறநேரமது ஆச்சுதுகாண்வேந்தர்களே
போவோமெழுந்திருங்கள் புண்ணியரேஎன் றுரைத்தார்
போவோமென்றசொல்லைப் புகழ்வேந்தர் தான்கேட்டு

#### பஞ்சவர்கள் கர்னனுக்குப் பட்டந்தரிப்பித்தது

ஐவருடன்குந்தியரு மாலித்தெழுந்திருந்து
அண்ணனுர்தன்னையப்போ அமர்த்திஞர்தண்டிகையில்
பல்லக்கெடுத்துவரப் பரிவாரஞ்சூழ்ந்துவர
ஐவருந்தண்டிகையி லருகாகச்சூழ்ந்துவர
பொன்னுலகந்தன்னிலுள்ளோர் விட்டமழைபொழிய
சற்சரிமீட்டிடுவார் சாமரம்வீசிடுவார்
கவரிகள்மீட்டிடுவார் சாமரம்வீசிடுவார்
ஐவரிருக்குமந்த அரண்மனையில்கொண்டுசென்று
பசும்பொன்னலிழைத்த பஞ்சணைமீதமர்த்தி
மூவருங்கொண்டாட முடிசூட்டிகர்னனைத்தான்
பாருலகம்கீர்த்திபெற்ற பட்டத்தரசனென்று
எக்காளையூத ரணபேரிதான்முழங்க
சின்னமுழங்கத் திருச்சின்னந்தானூத
அண்ணனுர்பாத மடிவணங்கிப்பஞ்சவர்கள்
கர்னனுர்பக்கலிலே கைகட்டிவீற்றிருந்தார்
இழிகுலத்தான்மைந்தனென்று எண்ணியிருந்தவரும்
பழுதில்லாச்சிங்கமென்று பணிந்தார்களெல்லோரும்
விருதுகள் தான்முழங்க வெண்கவரிதான்வீச
செங்கண்மால்கர்னருடன் சேரக்கொலுவிருந்தார்

பாருலகில்தேவேந்திரன், பார்வேந்தன் கர்னனுந்தான்
பஞ்சவரும்போற்றிசெய்ய பஞ்சணையில்வீற்றிருந்தார்
அப்படியேகர்னனுந்தானவருடன் வீற்றிருந்தார்
அத்திபுரமாளு மரவக்கொடிவேந்தன்
வணங்காமுடிவேந்தன் வரவிட்டதூதுவர்கள்
அருச்சுனன்கையம்பாலே அங்கராயன்பட்டாரென்று
மானுகன்தன்னுடனே வந்துரைத்தார்மன்னவர்கள்

### கர்னன் மடிந்ததைக்கேட்டுத் துரியோதனன் அமர்க்களம்வந்து தேடுதல்

தேசத்தையாளும் துரியோதனன்கேட்டு
மாளாத்துயரங்கொண்டு மண்மேல்விழுந்தழுது
அண்ணவைக்காணுமென்று அலறிவிழுந்தழுது
கர்னனார்தான்பட்ட களரியதுஎங்கேயென்று
பந்தம்பிடித்துவரப் பார்வேந்தர் தானடந்தார்
பஞ்சவருக்குமுன்பிறந்த பட்டத்தரசனென்று
ஐவரும்வந்தெடுத்து அரண்மனைக்குப்போனுரென்று
மற்றவரோடிவந்து மன்னனுக்குத்தானுரைத்தார்
தேசத்சமுகன் திரியோதனன்கேட்டு
முட்டினன்மன்னவனும் முழிகள்சிதறிடவே
கையாலறைந்தழுதான் கண்டங்களற்றுவிழ
கர்னரேயண்ணவே கண்ணேமணிவிளக்கே
வையகம்விளங்கவந்த வாழ்வேமரகதமே
உன்னலென்பட்டமதை உதவியாயாண்டிருந்தேன்
உன்னலேஎன்பேச்சும் ஒப்பாச்சேமன்னவற்கு
உன்பலத்தினுலேநான் உகந்துபடைக்கிசைந்தேன்
அடிநாளிலிவ்வார்த்தை அறிந்திருந்தேனுமாகில்
பஞ்சவர்களோடேநான் பகைசெய்துகொள்ளாமல்
பாதியரசுடனே பகுந்தளிப்பேனவருக்கும்
பஞ்சவரும் நூற்றுவரும் பரிந்தரசையாண்டிருப்போம்
கொற்றவரும்நாங்களுமாய் கூடியுறவாயிருப்போம்
ஒற்றுமையாக உகந்துமிகவாழ்ந்திருப்போம்
அரசாளுமாசையினு லமர்க்களம்சோடித்து
சண்டைகள்செய்துநான் சாகக்கொடுத்தேனே
உன்னைநம்பியல்லோ உடன்பகைத்தேன்பஞ்சவரை
நம்பினேனுன்னைநீ நட்டாற்றில்விட்டாயே

தம்பியரைநானிழந்து தனையரையும்நானிழந்தேன்
அம்புவியாசையினல் அனைவரையும்நானிழந்தேன்
ஐவருங்காடாண்டார் அங்கனேநீநாடாண்டாய்
யானுமென்தம்பியர்களவர்கள் நூற்றுவரும்
வெற்றேற்றமிட்டு விழலுக்கிழைத்தோமே
கர்னனார்தம்முடனே கலந்திருக்கநாளானல்
மேலணிந்தகுண்டலமும் விருதாவாய்தான்போமோ
அரவத்துக்காயிரங் கலப்பால்கள்தான்வார்த்து
பட்சமாய்கர்னனிட பக்கத்திலேவளர்ந்த
அருமையாய்வளர்த்து அர்ச்சுனன்மேலேவிட்ட
பகையாளிமேலேவிட்ட பாம்புபழுதாமோ
வகைவகையாய்ச்சொல்லி மன்னனழும்போது
அருகிருந்தமன்னவர்க ளவனையுமேதேற்றி
ஆண்டாண்டுதோறுமினி அழுதுபுரண்டாலும்
மாண்டதொருகர்னனர் வாரதில்லைவாருமென்ருர்
வாருமென்றுசொல்லி வருந்தியழைக்கையிலே
மானுகமந்தியதோர் மன்னவருந்தானெழுந்து
சயிந்தவனைததானழைத்து தாமங்கேஏதுரைப்பார்
பதினேழாநாளையிலே படுகளத்தில்தான்முடிந்த
கர்னனார்பாடும் காளையர்கள்தன்பாடும்
தையலாள்காந்தாரி தனக்குரைத்துவாருமென்று
அனுப்பிவிட்டுதன்னுடைய அரண்மனையிலிருந்தார்
சயிந்தவனுமோடிவந்து தையலாள்தனக்குரைத்தான்
தையலாள்தான்கேட்டு தலையிலடித்தெழுந்து
ஓவென்றலறி உத்தமியுங்கீழ்விழுந்தாள்
மன்னவனேகர்னவென்று வாய்திறந்துதானழுதாள்
கலத்துப்புழுநீக்குங் கர்னப்பெருமானே
கட்டுணவைத்ததொரு கர்னனேஎங்கொளிந்தாய்
முந்நாளில்தானு முடிபெற்றிருக்கையிலே
முக்காலுஞ்செய்தவினை முழுப்பாவியானதினல்
அருந்தியதோரன்னமெல்லா மத்தனையும்புழுவாய்
ஈரேழுதேசத்து ராஜாக்களெல்லோரும்
தையலாளெந்தனுக்குச் சந்ததிகளில்லாமல்
எல்லோருந்தூஷிக்க இருந்தேன்நெடுநாளாய்
செய்ததொருதீவினையாற் செல்வந்தானில்லாமல்
இருந்தேன்நெடுநாளாய் என்மகனேகர்னநீ

சலத்திலேவந்தெனக்குத் தவக்குறையைநீர்த்தாய்
பொற்கலத்திற்சாதம் புழுவாயமர்ந்திருக்க
பிடிவாய்பிடித்தெடுக்க புண்ணியா உன்கையாலே
புழுநீங்கிப்போசனங்கள் போதேயருந்தினன்காண்
கலத்துப்புழுநீக்குங் கர்னனென்றுபேருமிட்டு
போற்றிவளர்த்தேனே பொழுதொருமேனியுமாய்
மைந்தரில்லாமாளிகையில் மகிழ்ந்துவளர்ந்திடவே
மலடென்றுசொல்லாமல் மைந்தர்களையீன்றேன்
உன்னழகைக்கண்டுயா னுறுதியாயரசாண்டேன்
நூற்றுவரைத்தவிர நேர்த்தியாய்நம்பினேன்யான்
நம்பியஎன்னையினி நட்டாற்றில்விட்டுவிட்டாய்
என்றுமேதையலரு மேங்கியழுகலுற்ருள்
கண்ணில்லாக்காந்தாரி கதறிப்புலம்பிடவே
தனஞ்செயனும்வந்து தழுவியெடுத்தணைத்து
பஞ்சவர்கர்னனுர் பாட்டனுக்குத்தானுரைக்க
துரியனிடபக்கலிலே திரும்பிவந்தார்சல்லியனும்
தையலுடவரலாறெல்லாந் தனையனுக்குத்தானுரைத்து
மனனவர்கள்தங்களுடன் மனமகிழ்ந்தாரந்நேரம்
மற்ருநாள்தானெழுந்து மகாசேனைதன்னுடனே
பதினெட்டாம்நாளையில் படைக்கிசைந்தான்சல்லியன்
உதித்தான்கதிரோனு முதயகிரிதன்மேலே
கதிரோனுதித்திடவே இருவர்படைக்கிசைந்தார்
துரியனுர்சல்லியர்க்கு சேனுதிபதியளித்தார்
அரசுமன்னர்தங்களுடன் அமர்களத்தில்களங்கமுடன்
சேனையளித்தவர்க்குத் திரள்மன்னர்தங்களுடன்
சல்லியனுமப்போது தானின்ருன்போரணியில்
ஐவருங்கூடி அமர்க்களமேவந்தார்காள்
வந்துஅணிவகுத்து மாயவனுரேதுரைப்பார்
கொல்லவந்தஎமனபோல சல்லியனுர்வந்தார்காண்
என்றுசொல்லக்கேட் டேதுரைப்பார்தருமலிங்கம்
சத்தசமுத்திரமுந் தாண்டிவந்தோமும்மாலே
குயவனிடகுட்டைதாண்ட கோபாலாபாரமோதான்
என்றுசொல்லிஐவருந்தா னெரிபறந்துகண்சிவந்து
கோபித்துகண்சிவந்து கொற்றவர்களைவர்களுஞ்
சீறியவர்கொக்கரித்து சினந்தெழுந்தாரப்போது
இருவரிடசேனைகளும் எதிர்த்தார்களன்னேரம்

கர்னனிடபுத்திரர்கள் காளையிருவர்களுஞ்
சூரியபற்பனென்றும் சுந்தரபற்பனென்றும்
நகுலனுடன்சண்டைசெய்து நலமாகத்தான்மடிந்தார்
வீமனுடன்சல்லியனும் மீண்டுபோர்தான்செய்தான்
மதகரியான்தண்டாலே மீண்டிடவேசல்லியனுந்
சல்லியனும்மீளவே தார்வேந்தன்வந்துரைத்தான்
தேசத்தழகன் துரியோதனப்பெருமான்
வீமராசன்தன்னுடனே மீண்டுவந்துபோர்புரிந்தான்
சிறிவந்தராஜனங்கே தேர்த்தட்டில்தான்விழவே

வீமன் சல்லியன்மேல் அம்பு தொடுத்தல்

அப்போதுவீமனவன் அதிகதுரிதமுடன்
எமனுடையவாளதினை யெய்தானே வீமனப்போ
வீமன்கைவாளதினல் சல்லியனுந்தான்மடிந்தார்
தருமனர்வாளதினல் சகலருந்தான்மடிந்தார்
சேனுபதிமானுகையில் சினந்தெழுந்துராசரெல்லாம்
துரியனர்சேனையெல்லாந் திசைகெட்டுஓட்டலுற்றார்
தருமனர்சேனையெல்லாந் தாமங்கேகொச்சிததார்
சல்லியனர்தன்னுடனே தான்பிறந்ததம்பியர்கள்
இருபதுபேர்களும் வந்தெதிர்த்தார்களப்போது
எழுநாறுராசாக்க ளேகமாய்வந்தெதிர்த்தா
வந்தெதிர்த்தராசர்களை மதகரியான்தண்டாலே
கொன்றுமடித்துவிட்டான் கொற்றவர்களனைவரையும்
அத்தனைபேர்சேனைகளை யதஞ்செய்தான்வீமனவன்
மாணடதொருசேனைதன்னை மானுகன்தான்கேட்டு
தம்பிவிகர்னுநீ தாக்குமப்பாவீமனைத்தான்
விகர்னனும்வில்வளைத்து வீமனமேல்வந்தெதிர்த்தான்
வந்தவிகர்னனைத்தான் மதகரியான்தான்பார்த்து
தம்பிவிகர்னுநீ தாவேந்தாசொல்கிறேன்கேள்
முன்னுலேராசசபை முடிமன்னர்தங்கள்முன்னே
சூதுவிளையாடுகையில் துரியற்குப்புத்திசொன்னுய்
வேணதெல்லாம்சொன்னுய் வேந்தரந்த அண்ணருக்கு
ஆகையினலெந்தனிட அங்கமெல்லாம்கூசுதென்றுன்
உன்னை—கொல்லவென்றல் கையெழலைகொற்றவனே

வீமன் விகர்னன் மேல் அம்பு தொடுத்தல்

என்றுசொல்லதான்கேட்டேதுசொல்வான்தம்பியவன்
அண்ணுவேவீமாநீ அடியேன்சொல்கேட்டருளும்

நூற்றுவரைக்கொல்லவென்றேற்றவிரதங்கொண்டாய்
எந்தனைநீதப்பிவிட்டா. லேற்காதுவுன்விரதம்
வந்தவிதிஎந்தனுக்குத் தக்காது அண்ணவே
பிர்மாவெழுதினதைப் புரட்டிவைக்ககூடாது
ஆகையினாலுன்விரத மழியாமலெந்தனைநீர்
கொல்லென்றுசொல்லுகையில் கோபித்துக்கண்சிவந்து
கோபித்துகண்சிவந்து கொக்கரித்துதண்டெடுத்து
ஆக்கரித்துப்பற்கடித்து அடித்தான்விகர்னனப்போ
மதகரிபான் தண்டாலே மாண்டான்விகர்னனப்போ
விகர்னன்மடிந்திடவே வீமனவன்தான்பார்த்து
ஐயையோதம்பியென் றழுதுபுலம்பலுற்றான்
புலம்பியழுதுமன்னன் புண்ணியனுந்தானப்போ
விகர்னனைக்கொன்றபின்பு மீண்டுமந்தசேனையெல்லாம்
அழுஞ்செய்துதண்டாலே யடித்துநொக்கலுற்றான்
மேலும்வந்தசேனையெல்லாம் மாண்டுமேபோய்விடவே
கண்டுவந்தமாநாகன் கண்கலங்கியேக்கமுற்று
முன்னாள்பெரியோர்கள் சொன்னபுத்திகேளாமல்
பதினொருஅக்ரோணிப் படைமன்னர்சேனையெல்லாம்
செத்துமடிந்தாருஞ் செலவழிந்துபோனரும
தப்பிப்பிழைத்தவரைத்தான்கணக்குப்பார்க்கலுற்றான்
ஐந்நூறுதேர்க்காரர் ஆனைபரிஎழுநூறில்
காலாள்பரிசனங்கள் காவல்ரெண்டாயிரம்பேர்
மற்றபேர்குருக்கள் மகுடந்தரித்தவர்கள்
கிருதவர்மன்கிருபாசாரி கீர்த்தியுள்ள அசுவத்தாமன்
இவர்கள்தவிர இருந்தார்களித்தனைபேர்
இத்தனைபேர்கள்பட்டு இறந்துமடிந்தவுடன்
உற்றுநினைந்துமப்போ ஓடினான்தேரழிந்தது
தேரழிந்துஓடிவந்து திருக்குளத்திற்போய்கதித்து
பட்டிறந்தசேனையெலலாம் படைமன்னர்தானெழுப்ப
பொய்கைநீர்க்கங்கையில் போய்முழுகிதோத்தரித்தான்
ஈஸ்வரரைநோக்கியங்கே இருந்துஜபஞ்செய்யலுற்றான்
தேசத்தழகன் துரியோதனப்பெருமாள்
மாநாகன்போனபின்பு மன்னவனார்சேனையெல்லாம்
தாயில்லாக்கன்றதுபோல் தத்தளித்துதான்புலம்ப
மூலைக்குமூலை ஓடலுற்றார்சேனையெல்லாம்
திக்குத்திசையைவிட்டுத் திகைதப்பியோடுவதை

தக்கப்புகழுடைய தருமரிடசேனையப்போ
கொக்கரித்தார்ப்பரித்துக் குறித்தார்கள்வெற்றிசங்கு
வெற்றிசங்குதான்குறிக்க வீமனார்தான்பாழாக்கினதும்
துரியோதனன்சேனை திசைக்கெட்டுஓடுவதும்
அரசனைக்காணுமலமர்க்களம்பாழானதும்
கண்டுஎரிபறந்து கையில்கதையெடுத்து
பொய்கைகரைதேடிப் புண்ணியனாரோடிவந்து
வைகைக்கரையில்நின்று மாறுகன்தன்னையப்போ
கூவியழைத்துமங்கே கொக்கரித்தார்ப்பரித்தான்
மோதியறைந்தானே மூர்க்கமுடன்கங்கையிலே
சூதுபண்ணியோடிவந்து சுனையிலொளித்தாய்நீ
ஏதடாமாறுகா இதுவோசவுரியங்கள்
திக்குதிசைமன்னாகளுந் தேவர்களும்பார்த்திருக்க
ஒக்கநின்றுசண்டைபண்ணி ஓடிவந்துநீயொளித்திருக்க
இலக்குனக்கின்றேடே நலமுடனேவாருமென்றான்
வாருமென்றுசொன்னவார்த்தை மன்னவனுமகேட்டு
சீறியங்கேபற்கடித்து செபத்தைமறந்துவிட்டு
ஏறிவந்தான்பொய்கைவிட்டு எல்லோருந்தான்பார்கக
பொய்கைகரையேறி புண்ணியனார்வந்துநின்று
தக்கபுகழுடைய தருமரைதானேக்கி
ஏற்குமோவுங்களுக்கு ஒருவன்மேலித்தனைபேர்
இத்தனைபேரென்னோடே எதிர்க்கிறதுநியாயமோதான்
என்றுமிகத்தான்கேட்க ஏதுசொல்வார்தருமலிங்கம்
சண்டைக்குவரவில்லை சமாதானஞ்செய்யவில்லை
தொண்ணூற்றென்பதுபேர் தோள்வலிப்பட்டிறந்தார்
உன்னுடையதமபியர்க ளுத்தமர்கள்தான்மடிந்தார்
என்னுடையதம்பியர்கள் யானுமினியுன்னிடத்தில்
கைகட்டிசேவிப்போங் காவலனேவாருமென்றார்
இந்நகர்தன்னோடு மரசுசெலுத்திடுவார்
உத்தமனேவாருமென் றுச்சரித்துத்தருமர்சொன்னார்
அந்தமொழிகேட்டு அரவக்கொடியோனுரைப்பான்
நூற்றுவர்தம்பியரை நொடியிலேதான்போக்கி
என்தமபிமார்களும் இத்தனைபேர்சேனைகளும்
வந்துமடிந்துமப்போ மாள்வதற்குநான்பயந்து
உன்னுடனேகூட உறவாகிநானிருந்தால்
இந்தவுலகமெல்லா மேதுசொல்லிதானகைக்கும்

சித்திரவேல்விசயன்வீமன் சிறந்தவுங்களைவரையும்
கொன் றுவிருந்திடுவேன் கூளிகழுகுகட்கு
என் றுசொல்லிமானுக னே றினன்கரைமேலே
கரைமேலேவந்துநின் று கையில்கெதையெடுத்தான்

### வீமனுந் துரியோதனனும் யுத்தம்புரிதல்

வீமனுந்துரியனுமாய் போர்செய்தாரன்னேரம்
ஒருவர்க்கொருவ ருயிர்நிலையைதான்கேட்க
வீமனதுகண்டு வெகுண்டுதுரியன்மேல்
அண்டவொண்ணுகோபமுட னுர்பரித்துகொக்கரித்து
மண்டியிட்டுக்கொண்டான் மாயவனுரப்போது
துரியனுடைவுயிர் தன்னை துரிதமாய்தான்காட்ட
அரையினகீழ்ப்பெருந்துடையை யடித்தானேகதை
தொடையொடிந்துபூமியில் துரியோதனன்விழுந்தான்
மானுகன் தான்விழவே மதகரிவீமனப்போ
பத்தினியைப்பார்த்துப் பழுதுசொன்னவாயிதுவோ
உத்தமிதன் துகிலை யுரியச்சொன்னவாயிதுவோ
என் றுசொல்லிவீம னெழும்பியுதைத்தானே
அப்போதுராசமன்ன ரனைவரும்பார்த்திருக்க
அந்நாள் தபசுக்கு பூந்திவனம்போனவர்கள்
இந்நாளில்வந்தார்கள் விதுரன்பலராமர்
விதுரன்பலராமர் வெகுண்டுமேயோடிவந்து
துரியனைக்காலாலுதைத்த வீமனைத்தான்பார்த்து
கோபித்துக்கண சிவந்து கொல்லவென் றுரைவரையும்,
ஆயுதத்தைப்பஞ்சவர்மே லந்நேரந்தானெடுக்க
மாயவனுர்கண்டு பலராமனுக்குத்தானுரைத்தார்
முன்வார்த்தையாம்படியே மொழிந்துபலராமருக்கு
அமர்ந்தவமர்ந்துதா னவருடன்கூடியப்போ
அரனுர்தவத்தில்வந்த அசுவனுமோடிவந்து
தேசத்தழகுமன்னன் திரியோதிரன்மேல்விழுந்து
அழுதுபுரண்டெழுந்து அசுவனுமேதுசொல்வான்
ஈரேழுலகத்து ராசாவேயென்னரசே
மாயவனுா வஞ்சனையை மனதிலெண்ணிப்பாராமல்
ஐவருக்கும்பேருதவி ஆயனுர்தாமிருக்க
அறிந்துமிருந்துநீ அறியாதான்போலிருந்தாய்
ஈரேழுலகத்தி ராசாக்கள் தானறிய

சேனபதியெனக்குத் தெரிந்துஅளிக்காமல்
என்னைநீநம்பாம லெனைப்பிரித்துதள்ளிவிட்டாய்
அந்நாள்சேனதிபதியு மறிந்தெனக்குநீயளித்தாய்
மன்னவர்கள் கைதனிலே மானவையோமன்னவனே
ஐவரையும்வென் றிடவே னரசுமுனக்களிப்பேன்
பஞ்சவரைவேரறுத்துப் பட்டமுனக்களிப்பேன்
என்னைநீநம்பாம லேங்கியேமடிந்தாயே
என்சவுரியமும்வல்லமையுந் தாஷ்டீகமும்நீயறிந்து
சொல்வாக்த்தைகேட்டு திரணமாயாக்கிவிட்டார்
என் றுசொல்லிக்குருபுத்ர னேங்கிவிழுந்தழுது
அழுதுபுரண்டு அசுவத்தாமன்புலம்ப
மானகமேந்தியதோர் மன்னன்கனைதெளிந்து
அரவக்கொடியோ னசுவனைத்தான் றழுவி
குருமகனை தான்பார்த்து கொற்றவனுந்தானுரைப்பான்
ஏதுக்கினிமே லிவ்வாரத்தையுந்தனுக்கு
காடாண்டாரைவர்களும் நாடாண்டான்கர்னராஜன்
கானகமும்ராச்சியமும் காவலரேதானண்டார்
வெற்றியேற்றமிட்டு விழலுக்கிறைததோங்காண்
ஆவதென்னநம்மாலே ஆயனவன்மர்மமிது
தலையின்விதிப்படிக்குத் தப்பாதொருகாலம்
சொல்லிப்பலனென்ன சுந்தரரேபோங்களென் று
போமென் றுசொன்னசொல்லை புண்ணியனுர்கேட்டு
ஆனலுமென்னவினி யன்பரேநீர்கேளும்
இனியாகிலுமெனக்குச் சேனபதியளித்தால்
மன்னவரேயுன்பாதம் மகிழ்வாய்புசித்தோம்நாம்
மன்னவர்க்குத்துரோகங்கள் வஞ்சனைசெய்ததில்லை
ஐவருடபூமுடியை யரைக்கணத்தில்கொண்டுவந்து
ஈஸவரனா சாட்சியதா யிவ்வேளையுந்தனுக்கு
மன்னவனேநான் மகுடமுடிகவிப்பேன்
என் தகப்பன்துரோணரை எய்தானே துஷ்டத்துரயன்
அந்தப்பழிக்குநானைவர்பழிவாங்கிடுவேன்
என் றுசொல்லக்கேட் டெழுந்திருந்துமன்னவனும்
சேனதிபதியுனக்குச் செலவுகொடுத்தேனென் று
அரிபிளவுவெற்றிலையு மள்ளியவன்கைகொடுத்தான்
வாங்கியஅஸ்வனுந்தான் மடிதனிலேவைத்துகொண்டு
பெரியரதமேறிப் புறப்பட்டான்மன்னவனும்

மாயன்கிருபர்சொல்லை மறந்துமேதானடந்தான்
கிருதவர்மன்மூவருடன் கெர்வித்துதானடந்தான்
இவ்வார்த்தைமாயவனு ரிதயத்தில்தானறிந்து
சேனைதனைக்காக்கத் துஷ்டத்தூய்மனைக்காவல்வைத்து
நகரமதைக்காக்க ராட்சதரைக்காவல்வைத்து
ஆலோசனையுண்டென்று ஐவரையுந்தானழைத்து
நகரமதைவிட்டு நடந்தாரேஐவருடன்
வனத்தில்தவமிருக்கும் மாமுனிவர்பக்கலிலே
ஐவரையுந்தானொளித்து அப்பால்வழிநடந்துவிட்டார்
ஐவரையுந்தானொளித்து மாயவனார்போனபின்பு
பாப்பான்மகன்றானும் பசுவாகத்தானடந்து
பஞ்சவர்கள்சேனைதனைப் பார்த்துமேவில்வளைத்தான்
அக்ரோர்ணிசேனையெல்லா மடிந்துஎதிர்த்தார்கள்
கடந்துஅசுவத்தாமன் கணைமேல்கணைதொடுத்து
எதிர்த்துவந்தசேனைகளை எமலோகஞ்சேர்த்துவிட்டு
அரசர்கள்தானிருக்க அரண்மனையைத்தானோக்கி
அசுவன்வருகையிலே ஆயரவர்காவல்வைத்த
பூதமெழுந்திருந்து போய்மறிக்கஅசுவனுமே
அசவனுமோடிப்போ யரனார்தனைநோக்கி
செபதபந்தான்செய்து சிலையொன்றுவாங்கிவந்து
ஆக்கரித்துவந்தெதிர்த்த ஆதிபூததேவதையும்
துஷ்டத்தூய்மன்றனையுந் தொடுத்துஒருகணையால்
அப்போதுநடந்துபோ யரண்மனையினுட்புகுந்து
பாஞ்சாலிதுரோபதையாள் பாவைகள்தானிருக்க
இளம்பஞ்சபாண்டவர்க ளிருக்குமந்தப்பாலகரை
ஐவரிடபூமுடியை அசுவனுந்தானறிந்து
தேர்மேலேதான்போட்டுத் துரியோதனன்பக்கம்வந்து
ரணக்களத்தில்தான்விழுந்த நாயகனார்முன்னேவந்து
மைந்தர்கள்பூமுடியை மன்னவன்முன்னேவைத்தான்
மானுகன்தான்பார்த்து மதிமயங்கியேதுரைப்பான்
செல்வரைக்கொல்வதற்கோ சேனுபதியளித்தேன்
பாலகரைக்கொல்வதற்கோ பாக்கிலைநானீந்தேன்
இளம்பஞ்சபாண்டவரை யேன்கொன்றுய்பக்தனே
பார்ப்பாரபுத்தியிற் பாலகரைக்கொன்றுயே
நான்—வானுலகம்புக வழிகாட்டிவைத்தவரை

வீணுக்குப்பூமுடியை வெற்றியுடனறிந்தால்
பஞ்சவரேயாமாகிற் பார்ப்பானேசொல்லுகிறேன்
ஐவரிடதன்முடி யானுமேயிந்நேரம்
தருமருக்குநேரிளைய தாக்குள்ளவீமனென்றான்
கொக்கரித்துதன்கழுத்தைக் குதித்துக்கடியானே
ஐவர்கள்பூமுடி யல்லநீபோடாவென்றார்
பார்ப்பான்மனமுறியப் பார்வேந்தர்தாமுரைத்து
போமென்றுசொல்லியவன் பூமுடிசாய்த்தானும்

அசுவத்தாமனுக்கும் அருச்சுனனுக்கும் யுத்தம்

பார்ப்பான்மகனுக்குப்போய் பஞ்சவர்கள்கோபமாய்
ஐவரையுங்கொல்லென் றன்னேரந்தானடந்தான்
மாயவனுரிவ்வார்த்தை மௌனமாய்த்தாமறிந்து
பஞ்சவரைத்தானழைத்துப் படுகளத்தில்வந்துநின்றார்
பாலகர்மாண்டிடவே பத்தினியாள்துரோபதையும்
அனலிற்பிறந்தவளு மைவருந்தானழுதர்
அழுதமனம்பதறி யாற்கறித்துப்பற்கடித்து
அசுவனைக்கொல்வோமென் றைவருஞ்சபதஞ்செய்து
ஐவருந்தேரேறி அசுவனைத்தேடிவந்து
கண்டந்தஅசுவனை காவலர்கள்சூழ்ந்துகொண்டார்
அசுவனுந்தான்பார்த் தவன்கையிலம்புபெற்று
அசுவன்வில்வளைத்து அருச்சுனன்மேல்விட்டு
அருச்சுனனுமுந்நாளி லரன்கையால்பெற்றுவந்த
பாசுபதாஸ்திரத்தைப் பற்குணன்தானெடுத்து
அசவனுர்பூமுடியை யறியவேதான்விடுத்தான்
இருவரும்விட்டகணை யெதிரில்லாமற்பறந்து
தோற்காமலொன்றோடே போர்செய்திடவே
ரிஷிமகாவியாசர்வந் திருவருக்குத்தானுரைத்தார்
அவ்வார்த்தைதன்னை யகற்றிவிட்டானசுவனுமே
பரசுராமர்தன்னைப் படுகளத்தில்வரவழைத்து
அவ்வேளைபரசுராம ரவனுக்குத்தானுரைத்தார்
அவர்நடக்கைகாரியமு மசுவனுந்தடுத்துரைததான்
தடுத்ததோர்வார்த்தைதன்னைத் தரும்ரவர்கேட்டு
அசுவன்மேல்கோபமாய் அவன்கிரீடமதை
அசுவன்கிரீடமதை யர்சுனனுக்குத்தான்கொடுத்தார்
அபிமன்னன்தேவியிட அடிவயிற்றில்தானிருக்கும்
கெர்ப்பத்தைப்பார்ப்பான்றன்கைக்கணைக்கிரைதந்தார்

இந்நாள்சபதமதை இரண்டுஞ்சரியென்றுசொன்னார்
அப்படியாகச்சொல்லி ஆரணியந்தான்போனார்
போனார்பரசுராமர் புண்ணியனார்போனபின்பு
அருச்சுனனார்விட்டகணை யசுவனிடபூமுடியை
தாங்கியிருந்ததொரு தங்கக்கிரீடமதை
சேரஅறிந்துபோய்ச் சிவன்வரத்தால்வந்துதித்த
மாதுநல்லாள் துரோபதையின் மலரடியின்கீழ்போட்டு
அரனார்தன் பக்கலிலே யக்கணையும்போய்ச்சேர
பாப்பான்கிரீடமைதைப் பாதத்துக்குத்தான்கொடுத்து
அப்போதேகனகத்தி லசுவனுந்தானடந்தான்
அசுவதாமன்விட்டகணை ஐவர்க்குத்தானுரிய
அபிமன்னன்தேவியிட அடிவயிற்றில்தானிருக்கும்
கெர்ப்பத்தைத்தான்சிதைத்து கிறுகிறென் றீசரண்டை
ஈஸ்வரனார்பக்கலி லிதுவும்போய்ச்சேர்ந்ததுகாண்
அப்போதுமாயவனு ரந்தக்கருவெடுத்து
கும்பத்தில்வைத்துக் குழந்தையுருவாக்கிவிட்டார்
ஐவருமந்நேர மமர்க்களத்துபூமிவிட்டு
முற்றுமுள்ளராஜாக்கள் மன்னர்கள்தேவியற்கும்
துரோணர்மனைவியற்கும் துரைமக்கள்தேவியற்கும்
சொல்லியழைத்தோடித் துரிதமாய்வாருமென்று
ஆளையனுப்பிவைத்து அமர்க்களத்தில்தானடந்தார்
தருமனார்வீமனார் தனஞ்செயனாரெட்டையனார்
ஆயனார்முன்னடக்க ஐவரும்பின்னடந்தார்

### பெண்கள் அமர்க்களம் வருவது

அரனதுகிருபையா லக்கினியில்தான்பிறந்த
பஞ்சவர்களைவருக்கும் பட்டத்தரசிநல்லாள்
முன்னாள்சபத முடிக்கவந்தபாஞ்சாலி
குந்தியரைமுன்னிட்டுக் கொம்பனையாள்தானடந்தாள்
அல்லியும்நாககன்னி யாரிழைசுபத்திரையும்
அனேகம்தேவியர்க ளனைவருந்தானடந்தார்
அமர்க்களம்தானோக்கி யனைவருமாய்த்தானடந்தார்
அத்திபுரம்போன ஐவரிடதூதுவர்கள்
அத்திபுரம்புகுந்து ஆரிழைக்குத்தானுரைத்தார்
கண்ணில்லாகாந்தாரி தையல்பெருந்திருவாள்
தூர்ச்சடைபொன்னுருவி தோகையர்மற்றுமுள்ளோர்

மற்றுமரசரிட மன்னரிடதேவியர்கள்
அத்தனைபேருக்கு மறிக்யைிட்டார் தூதுவர்கள்
ஆட்டுக்கடாவை அடித்தோட்டிவிட்டாப்போல்
அலறித்தலைவிரித்து அனைவோருந்தரனெழுந்து
கோவென்றசத்தமுமாய்க் குருக்ஷேத்திரந்தானோக்கி
ஐவர்கள்வீற்றிருக்கு மமர்க்களம்வந்துநின்றார்
அத்திபுரமாண்ட அரவக்கொடிவேந்தன்
வீமன்கைதண்டாலே விழுந்துமடிந்திருக்க

பெருந்திருவாள் துரியோதனனைப்பார்த்து
துக்கப்படுவது

கண்டுபெருந்திருவாள் கலங்கியவளோடிவந்து
ஆறாதுக்கமுடன் அழுதகண்ணீராறாக
வேற்றுமுகமாகி விழிநீருமார்புரள
ஐயோசிவனேயென்று அடித்துதலைமோதி
புல்லார்ந்தமோகமொடு புரண்டவன்மேல்விழுந்து
வணங்காமுடியையு மன்னன் துரைராசாவே
அடுத்தார்தனைக்காக்கு மாண்மையுள்ளமன்னவனே
தேசம்வழுவாமல் செங்கோல்செலுத்திவந்தீர்
மாசில்லாமன்னவனே மாண்டாயோரணக்களத்தில்
மதியாமலிவ்வுலகில் வாழ்ந்திருந்தமன்னவனே
எதிரின்றிவாழ்ந்திருந்தா விணைநாகங்கெண்டோனே
மன்னவருக்குமேலாக வாழ்ந்திருந்தீரத்திநகர்
மண்ணில்லார்முன்பாகக் களத்தில்மடிந்தாயோ
பருவமதயானை பஞ்சவர்களைவருக்கும்
ஊருமுறவாளித் தொன்றாகவாழாமல்
பாதியரசு பகுந்தவர்க்கீயாமல்
நீயும்ரணக்களத்தில் நிர்ணயமாய் நூற்றுவரும்
ஓடிமடிந்தீரே யொருமிக்கமன்னவருடன்
பொய்வாழ்வைநம்பிநீ பிரியாமலேவருடன்
ஐவரையழைத்துவந்து அரசுபதியளித்து
கொத்தானுமோரதுபோ லொத்துயிருங்களென்று
எத்தனைதான்சொன்னாலு மென்வார்த்தைகேளாமல்
குடிகேடனாற்சகுனி கூடியதோர்வார்த்தையினால்
தொடர்ந்துவந்தஐவருக்குச் சீமைகொடுமென்றேன்
வேண்டாங்களைவருக்கும் வேறேயரசளித்து

பர்ண்டவர்க்குண்டான பதியையளியுமென்றேன்
முட்டியேபோக மூதேவிபட்டி மகன்
கட்டைத்தலையன் கறுஞ்சிறையன்மாபாவி
பட்டுவிழுவான் பறையன்சகுனியல்லோ
திட்டத்தரசாண்டு சென்றுமடிந்நீரே
கொல்லைக்குப்பல்லி குடிக்குச்சகுனியென்று
எல்லோருஞ்சொன்னசொல் எந்தனுக்குமெய்யாச்சு
ஐயையோஎன்வார்த்தை யந்நாளிற்கேளாமல்
பொய்யாயரசாண்டு போர்களத்திலேமடிந்தீர்
என்றுசொல்லிராசாத்தி யேங்கியவள்தான்புலம்பி
பேரரசன்தேவி பெருந்திருவாள்தான்புலம்ப
மாயவனார்தருமரை வரவழைத்துக்கண்காட்ட
தக்கப்புகழுடைய தருமருமோடிவந்து
வாரியெடுத்து மார்போடுறவணைத்து
பூந்துகிலாடையினல் பெருகியகண்ணீர் துடைத்து
தலையின்விதிப்பயன்கள் தப்பாதொருக்காலும
கோபங்களெண்ணுதே கொழுந்தியரேநீர்கேளும்
பாபங்களென்னுலே பண்ணதில்லையுங்களுக்கு
எவரெவர்கள்செய்தவினை யேதுவினையானுலும்
அவரவர்கள்செய்தவினை யவரவரேயனுபவிப்பார்
என்றேபெரியோர்க ளியம்பறியாயே
வேண்டாங்காணித்துயரம் வேல்பொருதுங்கண்ணுளே
என்றுசொல்லித்தரும ரேந்தியமையாள்கன்னியரை
பூந்துகிலாடையினல் பெருகியகண்ணீர் துடைத்து
பக்கத்தினிற்கவைத்தார் பார்வேந்தர்தருமருமே
அப்போதிரௌபதையா ளாரணங்குமோடிவந்து
தோராவடிவழகி திரௌபதையாளோடிவந்து
முன்னுள்சபதத்தை முடிக்கவேவேண்டுமென்று
தேசத்தழகன் துரியோதன்முன்புநின்று
மாநாகமேந்தியதோர் மன்னர்பெருமாளேகேள்
ஆசாரந்தன்னுள்ள அரசமக்கள்முன்பாக
தலையில்மயிர்விரித்துச் சபதமுறைத்தேனே
அன்றுவுரைத்தசொல்லை யின்றுமுடித்தேன்காண்
என்றுசொல்லக்கேட் டிராசாக்களோடிவந்து
ஐவர்களுமோடிவந் தாரிமையைக்கைப்பிடித்து
அப்புறமேதானடந்தார் அரசமக்கள்தன்னுடனே

அமர்களத்தில்விழுந்த அரசமன்னர்தன்பிணத்தை
இருபுரமும்நீக்கியப்பா லேகிறைரைவர்களுங்
காசினியையாண்டதொரு கர்னபெருமாளும்
முத்துமேனிமேடைமேல் முடிசாய்ந்துவீற்றிருந்தார்
கண்ணில்லாள்காந்தாரி கண்டுமண்மேல்விழுந்து
ஐயோமகனேயென் னங்கந்தணிந்தேனே
மகுடமுடிகவித்து மண்ணுளவைத்தேனே
தளிகைபுழுநீக்கித் தாகந்தணிந்தவனே
கலந்துப்புழுநீக்குங் கர்னப்பெருமாளே
உன்னைநம்பிநானு முலகமரசாண்டேன்
என்னைத்தனியவிட்டேகுவது மேதோதான்
கர்னர்கொடையொன்று கர்த்தனுர்தாமறிய
பொன்னுமணிரத்தினங்கள் போதவழங்கினையே
கண்ணில்லான்முன்னே கடுகித்தானேகுவதோ
என்னையனுப்பாம லேகவும்நீதியுண்டோ
உன்னை விட்டுநானிருக்க வுண்மையல்லவிப்போது
மன்னவனேயுன்பிறகே வருவேன்காண்கர்னுவே
என்றுசொல்விராச னேங்கிப்புலம்பிநிற்க
கண்டுமந்தமாயவனுர் காவலர்க்குக்கண்காட்ட
தருமரைக்கண்காட்டத் தாமுமெழுந்திருந்து
கண்ணில்லாள்காந்தாரி காலினிற்போய்பணிந்து
நூற்றுவரைப்பார்க்கவே ரேற்றங்காணையாவே
என்றுசொலக்கேட் டேதுரைப்பானந்தகனும்
ஐவரில்நூற்றுவரி லதிபலவான்வீமன்மேல்
சீறியெழுந்தான் சிங்கத்தின்குட்டியைப்போல்
மாயவனுர்வீமனைத்தான் வாருமென்றுகண்காட்ட
மன்னவனுக்கொப்பான வாழ்பதுமைகொண்டுவந்து
அந்தகன்முன்பாக அமர்த்திஞரெம்பெருமாள்
கண்பதுமைதனைக் கண்ணில்லான்தான்பிடித்து
மார்போடேமார்புவைத்து மன்னவனுந்தானமுத்த
நொறுக்கிவிழுந்ததுகாண் நூறுயோசனைக்கட்க
அப்போதுமாயவனு ரைவரையுந்தான்பார்த்து
தங்கமுடிபொருத்த தருமர்பெருமாளே
முரசுக்கொடிபடைத்த முத்துமணிமார்பா
பெரியப்பனெஞ்ச மறிந்தீரோ ஆணழகா
அப்பனுர்நெஞ்ச மறிந்தீரோ ஆணழகா

மக்கள்மேல்பட்சமதை மன்னவனேகண்டீரோ
மகனென்றசொற்கேட்டு மதகரியான்வந்தானே
எமபுரத்துக்காளாக்க வெண்ணினனந்தகனும்
அந்தகன்செய்ததொரு அன்னீதம்பார்த்தீரோ
ஆகையால்கண்காட்டி யதட்டிவிலக்கினேன்
அந்தகன்பிள்ளைகளா மரசர்கள் நூற்றுவரை
சபையிலுரைத்ததொரு சபதம்வழுவாமல்
அமர்க்களத்தில்கொன்றதனு லதிவீமன்மேற்பகையாய்
வீமனைக்கொல்லவென்று வந்தானே அந்தகனும்
என்றுசொல்லிஐவருக்கு மப்பாலெடுத்துரைப்பார்

### கிருஷ்ணன் சகல விபரமுந் திரிதராஷ்டிரருடன் கூறுவது

அந்தகனைப்பார்த்து ஆயனரே துரைப்பார்
அத்திபுரமாண்ட ஆண்மையுள்ள மன்னவனே
நூற்றுவரைபெற்றெடுத்த வேற்றுமுள்ள மன்னவனே
முன்னுளூன் பாட்டன் முடிபொருத்தசந்தனுவும்
தாராமற்தங்கைதனைத் தான்துறந்தபின்பாக
தந்தையுமைந்தனுமாய்த் தரித்துஅரசாளுகையில்
மச்சதேசத்தான்மகள்காண் மச்சகந்திபெண்மாது
சவுந்தரியமென்றுலகில் தான்கேட்டுச்சந்தனுவும்
மலையரையன்பக்கலிலே வந்துமந்தசந்தனுவும்
தனக்குமணம்புரியத் தையலரையீயுமென்ருர்
அம்மொழியைக்கேட்டு அரசன்சொல்தான்மறுத்தான்
வலையன்மறுத்துரைக்க மன்னன்மனங்கலங்கி
மீன்மகள் தன்னசையினல் வேந்தன்முகங்கருத்து
வந்தவழிநோக்கி மன்னன்திரும்பிவந்து
மெத்தவிசாரமுடன் வேந்தனிருக்கையிலே
காங்கேயனும்வார்த்தை காதினல்தான்கேட்டு
தந்தையார்மோகமதைத் தானடக்கவேணுமென்று
மைந்தனுமவ்வேளை மச்சதேசத்தானுகி
மச்சதேசத்தானுரைத்த வார்த்தையெல்லாங்கேட்டு
மணம்புரியேனென்றுசொல்லி மகத்தானசபதமிட்டு
பீஷ்மரென்றுபேருமிட்டு வேந்தர்கள் தாமறிய
தந்தையர்தானினைத்த தையலரைக்கொண்டுவந்து
இந்துவுக்குநேரான ஏந்திழையைக்கொண்டுவந்து
தந்தையிடபக்கல்வைத்துச் சந்தனுக்குமாலையிட்டான்

சந்தனுவுமீன்மகளுந் தனித்துஅரசாண்டிருந்தார்
மங்கையாலுங்கள்குலம் வாய்க்கவேமன்னவனே
பீஷ்மராலுங்கள்குலம் பெரிதாச்சோமன்னவனே
மச்சகந்திதன்வயிற்றில் மைந்தர்பிறந்தார்கள்
மைந்தர்கள் தான்பிறக்க மரித்தானேசந்தனுவும்
சந்தனுவும்வீரசொர்க்கந் தான்சேர்ந்தபிற்பாடு
சிற்றரசிமைந்தர்களைச் செல்வமுடனேவளர்த்து
தந்தையார்பட்டமதைத் தம்பியர்க்குத்தானளித்தார்
தம்பியரைமுன்னிட்டுத் தானிருந்தார்பீஷ்மருந்தான்
ஈரேழுதேசத திராசாக்கள் தானறிய
அன்றுமுதல்நம்பியுட னரசாண்டார்செல்வமதாய்
தம்பியர்க்குத்தன்னரசு தானளித்பேீஷ்மருந்தான்
மன்னவர்கள்கொண்டாட வாழ்ந்துயிருக்கலையோ
அப்படிக்குத்தானிருந்தா லரசர்புகழாரோ
பீஷ்மருக்குண்டான தைரியமுனக்கில்லையே
தகப்பனூர்புத்தியுனக் கில்லையோ தார்வேந்தா
பாண்டுவுமுன்தம்பியவர் பாரவனந்தான்போய்
ரிஷியினிடசபதத்தை பரிகரிக்கவேணுமென்று
மனையாளிருவருடன் வனந்தனிலேபுகுந்து
குந்தியுமைந்தருமாய் கூடியிருக்கையிலே
தேவர்சகாயத்தால் செல்வர்கள்தான்பிறந்தார்
ஐவரையும்பெற்று ஆலித்திருக்குமந்நாள்
பாண்டுமகாராஜன் பரமபதமடைந்தார்
அதன்பிறகுகுந்தியரு மைவரையுமிட்டுவந்து
அடைக்கலமாய்மைத்துனரை அண்டியிருந்தாளே
அன்னவனுக்கு அறிவுமெத்தவாகையினுல்
தம்பிமார்பிள்ளையிது தன்பிள்ளையிதுவென்று
எண்ணுமல்மன்னவனே யொன்ருகநீர்வளர்த்தீர்
பள்ளிக்குவைத்தீர் பலகலைகளோதிவைத்தீர்
நூற்றுவரைவிடஐவர் பிரியமென்றுநீர்வளர்த்தீர்
உன்பிள்ளைவிடஐவர் பிரியமென்றுநீர்வளர்த்தீர்
பிள்ளைகள் நூற்றுவரும் பிரபலாகளானபின்பு
குற்றங்களெண்ணிக் குரோதமிகவுண்டாக்க
ஐவர்கள்பேரிலுந்தா னுசையையடக்கிவைத்தீர்
நூற்றுவருமைவர்மேலே ற்றமுள்ளவன்பகையாய்
ஜலத்தில்வாசிநாட்டிச் சாகவதுதாட்டி

அரக்கரைசோடித்து அதிலேஅனல்மூட்டி
பாஞ்சாலன்சீர்மகளைப் பழுதில்லாப்பத்தினியை
இணைபிரியாமாதாவை கனங்குலையப்பண்ணிவைத்தீர்
மாறுகொண்டுசூதாடி மண்பறித்தோட்டிவிட்டீர்
வீமனும்பஞ்சாலி மெத்தமனக்குறையாய்
நூற்றுவரைக்கொல்வேனென்று ஏற்றசபதமிட்டு
ஆரணியஞ்சென்று அலைந்துதிரிந்தார்கள்
செய்வாரவரென்று தெரிந்துகொள்ளமாட்டாமல்
புசபலத்தாரைவரையும் போவென்றுஓட்டிவிட்டார்
அன்றுமுதலின்றளவும் அதுவேமனக்குறையாய்
அன்னமும்நித்திரையும் அரைவாசியாயிருந்தார்
வேஷங்கள்வேறுபட்டு விராடபுரஞ்சேர்ந்தார்கள்
அக்கியாதவாசம் அதுவுமுடிந்தபின்பு
தூதாகவென்னையவர் போகவழியனுப்பிவைத்தார்.
வந்துநானைவருக்கும் வளநாடுதாருமென்றேன்
பாதியரசு பகுந்துகொடுமென்றுரைத்தேன்
இடும்பாகப்பேசியப்போ என்னையெடுத்தெறிந்தீர்
அதுவும்பொருத்துநான் ஐந்துமனைகேட்டேன்
இருக்கவேஐவருக்கு இடமில்லையென்றுரைத்தீர்
வெட்டிக்கெலித்துமே வெஞ்சமரில்நின்றவர்க்கு
முட்டவேராச்சியங் முடிபொருந்தநன்மையென்றீர்
அப்படியேயைவருமாய் ஏற்றவமர்புரிந்தார்
முன்னுள்சபதம் முடித்தானேபீமனுந்தான்
சபதம்வழுவாமல் தான்கொன்றார் நூற்றுவரை
ஆகையினால்வீமன்கையி லதமானார் நூற்றுவரும்
இடக்குகள்தானுரைத்து அடுக்காகத்தான்மாண்டார்
அக்குறையெண்ணாதே ஆனந்தவாழ்மார்பா
என்றுசொல்லமாயவனு ரேதுரைப்பார்மன்னவனும்
வெற்றிமதயானை வீமனைவரையும்
அழையுமென்றுசொல்லவே ஐவருமோடிவந்து
சாஷ்டாங்கமாகவே தான்பணிந்துநின்றாரே
கற்பால்பதிவிரதை காந்தாரிநாயகியாள்
பிள்ளைகளைப்போக்கியதோர் பெருந்தாகத்தாலிவளும்
மார்பளவுகண்ணீர் வழியவிட்டுநாயகியாள்
ஐவரையும்பார்த்து அழுதாளேகாந்தாரி
மாயவனார்தான்பார்த்து மனதிலரைமனதாய்

காந்தாரிசாபந்தான் காளையர்க்குத்தாங்குமென்று
ஐவரையும்பின்தள்ளி அத்தைமுன்னேவந்துநின்றார்
அத்தைமுன்னேவந்துநின் றுயவனுரெம்பெருமாள்

### வியாசர் காந்தாரிக்குச் சகலமும் எடுத்துரைத்தல்

அப்போதுவியாசருக்கு ஆயரெடுத்துரைப்பார்
குருகுலத்தையுண்டாக்கும் கருத்துடையமன்னவனே
மருமகளாங்காந்தாரி மக்கள்மேல்சிந்தையுமாய்
தாகமாய்த்தானிருக்குஞ் சோகத்தைத்தீருமென்றார்
மாயவனுர்சொல்லுகையில் மனமகிழ்ந்துவியாசருமே
மருமகளைத்தான்பார்த்து வியாசரெடுத்துரைப்பார்
கற்பால்பதிவிரதை காந்தாரிநாயகமே
தாய்பேச்சுதப்பாமல் தான்மடிந்தார் நூற்றுவரும்
நூற்றுவரைப்பெற்றெடுத்த வேற்றுமருமகளே
மக்கள்மக்களென்றுசொல்லி மனந்தனிலேசோராமல்
குருகுலத்தில்வந்துதித்த கொற்றவர்களைவர்களும்
உடன்பிறந்தாரென்றுசொல்லி ஒருமிக்கவாழாமல்
அடிநாள்முதற்கொண் டைவரையும்பொய்யாக்கி
குடிவழியாரென்றுசொல்லிக் குறிப்பறியமாட்டாமல்
சென்மப்பகையாக்கி தீராக்கலகமிட்டு
சலத்தில்வசிநாட்டிச் சாகவிஷமிட்டு
ஐவருக்கும்பாரியாளை யழைத்துமேயம்பலத்தில்
மனக்குறைகளுண்டாக்கி மன்னருடன்கூட்டி
அவ்வேளைகானகத்தி லதட்டியேஓட்டிவிட்டார்
மாதருடனைவருந்தான் வனத்திலேபோயிருந்தார்
கானகத்திலுள்ளதொரு காய்கனிகள்சோறுக
தின்றுதிரிந்தார்கள் தேசாந்திரிபோலே
ஐவருடன்கூட ஆயிரம்பேர் துரைகள்
விட்டுப்பிரியாமல் வேந்தர்கள்வேதியர்கள்
ஆயிரம்பேர் துரைக ளண்டியே தானிருந்தார்
பிர்மாவினத்தோர்கள் பின்னிற்பேராயிரம்பேர்
ஆனைகுதிரைரத மாள்பேருந்தான்கூட
விட்டுப்பிரியாம லோடித்திரிந்தார்கள்
அக்கினியிற்பிறந்த வருங்குழலாள் துரோபதையும்
பரிசனங்களெல்லாம் பசியோடிருக்குதென்று
சூரியனைத்தான்தொழுது துலங்கியகிண்ணியொன்று

அக்ஷயபாத்திரந்தான் லட்சணமாய்த்தான் வாங்கி
பரிசனத்துசேனைகளைப் பாலித்துக்காத்துவந்தாள்
பன்னிரண்டாயிரம் பரிசனத்தைக்காத்துவந்தாள்
ஒன்றல்லவிரண்டல்ல ஓராண்டுதானுமல்ல
பன்னிரண்டாண்டும் பசியாமற்சாதித்தபின்பு
ஒருவருஷம்நாட்டில் ஒளித்திருக்கவேணுமென்று
அவரவர்கள் தன்பதிக்கு அனுப்பிவிட்டார்சேனைகளை
அக்கியாதவாசம் அதுவுமுடிந்தபின்பு
விராடபுரம்விட்டு வெளிப்பட்டார்பஞ்சவர்கள்
அன்றுரைத்தசொல்நீக்கி ஐவர்வெளிப்படவே
கண்டுமச்சதேசத்தான் களிகூர்ந்துஐவரென்று
அபிமனுக்குத்தன்பெண்ணை அந்நேரந்தான்கொடுத்து
உத்தரைக்குச்சீதனமா யுபலாவியங்கொடுத்தான்
உபலாவியந்தனிலே யுத்தமர்களைவர்வந்து
உரிமையைநாடியப்போ பெருமைபெறவேணுமென்று
கும்பிட்டுப்பக்கலுக்குக் கோபாலனையழைத்து
அத்திபுரத்துக்கு அந்நேரந்தூதுவிட்டார்
மாயவரும்தானடந்து மச்சானிடம்புகுந்து
அரவக்கொடியோனுட னைவர்மொழியுரைக்க
அப்போதுமுன்மகன்தான் அனலாகத்தான்பொங்கி
ஐவரும்ராச்சியத்தி லடிவைக்கத்தக்கதில்லை
காடெல்லாமைவருக்கே வீடாகத்தான்கொடுத்தார்
காட்டிவிருப்பதே காளையர்க்குநன்மையல்லால்
சமர்த்தினலேயல்லோ சகமெல்லாமாளுவது
வீரியத்தினலேயல்லோ விச்சித்திரம்பேசுவது
வீரியங்களுண்டானல் மிகுந்தரசையாளாரோ
புசபலங்களுண்டானல் போய்வாரோம்கானகத்தில்
கானகத்திற்சென்றவரைக் கருத்தாகத்தானழைத்து
விராடபுரத்தானிடத்தில் வேந்தர்களைத்தானமர்த்தி
நாடவர்க்குஈயுமென்று நடந்துவந்தார்தூதாக
ஆனலுமென்னவினி ஆயரேநீர்கேளும்
பாரதத்துக்கொப்பி படுகளத்தில்நாளுமிட்டு
வெட்டிகெலித்தவர்க்குவெற்றிமுடியென்றுசொன்னன்
அரசருடனிருந்தவர்க்கு அவனிமுழுதுமென்றான்
மாயவனார்கையில் வலக்கையைத்தான்கொடுத்தான்
வலக்கையைவாங்கியே மாயரெழுந்திருந்து

அத்தையரென்றுவுன் அரண்மனையில்வந்துநின்று
ஐவரிடவார்த்தையெல்லாம் அறியவுரைத்தாரே
நீ-மைந்தனென்றுந்தன் மனதிலேதோற்ருமல்
பஞ்சவர்க்காகப் பரிவாகமனமிரங்கி
எந்நாளும்தர்மம்வெல்லும் இடர்செய்யுங்கர்மமென்று
பொறுத்தார்பூமியாள்வார் பூமியேசாட்சியதாய்
பொறுக்கவறியாதார் பூமியிலேதான்மடிவார்
பஞ்சபூதங்களுந்தான் பகலிருளேசாட்சியதாய்
என்றுசொன்னீரந்நாளி லேந்திழையேகாந்தாரி
அந்நாளிலாயருட ஞரிழையேசொன்னீரே
தாயார்சொல்பிள்ளைகட்குத் தானேபலித்ததென்ருர்
மாதாசொல்தப்பாமல் மடிந்தார்கள் நூற்றுவரும்
காடுறைந்தஐவர்களும் கோடுபிரியாமல்
அமர்க்களத்தில்போரிட்டா ராசமக்கள் தானறிய
போர்பொறுதிவென்றுஐவர் பூமியையாள்வதற்கு
அமர்க்களத்தைவிட்டுமவ ராயன்கிருபையினுல்
மாதாவின்பாதம் வணங்கிடவேண்டுமென்று
ஐவருமிப்போது அடிபணியவந்தார்கள்
அக்குறைகளெல்லா மறிந்துமனதடக்கி
நூற்றுவரைப்பார்க்கிலுமைவ ரேற்றமென்றுநீயறிந்து
கண்காட்சியாகவேநீர் கையாலெடுத்திடுங்காண்
மனமகிழ்ச்சியாகவேநீர் வாழ்த்தியெடுத்திடுங்காண்
உனக்குமுன்கணவனுக்கு முகந்துபெற்றநூற்றுவற்கும்
அரண்மனையில்பெண்கட்கு மரசமக்கள்பெண்கட்கும்
கர்னர்சயிந்தவனுர் கார்கோசன்தேவியற்கும்
வானுலகம்புகழ வழிகாட்டவந்தவரை
பெண்ணணங்கேநீரும் புறங்கழித்துக்கொள்ளாதே
அமிர்தமொழிவாயாலே அழையுமென்ருரைவரையும்
அழையுமென்றுவேந்தனுர் ஆரிழைக்குசொல்லுகையில்

### சகல விபரமுங் கேட்டு காந்தாரி புலம்புகிறது

கற்பால்பதிவிரதை காந்தாரிநாயகியாள்
பஞ்சவரைத்தான்பார்த்துப் பைங்கிளிகாந்தாரியும்
அமர்களத்தில்செயித்தா ரைவர்களுமென்றுரைத்தீர்
ரணக்களத்தில்வந்தெதிர்த்த ராசரைக்கொல்வதல்லால்
நீரிலொளித்தவரை நீதியோகொல்வதற்கு

ஜலத்திலொளித்தாரைத் தேடிவந்துதானிழுத்து
வலிமையினால்தானிழுத்து மாயவனார்கைகாட்ட
துடையிலடித்துயெந்தன் துரியனைக்கொன்றாரே
வீணிலேகொன்றுவிட்டு வெளிப்பட்டார்பஞ்சவர்கள்
கொன்றுமேமைந்தனை கொக்கரித்தார்பஞ்சவர்கள்
என்றுசொல்லிகாந்தாரி ஏந்தியமையாள் தான்புலம்பி
மார்பளவுகண்ணீரை வழியவிட்டாள்காந்தாரி
அவ்வேளைமாயவனு ரறிந்துமவரேதுசெய்வார்
மதகரியான்தனையப்போ வரவழைத்தேதுசொல்வார்
இதுசமயந்தாய்பாதம் இறைஞ்சிபணியென்றார்
ஐவருமொருமுகமா யடிபணியுமென்றுசொன்னார்

### பஞ்சவர்களைவர்களுங் காந்தாரிக்குச் சமாதானஞ் சொல்வது

ஆயனார்சொல்லுகையில் ஐவர்களுமோடிவந்து
தாயாரின்தன்பாதந் தழுவியவன்தான்பிடித்து
வீமனெடுத்துரைப்பான் மெல்லியருக்குத்தாரம்
ஆச்சியரேகேளுமம்மா அடியேனென்விண்ணப்பம்
பெற்றபிள்ளைகுற்றமதை பெற்றவர்தானல்லாமல்
மற்றவர்தான்பொறுக்க மனம்வருமோமாதாவே
என்றுசொல்லக்கேட் டேதுரைப்பான்காந்தாரி
மனதிற்பொறுத்திடென்று மதியுரைத்தவீமாகேள்
ரணகளத்திற்போர்செய்யும் ராஜாக்கள்தானறிய
உன்தம்பிதுற்சாதனன் தன்கழுத்தைநீகவ்வி
தன்னுதிரந்தான்குடிக்கத் தருமமோவுந்தனுக்கு
என்றுசொல்லக்கேட் டேதுபைப்பான்வீமனப்போ
அன்னையேகேளுமம்மா அடியேன்வாய்விண்ணப்பம்
சமர்க்களத்தில்ராசாக்கள் தானஞ்சவேணுமென்று
மென்னியைக்கவ்விவிட்ட விரதமேயல்லாமல்
மன்னிரத்தங்குடித்த தில்லைநான்மாதாவே
ஆச்சியரேயின்னமொன் றடியேன்சொல்லநீர்கேளும்
மாயவனார்வஞ்சனையை மனதிலறிந்ததில்லை
தாயென்றுந்தந்தையென்றுந் தமையன்தம்பியென்றும்
உற்றாருறவென்று முறவின்முறைகளென்றும்
சேர்ந்தார்சினேகரென்றும் தேசாதிதேசரென்றும்
பிள்ளைகள்மக்களென்றும் பிறவித்துணையில்லாமல்

சென்மபகையாக்கித் தீராக்கலகமிட்டு
மரப்பாவைசூஸ்திரத்தில் வரிந்திழுக்கும்நரியைப்போல்
ஐவரையுமுன்னிட்டு அமர்செய்தாரெம்பெருமாள்
பூமிபாரந்தீர்க்கவென்று பிறந்துவந்தார்புண்ணியரும்
ஆகையினாற்பூசலுக்கு ஆளானோமைவர்களும்
வீமன்பகையாளி வில்விசையன்தாயாதி
தர்மனூர்சத்ராதி சகாதேவன்மித்ராதி
ஐவரும்நூற்றுவரை யமர்க்களத்தில்வென்றாரென்று
மாதாவேஎண்ணாதே மாயவனார்மாயமிது
ஐவருங்கொன்றதில்லை அடியார்மேற்குற்றமில்லை
உன்பாதஞ்சாட்சியாய் உலகளத்தார்செய்ததிது
அன்னைநீர்கேளு மாயவனார்தான்வரவும்
ஐவரால்நூற்றுவரை யடக்கமனதிலெண்ணி
வந்துதித்தாரெங்களிட மைத்துனராய்மாதாவே
சகாதேவனலேநாம் தப்பினோமைவர்களும்
மக்களென்றுசொல்லி மனந்தனிலேசோராதே
பிள்ளைகளைப்பார்க்கிலும் பிரியங்காண்நாமுனக்கு
ஐவர்செய்தகுற்றமெல்லா மாச்சியரேநீபொறுத்து
மனங்குளிரவைவர்களை வாழ்த்தியெடுத்திடுங்காண்
என்றுசொல்லியைவர்களு மிறைஞ்சிமுடிசாய்த்து
ஐவருந்தாய்பாத மழுதுபிடித்தார்கள்
திருமாலும்வியாசருமாய் சேரவந்துநின்றார்கள்
மாயவருங்காந்தாரி மாதையழைத்துரைப்பார்
கண்குளிரவைவரையுங் கடுகவெடுமென்றுரைத்தார்
கற்பால்பதிவிரதை காந்தாரிநாயகமே
மனங்குளிரஐவர்களை வாழ்த்தியெடுமென்றுரைத்தார்

**காந்தாரி முதலான சகலரும் அமர்க்களம் வந்து புலம்புகிறது**

மாயவனார்தாமுரைக்க மனமகிழ்ந்துகாந்தாரி
ஐவரையும்வாழ்த்தியே ஆலித்தெடுத்தணைத்து
தையலுடன்காந்தாரி தனையருடன்தானிருந்தாள்
அப்போதுகுந்தியரு மாறாததுக்கமுடன்
அலண்டுபுரண்டுவந்து ஐவரையுந்தான்றழுவி
கர்ணகர்ணயென்றுசொல்லிக் கட்டியணைத்தழுதாள்
பஞ்சவர்க்குகைகொடுத்த பத்தினியாளோடிவந்து

மைந்தரேஎன் றுசொல்லி மாயவனூர் தன்பாதம்
வந்துமேதான்விழுந்து மனதுமிகத்தளர்ந்து
தேம்பியழுதாளே தேர்விசயன்தேவியரும்
மாயவனூர் திரௌபதியை வாரியெடுத்தணைத்து
ஆண்டாண்டுதோறு மழுதுபுரண்டாலும்
மாண்டார்வருவதில்லை வாருமம்மாவென் றுசொல்லி
ரணகளத்தைசோதிப்போம் நாயகியேவாருமென்று
அமர்க்களத்தில்தானடந்தார் அரசமக்கள் தங்களுடன்
சஞ்சயன்தையலுடன் தம்பிவிதுரனோடும்
கிருதவர்மன் தன்னுடனே கீர்த்திபெற்றபொன்னரசர்
கன்னியாள்காந்தாரி கருத்துள்ளகுந்தியம்மாள்
பெருந்திருவாதுரோபதையும் பெண்அரசிபொன்னுருவி
சூடாமணிவிதுரன் தோகைசித்திராங்கதையும்
நூற்றுவர்கள்தேவியரு மேற்றமுள்ளபெண்களெல்லாம்
அமர்க்களத்தில்மடிந்த அரசமக்கள்தேவியரெல்லாம்
வண்டுமுகராத மலர்முடித்தகூந்தலெல்லாம்
பூமியின்மேல்தான்புரள புழுதியெங்குமேற்படிய
தலைமீதில்கையைவைத்துத் தாபரிக்கும்சபதமுடன்
சொல்லிமுடியாது செவிகேட்கவொண்ணாது
பட்டமரந்தளிர்ந்திருக்கும் பச்சென்றிலையரும்பும்
கல்லுமுருகிவிடும் முல்லையரும்புதிரும்
பாலன்பாலுண்ணாது பட்சியிரைதீண்டாது
அழுதிருந்தபிள்ளையெல்லா மலறியேசோர்ந்தது
ஆழியுடைந்தாற்போ லஷ்டதிக்குஞ்சாய்ந்தாப்போல்
அழுகிறசப்தமென்று லண்டமுடியாது
எமலோகதேவரெல்லாம் வேடிக்கைப்பார்க்கலுற்றார்
வானவர்களெல்லோரும் மதிமயங்கிநின் றுவிட்டார்
பேய்கொண்டவாரதுபோல் பரதவித்துநின் றுவிட்டார்
விமானங்கள்சாய்ந்துவிடும் விமானத்தின்பூவுதிரும்
புரவிகள்காலோய்ந்து பூமியிலேதான்விழுமாம்
தேர்களுக்குப்பூட்டிவைத்த தோரணங்களத்தனையும்
இற்றிற்றுதான்விழுமாம் இணையில்லாபோர்க்களத்தில்
தேவர்களின்கன்னியர்கள் தேன்மொழிமாரானவரும்
அட்சரகின்னரர்க ளரிவைமாரெல்லோரும்
கந்தருவரிஷிகளுடன் வந்திருந்தாரப்பொழுது
ஆணினங்கள்பெண்ணினங்க ளனைவருந்தான் பார்த்து

பொற்பதுமைபார்க்கவந்த பூவையர்களெல்லோரும்
புட்பவருஷமப்போ பொழிந்தாரேபோர்க்களத்தில்
அரசரிடதேவியர்க ளழுதுபுலம்பலுற்ருர்
ஏழுலகையாண்டதொரு எம்பெருமாள் தான்பார்த்து
தக்கபுகழுடைய தருமரைத்தானழைத்து
ஆண்டாண்டுதோறு மழுதுபுரண்டாலும்
மாண்டவர்வருவதுண்டோ மன்னவரேநீர்கேளும்
பிரமாவெழுதினதை புரட்டிவைக்கக்கூடாது
தப்பவைக்கவொண்ணுது சந்திரகுலவிளக்கே
தம்பிமார்தேவிகளைத் தருமரேநீரழைத்து
அவரவர்கள் துக்கமதை ஆற்றிவையுமென்றுசொன்னுர்

தருமர் காந்தாரி முதல் சகலருக்கும் சொல்லல்

அப்போதுதருமலிங்கம் அட்சணமேயேதுசெய்தார்
அப்படியேநல்லதென்ரு ஞனந்தவாழ்மார்பன்
பேரரசன்தேவியான பெருந்திருவாள்பக்கம்வந்து
கோவென்றுதானழுதார் கொழுந்தியரைப்பார்த்து
இனி-ஆண்டாண்டுதோறு மழுதுபுரண்டாலும்
மாண்டார்வருவதுண்டோ வாருமம்மாவென்றுகூறி
மைத்துனன்மார்தானிருக்க மனஸ்தாபமேதுனக்கு
பாவங்களென்னுலே பத்தினியேசெய்ததுண்டோ
எவரெவர்கள்செய்தவினை ஏதுவினையானுலும்
அவரவர்கள்செய்தவினை அவரேயனுபவிப்பார்
வாருங்களென்றுசொல்லி வருந்தியழைக்கலுற்ருர்
பேரரசன்தேவி பெருந்திருவாளேதுரைப்பாள்
ஏதுக்கினிமேலு மிவ்வார்த்தையுந்தனுக்கு
வீம்புகள்பேசியவர் வீணுய்மடிந்தார்கள்
தருமநினைப்பில்லாமற் ருனேமடிந்தார்கள்
சொல்லிப்பலனென்னவினிச் சுந்தரப்பூமுடியாள்
மன்னவர்கள் நூற்றுவரும் மடிந்தார்கள்மண்மேலே
நாங்களிருக்கவினி ஞாயமல்லமன்னவனே
மண்ணிலிருந்தாலினிமேல் வையகத்தாரேசாரோ
பூமியிலிருந்தாக்கால் பூதலத்தாரேசாரோ

பெண்கள் தீப்பாய்ந்தது

தீயைவளர்த்துமென்ருர் தேனின்மொழியார்கள்
அக்கினியைமூட்டுமென்ருர் அரசரிடதேவியர்கள்

அப்படியேயாகுதென்று ஆனந்தவாழ்மார்பன்
தீயைவளர்த்திருன் செம்பொன்மணிமுடியான்
நூற்றுவர்தேவியரை நொடியிலேதானழைத்து
பொன்னுருவிகாந்தாரியைப் போதவேதானழைத்து
மாதுதுரோபதையை வலப்புறம்வைத்துக்கொண்டார்
ஆயர்கிருபையினுல் அக்கினியைச்சுற்றிவந்தார்
அனைவோரொருமுகமாய் அனல்பாய்ந்தாரப்பொழுது
பொன்னுருவிதவிர போய்குதித்தார்பெண்களெல்லாம்
மைந்தனுக்காய்பொன்னுருவி வையகத்திலிருந்தாள்
புத்திரனுக்காகவல்லோ பொன்னுருவிதானிருந்தாள்
அரசனிடதேவியர்க ளனைவோருமனல்பாய்ந்தார்
படுகளங்களத்தனையும் பற்றியெரிந்ததுகாண்
நாற்பத்தெட்டோசனையும் நலமாயெழுந்ததுகாண்
நூற்றுவர்கள்தேவியர்க்கு ஏற்றமுள்ளவாகனங்கள்
சமர்க்களத்தில்மடிந்தமன்னர் தேவிமாரெல்லவர்க்கும்
புட்பவிமானங்களெல்லவர்க்கும்வந்ததுகாண்
இந்திரன்விமானங்களெல்லவர்க்கும்வந்ததுகாண்
விமானத்தின்மீதேறி வானுலகமபோய்ச்சேர்ந்தார்
தேவர்கள்புகழ தெய்வலோகம்போய்ச்சேர்ந்தார்
கன்னியர்களபோனபின்பு கதிரோனும்மறைந்தார்

ஸ்ரீகிருஷ்ணபகவான் தருமருக்குப்

பட்டந்தரித்தல்

ஆயர்பெருமாளு மைவரையுந்தானழைத்து
கண்ணில்லான்காந்தாரி காரிழையாள்குந்தியரும்
மாதுநல்லாள் துரோபதையும் மற்றுமுள்ளகன்னியரும்
கூடியேபாடிமனை கும்பலுடன்வந்திருந்தார்
விதுரன்பலராமர் விளங்கியதோரசுவத்தாமன்
கிருபையனுஞ்சஞ்சயனுங் கூடிவந்தார்பாடிமனை
அனைவோரும்பாடிமனை யமர்ந்திருந்தாரப்பொழுது
தருமருக்குப்பட்டந் தரிப்பிக்கவேண்டுமென்று
ஆயன்பெருமாளும் மனதிலேதானினைத்து
கர்னனுர்பெற்றெடுத்த காவலனைத்தானழைத்து
தக்கபுகழுடைய தருமர்கையிலொப்புவித்து
தமையனுர்கர்னனைப்போல் தார்வேந்தாபாருமென்ருர்
அண்ணர்கர்னரைப்போ லருங்கிளியைப்பாருமென்ருர்

மாயவரும்பஞ்சவரும் மனதுமிகத்தான் தளர்ந்து
தமயனார்பட்டமென்று சந்ததிக்குத்தான்தெரிந்து
தருமருக்குப்பட்டந் தரிப்பித்தாரெம்பெருமாள்
தெய்வலோகத்தாருந் துந்துபிகள் தான்முழங்க
புஷ்பவருஷம் பொழிந்தார்கள்தேவரெல்லாம்
ஆயர்பிராமணர்க ளள்ளிச்சேஷையிட்டார்கள்
ஆலாத்திப்பெண்க ளாயிரம்பேர்கூடிவந்து
கற்பூரஆலாத்தி கன்னியர்கள் தான்காட்ட
வெள்ளியாலாலாத்தி வேண்டியதையளித்தார்
ஆலமெடுத்ததொரு ஆரிமைமார்சூழ்ந்துநிற்க
மங்களங்கள்பாடினார் மங்கையர்களெல்லோரும்
பதினெட்டுவாத்தியங்கள் பாங்குடனே தான்முழங்க
எக்காளையூத இராயகொடிமுழங்க
பஞ்சவர்கள்நாடுபெற்றுப் பாருலகையாளவந்தார்
ஐவர்கள்நாடுபெற்று அரசுசெலுத்தவந்தார்
என்றுசொல்லிச்சின்ன மெழிற்சின்னந்தானூத
வானுலகந்தெய்வலோகம் வையத்தோர்கொண்டாட
பூதலங்களெங்கும் புகழ்ந்துமழைபொழிய
பட்டமரந்துளிர்க்கும் பாருலகந்தான் றழைக்கும்
மாதமும்மாரி மழைபெய்துதானிருக்கும்
திங்கள்மும்மாரிபெய்து தேசஞ்செழித்திடுமே
அப்போதுமாயவனு ரைவரையுமிட்டுவந்து
அத்திபுரந்தனிலே அமர்த்திவிட்டுமாயவனார்
கங்கையனார்கர்னருக்குங் காட்சியவர் தான்கொடுத்து
பூத்தேரின்மீதேறிப் போய்வாருமென் றுசொல்லி
காட்சியதுதான்கொடுத்துக் கரியமால்தான்போனார்
துவாரகையைநோக்கியந்த தேவர்களுந்தான்போனார்
இந்தப்பெருங்கதையை எல்லோருந்தான்படிக்க
சந்ததம்பொருந்தும்நங்கை தன்கதையைப்படிக்க
மண்ணுடார்கொண்டாடும் மாலாபலவாயிலங்க
விண்ணுடார்கோவுமகிழ் வேல்வேந்தன் ராமசாமி
செட்டியார்மாதவத்திற் சேயனாய்வந்துதித்தான்
பெட்டியின்மாணிக்கம்போற் பேருலகிலேமதித்தோன்
தன்னையடுத்தவரைத் தன்போலுமெண்ணிடுவோன்
அன்னைபிதாக்களுக்கு மரும்பூசைபண்ணிடுவோன்
நாடிவருபவர்க்கு நயந்தன்னந்தானளிப்போன்

தேடிவருபவர்க்குத் தினந்தங்கந்தானளிப்போன்
மன்னுந்திருமாலை மாருமல்கும்பிடுவோன்
துன்னுபவர்பாதத் தூளியேநம்பிடுவோன்
கோபாலச்செட்டியார் கோரிக்கையின்படிக்கு
மாபாலபுருஷோத்தம மன்னன்தவனடிக்குஞ்
செபங்கள் தபங்கள் தினஞ் செய்துமிகமகிழ்வோன்
சுபங்களுடையவர்க்குச் சொர்னந்தந்தேமகிழ்வோன்
பசித்துவந்தோர்தமக்குப் பாலன்னமீந்திடுவோன்
புசித்துவந்தோர்க்குப் பெருளாடையீய்ந்திடுவோன்
உலகைவிலைமதிக்கு முயர்காதுகுண்டலங்கள்
இலகுமவன்கடக மீரேழுமண்டலங்கள்
விலையேறுமார்பதக்கம் விண்ணுலகையேமதிக்கும்
கலைவீணுமவர்பொருதம் கனபூமிபோலோங்கும்
சொல்லுங்கர்னர்கொடையுந்தோற்கவேதந்திடுவோன்
அல்லும்பகலும்பிச்சை அன்பாயுதந்திடுவோன்
சீதரனையெந்நாளும் சிந்தித்துநின்றிடுவோன்
கோதருடன் தீவினையைக் குணந்தந்துவென்றிடுவோன்
மங்கைமகிழ்தோளன் மறைபோலும்பொற்றேளன்
அங்கைசொலொத்த யாளன்மகிழ்ரதிமணாளன்
சங்கப்புலவருக்குத் தனமீயுமொப்பாரன்
துங்கமுறுமுதாரன் சொல்வடிவிலேமாரன்
சிங்கம்போலுவீரன் சீர்சொல்லின்சொற்படிக்கு
பொற்புமிகவாய்ந்த பொற்களந்தையூர்மேவும்
அற்புமிகவேந்தர் அகஸ்தியனைப்போற்றவும்
நன்னூலுங்காரிகையு நற்பொருளும்நூலும்
பன்னூலும்என்னூலும பகரறியதொன்னூலும்
தொல்காப்பியவுரையுஞ் சூருவளியுரையும்
பல்காப்பியவுரையும் பதப்பொருளினுரையும்
நேமிநாதவுரையும் நேரானசெய்யுட்கோவை
சாமிநாதன்சொன்ன தனியிறையனூர்கோவை
ஐம்பத்துமூவர்செய்த வரியவிலக்கணமும்
நன்புதன்நீரருளா னன்குணர்ந்தோனக்கணமே
போற்றுமவேதகிரியான் புலவனருள்சேயன
சாற்றுமாவாறுமுகத் தமிழ்வல்லோர்தம்நேயன்
சுத்தமாயிக்கதையைச் சொற்கள்பிழைநீக்கி
தத்தமக்குமேற்கவே சரசவிலையாக்கி

அச்சுகளெல்லா மழகாகவேயடுக்கி
மெச்சும்படியாக மேன்மேலுமேயொடுக்கி
ஓயாமல்கர்னனைப்போ லுகந்நீயுமொய்யாரன்
அச்சுக்கூடந்தனிலே யச்சடித்தவுண்மைகளை
பாண்டவர்தன்கதையைப் பரிந்துமிகக்கேட்டோர்கள்
ஆண்டவர்நற்கதையை யடைவாரிந்நாடோர்கள்
கருணன்கதையைக்கேட்டால் கனபூண்டுபூவினிலே
வீமன்கதையைக்கேட்டால் வினைகள்போய்விடுமே
நகுலன்கதையைக்கேட்டால் நல்குமேமோட்சவீடு
சகாதேவன்கதையைக்கேட்டால் வந்திடுமேவாணுடு
அப்பர்சம்பந்தர்போலே அன்பாகவாழ்வாரே
செப்பெருஞ்சுந்தரர்போலே சிவனடியிற்சூழ்வாரே
மாணிக்கவாசகர்போல் வரங்கள்பெறுவாரே
நாணிக்காலவன்மேல் நலமோசைமுறுவாரே
அல்லிக்கொடிபோலே அனைவோருந்தான்வாழி
வல்லிக்கொடிபோலே மாந்தர்மிகவாழி
ஓங்கிவளர்ந்த உயர்மூங்கில்போல்வாழி
தீங்கில்லாமன்னவர்கள் தேசத்திலேவாழி
ஊழியூழிதோறு முலகத்திலுள்ளவர்கள்
வாழிவாழியென்று வரமளித்தாரீஸ்வரனுர்

**விருத்தம்**

இப்பெருங்கதையை யுரைத்தவர்படித்தோ
ரெழுதினோர் பொருளிசைத்தோர்
செப்பெருமன்பர் கேட்டுளோரிதன்பேர்
செப்பினோர் தீமையிற்றீர்ந்தே
எப்பெருஞ்சிறப்பு மைந்தரும்வாழ்வு
மிசைந்த தீர்க்காயுளுமுளராய்
எப்பெருங்கதியி னிலைபெறவிளங்கி
யும்பரும்புகழ வாழ்குவரே.

**கர்னமகாராஜன் சண்டை**

முற்றிற்று.

---

சக்கரவர்த்தி பிரஸ், 189, தங்கசாலைத் தெரு, சென்னை-1.

## புத்தக விளம்பரம்.

| | ரூ. | பை |
|---|---|---|
| விநாயக புராண வசனம் | 12 | 00 |
| அற்புத பூலோக ரம்பை கதை | 2 | 00 |
| நவரச கதம்ப ஒப்பாரி | 0 | 62 |
| விநோத கதைகள் | 0 | 50 |
| மரகத சுந்தரம் | 1 | 50 |
| நாகபூஷணம் | 1 | 20 |
| மஸ்தான் சாகிபு பாடல் | 3 | 00 |
| சார்தர்வேஷ் 4 பக்கீர்கிஸ்ஸா | 4 | 25 |

### வைத்தியம், ஜோதிடம் புத்தகங்கள்.

| | ரூ. | பை |
|---|---|---|
| போகர் 7000 | 12 | 00 |
| சாதக அலங்காரம் மூலமும் - விரிவுரையுடன் | 6 | 00 |
| கௌசிக சிந்தாமணி (3-பாகங்கள்) | 6 | 00 |
| மணிமந்திர வைத்திய சேகரம் | 2 | 50 |
| பாலவாகடத் திரட்டு 1200 | 2 | 00 |
| தன்வந்திரி கருக்கிடை நிகண்டு 300 | 0 | 75 |
| புலஸ்தியர் மகரிஷி வாத சூத்திரம் 300 | 1 | 25 |
| ஊர்வசி வைத்திய சிட்கா 2-பாகம் சேர்ந்தது | 2 | 00 |
| அகஸ்திய முனிவர் பூரண சூத்திரம் 216 | 0 | 75 |
| திருமூல நயினார் வைத்திய காவியம் 1000பாடல் | 1 | 25 |
| ஆயுள்வேத சுருக்கம் | 2 | 00 |
| நவக்கிரக தோத்திரம் | 0 | 62 |
| பெரிய சுந்தர சேகரம் | 2 | 00 |
| கணித முருகசேகரம் | 2 | 00 |
| ஹோரா சாஸ்த்திரம் | 2 | 50 |
| சர்வ கனவின் பலன் | 0 | 50 |
| களவு காணும் சாஸ்திரம் | 0 | 50 |
| சோதிட நூலாதாரம் | 0 | 50 |
| சுகர் நாடி சோதிடம் | 2 | 00 |
| சோதிட நூலாதார அரிச்சுவடி 2-பாகம் | 1 | 00 |
| மலையாள மாந்திரீக அரிச்சுவடி | 0 | 37 |
| விமகவி மூலமும் உரை | 1 | 50 |
| சந்தன நூல் சாஸ்த்திரம் | 0 | 50 |

இட்டா-பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,

189, தங்கசாலை தெரு, சென்னை1.

ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்

# ஸ்ரீகிருஷ்ணசுவாமிதூது

## மூலமும் - உரையும்




**ஸ்ரீமகள் கம்பெனி**

**122, வரதாமுத்தியப்பன் தெரு, சென்னை-1.**

கிளைகள்: மதுரை—கோவை—பெங்களூர்—திருச்சி

விலை ரூ. 1—50

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# ஸ்ரீ கிருஷ்ணசுவாமி தூது

## மூலமும் - உரையும்

விநாயகர் துதி

நீடாழி யுலகத்து மறைநாலொ
டைந்தென்று நிலைநிற்கவெ
வாடாத தவவாய்மை முனிராசன்
மாபாரதஞ்சொன்னநா
ளேடாக மாமேரு வெற்பாக
வங்கூரெ ழுத்தாணிதன்
கோடாக வெழுதும்பி ரானைப்ப
ணிந்தன்பு கூர்வாமரோ.

(இ-ள்.) நெடிய கடல் சூழ்ந்த இப்பூலோகத்திலே வேதம் நான்குடனே ஐந்தாம் வேதமென்னப் பிரசித்தமாக நிலைத்திருக்கும்படி தளர்ச்சி யடையாத மெய் தவத்தையுடைய வேதவியாச மகாமுனிவர் மஹாபாரதஞ் சொன்னநாளிலே, மகாமேருவை ஏடாகவும், தனது கொம்பை வெள்ளிய கூருடைய எழுத்தாணியாகவுங் கொண்டு அந்தப் பாரதக் கதையை யெழுதியருளிய விநாயகக்கடவுளைப்பணிந்து பக்தி செய்வோம். 1

சரஸ்வதி துதி

பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளரு கின்றாள்.

(இ-ள்.) பொதியமா மலையிலே பிறந்து பாண்டியன் கீர்த்தி யென்னும் பசும் பொன் தொட்டிலிலே கிடந்து சங்கப் பலகையிலேயிருந்து வைகையாற்றிலே திரு ஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகளால் விடப்பட்ட ஏட்டினிடமாய் எதிரேறித் தவழ்ந்த பேதையாகிய

(கிருஷ்ணன்— என்பது வடமொழி) கருநிறம்பொருந்திய திரேகமுடையவர்

சாஸ்வதி பின்பு நெருப்பிலே போடப் பச்சோலையாய் வேகாமல் நின்று, கற்றபேர் நினைவிலே நடந்து ஆதி வராக முகக்கொம்பிலே மருவிய பூமிதேவி மருங்கிலே இலங்குங் குணமணப்பிள்ளையாக வளர்கின்ற அக்கலைமகள் என் நாவிலே நிற்கும்படிக்கு நமஸ்கரிக்கின்றேன் (எ-று) 2

பாடற்றொகை

தருமமெய்த் தரும னேவத் தாளிணை சிவப்ப மாயோ
னரவுயர் கொடியோன் பக்க லழகுறு நாடு வேண்டித்
தரகத விரத மேறித் தூதுபோய் மீண்ட பாடல்
இரவியங் கதிர்போல் வீசு மிருசதத் தறுபான் மூன்றே.

(இ-ள்) தருமமே யுருவாக யிருக்கின்ற தருமராஜன் தனக்காகத் துரியோதனனருகே தூது போகும்படி யேவலினாலே, ஆதிபராபர வஸ்துவாகிய ஸ்ரீமந் நாராயணமூர்த்தி நான்கு வேதங்களாலுங் காணப் படாத பாதாரவிந்தங்கள் சிவக்கக் குதிரைகட்டி யலங்கரித்த இரதத்திலே எழுந்தருளி அஸ்தினபுரி யென்னும் பட்டணத்துக்குத் தூதுவனாகச் சென்று சர்ப்பக் கொடியோனாகிய துரியோதனனை அழகுபொருந்திய நாடுகேட்டு அவனுடனே யுத்தப் பிரசங்கம்பேசி மீண்டதைக் குறித்தபாடல் சூரியகிரணம்போலப் பிரகாசிக்கின்ற இருநூற்று அறுபத்து மூன்றாம் (எ-று.) 3

ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி துதி

பேர்படைத்த விசயனுடன் மும்மைநெடும்
பிறவியினும் பிரியா னாகிச்
சீர்படைத்த கேண்மையினாற் றேரூர்தற்
கிசைந்தருளுஞ் செங்கண் மாலைப்
பார்படைத்த சுயோதனற்குப் படையெடே
னமரிலெனப் பணித்த கோவைக்
கார்படைத்த நிறத்தோனைக் கைதொழுவார்
பிறவாழிக் கரைகண் டாரே.

(இ-ள்.) பூலோகமெங்கும் சவுரியத்தினாலே கீர்த்தியை பெற்ற அர்ச்சுனன் இரணியவதை நிமித்தமாக எழுந்தருளினபோது பிரகலாதனாகியும், இராவணவதை

நிமித்தமாக எழுந்தருளினபோது விபீஷணனாகியும், பூமிபாரந் தீர்ப்பது காரணமாக எழுந்தருளினபோது அர்ச்சுனனாகியும், இப்படி மூன்றவதாரத்திலும் பிரியாதவனா யிருந்து சிறப்பைப் பெற்ற நட்பினிலே அந்த அர்ச்சுனனுக்கு ரதசாரதியாக இசைந்தருளும் செந்தாமரை மலர்போன்ற கண்களையுடைய திருமாலை, பூமியை யாளுகின்ற துரியோதனன் வேண்டின போது அந்தப் பாரத யுத்தத்திலே நான் ஆயுதங்கையிலெடுப்பதில்லை யென்று உறுதிசொன்ன தேவராஜனை, மேக வண்ணனை ஸ்ரீகிருஷ்ணசுவாமியைக் கைதொழுதவர்கள் பிறப்பென்னும் கடலை நீந்தி முத்தியாகிய கரையைக் கண்டவர்கள் (எ-று.) 4

## நூல்

ஞானமன்பொ டினிதுரைத்து ஞானமுனி
யகன்றதற்பின் சாம பேத
தானதண்ட மெனநிருபர் தருமமுறை
மையிற் புகலுந் தகுதி நோக்கித்
தூநறுந்தண் டுளவோனைத் தூது விடுவ
தற்கெண்ணிச் சுனைக டோறும்
ஏனலந்தண் கிரிப்பெருந்தே னிறைக்குமெழிற்
குருநாட னியம்பு வானே.

(இ-ள்.) தருமபுத்திர மகாராஜன் வனவாசம் பன்னிரண்டு வருஷமும், அக்கியாதவாசம் ஒருவருஷமும் ஆகப் பதின்மூன்று வருஷமுந் தொலைந்து, உபலாவியமென்னும் பட்டணம் வந்திருந்து, துரியோதனன் பக்கல் உலூகமா முனியான தன்னுடைய குருவை யனுப்பித் திரியோதிரன் திருதராட்டிரனுடனே உலாவிக்கொண்டு சஞ்சயமகாமுனியான தன்னுடைய புரோகிதனை யழைத்து நீர் போய் ஞானப்பிரசங்கம் பண்ணித் தருமபுத்திராதியரை இன்னும் வனவாசமே போகத் தக்கதாகச் சொல்லி வாருமென்ன, அந்தப்படியே புரோகிதன் ஆசீர்வதித்து அன்புடனே ஞானப்பிரசங்கம் பண்ணி, நீங்கள் இன்னுந் தபசு பண்ணுவதே உறுதியென்று சொல்ல, இதை மறுத்துச் சத்துருசம்

மாரஞ் செய்து பிரதிக்கினை முடிப்பேன் என்று வீம சேனன் சொல்லியனுப்ப, அந்தபப்படியே சஞ்சயமகா முனி போனபின்பு, சாம பேத தான தண்டம் என்னும் இராஜநீதி முறைமைப்படி சொல்லத் தக்கவொன்று அறிந்து பரிமளம் பொருந்திய பரிசுத்தமாகிய துளப மாலையணிந்த ஸ்ரீ கிருஷ்ண தேவரைத் தூதுவிடுவதற்கு எண்ணிச் சுனைகள் தோறுஞ் செந்தினையை யுடைய தண்ணிய மலைகள் மிகுந்த தேனை யிறைக்கின்ற குரு நாட்டுக்கு அதிபதியான தருமபுத்திர மகாராஜன் சொல்லுவான் (எ-று.) 1

செஞ்சொன்முனி சஞ்சயனுக் கியாமுரைத்த
கருமமுமுன் சென்ற காலை
யஞ்சொன்முனி புரோகிதனுக் கவனிசைத்த
கருமமுநீ யறிதி யன்றே
நஞ்சுதனை மிகவருந்தி நன்மருந்து
மந்திரமும் விரைந்து நாடா
நெஞ்சினர்தங் களைப்போல விருக்குமதோ
யார்மனத்து மிருக்குஞ் சோதி.

(இ-ள்.) செவ்வையான சொற்களைச் சொல்லும் சஞ்சய மகாமுனிக்கு நாம் சொன்ன வசனமும் நாம னுப்பி முன்சென்ற உலூகமாமுனியான புரோகித னுடனே துரியோதனன் அப்போதுபேசிய வசனமும் தேவரீருடைய திருவுளமே யறியும் அல்லவோ? விஷத்தை அதிகமாகக் குடித்து அதுதீர நல்ல மருந் தும் மந்திரமும் உயிர் நீங்குவதற்குமுன்னே விசாரியா மல் ஜீவனை விட்டவர்கள் போல நவங்கள் போகாத படிக்கு ஒருபுத்தி எங்களுக்குப் போதிக்க வேண்டும். சர்வலோகத்தார் மனத்திலுமிருந்து விளையாடுகின்ற சோதி சொரூபரே யென்று இன்னுஞ் சொல்லுகிறான் தருமராஜன் (எ-று.) 2

அஞ்சமரம் புரியும்வகை யவருரைத்தா
ரானுலு மறனெ றின்றிப்
பெருஞ்சமரம் விளைக்குமது கடனன்றென்
றருள்வெள்ளம் பெருகக் கூறும்

பொருஞ்சமர நெடுமுரசப் பூங்கொடியோன்
றனைநோக்கிப் புயப்போர் வாண
னிருஞ்சமரந் தொலைத்தபிரா னிளைஞரையு
முடனிருத்தி யியம்பு வானே

(இ-ள்.) குரு க்ஷேத்திரப்பூமியிலே அரிய யுத்தஞ் செய்யத் தக்கதாகத் துரியோதனனாதியர் சம்மதிப்பார்களானாலும் அது நன்றன்று, நாம் முந்தி யுத்தஞ் செய்யச் சம்மதித்துச் சொல்லுகிறதும் முறைமையல்லவென்று கிருபா வெள்ளப் பெருகும்படி சொல்லிய பொருகின்ற நெடிய முரசக்கொடி படைத்த தருமபுத்திர மகாராஜனைப் பார்த்து மேகம்போன்ற ஆயிரம் புயங்களுடைய போரிற் சிறந்த வாணசுரனை ஜயித்த ஸ்ரீகிருஷ்ண சுவாமியானவர் வீமசேனன் அர்ச்சுனன் நகுலன் சகாதேவன் என்று சொல்லப்பட்ட இளைஞரையுங் கூடவைத்துக்கொண்டு இவ்வாறு சொல்லத் தொடங்கினார் (எ-று.) 3

செய்வரா லினமுகளுந் திருநாடு
பெறநினைவோ சென்று மீளப்
பைவரா யருங்கானிற் பயின்றுதிரி
தரநினைவோ பகைத்த போரி
லுய்வரா ரெனவிரைவி னுருத்தெழுந்து
பொரநினைவோ வுண்மை யாக
வைவரா மவனிபர்க்கு நினைவேதென்
றருள்புரிந்தா னமரர் கோமான்.

(இ-ள்.) வயலெங்கும் வராலினங்கள் குதித்து விளையாடுகின்ற சிறந்த குருநாடு வாங்கிக்கொண்டு அரசாட்சி செய்ய நினைவோ, மறுபடியும் பழையபடியே துன்பமுடையவராய் வனத்திற் சென்று வசித்திருந்து திரிய நினைவோ, அல்லது பகைத்துச் செய்கின்ற யுத்தத்தில் பிழைப்பார் யாரென்று சொல்லத் துரியோதனாதியரைப் பிரதிக்னைப்படியே கோபித்துப் பொருது ஜயிக்க நினைவோ, ஐவராகிய உங்கள் ஒவ்வொருவருக்கும் இருக்கின்ற உண்மையான எண்ணம் என்னவென்று கேட்டருளினார் ஸ்ரீகிருஷ்ணதேவர். எ-று 4

வயிரமெனுங் கருநெருப்பை மிகமூட்டி
வளர்க்கினுயர் வரைக்கா டென்னச்
செயிரமரில் வெகுளிபொரச் சேரலிரு
திறத்தேமுஞ் சென்று மாள்வெங்
கயிரவமுந் தாமரையுங் கமழ்பழனக்
குருநாட்டிற் கலந்து வாழ
உயிரனையாய் சந்துபட வுரைத்தருளென்
றானறத்தி னுருவம் போல்வான்.

(இ-ள்.) வைராக்யமென்னுங் கடூரமாகியநெருப்பை அதிகமாக மூட்டி வளர்த்தால் உயரவளர்ந்து தானே விழைந்தெரிந்து மாய்ந்து போகின்ற மூங்கிற் காடுபோலக் குற்றம் பொருந்திய யுத்தத்திலே கோப மூண்டு இரண்டு திறத்தோரும் போய் ஒருமிக்க மாண்டு போவோம். அப்படி வராமல் செவ்வல்லியுந் தாமரை மலரும் பரிமளிக்கின்ற வயல்கள் சூழ்ந்த குருநாட்டிலே அம்மலர்களைப்போல நாங்கள் விரோத மில்லாமல் கலந்து வாழும்படி எங்கள் உயிரையொத்த ஸ்ரீகிருஷ்ணதேவரே! நீர் தூதுசென்று பயன்படும் படி அவர்களையும் எங்களையும் கூட்டியருளவேண்டு மென்று சொல்லினார், தருமத்தின் வடிவம் போல விளங்கிய தருமபுத்திரர் (எ-று.) 5

அரவுயர்த்தோ னுடன்மறுசூ தாடிநீர்
வென்றவந்நா ளவன்றான் சொன்ன
விரதமொழி தவிராமல் வெங்கானம்
போய்மீண்டீர் வெய்யோ னுங்கள்
குருநிலத்திற் பாதியினிக் கொடாதிருந்தா
லாங்கவனைக் கொன்று போரி
லிருநிலத்தை யாளவினித் துணிவதே
கடனென்றா னெம்பி ரானே.

(இ-ள்.) சர்ப்பக் கொடி படைத்த துரியோதன னுடனே மறுபடியுஞ் சூதாடி நீங்கள் வென்றபோது அவன் சொல்லிய சத்தியச் சொல் தவறாமல் பன்னிரண்டு வருஷம் வனவாசமும், ஒருவருஷம் அக்கியாதவாசமும் போய்வந்தீர்கள். வெய்யவனாகிய அந்தத்

துரியோதனன் உங்களுடைய குருதேசத்தில் பாதியைக் கொடாமற் போனானாகில் அப்போதவனைக் கொன்று போர்முகத்திலே பெரிய பூமியை ஆளுகைக்கு இனித் துணிவதே முறைமையென்றார் ஸ்ரீகிருஷ்ணதேவர். 6

குரவரையுங் கிளைஞரையுங் குலத்துரிய
துணைவரையுங் கொன்று போர்வென்
றரவநெடுங் கடலாடை யவனியெலாந்
தனியாளு மரசு தன்னிற்
கரவுறையு மனத்தாதை முனிக்குரைத்த
மொழிப்படியே கானந் தோறு
மிரவுபகற் பலமூல சாகநுகர்ந்
துயிர்வாழ்த லினிது நன்றே.

(இ-ள்.) துரோணாசாரி முதலிய ஆசாரியரையுஞ் சல்லியன் முதலிய சுற்றத்தாரையும் இன்னும் பாட்டன் மாமன் மைத்துனன் முதலான பேரையும் கொன்று போரில் வென்று சப்திக்கின்ற நெடிய கடலை ஆடையாகவுடைய பூமி முழுவதுந் தனியாளுகிற அரசைப் பார்க்கிலும் கபடந் தங்கிய மனத்தை யுடைய பெரிய தகப்பனாகிய திருதராஷ்டிரன் சஞ்சயமுனியுடனே சொல்லி யனுப்பிய சொற்படியே வனந்தோறும் போய் இரவும் பகலும் கனி காய் கிழங்கு சருகுகளைப் புசித்துக் காலம் போக்கிறதே மிகவும் நல்லதென்றார் தரும புத்திரர் (எ-று.) 7

கோதிலா னிந்தமொழி கூறுதலு
மாமாயன் கூற லுற்றான்
மோதமருக் கிளைத்துநீர் மொய்த்தபெருங்
கானகத்தே முடுகிச் சென்றாற்
பூதலத்தோ ரேசாரோ புகன்றபெரு
வஞ்சினமும் பொய்த்திடாதோ
நீதியோ வெனவுரைத்தா னங்கதற்கு
நிகழ்தரும னிகழ்த்த லுற்றான்.

(இ-ள்.) பழுதில்லா தருமபுத்திர மகாராஜர் இந்த வசனஞ் சொன்னமாத்திரத்திலே, ஆதிமூலமான ஸ்ரீகிருஷ்ணதேவர் சொல்லுவார்; தருமபுத்திரரே!

நீங்கள் மோதுகின்ற யுத்தத்திற்குத் தோற்று மரங்கள் நெருங்கிய பெரிய வனத்தினிடத்திலே வாசம்பண்ண விரைந்து போனல், பூலோகத்தில் உண்டானபேர் தாயாதியுடனே யுத்தம்பண்ணி ஜயிக்க மாட்டாமற் போனர்கள் என்று ஏசமாட்டார்களோ? தம்பிமார் சொன்ன சபதமும் பொய்யாப் போகாதோ? இது நீதி யாகுமோ வென்று சொல்லினர். அதுகேட்டுப் பின்னுஞ் சொல்லுவார் தருமபுத்திரர் எ-று. 8

*நீதூது நடந்தருளி யெமதுநினை*
*வவர்க்குரைத்தா ளினைவின் வண்ணந்*
*தாதூதி யளிமுரலுந் தண்பதியுந்*
*தாயமுந்தான் றுரா னுகின்*
*மீதூது வளைக்குலமும் வலம்புரியு*
*மிகமுழங்க வெய்ய காலன்*
*மாதூதர் மனங்களிக்கப் பொருதெனினும்*
*பெறுவனிது வசைய மன்றே.*

(இ-ள்.) சர்வஞ்ஞன தேவரீர் எங்கள் நிமித்தந் துரியோதனனிடத்துத் தூதுசென்று எங்களுடைய எண்ணத்தைத் துரியோதன தியர்கட்குச் சொல்லினல் அந்தப்படியே மகரந்தப் பொடியையூதி வண்டுகள் முரலுகின்ற குளிர்ந்த பூஞ்சோலைகள் சூழ்ந்த நகரத்தில் எங்கள் பங்குக்குரிய செல்வத்தையும் கொடாமற்போன ஞகில் அதன்மேல் ஊதப்பட்ட இடம்புரிச்சங்குகளும் வீரக்கொம்பு முதலிய நாஞவித வாத்தியங்களும் மிகுதி யாக முழங்கக்கூடிய கொடிய யமதூதர் மனங்களிக்கும் படி போர்க்களத்தில் யுத்தஞ் செய்தாகிலுந் தாயாதி பாகமாகிய எங்கள் பூமியைப் பெறுவேன். இது எமக்கு அயகீர்த்தியல்ல வென்று பின்னுஞ் சொல்லுவார் தருமபுத்திரர் எ-று: 9

*முந்தூர்வெம் பணிக்கொடியோன் மூதூரி*
*னடந்துழவர் முன்றி றூறும்*
*நந்தாரும் புனனுட்டின் றிறம்வேண்டு*
*நாடொன்று நல்கானுகி*

ஸேந்தூர்வேண் டவையிலெனி லேந்நிலம்வேண்
டவைமறுத்தா லடுபோர் வேண்டு
சிந்தூரத் திலகநுதற் சிந்துரத்தின்
மருப்பொசித்த செங்கண் மாலே.

(இ-ள்.) முந்தியூருகின்ற வெவ்விய சர்ப்பக்கொடி யுடைய துரியோதனனது பழைய பதியான அஸ்தினு புரத்திற்குத் தேவரீர் எழுந்தருளிப் பள்ளர் முற்றங்கள் தோறுஞ் சங்கினங்கள் ஊருகின்ற நீர்வளம் பொருந்திய நாட்டைக் கேளும் அது கொடானாகில் எங்கள் ஐந்துபேருக்கும் இந்திர பிரஸ்தம், ஏகப்பிரஸ்தம், அவந்தி, வாரணாபுரி, அஸ்தினாபுரி என்ற ஐந்தூருங் கேளும், அவையில்லை யென்று மறுத்தானாகில், ஐந்து மனைகேளும், அவையும் இல்லையென்றால் யுத்தத்திற்குச் சம்மதித்து வாரும் சிந்தூரந்திலகம் பொருந்திய மதயானைக் கோடுமுறித்த வீரம் பொருந்திய சிவந்த கண்களையுடைய மாயனே! என்றார் தருமபுத்திரர் எ-று

மூத்தோன்மற் றிவையுரைப்ப விளையோன்வெஞ்
சினமனத்தின் மூள மூள
நாத்தோமி லுரைபதறக் கதுமெனவுற்
றெழுந்திறைஞ்சி ஞால மெல்லாம்
பூத்தோனே பூத்தவிசிற் பூவைபுணர்
மணிமார்பா புன்மை யாவுந்
தீர்த்தோனே யூனமிலான் மானமிலா
துரைப்பதற்கென் செய்வ தென்றான்.

(இ-ள்.) மூத்தவராகிய தருமபுத்திர மகாராஜர் இந்த வசனஞ் சொல்ல, வீமசேனன் கேட்டு அவன் மனதிலே கோபம் அதிகரிக்க நாவினிடத்திலே குற்றமில்லாத சொற்கள் பதறச் சீக்கிரத்தில் வந்து எழுந்து ஸ்ரீகிருஷ்ணதேவரைப் பணிந்து பூலோக முழுவதும் உண்டாக்கினவரே! பதுமாசனத்தில் இருக்கின்ற மகாலக்ஷ்மிபொருந்திய கௌஸ்துவாபரணந் தரித்த மார்பை யுடையவரே! நம்பினபேர் குறைகளைத் தீர்த்தவரே! குற்றமற்ற அண்ணனவர் மானமில்லாமற் சொல்வதற்கு நான் செய்வதென்னவென்று பின்னுஞ் சொல்லுவான் அந்த வீமசேனன் எ-று 11

விரிகுழற்பைந் தொடிநாணி வேத்தவையின்
முறையிடுநாள் வெகுளே லென்று
மரபினுக்கு நமக்குமுல குள்ளளவுந்
தீராத வசையே கண்டாய்
எரிதழற்கா னகமகன்று மின்னமும்வெம்
பகைமுடிக்க விளையா நின்றாய்
அரவுயர்த்தோன் கொடுமையினு முரசுயர்த்தோ
யுனதருளுக் கஞ்சி னேனே.

(இ-ள்.) விரிந்த கூந்தலையும் பசிய வளையலையும் உடைய துரௌபதி நாணமடைந்து 3-லட்சத்து 66000-பட்டவர்த்தனரும் 6-லட்சத்து 69000-மகுடவர்த்தனரும் பதினெண்பூமி மன்னர் மண்டலீகரும் இராஜ வர்க்கமும் வீஷ்மாச்சாரி கிருபாச்சாரி அசுவத்தாமர் கர்னன் சகுனி சல்லியன் அதிரதர் மகாரதர் சமரதர் முதலிய சமஸ்தபேரும் நிறைந்த ராஜசபையிலே மான பங்கம் பண்ணுவித்தநாளில் தஞ்சமில்லாதவர்போல முறையிட்டபோது நீ கோபியாதே 'யென்று சொல்லி குருகுலத்துக்கும் நமக்கும் பூலோக முள்ளவுந் தீராத பழிப்பு வசனமுண்டாக்கினீர்; அதுவும் அல்லாமல் கள்ளக்கயிறு கொண்டு சூதாடி தீப்படுகின்ற காடே போகச் சொல்லிவிட அதை நீக்கியும் இன்னமும் அக் கொடிய பகையை முடிக்க இலெக்கின்றீர், ஆதலால் துரியோதனனுடைய கொடுமையைப்பார்க்கிலும் தரும புத்திரரே! உம்முடைய கிருபைக்கு மிகவும் 'பயந்தேன் என்று பின்னுஞ் சொல்லுவான் வீமசேனன் (எ-று.)12

கானுள வுனைவிடுத்த கண்ணிலா
வருளிதன் காதன் மைந்தன்
றானுளுந் தரணியெல்லா மொருகுடைக்கீழ்
நீயாளத் தருவ னின்றே
மேனுணம் முரிமையறக் கவர்ந்த பெருந்
துணைவனுனை வெறுத வண்ணம்
வானுள வானவர்கோன் றன்பதமற்
றவன்றனக்கேவழங்கு வேனே.

(இ-ள்) உம்மை வனவாசம் போகச்சொன்ன கண்ணில்லாத திருதராட்டிரனுடைய ஆசைமிகுந்த குமாரனை துரியோதிரன் தாளுகின்ற பூலோகமெல்லாம் ஒருகுடைக்கீழ் இன்றைக்கே நீராளத்தருவேன்; அல்லாமல் முன்னாளில் நம்முடைய ஆட்சியான நாட்டைக் கைக்கொண்ட அந்தத் துரியோதனன் தேவரீரை வெறுத்து விடாதபடி அவனுக்கு வீரசொர்க்கத்தை யாளும்படி இந்திர பதத்தைத் தருவேனென்று பின்னுஞ் சொல்லுவான் வீமசேனன் (எ-று) 12

போர்முடித்தா னமர்பொருது புலப்புறுசொற்
பாஞ்சாலி பூந்தண் கூந்தற்
கார்முடித்தா னிளையோன்முன் கழறியவஞ்
சினமுடித்தான் கடவுட் கங்கை
நீர்முடித்தா னிரவொழித்த நீயறிய
வசையின்றி நிலைநின் றோங்கும்
போர் முடித்தா னிப்படியே யார்முடித்தா
ரிவனுடனே பிறப்ப தேநான்.

(இ-ள்) ஸ்ரீகிருஷ்ணதேவரே! எங்களண்ணன் ஆதியர் துரியோதனனுடனே யுத்தஞ்செய்து முடித்தார். மேகம் போன்ற கூந்தலையும் புலம்புகின்ற சொல்லையுமுடைய துரௌபதியை முடிக்கச்செய்தார். தம்பிமார் சபையிலே பேசிய சபதங்களையும் முடிப்பித்தார். தெய்வத்தன்மைபொருந்திய கங்காஜலமடுத்த உருத்திரதேவர் கையிலே பிர்ம கபாலங்கொண்டு இரப்பதைத் தவிர்த்தருளிய உம்முடைய சித்தமறியப்பூலோகத்திலே நிலைநின்றுஉயர்ந்த கீர்த்திமான் என்னும் பேர் பிரசித்தமாக முடித்தார். இப்படியாவர் முடிக்கப் போகிறார்கள்? இவருடனே பிறந்த நான் கீர்த்திபெற்றது போதுமென்று பின்னுஞ் சொல்லுவான் வீமசேனன்.

அணிந்துவருஞ் சமரிலெதிர்ந்தரவுயர்த்தோ
னுடனரச ருடல மெல்லாந்
துணிந்திரண்டு படப்பொருது தொல்லையுல
கரசாளத் துணிவ தல்லால்
தணிந்தறமுங் கிளையுறவுங் கொண்டாடித்
தானின்னந் தனித்து தேவிப்

பணிந்திரந்து புவிபெற்றுண் டிருப்பதற்கே
துணிகின்ருன் பட்ட பாடே

(இ-ள்.) போர்க்கோலங் கொண்டுவருகிற பெரிய யுத்தத்திலே எதிர்த்து சர்ப்பக்கொடியையுடைய துரியோதனுதியரையும் அவனுக்குச் சகாயமாய்வரும் அரசர்களுடைய சரீரங்களெல்லா மிரண்டு துண்டாகும்படி போர்செய்து பழைய பூலோக முழுவதையும் அரசாட்சி செய்யத் துணிவதை விட்டுப் பொறுமை கொண்டு தருமத்தையும் உறவையும் பாராட்டி இன்னமும் ஒப்பற்ற தூதுவிடுத்து அவனை வணங்கிப் பூமியை யாசித்துப் பெற்றுக்கொண்டு சவுக்கியமாகப் புசிக்கவே பண்ணுகின்ருர் தருமபுத்திர மகாராஜர். இவர் பட்டபாட்டை என்ன சொல்வேன் என்ருன் வீமசேனன் (எ-று) 15

பரிவுடன்மற் றிவைகூறும் பவனகுமா
ரனைமலர்க்கை பணித்து நோக்கிக்
குருகுலத்தோர் போரேறே குற்றமது
பார்க்குங்காற் சுற்ற மில்லை
யொருகுலத்திற் பிறந்தார்க ளுடன்வாழும்
வாழ்வினைபோ லுறுதி யுண்டோ
விருவருக்கும் வசையன்ருே விருகிலங்கா
ரணமாக வெதிர்ப்ப தென்ருன்.

(இ-ள்.) இப்படிப் பரிவுடன் சொல்லிய வாயு புத்திரனுகிய வீமசேனனை, மலர்போன்ற கையாலமர்த்திப் பார்த்துக் குருகுல சிகாமணியாகிய வீமா! குற்றம் பார்க்குமிடத்தில் சுற்ற முண்டோ? ஒரு குலத்திலே பிறந்த அண்ணன் தம்பிமாருடனே கூடிவாழும் பெருமையைப் பார்க்கினும் வேறுமொரு கீர்த்தியுமுண்டோ? இப்பூமண்டலத்தைப் பெறுவது காரணமாக எதிர்ப்பது நம்மிருவருக்குங் குற்றமல்லவோ வென்றும், பின்னும் சொல்லுவார் தருமபுத்திர மகாராஜன் எ-று 16

உரிமையுடன் றம்பியரன் றுணர்வறியா
மையினைவைக்க னுரைத்த மாற்றம்
பரிபவமோ கேட்டோர்க்குப் பரிபவமென்
பதுபிறராற் பட்டா லன்ருே

கருதிலது மற்றெவர்க்கு மொவ்வாதோ
கண்மலரிற் கைப டாதோ
பொருதொழிலுங் கடைநிலத்திற் கிடந்ததே
யெனமொழிந்தான் புகழே பூண்பான்.

(இ-ள்.) உரிமையுள்ள தம்பிமார்கள் அறியாமையினாலே சபையிலே சொன்ன வார்த்தைகள் நமக்கு இழிவையுண்டாக்குமோ? இழிவென்பது அன்னியாற் சொல்லப்பட்ட தல்லவோ? அது நினைக்கும் இடத்தில் ஒருவருக்கும் பொருந்தாதோ? கண்மலரிற்கை பட்டால் அந்தக் கையைத் துணிக்கலாமோ? யுத்தம் பின்னுவிருக்கவே யிருக்கின்றதென்றான் கீர்த்தியையே தரிக்கின்ற தருமபுத்திர மகாராஜன் [எ-று.] 17

சூடுகின்ற துழாய்முடி யோன் சுரருடனே
முனிவர்களுஞ் சுருதி நான்குந்
தேடுகின்ற பதஞ்சிவப்பத் திருநாடு
பெறத்தூது செல்ல வேண்டா
வாடுகின்ற மடப்பாவை தன்வரமு
மென்வரமும் வழுவா வண்ணங்
கோடுகின்ற மொழியவன் பா லெனைத்தூது
விடுகவினிக் கொற்ற வேந்தே.

(இ-ள்.) துளபமாலையணிந்த ஸ்ரீகிருஷ்ணபகவான் தேவர்களும் முனிவர்களும் நான்குவேதங்களும் இன்னுந் தேடுகின்ற பாதங்கள் சிவப்ப நாம்நம்முடைய திருநாடு பெறும்பொருட்டுத் தூதுசெல்லவேண்டாம். வாடுகின்ற திரௌபதியினுடைய பிரதிக்கினையும் என் சபதமும் நிறைவேறும் பொருட்டுத் துரியோதனனிடத்தில் என்னை தூதனுப்பும் தருமபுத்திரரே! என்றான் வீமசேனன் எ-று. 18

மலைகண்ட தெனவென்கை மறத்தண்டின்
வலிகண்டு மகவான் மைந்தன்
சிலைகண்டு மிருவர்பெருந் திறல்கண்டு
மெமக்காகத் திருமா னின்ற
நிலைகண்டு மிவள் விரித்த குழல்கண்டு
மிகைப்பொழுதி னேரார் தம்மைக்

கொலேகண்டு மகிழாம லவன்குடைக்கீ
ழுயிர்வாழக் குறிக்கின் றீரே.

(இ-ள்.) மலையைக் கண்டதென உன்கையி லிருக்கின்ற தண்டாயுதத்தினுடைய பிரபலங் கண்டும், அருச்சுனனுடைய காண்டீபத்தின் வலிமைகண்டும், நகுல சகாதேவருடைய வல்லமை கண்டும், நமக்குச் சகாயமாக ஸ்ரீகிருஷ்ணபகவானிருக்கும் நிலைமை கண்டும், இந்தத்திரத்தில் துரியோதனனுதியரை சர்வசங்காரம் பண்ணி மகிழ்ச்சி யடையாமல் பகையாளியுடைய குடையின் கீழே வாழும்படி குறித்திருக்கின்றீர். தரும புத்திரரே! என்றான் வீமசேனன் (எ-று.) 19

வெம்புயவீ மனும்வெகுண்டு மீண்டுமிவை
யெடுத்துரைப்ப மேக மேனிப்
பைம்பொனெடுந் தனித்திகிரிப் பரந்தாமன்
கருணையுடன் பரிந்து நோக்கி
யம்புவியின் முன்பிறந்தோ ரரசுநெறி
முறையுரைத்தா லதுகேளாமற்
றம்பியரு மறுப்பரோ. தலைவவினிக்
கடுங்கோபந் தணிக வென்றான்.

(இ-ள்.) வலிய புயமுடைய வீமசேனன் மறுபடியுங் கோபித்து இந்த வசனங்கள் சொல்ல, மேகம் போன்ற திருமேனியும் பசும்பொன்போன்ற நெடிய சக்ராயுதமுமுடையஸ்ரீகிருஷ்ணபகவான்கிருபையுடன் பவுரிகொண்டு பார்த்து இப்பூமியின்மீது முன்பிறந்த தமையன்மார் இராஜ நீதி முறைமை சொன்னால் அதைக்கேளாமல் தம்பிமார் மறுப்பார்களோ? தலைமை பெற்ற வீமசேனனே! இனிக் கடியகோபத்தைத் தணிக்கக் கடவாயென்று திருவுளம் பற்றினார் (எ-று.) 20

மைக்கால முகிலூர்தி வானவர்கோன்
றிருமதலை வணங்கி நின்று
முக்காலங் களுமுணரு முகுந்தனுக்கு
முதல்வனுக்கு மொழிவான் மன்னே
வக்காலம் பொருத்தவெலா மமையாம
லின்னமிருந் தறமே சொன்ன

லெக்காலம் பகைமுடித்துத் திரௌபதியுங்
குழன்முடிக்க விரும்புகின் றாளே.

(இ-ள்.) மைபோலுங் கரிய மேகவாகனனான தேவேந்திரனுடைய குமாரனான அர்ச்சுனன் வணக்கஞ்செய்து நின்று திரிகாலங்களையுமறியும் ஸ்ரீகிருஷ்ண பகவானுக்கும் தருமபுத்திரருக்கும் சொல்லியதாவது அந்தக் காலத்தில் துரியோதனன் பண்ணிய குற்றங்களைப் பொறுத்த பொறுமைகள் எல்லாம் போதாமல் இன்னமுந் தருமத்தையே பாராட்டினால் எந்தக் காலத்தில் பகையை முடித்துத் திரௌபதை கூந்தலை முடிக்க விருக்கின்றாள் என்று பின்னுஞ் சொல்லுவான் (எ-று.)

தேவரா யினும்பழைய தயித்தியரா
யினுமற்றுஞ் செப்பு கின்றோர்
யாவரா யினுமெதிர்த்தோ ருயிருணவென்
றிருப்பதுவே யென்கை வாளி
மூவரா யவர்களுக்கு முதல்வனா
கியமூர்த்தி முகிற்றோய் பூக
மீவரா லுகளும்வயற் குருநாடென்
னிவனவன்பால் வேண்டு மாறே.

(இ-ள்.) தேவர்களானாலும் பழைய அசுரர்களானாலும் பின்னுஞ் சொல்லுகின்ற வலிமைபெற்றபேர் எவர்களானாலும் எதிர்த்த பேர்களுடனே உயிரைத் தனக்குப் புசிப்பென்று நினைத்திருப்பது என் கைப் பாணம, திருமூர்த்திகளுக்கு முதல்வரான ஸ்ரீகிருஷ்ண தேவரே! மேகந்தோய்கின்ற கமுகின்மேல் வராலினங்கள் பாய்கின்ற கழனிகள் சூழ்ந்த குருநாட்டை என்ன நிமித்தம இந்தத் தருமபுத்திரர் துரியோதனனிடத்தில் வேண்டுகின்றது என்று பின்னுஞ் சொல்லுவான். 22

தீண்டாத கற்புடை செழுந்திருவைத்
துகிலுரிய செயலொன் றின்றி
நீண்டானே கரியானே விமலாவென்
றரற்றினளாய் நின்று சோர
மாண்டார்போ லதுகண்டு மன்னவையில்
யாமிருந்த மாசு தீர

வேண்டார்வோ வேண்டுவது மேம்படுநல்
லறமேயோ வேந்தர் வேந்தே

(இ-ள்.) அக்கினியைப் போன்ற தீண்டத்தகாத பதிவிரதமுடைய துரௌபதையைச் சபையிலே துரியோதனன் துற்சாதனனை விட்டுத் துகிலுரிந்தபோது அவள் யாதொரு செயலும் இல்லாதவளாய், நெடிய விராட்சொரூபத்தை யுடையவனே! நீலவண்ணனே! நிமலாவென்று முறையிட்டவளாகி நின்று சோர்வடைய அதைக் கண்டும் மாண்டவர்களைப்போலவே ராஜசபையிலே நாம் இருந்த குற்றந் தீரவேண்டாமா? அவனிடத்தில் பூமியை இரந்து கேட்பது நல்ல தருமந்தானோ; அரசர்க்கரசனாகிய தருமபுத்திரரே! என்று பின்னுஞ் சொல்லுவான் அருச்சுனன். எ-று.

பொன்னுருந் திகிரியினன் போனாலும்
பெர்றைவேந்தன் புகன்ற வெல்லாஞ்
சொன்னாலு மவன்கேளான் விதிவலியாற்
கெடுமதிகண் டோன்று தன்றே
யெந்நாளு முவர்நிலத்தி னென்முளைவித்
திடினும்விளை வெய் திடாது
பன்னகத் தனக்கமிர் தங் கொடுத்தாலும்
விடமொழியப் பயன்கொ டாதே.

(இ-ள்.) பொன்போன்ற பிரகாசத்தையுடைய சக்ரதாரனாகிய ஸ்ரீகிருஷ்ணதேவர் தூதராகப் போனாலும், தருமபுத்திரர் சொன்ன வார்த்தைகள் எல்லாம் சொன்னாலும், அந்தத் துரியோதனன் கேளான். விதியின் வலியால் கெடுமதி கண்ணுக்குத் தோன்றுது. எந்நாளும் உவர்நிலத்திலே நல்ல விதைகள் விதைத்தாலும் விளையமாட்டா. நச்சுப்பல்லையுளைய பாம்புக்குப் பால்வார்த்து வளர்த்து வந்தாலும் விஷத்தை யல்லாது வேறொரு பயனைக் கொடாது எ-று. 24

பார்த்தனிவை புகன் றிறைவன் பணிந்தருளு
விருந்ததிற்பின் பரிவி னோடுந்
தீர்த்தனிரு பதமிறைஞ்சித் தருமனையுங்
கைதொழுது சினங்கொள் வேலா

னீத்தநெடுங் கடலெழுபா ரடலேவர்
பெறுவரெனு நிகழ்ச்சி பொய்யோ
கோத்தருமந் தனிலாண்மை கூறுதோ
கூறுக்நீ கொற்ற வேந்தே.

(இ-ள்.) அருச்சுனன் இந்த வசனஞ் சொல்லக் கிருஷ்ண பகவான் கையமர்த்த, அவனிருந்த பின்பு, நகுலன் அன்புடனே கிருஷ்ணபகவானுடைய உபய பாதங்களையும் வணங்கித் தரும புத்திரரையும் தொழுது, ஜலமயமான சமுத்திரஞ் சூழ்ந்தபூமியைப் பெருமை பொருந்திய பஞ்ச பாண்டவர்கள் பெறுவார்க ளென்று சொல்வது பொய்யோ? தரும புத்திர மகாராஜனுடைய சவுரியஞ் சொல்லாதோ! சொல்லுக நீ வெற்றியை யுடைய அரசனே யென்று பின்னுஞ் சொல்லுவான்.

கேவலந்தீர் வலியபகை யிடக்கமுதற்
கிளர்மழைக்குக் கிரியொன் றேந்து
கோவலன்போ யுரைத்தாலுங் குருநாடு
மரசுமவன் கொடுக்க மாட்டா
னுவலம்பூ தலத்தரசர் நாடிழந்தோ
மென நம்மை நகையா வண்ணங்
காவலன்றன் படைவலியு மெனதுதடம்
புயவலியுங் காண லாமே.

(இ-ள்.) கேவலமாகத் தீர்த்தற்கு அரிய பகை யிருக்க, மேகஞ் சொரிகின்ற அதிக மழைக்குப் பசுத் திரளைக் காக்கும் பொட்டுக் கோவர்த்தன கிரியைக் குடையாக ஏந்திய கிருஷ்ண பாவான் தூது போய்ச் சொன்னாலும், நமது குரு நாட்டையும் அரசையும் அத் துரியோதனன் கொடுக்க மாட்டான். ஆகையாலே சம்புத் தீவாகிய இந்தப் பூமியிலே யிருக்கின்ற அரசர்க ளெல்லாரும் நமது நாட்டை நாமிழந்தோம் என்று நகையா திருக்கும்படி துரியோதனனுடைய சேனை வலிமையும் என்னுடைய விசாலமாகிய புய வலிமையும் பார்க்கலா மென்று பின்னுஞ்சொல்லுவான் நகுலன்.

அன்னநடை யரம்பைதனை யவுணர்கவர்ந்
திடவிமையோ ரரசுக் காக
முன்னவ ருடன் பொழுது சிறைமீட்டா
னக்குலத்து முதல்வ னன்றோ

மன்னவையில் யாங்காண மடவரலைத்
துகிலுரிந்த வலியோன் றன்பா
லின்னமிரந் தவன்குடைக்கீ ழிருந்தக்கா
னம்மையுல கென்சொலாதே.

(இ-ள்.) அன்னம் போன்ற நடையுடைய ஊர்வ சியை அசுரர்கள் கவர்ந்துகொண்டு போக அவள் பயந்து முறையிடுவது தெரிந்து இந்திரன் பொருட்டு முற்காலத்திலே அந்த அசுரருடனே வானில் ரதத்தைக் கடாவி யுத்தஞ் செய்து சிறை மீட்டவன் நம்முடைய குலத்தலைவனாகிய புரூரவச் சக்கரவர்த்தி யல்லவோ? ராஜ சபையிலே நான் காணும்படி துரௌபதியைத் துகிலுரிந்த துரியோதன னிடத்தில் இன்னும் யோசித்து அவன் குடை நிழலில் இருந்தால் நம்மையுலகமென் சொல்லாதென்று பின்னுஞ் சொல்லுவான் நகுலன். எ-று. 27

கானெறிபோய்க் கரந்துறைந்து கடவநாட்
கழிந்ததற்பின் கானநீங்கி
யீனமிலா வகைவந்தார் நந்துணைவ
ரெனச்சிறிது மிரங்கா னாகின்
மாநகரும் வளநாடு முரிமையுந்தன்
மொழிப்படியே வழங்கானாகிற்
றானறியா தவன்பிறர்போய்க் கற்பித்தா
லறிவனோ தரணி வேந்தே.

(இ-ள்.) வனவாசம் பன்னிரண்டு வருடமும் அஞ்ஞாத வாசம் ஒரு வருடமும்இருந்து கழிந்தபின், நாட்டை விட்டு ஈன மில்லாதபடி வந்தார்கள். அண்ணன் தம்பிமார்களென்று கொஞ்சமு மிரக்கஞ் செய்யானாகில், தாயாதி பாகத்தையும் மகத்தாகிய தமது நகரையும் வளமை தங்கிய நாட்டையும் முன் சொல்லியபடி கொடாமற் போவானாகில், தானே யறியாதவன் ஒருவன் போய்ச் சொன்னால் அறிவானோ? பூமிக் கரசனான தரும ராஜாவே! என்றான் நகுலன் எ-று. 28

நகுலனிவை யுரைத்ததற்பி னன்றெனக்கை
யமைத்தருளி நகுலன் சொல்லும்

இகல்விசயன் மூன்மொழியுந் திறல்வீம
னியம்பியதும் யாவுங் கேட்டோம்
புகலரிய வுணர்வுடையோய் திறலுடையாய்
நின் கருத்தைப் புகல்நீ யென்ன
முகிலனைய திருமேனி முகுந்தனுக்கு
மனமுருக மொழிகின் றானே.

(இ-ள்.) நகுலன் இந்த வசனஞ் சொல்ல, நல்ல தென்று கையமர்த் தருளி நகுலன் சொன்னதும், வலி மையுடைய அருச்சுனன் சொன்னதும், சவுரியத்தை யுடைய வீமசேனன் சொன்னதும், எல்லாந் தெரிந் தோம். சொல்லுதற்கரிய அறிவையும் கீர்த்தியையும் உடைய சகாதேவா! உனது கருத்தைச் சொல்லென்று கிருஷ்ண பக்வான் கேட்க, மேகவண்ணரான திருமால் திருவுள்ள முருகும்படி சொல்லுவான் சகாதேவன். 29

சிந்தித்த படிநீயுஞ் சென்றாலென்
னொழிந்தாலென் செறிந்த தூறு
மைந்தர்க்குங் முதல்வனிலம் வழங்காம
லிருந்தாலென் வழங்கி னாலென்
கொந்துற்ற குழலிவளு முடித்தாலென்
விரித்தாலென் குறித்த செய்கை
யந்தத்தின் முடியும்வகை யடியேற்குத்
தெரியுமோ வாதி மூர்த்தி.

(இ-ள்) ஆதி நாராயணனாகிய ஸ்ரீ கிருஷ்ண பக வானே! நீ நினைத்தபடியே தூது போனா லென்ன, போகா திருந்தா லென்ன, துரியோதனன் பூமி கொடா விட்டாலென்ன, கொடுத்தா லென்ன, வாசனை பொருந் திய கூந்தலைத் துரௌபதை முடித்தா லென்ன, விரித் தாலென்ன, நீர் நினைத்த காரியம் முடிவிலே முடியும் விதம் அடியேனுக்குத் தெரியு மென்றான் சகாதேவன்.

முருகவிழ்க்கும்பசுந்துளப முடியோனே
யன் றலகை முலைப்பா லுண்டு
மருதிடைச்சென் றுயச்சகடம்விழவுதைத்துப்
பொதுவர்மனை வளர்ந்த மாலே

யொருவருக்குந் தெரியாதிங் குன்மாயை
யானறிவே னுண்மை யாகத்
திருவுளத்துக் கருத்தெதுவோ வதுவெனக்குங்
கருத்தென்றான் தெய்வ மன்னன்.

(இ-ள்.) வாசனை வீசுகின்ற துளபமாலை யணிந்த கிரீடத்தை யுடையவரே! அன்று பூதகியினுடைய முலைப்பா லுண்டு நாரதர் சாபம் பெற்றிருந்த நளகூபன் மணிகூபன் என்ற இருவரின் மருத மரங்களை யொடித்து, சாப விமோசனஞ் செய்து, சகடறவுதைத்த கிருஷ்ண பகவானே! இங்கே நீர் செய்கின்ற மாயம் ஒருவருக்குந் தெரியாது, எனக்குத் தெரியு மாகையால், சத்தியமாக உம்முடைய திருவுளத்துக்கு நினைப்பு எதுவோ? எனக்கு மதுவே கருத்தென்றான் தெய்வத்தையொத்த சகாதேவன் எ-று. 31

இவ்வண்ணஞ் சகாதேவ னியம்புதலும்
நகைத்தருளி யிகலோர் சொன்ன
வவ்வண்ணம் புகலாமல் விரகுரைத்தா
னிவனென்ன வவனோ டாங்கோர்
பைவண்ண மணிக்கூடந் தனியெய்திப்
பாரதப்போர் பயிலா வண்ண
மும்வண்ணஞ் சொல்லுகநீ யுபாயமெனத்
தொழுதுரைப்பா னுரங்கொள் வேலான்.

(இ-ள்.) இந்தப் பிரகாரம் சகாதேவன் சொன்ன மாத்திரத்திலே கிருஷ்ண பகவான் புன்சிரிப்புக் கொண்டு தரும புத்திராதியர் சொன்ன அவ்விதம் சொல்லாமல் இவ னுபாயமாய்ச் சொன்னா னென்று அவனுடனே யங்கே நாகரத்தினத்தால் இழைக்கப்பட்டிருக்கின்ற ஓர் ஏகாந்தஸ்தானத்திலேபோய்இந்தபாரத யுத்தஞ் செய்யா திருக்கும் விதத்தையும் உய்யும் விதத்தையும் சொல்லென்று கேட்க, அவரை வணங்கிச் சொல்வான் சகாதேவன் எ-று. 32

வேறு

நீபா ரதவமரில் யாவரையு நீறாக்கிப்
பூபாரந் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணா
கோபாலா போரேறே கோவிந்தா நீ யன்றி
மாபா ரதமகற்ற மற்றார் கொல் வல்லாரே

(இ-ள்.) ஸ்ரீகிருஷ்ண பகவானே! நீ பாரத யுத்தத்தில் சர்வ தேசத்து இராஜ வர்க்கத்தையும் குருக்ஷேத்திரத்திலே கூட்டிச் சாம்பலாக்கிப் பூமி பாரந் தீர்க்க இந்த யத்தனஞ் செய்தாய் மேகவண்ணனே! பசுக்களைப் பரிபாலனஞ் செய்பவனே! யுத்தத்திற்கு ஆண் சிங்கம் போன்றவனே! கோவிந்தனே! உன்னையல்லாமல் இந்த மகா பாரதத்தை நீக்கவல்ல வேறே யாரிருக்கிறார்கள் சொல்லுவாய் என்று, பின்னுஞ் சொல்லுவான் சகாதேவன் எ-று. 33

பாராளக் கன்னனிகற் பார்த்தனை முன்கொன் றணங்கின்
காரார் குழல்களைந்து காலிற் றளைபூட்டி
நேராகக் கைப்பிடித்து நின்னையுயான் கட்டுவனேல்
வாராமற் காக்கலா மாபா ரதமென்றான்.

(இ-ள்.) கர்ன மகாராஜனை இப் பூமி யாளும்படி பட்டங் கட்டி அவனைக் கொல்லுகிறேன் என்று பகைத்திருக்கின்ற அருச்சுனனை முன்னே கொன்று, திரௌபதியுடைய மேகம்போன்ற கூந்தலைக் களைந்து, காலிலே விலங்கிட்டு, உன்னையும் யான் நேராகக் கைப் பிடித்துக் கட்டுவனேயானால், இந்த மகா பாரத யுத்தம் வாராமல் காக்கலாம் என்றான் சகாதேவன் எ-று. 34

முன்னைநீ கூறியவை யெல்லா முடித்தாலு
மென்னைநீ கட்டுமா றெவ்வா றெனமாய்
னுன்னைநீ தானு முணராதா யுன்வடிவந்
தன்னைநீ காட்டத் தளைந்திடுவன் யானென்றான்.

(இ-ள்.) ஸ்ரீகிருஷ்ணபகவான் முன்னம் நீ சொல்லியபடி அவைகள் எல்லாஞ் செய்து முடித்தாலும் என்னைப் பிடித்துக் கட்டும்விதம் எவ்வாறு எனக் கேட்க உன்னுடைய பெருமை யறிவார் யார்? உனக்கேற்பட்ட வடிவைக் காட்டினால் நான் கட்டுவேன் என்றான் சகாதேவன் எ-று. 35

மாயவனு மன்புன் மனமறிவாம் கட்டுகவென்
றூய வடிவுபதி னாறா யிரங் கொண்டான்
றாயவனு மூலமாந் தோற்றமுணர்ந் தெவ்வுலகுந்
தாய வடியிணைக டன்கருத்தி னாற்பிணித்தான்.

(இ-ள்.) ஸ்ரீகிருஷ்ண பகவானும் அன்பனுடைய மனமறியும்படியாக நம்மைக் கட்டும் பிள்ளாய் என்று தமது இச்சையினலாகிய பதினாறாயிரம் வடிவுகொண்டார். பரிசுத்தனாகிய சகாதேவனும் அவ்வடிவுகளுக்கெல்லாம் ஆதியாகிய வடிவை ஞானத்தாலறிந்து எல்லா வுலகங்களையுந் தாவியளந்த இரண்டு பாதங்களையுந் தன் கருத்தாகிய கயிற்றினாலே கட்டினான். 36

நீதேவ னென்றறிந்து நெஞ்சாற் றனைக்கட்டுஞ்
சாதேவன் கண்களிக்கத் தானேயாய் முன்னின்றான்
பூதேவ ருங்கனகப் பூங்கா நிழல்வைகு
மாதேவ ருந்தேடிக் காணா மலரடியோன்.

(இ-ள்.) பதினாறாயிரம் வடிவிலே மூலமாகிய வடிவையறிந்து நீதான் தேவனென்று நிச்சயித்து மனதினாலே தன்னைக் கட்டிய சகாதேவனுடைய கண் களிக்கும்படி தானேயாகி பிரத்தியக்ஷமாய் நின்றார். பூலோகத்துத் தேவர்களும் பொன் மயமாகிய மலர்களையுடைய பஞ்ச தருவின் நிழலிலே தங்கிய பெருமை பொருந்திய தேவர்களுந் தேடிக் காணாத தாமரை மலரை யொத்த அடியுடைய ஸ்ரீகிருஷ்ணதேவர் எ-று. 37

அன்பாலின் றென்னை யறிந்த பிணித்தமைநன்
றென்பாதந் தன்னையினிவிடுக வென்றுரைப்ப
வன்பார தப்போரில் வந்தடைந்தே மைவரையு
நின்பார்வையாற்காக்க வேண்டும்நெடுமாலே.

[இ-ள்.] பக்தியினாலே இன்று என்னைத் தெரிந்து கட்டியபடியால் என்னுடைய பாதத்தை இனி நீ விடக்கடவா யென்று கிருஷ்ண பகவான் சொல்ல, வன்மை பொருந்திய பாரத யுத்தத்திலே எங்களுக்காக வந்து சேர்ந்து, உன்னையே புகலென்று வந்து எங்களைவரையும் கடாக்ஷத்தினாலே ரக்ஷிக்கவேண்டும் நெடிய மகாவிஷ்ணுவே! என்றான் சகாதேவன் எ-று. 38

என்றென் றிறைஞ்சி யிருதாமரைத்தாளி
லொன்றுங் கதிர்முடியாற் கோமென் றுரைத்தருளி
யின்றிங் கிருவேமு மிப்போ துரைத்தமொழி
யென்றும் பிறரறிய வோதா தொழியென்றாள்

[இ-ள்.] இப்படியாகச் சொல்லி வணங்கி இரண்டு தாமரை மலர் போன்ற பாதங்களில் நமஸ்கரித்த சகா தேவனுக்குப் பாண்டவர்களைக் காப்பதாக நிச்சயஞ் சொல்லி இப்போது நாமிரண்டு பேரும் பேசிய அந்த ரங்கத்தை அன்னியர் அறியும்படி சொல்லாதே என்றார் ஸ்ரீகிருஷ்ணதேவர் எ-று. 39

ஆண்டிருந்த வவை நீங்கி யறிவுடையோ ரிருவோரும்
பாண்டவர்கண் முன்னெய்திப் பழுதில்புகழ்ப் பாஞ்சாலி
நீண்டகருங் குழல்சோர நின்றாளை முகம்நோக்கி
யீண்டவரி லினியோனுஞ் சந்துமிக வினிதென்றான்.

[இ-ள்.] அவ்விடத்தைவிட்டு நீங்கி அறிவுடைய அவ்விரண்டுபேரும் தருமபுத்திரர் முதலானோர் இருக்கின்ற சபைக்கு வரக் குற்றமற்ற கீர்த்தியை யுடைய துரௌபதை கருமைபொருந்திய நீண்ட அளகபாரஞ் சோர நிற்பவளைச் சாத்தகியாழ்வார் நோக்கி இந்தச் சமயம் மிகவும் நல்ல சமயம். நீ கேட்கவேண்டிய வரங்களை வேண்டிக் கொள்ளென்றார் எ-று. 40

தருமனுக்குங் கருத்திதுவே தமருடன் போர் புரியாமல்
இருநிலத்தினுடன் வாழ்தலெனக்கு நினை வென்றுரைத்தான்
வரிமலர்க்கண் புனல்சோர மலர்மறந்த குழல்சோர
விரைமலர்ச்செஞ்சேவடிக்கீழ் வீழ்ந்தழுதாள் மின்னனையாள்.

[இ-ள்.] சாத்தகியாழ்வார் சொன்னதைக் கேட்ட பாஞ்சாலி ஞாதிகளுடனே யுத்தஞ் செய்யால் பெருமை பொருந்திய இப்பூமியின்கண் கூடிவாழவே தரும புத்திரருக்குங் கருத்து, இந்தச் சகாதேவருக்கும் இதுவே கருத்து என்றால், என்னுடையபிரதிக்கினை முடிப்பது என்றோவென்று செவ்வரிபரந்த கண்களில் நீரொழுகவும், மலர்கள் செறிந்த குழல் சோரவும், ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய விரிந்த செந்தாமரைப் பாதங்களில் விழுந்து பிரலாபித்தாள் மின்னலையொத்த வடிவையுடையவளான துரௌபதி எ-று. 41

காலக் கனகன் றன்மைந் தனைமுனிந்த
காலத் தவனறைந்த கற்றூணிடைவந்தாய்
மூலப்பே ரிட்டழைத்த மும்மதமால் யானைக்கு
நீலக் கிரிபோன்றான் னின்ற நெடுமாலே.

(இ-ள்.) ஆதிபகவானுன நாராயணன் எங்கே யிருக்கின்றானென்று கேட்க, தூணிலுமிருப்பான் இந்தத் துரும்பிலு மிருப்பானென்று சொன்ன ஒப்பற்ற குமாரனாகிய பிரகலாதனை இரணியன் மிகவும்கோபித்து அக்காலத்தில் அவனு லறையப்பட்ட கற்றூணிலே நரசிங்கவடிவங்கொண்டு வந்தாய், ஆதிமூலமே யென்றழைத்த மும்மதங்களையும் பொழியாநின்ற யானைக்கு நீலமலைபோல் எழுந்தருளி எதிரே வந்த நெடிய மகாவிஷ்ணுவே! என்றாள் எ-று. 42

கற்றைக் குழல்பிடித்துக்கண்ணிலான் பெற்றெடுத்தோன்
பற்றித் துகிலுரியப் பாண்டவரும் பார்த்திருந்தார்
கொற்றத் தனித்திகிரிக் கோவிந்தா நீயன்றி
யற்றைக்கு மென்மான மார்வேறு காத்தாரே.

(இ-ள்.) கற்றையாகிய என்னுடைய அளகபாரத்தைப் பிடித்துத் திரிதராட்டிரன் பெற்ற பிள்ளையாகிய துற்சாதனன் மானபங்கமாகத் துகிலைப்பற்றி உரியும்போது, பஞ்சபாண்டவரும் பார்த்திருந்தார்கள். வெற்றி பொருந்திய சக்காயுதத்தையுடைய ஸ்ரீ கிருஷ்ணபகவானே! உம்மையன்றி அன்றுதினம் என் மானத்தை யார் வந்து காத்தவர்கள் கோவிந்தாவென்று பின்னும் சொல்லுவாள் துரௌபதி எ-று. 43

மன்றிலழைத்தெனக்கு மாசளித்த மன்னவன்பாற்
சென்று தமக்கைந்தூர் திறல்வீரர் பெற்றிருந்தால்
அன்றுவிரித்த வருங்கூந்தல் வல்வினையேன்
என்று முடிப்பதினி யெம்பெருமா னென்றழுதாள்.

(இ-ள்.) மன்னவர்கள் நிறைந்த சபையிலே யழைத்து எனக்குக் குற்றத்தைச்செய்த கொடிய பாதகனாகிய துரியோதனன்பால் சுத்தவீரர்களாகிய பாண்டவர்கள் தமக்கு ஐந்தூர் பெற்று உண்டிருப்பாராகில் அன்று விரித்த அரிய அளகபாரத்தைத் தீவினையுடைய அடியேன் இனி என்றைக்கு முடிப்பது எமதுகடவுளே என்றழுதாள் துரௌபதி எ-று. 44

தண்டிருந்த திவன்கரத்திற் றனுவிருந்த தவன்கரத்தில்
வண்டிருந்த பூங்குழன்மேன் மாசிருந்த தெனவிருந்தாள்

கண்டிருந்தீ ரெல்லீருங் கருதலர்பா லூர்வேண்டி
யுண்டிருந்து வாழ்வதற்கே யுரைக்கின்றீ ருரையீரே.

(இ-ள்.) இந்த வீமசேனன் கையில் தண்டாயுத மிருந்தது; அந்த அருச்சுனன் கையில் வில்லிருந்தது, இந்தத் துரௌபதியினது வண்டுகள் சூழ்ந்த பூங்குழல் மேல் குற்றமிருந்த தெனும்படி யிருந்தாள்; நீங்களெல்லோரும் பார்த்திருந்தீர்கள்; சத்துருக்களிடத்திலே ஊர்வேண்டிப் பெற்றுக்கொண்டு புசித்து உயிர்வாழ்வதற்கு நினைக்கின்றீர்களே; இதற்கு உத்தரவு சொல்லுங்க ளென்றார் சாத்தகியாழ்வார் எ-று. 45

சண்டமுகி லுருவனைய சராசந்தன் றனக்கஞ்சி
வண்டுவரை யரணாக வடமதுரை கைவிட்ட
திண்டிறன்மா தவன்மதியோ திகழ்தருமன் றன்மதியோ
பண்டுமவர் கருத்தறிந்து பார்போய் வேண்டுவதென்றான்.

(இ-ள்.) பிரளயகாலத்து மேகத்திடியை யொத்த சராசந்தன் என்னும் அரசனுக்குப் பயந்து வளப்பந் தங்கிய துவாரகை யென்னுங் கோட்டையைக்கொண்டு வடமதுரை என்னும் பட்டணத்தைக் கைவிட்ட வலிய சவுரியத்தை யுடைய ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய மதியோ? பிரகாசத்தையுடைய தருமருடைய மதியோ? முன்னமே துரியோதனாதியர் கருத்துத் தெரிந்திருந்தும் மீண்டும் அவற்பாற்போய்ப் பூமியை வேண்டுவது என்றார் சாத்தகியாழ்வார் எ-று. 46

சாத்தகிநின் றிவையுரைப்பச் சடைக்குழலா ளழுதாற்றக்
கோத்தருமன் முதலாய குலவேந்த ரைவரையும்
பார்த்தருளி யருள்பொழியும் பங்கயற்க ணெடுமாலு
மேத்தரிய பெருங்கற்பி னிளையாளுக் கிவையுரைப்பான்.

(இ-ள்.) சாத்தகியாழ்வா ரெழுந்துநின்று இந்த வசனஞ்சொல்ல, சடைபட்ட குழலையுடைய துரௌபதி பிரலாகித்து புலம்ப, அப்போது தருமபுத்திரர் முதலிய ஐவரையும் பார்த்து அஞ்சாதீர்களென் றமைத்து கிருபாவெள்ளம் பொழிகின்ற தாமரைக்கண்ணனாகிய கிருஷ்ணபகவானும் துதிப்பதற்கரிய பெரியகற்புடைய துரௌபதிக்கு இவ்வகனை அருளிச்செய்தார் எ-று. 47

தொல்லாண்மைப்பாண்டவர்க்குத்தூதுபோய்மீண்டதற்பி
னல்லாயுன் பைங்கூந்த லுனே முடிக்கின்றேன்
எல்லாருங் காண வினிவிரிப்ப தெண்ணரிய
புல்லார்த மந்தப் புரமாதர் பூங்குழலே.

(இ-ள்.) பழமையாகிய சவுரியத்தையுடைய பஞ்ச பாண்டவர்க்காகத் தூதுபோய் வந்தவுடனே பாஞ்சாலியே! உன்னுடைய பசிய கூந்தலை நானே முடிப்பேன் எல்லோரும் பார்க்கும்படி பின்னால் விரிக்கப்படுவது எண்ணிக்கையற்ற சத்துருக்களுடைய அந்தப்புரத்திலிருக்கின்ற ஸ்திரீகளுடைய பூவையணிந்த கூந்தல்களென்றார் ஸ்ரீ கிருஷ்ணபகவான் எ-று. 48

மைக்குழலாய் கேளாய் மருவா ருடற்புலத்துப்
புக்குழலா குங்கொழுவாம் போர்வா ளபிமன்னுத்
தொக்குழலும் வெங்கோன்மைத்தொல்வேந்தர்தங்குலமும்
இக்குழலுஞ் சேர முடியா திரானென்றான்.

(இ-ள்.) கரிய கூந்தலை யுடைய திரௌபதியே கேட்பாயாக, சத்துருக்களுடைய தேகங்களாகிய வயலிலே உழுதற்குரிய கொழுபடையென்று சொல்லத் தக்கதுவாம் யுத்தத்திலே சிறந்த வாளாயுதத்தையுடைய அபிமன்னன் ஒன்றாகக்கூடி யுழலுகின்ற கொடுங்கோலின் தன்மையை யுடைய அரசர்களின் குலங்களையும் உன்னுடைய அளகபாரத்தையும் ஒருங்குசேர முடியாமல் விட்டான் என்று பின்னுஞ் சொல்லுவார் ஸ்ரீ கிருஷ்ணதேவர் எ-று. 49

பெண்ணீர்மை குன்றாப் பெருந்திருவின் செங்கமலக்
கண்ணீர் துடைத்திருதன் கண்ணிற் கருணையெனுந்
தெண்ணீரி னாற்பொருந்தத் தேற்றினான் சாற்றுகின்ற
மண்ணீ ரனலனிலம் வான்வடிவா மாமாயன்.

(இ-ள்.) பெண்களுக்கு வேண்டிய சிறந்த குணங்கள் குறைவில்லாத திரௌபதியினுடைய செந்தாமரை மலர்போன்ற கண்களிலிருக்கும் நீரைக் கிருபையென்னும் தெளிந்த நீரால் பொருந்தும்படி தெளியச்செய்தார் சொல்வதற்கு அரிதாகிய பஞ்சபூத வடிவமாகிய பெருமைபொருந்திய ஸ்ரீ கிருஷ்ண பகவான் எ-று. 50

*துன்று பிணியோர் துறந்தோ ரடங்காதோர்*
*கன்று சினமனத்தோர் கல்லா தவரிளையோர்*
*ஒன்றுமுறைமை யுணரா தவர்மகளிற்*
*என்றுமிவர் மந்தணத்தி னெய்தப் பொருதாரே.*

(இ-ள்.) நிறைந்த வியாதி யுடையவர்கள், துறந்த மகான்கள், ஒருவருக்கு மடங்காதவர்கள், கன்றிய கோபமுள்ள மனத்தை யுடையவர்கள், கல்வி யில்லாதவர்கள், பெண்பிள்ளைகள் இன்னோர் என்றும் இரகசியம் பேசுமிடத்தில் இருக்கத்தகுதியற்றவர்கள். எ-று. 51

*என்னக் கயூறி யிருந்தோ ருரைதவிர்த்து*
*நின்னைப் பவரில்லா நீயே கெனவுரைப்ப*
*மன்னர்க்கு மன்னவன்பான் மாயோனுந் தூதாகிப்*
*பொன்னுற்ற நேமிப் பொருபரித்தேர் மேற்கொண்டான்.*

(இ-ள்.) இப்படித் தருமராஜன் சொல்லி யிருந்த மற்றவர் வசனங்களை யடக்கிக் கிருஷ்ணபகவானை நோக்கி உமக்குச் சமானம் ஒருவரு மில்லாத தேவரீரே! தூதுபோக வேணுமென்று பஞ்சபாண்டவர் வேண்டிக்கொள்ள, வணங்கா முடியோனாகிய துரியோதனனிடத்திலே ஸ்ரீ கிருஷ்ணபகவானும் தூதாகிமகாமேரு மலைக்குச் சமானமாகிய குதிரைகட்டிய தேரின்மேலேறிக்கொண்டார் எ-று 52

*சங்கு மணிமுரசுஞ் சல்லரியுந் தாரைகளும்*
*எங்கு முழங்க வெழில்வெண் குடைநிழற்றப்*
*பொங்கு கவரி புரையிரட்ட வெண்ணிலா*
*வங்கமொரு நான்கு மவனிபருந் தற்சூழ.*

(இ-ள்.) அப்போது சங்கவர்க்கங்களும் அழகிய பேரிகைகளும் சல்லரிகளும் தாரைகளும் எவ்விடத்திலும் சப்திக்க, அழகிய சந்திர வட்டக்குடை நிழற்ற, பிரகாசம் பொருந்திய வெண்சாமரைக ளிரண்டு பக்கங்களிலும் வீசிவரக் கணக்கில்லாத இரதகஜ துரகபதாதிகளும் பூமியை யாளும் அரசர்களும் தம்மைச் சூழ்ந்துவரப் புறப்பட்டார் ஸ்ரீ கிருஷ்ணபகவான். எ-று. 53

*கல்வரையும் பாலைக் கடுஞ்சுரமுங் கான்யாறும்*
*நால்வரையு நீர்நாடும் நாளிரண்டிற் சென்றருளித்*

தொல்வரைய கோபுரமு நீண்மதிலுஞ் சூழ்ந்திலங்கு
மல்வரைய தோளான் வளமா நகர்கண்டான்.

(இ-ள்.) கல்லுகள் பொருந்திய பருவதங்களும் பாலை யென்னுங்கொடியசுரங்கங்களும், கான்யாறும், நீர் நாடும், இரண்டுநாளையிற் கடந்துபோய்ப்பழமையாகிய. மலைக்கொப்பான கோபுரங்களும்; நெடிய மதில்களுஞ் சூழ்ந்து விளங்குகின்ற மல்யுத்தத்திற் சிறந்த தோளை யுடைய துரியோதனனது வளமைதாங்கிய நகரத்தைக் கண்டார் ஸ்ரீ கிருஷ்ணதேவர் எ-று. 54

வேறு.

மேவு செந்துகிர்த் திரளுமா மரகத விதமுங்
கோவை வெண்கதிர்த் தரளமு நிரைநிரை குயிற்றித்
தாவும் வெம்பரித் தேரினன் றனக்கெதிர் சமைத்த
காவ ணங்களிற் றோன்றின பச்சிளங் கமுகம்.

(இ-ள்.) அந்த மார்க்கத்தில் பசுமையு மிளமையும் பொருந்திய கமுகுகள் பழுத்த குலைகளும் பாளைகளும் விளங்கியது எப்படி யிருக்கிறதென்றால் சிவந்த நிறத்தையுடைய பவளங்களும் வெவ்வேறு விதமான மரகதங்களும் கோவைசெய்த வெவ்விய கிரணத்தை யுடைய முத்துக்களும் வரிசையாகப் பதித்து, தாவி நடக்கும் குதிரைகள் கட்டிய தேரை யுடைய கிருஷ்ண பகவானுக் கெதிரே யுண்டாகிய மண்டபங்கள்போல் இருந்தன எ-று. 55

வம்பு லாமகில் சந்தனம் வருக்கைமா கர்தஞ்
சம்ப கந்தமா லம்பல திசைதொறுந் தயங்க
உம்பர் நாயகன் வரவுகண் டுளங்களி கூர்ந்து
தும்பி பாடின தோகைகள் நின் றாடின சோலை.

(இ-ள்.) பரிமளம் வீசிய அகிலும் சந்தனமும் பலாவும் மாவும்வாசனைபொருந்திய சண்பகமும்பச்சிலை மாமும் எந்தத் திசைகளிலும் விளங்கியிருக்கப்பட்ட சோலையில் தெய்வ நாயகனாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவான் வருதலைக் கண்டு மனமகிழ்ச்சி யடைந்து வண்டுகள் பாடின, மயில்கள் நின்று கூத்தாடின. 56

அணிகொ ளத்திரு புரியெனு மணக்குஞ்செந் திருவின்
கணவனுக் கெதிர் காட்டுநீ ராசனங் கடுப்ப
மணமி குத்தசெந் தாமரை மலருடன் சிறந்த
புணரி யிற்பெரும் புனலையுக் கொள்வன பெய்கை.

(இ-ள்.) அழகினைக்கொண்ட அவ்திருபுரி யென்னும் கன்னி மகாலக்ஷ்மிக்கு நாயகனாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு எதிரே க்காட்டுகின்ற ஆலாத்திக் கொப்பாக வாசனை மிகுந்த சிவந்த தாமரைமலருடன் சிவந்த கடல்போல் நிறைந்த நீரையுங் கொண்டிருந்தன பொய்கைகள் எ-று. 57

நடந்த நாயகன் கோலமாய் வேலைசூழ் ஞாலம்
இடந்த நாளிடை யதுவழி யாகவந் தெழுந்து
படர்ந்த பாதல கங்கையப் படாமதில் சூழ்ந்து
கிடந்த தாமெனச் சிறந்தது தாழ்புனற் கிடங்கு.

(இ-ள்.) தூது நடந்த ஸ்ரீ கிருஷ்ணபகவான் பூர்வத்திலே வராக ரூபமாய்ச் சமுத்திரஞ்சூழ்ந்த பூமியைப் போர்த்த நாளில் அதுவழியாக வந்தெழுந்து பாவிய பாதாளகங்கை அந்த நகரின் பெரிய மதிலை வளைந்து கிடந்ததென்று சொல்லத் தக்கதாய்ச் சிறந்தது தாழ்ந்த நீரையுடைய அகழி எ-று. 58

அடிநி லத்திலே படிவன விடிமுகி லனைந்து
முடிநி லத்தினுக் குடுபதத் தினுமுடி வில்லை
நெடிய சக்கரப் பொருப்பையு நிகரிலா விதற்கோர்
படிவ குத்ததா மெனும்படி பரந்தது புரிசை.

(இ-ள்.) கீழ்நிலத்திலே படிவனவாகும் இடியையுடைய மேகங்களெல்லாம் அதினுடைய மேல் நிலத்துக்கு நக்ஷத்திர பதவியிலு முடியவில்லை, நீண்டசக்கரவாள கிரியையும் நிகரில்லா இதற்கு ஒருபடி யொப்பாகச் செய்ததாம் என்று சொல்லும்படி பரந்திருந்தது அவ்திருபுரியின் மதில் எ-று. 59

பகலி னுங்கடும் பரிதிதன் கதிர்பரப் பாமல்
இதலி யெங்கணு மெறிந்துகால் பொருதவினேத்திப்
புகலு கின்றமந் தாகினித் தரங்கமே போல
வகல்வி சும்பிடை மிடைவன நெடுங்கொடியாடை

(இ-ள்.) பகற்காலத்திலும் வேகத்தை யுடைய சூரியன் தன் கிரணங்களை வீசாமலிருக்கும்படி வலிமை கொண்டு எவ்விடத்திலும் வீசுகின்ற காற்று பொருது கிறபடியால் உயர்வாகச் சொல்லுகின்ற கங்கையி னுடைய அலைகள் போல அகண்ட ஆகாயத்தினிடத் திலே நெருங்குவன நெடிய கொடியாகக் கட்டிய வஸ்திரங்கள் எ-று. 60

புயங்க பூமியோ புரந்தரற் கமைத்தபொன் னுலகோ
தயங்கு செல்வகீ டளகையோ நிகரெனுந் தரத்த
வியங்கு கார்முகில் வரையினின் றெழுவன போல
வயங்கு காரகின் றும்புகை யுயிர்ப்பன மாடம்.

(இ-ள்.) நாகலோகமோ? இந்திரனுக்குச் செய்த பொன்மயமான தெய்வலோகமோ? விளங்காநின்ற செல்வம் நிறைந்த அளகாபுரியோ? இந்த நகரென்று சொல்லும்படி சஞ்சரிக்கின்ற கரிய மேகங்கள் மலை களின்மேலே நின்று எழுவன போலப் பிரகாசிக்கின்ற கரிய அகிலினது நன்மையாகிய புகைகளை னவீசுகின்ற மாளிகைகள் எ-று. 61

மன்னர் வேழமுஞ் சேனையு மெதிரெதிர் மயங்கப்
பின்னு முன்னுமெம் மருங்கினும் பெயரிடம் பெறுமற்
றுன்னி நின்றவ ரேகுமி னேகுமி னென்னு
மென்னு மோசையே யுள்ளன வீதிக ளெல்லாம்.

[இ-ள்] அரசர்களுடைய யானைகளுஞ்சேனைகளும் ஒன்றுக்கொன்று எதிரிட்டு மயங்கப் பின்னு முன்னும் எந்தப் பக்கங்களிலும் பெயர்ந்து செல்ல இடம் பெறமாட்டாமல் நெருங்கி நின்றவர்கள் செல்லுங்கள் செல்லுங்கள் என்னுஞ்சொல்லினையுடையசபதங்களே உண்டாகி யிருக்கின்றன வீதிகள்எல்லாம் எ-று. 62

வரையெ லாம்பல வனமெலாங் கடலெலாம் விளைந்த
தரையெ லாம்படு பொருளெலாந் தனித்தனி குவித்த
நிரையெ லாங்கம ராவண நீர்மையைப் புலவோ
ருரையெ லாந்தொடுத் துரைப்பினு முவமைவேறுளதோ

[இ-ள்.] மலைகள் எல்லாவற்றினு முண்டாகின்ற மாணிக்க முதலிய திரவியமும், காடுகளெல்லாவற்றினு

முண்டாகின்ற சங்கு முதலிய திரவியங்களும், நாடுகள் எல்லாவற்றினும் உண்டாகின்ற செந்நெல் முதலிய திரவியங்களும், வெவ்வேருகக் குவித்து வரிசையாக வைக்கப்பட்டகடைவீதியி னுடைய் குணத்தை வித்துவான்கள் கற்ற சொற்களெல்லா மெடுத்துச் சொன்னாலும் வேறே யுவமானம் உண்டோ? எ-று. 63

விரவு கான்மல ரினும்பல வீரரின் விதங்கள்
பரவை வெண்மண லினும்பல புரவியின் பந்தி
யிரவில் வானமீ னினும்பல யானையி னீட்ட
நிரைகொள் கார்த்துளி யினும்பல தேரணி நிலையே.

[இ-ள்.] காட்டி லிருக்கின்ற பல மலரைக்காட்டிலும் சுத்த வீரர்களதிக மிருப்பார்கள்; சமுத்திரத்தினுடைய வெள்ளை மணலைக்காட்டிலும்குதிரைப்பந்திகளதிகமாயிருக்கும்; இராத்திரியில்ஆகாயத்திலே தோன்றும் நக்ஷத்திரங்களைப் பார்க்கிலும் யானையின்கூட்டங்கள் அதிகமா யிருக்கும்; நீரைக்கொண்டமழைத்துளியினும் தோணிக ளதிகமா யிருக்கும் எ-று. 64

ஆசி லாமறை யந்தண ராலய மொருபால்
மாசி லாமுடி மன்னவர் மாளிகை யொருபாற்
காசி லாமதி யமைச்சர்தங் கடிமனை யொருபாற்
பேசி லாவள வணிகர்தம் பேரிட மொருபால்.

[இ-ள்.] குற்றமில்லாத நான்கு வேதமும் தெரிந்த பிராமணருடைய திருமாளிகைகள் ஒருபக்கத்திலிருக்கும்; களங்கமில்லாத கிரீடந்தரித்த அரசர் அரன்மனைகள் ஒருபக்கமிருக்கும்; பழுதிலாத புத்தியிற் சிறந்த மந்திரிகளுடைய புதுமை பொருந்திய வீடுகள் ஒருபக்கத்திலிருக்கும். சொல்லுமிடத்தில் நிறைந்த அழகையுடைய வைசியருடைய இடம் பொருந்திய வீடுகள் ஒருபக்கத்தில் இருக்கும் எ-று. 65

மங்க லந்திகழ் மனையெலாம் வலம்புரி யோசை
திங்க டோய்நெடுந் தலமெலாஞ்செழுஞ்சிலம்போசை
யங்கண் மாநக ரனைத்துமும் முரசதி ரோசை
யெங்க ணுங்கட வுளரிடந் தொறுமுழ வோசை.

[இ-ள்.] கல்யாணஞ் செய்கின்ற வீடுகளெல்லாம் வலம்புரியென்னுஞ்சங்கத்தொனியாயிருக்கும். சந்திரன் தோய்கின்ற நெடிய மாடவாங்கமெல்லாம் செழுமை தங்கிய சிலம்போசையா யிருக்கும். அழகிய இடத்தையுடைய மகத்தாகிய நகரமுழுவதும் வீரமுரசு வெற்றிமுரசு தியாகமுரசென்னும் மூவிதப்பேரிகையோசையா யிருக்கும், எவ்விடத்திலும் தேவாலயந்தோறும் மத்தளவோசையா யிருக்கும் எ-று. 66

மூன்றி லின்கணின் றிடம்பெறு வரசர்மா முடிக
ளொன்றொடொன் றறைந்தெற்றிமேலொளிர்பொறிசிதறிச்
சென்றுசென் றுதிசைதொறுந் திகழ்ந்தது செம்பொற்
குன்றெ னும்படி குருகுல நாயகன் கோயில்.

[இ-ள்.] தெருவாசலிலே நிற்க இடம்பெறு அரசர்களுடைய கிரீடங்கள் ஒன்றோடொன்று தேய்ந்தும் இடிபட்டும் மேலே பிரகாசிக்கின்ற அபரஞ்சிப் பொடிகள் தெறித்துப்போய்ப்பொருந்துகின்றதிக்குகள் தோறும் விளங்கியது மகா மேருமலை யெனும்படி நின்றது துரியோதனனுடைய அரண்மனை எ-று 67

என்றி சைக்குநல் லொளிமிகு ரெழின்மணி மகுடக்
குன்றி சைக்கும்வண் கோபுர நீணகர் குறுகிச்
சென்றி சைக்குளிர் செண்பக மலர்தொறுஞ் சிதைத்தே
னின்றி சைக்கும்வண் சோலைவா யமர்ந்தன னெடுமால்.

[இ-ள்.] சூரியனென்று சொல்லுகின்ற பிரகாசமுயர்ந்த அழகிய ரத்தினங்கள் பதித்த சிகரங்களையுடைய மலையென்று சொல்லுகின்ற வளத்தைப்பெற்ற கோபுரத்தையுடைய நெடிய அஸ்தினபுரத்திற்சேர்ந்து அதற்குத் தென்றிசையில் குளிர்ச்சி பொருந்திய சண்பகமலர்கள் தோறும் சிறிய வண்டுகளிருந்து பாடுகின்ற வளப்பம்பொருந்திய சோலையி லெழுந்தருளினார் கிருஷ்ணபகவான் எ-று. 68

அன்று தூதுகொண் டிலங்கைதீ விளைத்தவ ரைவர்க்
கின்று தூதுவந் தெயிற்புறத் திறுத்தன ரென்னுத்
துன்று தூதுவண் டினமுர ளுடையலான் றனக்குச்
சென்று தூதுவ ரியம்பினர் சேவடி வணங்கி

[இ-ள்.] முற்காலத்தில் ஒரு குரங்கை தூதாக விடுத்து இலங்காபுரியை அக்கினியை மூட்டியழித்தவர், பஞ்ச பாண்டவர்க்காக இன்று தூதாகவந்து மதிற்புறத்துச் சோலையிலிருந்தாரென்று நெருங்கியமலரினிடத்து வண்டுகள் பாடுகின்ற பசிய மலர்மாலையணிந்த துரியோதன ராஜனுக்குத் தூதுவர் போய்ச் சிவந்த பாதங்களை வணங்கிச் சொன்னார்கள் எ-று. 69

தொல்லை நாயகன் வந்தன னென்றலுஞ் சுரும்பார்
மல்லன் மாலையா னேவலான் மாநகர் மாக்கள்
எல்லை நீண்மதில் வட்டம்யோ சனையெழு நூறுஞ்
செல்வமாநகர்த் தெருவினை யொப்பனை செய்தார்.

[இ-ள்.] ஆதிநாயகனாகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் தூது வந்தார் என்று சொன்ன மாத்திரத்தில், வண்டுகள் நிறைந்த வளத்தை யுடைய மாலையை யணிந்த மார்பனான துரியோதன ராஜனது ஏவுதலினாலே மகத்தாகிய அஸ்திநாபுரத்தில் உள்ளவர்கள் விருத்தமாகிய நெடிய எழுநூறுயோசனை யளவு அகன்றிருக்கின்ற பெரிய பட்டணவீதிகளை அலங்கரித்தார்கள் எ-று. 70

மின்னுமாமுகிற் பல்லிய விதங்கண்முன் முழங்க
மன்னர் மன்னவ னெழுந்தனன்மாலெதிர்கொள்வான்
என்னை நீயவற் கெதிர்செல்வ தென்றுதன் மருகன்
றன்னை வன்பொடு தகைந்தனன் கொடுமைகூர்சகுனி.

[இ-ள்.] மின்னுதல் செய்கின்ற பெரிய மேகங்களைப் பார்க்கிலும் நானாவித வாத்தியங்களும் முழங்க அரசர்க்கரசனாகிய துரியோதனன் ஸ்ரீகிருஷ்ணபகவானை எதிர்கொள்ள வெழுந்தான், அதுகண்டு தூது வருகிறவர்களை எதிர்கொள்வது என்ன மரியாதையென்று தனக்கு மருமகனாகிய அந்தத் துரியோதன ராஜனை வன்பினாலே தடுத்துவிட்டான் கொடுமை மிகுந்துள்ள சகுனியானவன் எ-று. 71

சீர்வ லம்புரி திகிரிசேர் செங்கையான் றனக்குக்
கார்வ லம்புரி கோயிலுங் காட்சியுமமைத்துப்
போர்வ லம்புரி நிருபரு மிளைஞரும் போற்றத்
தார்வ லம்புரி யவனிருந்தனன் பொலந் தவிசின்

[இ-ள்] சிறப்பு மிகுந்த சங்கு சக்கரஞ் சேர்ந்த சிவந்த திருக்கரங்களுடைய ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு மேகங்கள்வலஞ்செய்யப்பெற்ற அரண்மனையுங் காணத் தக்கபொருள்களும்பொருந்தச்செய்து, யுத்தகளத்திலே வலிமைபெற்ற இராஜவர்க்கமும்பந்துக்களும் வணங்க, நந்தியாவட்ட மாலையணிந்த புஜத்தையுடைய துரியோதனராஜன் சிங்காதனத்திலிருந்தான் எ-று: 72

தொல்ப கீரதிமைந்தனுந் துரோணனுஞ் சுதனும்
வில்வி தூரனுங் கிருபனு முதலிய வேந்தர்
மல்கு மூவிரு பத்துநூ றுயிர மகிபர்
செல்வ நாயகற்கி யோசனை யிரண்டெதிர் சென்றார்.

[இ-ள்.] அப்போது நெடுங்காலமா யிருக்கின்ற கங்காபுத்திராகிய வீஷ்மாச்சாரியரும் துரோணாச்சாரியரும் அஸ்வத்தாமாவும் வில்லிலே வல்லவனான விதுரமகாராஜனும் கிருபாச்சாரியரும் இவர்கள் முதலிய அரசர்களும் நெருங்கிய அறுபது நூறுயிரமன்னர் மண்டலீகரும் கிருஷ்ணபகவானை இரண்டு யோசனை தூரத்திலே போய் எதிர் கொண்டார்கள் எ-று. 73

வந்து வந்திரு மருங்கினு மன்னவர் வணங்கப்
பைந்து ழாய்முடிப் பரமனுங் கண்மலர் பரப்பி
அந்த மாநகர் புகுந்தபி னரசனிற் புகாமற்
புந்தி கூரருள் விதுரன்வாழ் வளமனை புகுந்தான்.

[இ-ள்.] வந்து வந்து இரண்டு பக்கத்திலும் அரசர்கள் பணியப் பசிய மலர்மாலை யணிந்த கிரீடத்தையுடையஸ்ரீ கிருஷ்ணபகவானும் அவர்களைப் பார்த்துக் கிருபைகூர்ந்து அஸ்திநபுரத்துக்கு வந்த பின்பு துரியோதனராஜன் அரண்மனைக்குப்போகாமல்கிருபை மிகுந்த மனமுள்ள விதுரமகாராஜன் வாழ்கின்ற வளப்பத்தையுடைய அரண்மனையிலே எழுந்தருளினார் எ-று.

வேந்தர் யாரையும் விடைகொடுத் தகன்றபின் விமலன்
வாய்ந்த மாளிகை நடுவணோர் மண்டபங் குறுகி
யாய்ந்து வல்லவர் நவமணி யழுத்திய வரியே
றேந்து மாசன மிடப்பொலிந் ததன்மிசை யிருந்தேன்

[இ-ள்.] எதிர்கொண்ட அரசர்களுக் கெல்லாம் செலவு கொடுத்து அவர்கள் போனபின்புஸ்ரீகிருஷ்ண பகவான் பொருந்திய உப்பரிகையின் நடுவேஒருமண்டபத்திற்போய், சிற்பங்களாய்ந்த வல்லவர்கள் அமைத்த நவரத்தின மழுத்திய சிங்கந் தாங்குகின்றஆசனங் கொடுக்க, அதன்மேல் பிரகாசத்துடனே எழுந்தருளி யிருந்தார் எ-று. 76

இருந்து வந்தரு ளிறைவனை யிறைஞ்சின னிறைஞ்சிப்
பெருந்து வந்தனைப் பிறப்பையு மிறப்பையும் பிரித்தான்
மருந்து வந்தனை யமரருக் கருளிய மாயோன்
விருந்துவந்தன னென்றுள முருகிய விதுரன்.

[இ-ள்.] இப்படி வந்திருந்த ஸ்ரீ கிருஷ்ணபகவானை வணங்கினுன்; வணங்கிப் பெரிய பந்தமாகிய சனனத்தையும் மரணத்தையும் நீங்கினுன்; தேவாமிர்தத்தை விரும்பி வந்தனை செய்த தேவர்களுக்குத் திருப்பாற்கடலைக் கடைந்துகொடுத்தருளியநாராயணமூர்த்தி தன் வீட்டுக்கு விருந்தாக வந்தார் என்று மனமுருகிய விதுரன் எ-று. 76

கோடு கொண்டகைக் குரிசிலை யலர்ந்தகோ கனதக்
காடு கண்டெனக் கண்டுதன் கண்ணினை களியாத்
தோடுகொண்டதார்விதுரனிப்பிறப்பையுந் தொலைத்தான்
வீடுகண்டவர்க் கியம்பவும் வேண்டுமோ வேண்டா.

[இ-ள்] பாஞ்சசன்னியம் என்னும் சங்கை ஏந்திய திருக் காத்தையுடைய ஸ்ரீ கிருஷ்ணபகவானிடத்திலே மலர்ந்திருக்கிற கரசாணுதி அவயவமாகிய தாமரை மலர்க் காட்டைக் கண்ட வண்டுகள்போலத் தன்னுடைய கண்களிரண்டுங் களிப்பையடைந்து, இதழைக் கொண்ட பூமாலையணிந்த விதுரனிப்பிறப்பையும் நீக்கினுன்; மோக்ஷவீட்டை யறிந்தவர்களுக்குச் சொல்லவும் வேண்டுமோ? வேண்டாம் எ-று. 77

உள்ளி னுனுணர்ந் துள்ளமு முருகின னெழுந்து
துள்ளி னன்விழுந் திணையடி சூடினன் றுயரைத்
தள்ளி னன்மலர்த் தடங்கையாற் றத்துவ வமுதை
யள்ளி னனெனக் கண்களா லருந்தின னவ்யோன்.

[இ-ள்.] நினைத்தான் நினைத்து மனம் உருகினான், எழுந்திருந்து துள்ளினான், கீழேவிழுந்து இரண்டு பாதங்களையும் சிரசிற் சூட்டினான், துன்பத்தை நீக்கினான், தாமரை மலர்போன்ற விசாலமாகிய கைகளால் தத்வாமிர்தத்தை அள்ளினவன் என்னும்படி கண்களால் பகவா னழகையுண்டான் விதுரன் எ-று. 78

*முன்ன மேதுயின் றருளிய முதுபயோ ததியோ*
*பன்ன காதிபப் பாயலோ பச்சையா லிலையோ*
*சொன்ன நால்வகைச் சுருதியோ கருதிநீ யெய்தற்*
*கென்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடி லென்றான்.*

[இ-ள்.] முன்னமே நித்திரை செய்தருளிய பழைய பாற்கடலோ? சேஷசயனமோ? பசியவடவாலிலையோ? சொல்லிய நான்கு வேதங்களோ? நினைத்துநீர் வருவ்தற்குமுன் என்ன தவத்தைச் செய்ததோ இந்தச் சிறு குடிசை என்றான் விதுரன் எ-று. 79

*மும்மை யாகிய புவனங்கண் முழுதையு மருந்தும்*
*எம்மை யாளுடை நாயகன் விருந்தினுக் கிசைந்தான்*
*அம்ம வென்றனை னாறுநா றாயிர மடையர்*
*தம்மைநோக்கின னவர்களும் விரைவுடன் சமைத்தார்.*

[இ-ள்.] திரிபுவனங்களை யெல்லாம் உண்டருள்ய முதல்வராகிய எம்மையாளாகவுடைய ஸ்ரீ கிருஷ்ணபகவான் விருந்துக்குச் சம்மதித்தார் என்று ஆச்சரியப்பட்டனன்; அப்போது ஆறுநூறாயிரஞ் சமையற்காரரைப் பார்த்தான்; அவர்களும் சீக்கிரத்திலே சமைத்தார்கள். எ-று. 80

*வந்தகொற்றவேல் வரிசிலையவர்க்கும்வா ளவர்க்குங்*
*கந்த டர்ப்பன கரிக்கும்வெங் கவனவாம் பரிக்கு*
*மைந்துபத்து நூறாயிர மரசர்க்கு மெவர்க்கு*
*மிந்தி ரர்க்குமெய் தாவமு தெனும்படி யியற்ற*

[இ-ள்.] ஸ்ரீகிருஷ்ணபகவானுடனே வந்த வேல் வாள்வில் முதலியஆயுதத்தையுடையவர்க்கும், கட்டுத்தறியைப் பொருந்திய யானைகளுக்கும், வெவ்விய வேகத்தையும் தாவுகின்ற தன்மையையும் பொருந்திய குதிரைகளுக்கும், ஐம்பது நூறாயிரம் இராஜாக்களுக்கும், மற்றவர்க்குங் கிடைக்கத்தகாத அமுதமென்று சொல்லும்படி சமைத்தார்கள் எ-று. 81

அமைத்த வாசநன் னீர்கொடுமஞ்சன மாடிச்
சமைத்த பல்கறி யடிசிலும் விருப்பினலருந்தி
யுமைக்கு நாயக னிரவொழித் தருளின னுதவ
விமைப்பி லாரமு தருந்திய வியல்பென விருந்தார்.

[இ-ள்.] வாசனைகலந்த நீரைக்கொண்டு ஸ்நானஞ் செய்து, சமைக்கப்பெற்ற பலவித கறிகளையும் அமுதையும் அன்னங்களையும் தம்முடைய விருப்பினுற் புசித்து, உமாதேவிக்கு நாயகனுகிய உருத்திரபகவான் பிச்சைத் தொழிலை மாற்றியருளிய மகாவிஷ்ணு கொடுக்கத் தேவர்கள் அமுதத்தையுண்ட தன்மையென்று சொல்லும்படியாக இருந்தார் எ-று 82

வாச நீரும்வண் சுண்ணமு முறைமுறை வழங்கப்
பூசு றுங்தொழிர் பூசினற் சூடினர் புனைந்தார்
வீசு சாமர மிரட்டவெண் மதிக்குடை நிழற்றக்
கேசவன்மணிக் கேசரித் தவிசிடைக் கிளர்ந்தான்.

[இ-ள்.] வாசனையுடைய பனி நீரும்,வளத்தை யுடைய பச்சைக் கற்பூரங்களும் கிரமப்படி கொடுக்க; பூசத்தக்க சந்தன முதலியவையும் பூசினார்கள். மலர் முதலியவைகளைச் சூடினார்கள். ஆபரண முதலியவைகளை யணிந்தார்கள். வீசுகின்றவெண்சாமரைகளிரட்ட, வெள்ளிய சந்திரவட்டக்குடை நிழலைச்செய்ய, ஸ்ரீ கிருஷ்ணபகவான் இரத்தினங்களாற் பதிப்பித்த சிங்காதனத்திலே எழுத்தருளியிருந்தார் எ-று. 83

ஞான கஞ்சுக விதுரன்வாழ் மனையின யகனும்
போன கம்பரி வுடனுகர்ந் திருந்தவப் பொழுதிற்
றூனு மேருவுக் கப்புறத் தவ்வமு தருந்தப்
பானு வுய்பெருங் குடதிசைப் பரவையிற் படிந்தான்.

[இ-ள்.] ஞானமயமான அங்கிபூண்ட விதுரமகாராஜன் வாழ்கின்ற திருமனையில், ஸ்ரீகிருஷ்ணபகவான் அறுசுவையுண்டியைப் புசித்திருந்த சமயத்திலே தானு மேருமலைக் கப்புறத்திலிருக்கிற அமுதத்தைப் புசிக்கச் சூரியனும் பெரிய மேற்றிசைக் கடலிலே மூழ்கினன்.

கருதி யந்தணர் யாவருந் தங்கடன் கழிப்பச்
சுருதி யென்னும்வெஞ் சாபமே லம்புகை தொடுத்துப்

பருதி தன்பெரும் பகைவர்மேல் விடுத்தலிற் பரந்த
குருதி யாமென சிவந்தெழச் சிவந்தது குடபால்.

[இ-ள்.] அந்தச் சமயம் பிராமணர்கள் எல்லாம் மாலைப்பொழுதிலே தாங்கள் செய்யும் மாலைக்கடனைக் கழிக்க நினைத்து வேதமென்கிற வில்லின்மேல் நீராகிய பாணத்தைக் கையாற் றெடுத்துச் சூரியனுடைய பெரிய சத்துருக்களின்மேல் விட்டபடியால் பரவிய உதிரம் என்று சொல்லும்படி மிகவுஞ் சிவந்தது மேற்றிசை எ-று. 89

தரங்க வாரிதிப் புரத்தெதிர் மலைந்தவெஞ் சமரில்
உரங்கொள் கூர்நெடும் படைகளா லவுணர்தந் தேகம்
துரங்க மேழுடைக் கடவுளை நிரைநிரை துணித்த
கரங்கள்போன் றன கரைதொறும் வளர்துகிர்க் காடு.

[இ-ள்.] அலைகளையுடைய சமுத்திரத்துக் கப்புறத் தெதிரே போகின்ற வெவ்விய யுத்தத்திலே வலிமையைக்கொண்ட கூர்மைபொருந்திய நெடிய ஆயுதங்களால் அவுணர்களுடைய தேகங்களின்மேல் ஏழு குதிரையையுடைய சூரியனும் வரிசை வரிசையாகத் துணித்த கைகள்போலு மிருந்தன, கரைகள்தோறும் வளர்கின்ற பவளக்காடு எ-று. 86

நீதி யிற்புகல் பகலெலா நீரர மகளிர்
மீது றைத்தெழும் வெவ்வெயில் படாவகை விரித்துப்
போது புக்கதென் றினம்படச் சுருக்கிய பூம்பட்
டாத பத்திரம் போன் றன தாமரை யடவி.

[இ-ள்.] நீதியினாற் சொல்லுகின்ற பகற்பொழுதெல்லாம் நீரரமகளிர்கள் தங்கள் மேலே பட்டு விழுகின்ற வெவ்விய வெயில்படாத விதம் விரித்துப் பொழுது போயிற்றென்று ஒன்றாகச் சுருக்கிய அழகிய பட்டுக் குடைகள் போன்றது, அங்கே மலர்ந்த தாமரைக்காடு எ-று. 87

கலந்து மங்கல முழவுவெண் சங்கொடு கறங்க
மிலைந்த பூங்குழல் வனிதையர் மெய்விளக் கெடுப்பக்
கலந்த தாமரைத் தடமெலாங் குவிந்தது கண்டு
மலர்ந்த தாமரை வாவிபோன் றதுநகர்வட்டம்

[இ-ள்.] மங்கலபேரிகைகள்போலவெண்ணிறமான சங்குகள் தப்திக்கவும், மலர்மாலையைத் தரித்த கூந்தலை யுடைய மங்கையர்கள் மெய்மையான தீபங்க ளெடுக்கவும், தடாகங்கள் தோறும் அலர்ந்த தாமரைமலர்கள் குவிந்ததைக் கண்டு மலர்ந்த தாமரை போன்றது, பெருமைபொருந்திய அஸ்திஞபுரி யென்னும் வட்டம்;

உரக புங்கவன்மணிமுடி யொப்பன தீபம்
இருமருங்கினு மாயிர மாயிர மேந்த
வரிசு மந்தபே ராசனத் தழகுட னிருந்த
புரவலன்றனைப் புண்ணிய விதுரனும் போற்றி.

[இ-ள்.] ஆதிசேஷனுடைய ஆயிரம் முடிகளை ஒப்பனவாகத் தீபங்களை இரண்டு பக்கத்திலும் இரண்டாயிர மேந்தவும், சிங்கத்தினால் சுமக்கப்பட்ட பெரிய ஆசனத்திலே அழகுடன் எழுந்தருளி இருந்த கிருஷ்ணபகவானைப் புண்ணியத்தையுடைய விதுரமகாராஜன் வணங்கி எ-று. 89

பொங்க ராவணை பொலிவறப் போந்தபின் பொதுவர்
தங்கள் பாடியில் வளர்ந்துமா மருதிடைத் தவழ்ந்து
கங்கை மாநதி கால்வழி கருணையங் கடலே
யிங்கு நீதனி நடந்தவா றுரைத்தரு ளென்றான்.

[இ-ள்.] பொலிவினை யுடைய சேஷசயனமானது பொலிவு நீங்கவந்து பின்பு ஆயர்பாடியில் வளர்ந்து, மகத்தாகியமருதமரத்தினிடையில்தவழ்ந்து, கங்கைநதி திருவடியிலே பெருகப்பெற்ற கிருபைக்கடலே! இவ்விடத்திலே நீர் சனித்தெழுந்தருளிய விதத்தை அனுக்கிரகம் பண்ணவேண்டுமென்றான் விதுரன். எ-று. 90

தோட்டு வந்துசெந் தேனுகர் சுரும்புசூழ் தொடையாய்
காட்டு வந்தமுன் றிரிந்துதங் கடவநாள் கழித்து
நாட்டு வந்தபே ரைவர்க்கு நற்குரு நாடு
கேட்டு வந்தன் மென்றனன் விதுரனுங் கேட்டான்.

[இ-ள்.] பூவிதழிலேவந்து சிவந்த தேனைப் புசிக்கின்ற வண்டுகள் சூழ்ந்த மாலையை யணிந்த விதுரமகாராஜனே! காட்டிலே முன்னே சந்தோஷமாய்த் திரிந்து தங்களுக்குச் செல்லவேண்டிய நாளைக்கழித்து நாட்

டிலே வந்திருக்கிற பஞ்சபாண்டவர்களுக்கு நல்ல குருநாட்டைக் கேட்க வந்தோ மென்று அருளிச் செய்தார், அதை விதுரனும் கேட்டான் எ-று. 91

*முழக்கி னுலுய முரசுயர்த் தவன்றனக் குரிமை*
*வழக்கி னுலறிந் தடலர வுயர்த்தகோன் வழங்கான்*
*றழக்கி னுலிரு திசையினு முரசெழச் சமரி*
*லுழக்கி னுலலை துணர்வனே வென்றவ னுரைத்தான்.*

[இ-ள்.] சத்தத்தி லுயர்ந்த முரசக்கொடி யுயர்த்த தருமபுத்திர மகாராஜனுக்கு உரித்தாகிய நாட்டை முன்னோர்கள் முறைவழுவாமல் உணர்ந்து வலிமை பொருந்திய சர்ப்பக் கொடியையுடைய துரியோதனன் கொடுக்கமாட்டான்; குற்றமில்லாத எட்டுத்திக்கிலும் பேரிகை சப்திக்க யுத்தத்திலே கலக்கிறு லல்லாமல் அறிவனேவென்றுசொன்னன் விதுராஜன் எ-று. 92

*வாளை வாவியி லுகண்டெழ வளரிளங் கமுகின்*
*பாளை வாயளி முரன்றெழும்பழன நாடுடையா*
*னாளை வாழ்வவர்க் களித்திலே னெனிலெதிர் நடந்து*
*மூளை வாயுக முடிப்பர்வெம் போரென மொழிந்தான்.*

[இ-ள்.] வாளை மீன்கள் தடாகத்திலிருந்து குதித்தெழும்ப வளர்கின்ற இளங்கமுகின் பாளையினிடத்திலே வண்டுகள் சப்தித்துப் பாடுகின்ற வயல்கள் சூழ்ந்த நாட்டையுடைய துரியோதனன், நாளைப்பாண்டவர்களின் வாழ்வைக் கொடாமற் போவானேயானல் எதிர் சென்று மூளையானது வாயிலே புகும்படி யுத்தஞ் செய்து முடிப்போ மென்றார் ஸ்ரீகிருஷ்ணதேவர் எ-று.

*விரைந்து பாய்பரி பன்னவ ரிதம் பட மெலிவுற்*
*றிரந்து வேண்டினுங் கிளைஞருக் கொருபொரு ளீயார்*
*பரந்த போரினி லெதிர்த்தவர் படப்படப்பகழி*
*துரந்த போதவர்க்குதவுவர் சொன்னவை யெல்லாம்*

[இ-ள்.] சீக்கிரத்திலே தாவுகின்ற குதிரைகளையுடைய அரசர்கள் இதமுண்டாகும்படி வாடி மெலிவுற்று வேண்டிக்கொண்டாலும், பந்துக்களுக்கு ஒரு பொருளையுங் கொடுக்கமாட்டார்கள்; பரவிய யுத்தத்திலே எதிர்த்து நின்றவர்கள் களத்தி லுருகும்படி

யாகப் பாணப்பிரயோகஞ் செய்தவர்களுக்குக் கேட்ட பொருளை யெல்லாங் கொடுப்பார்கள் எ-று. 94

*என்று பாரினி லியற்கையும் விதுரனுக் கியம்பி*
*வென்று போர்கெழு நேமியான் விடைகொடுத் தருளிக்*
*குன்று போற்புயக் காவலர் கொடுந்துடி கலங்க*
*மன்ற ளுண்மலர்ப் பாயலின் மீதுகண் வளர்ந்தான்.*

[இ-ள்.] இவ்வண்ணமென்று உலகத்தின் இயற்கையும் விதுரமகாராஜனுக்குச் சொல்லியுத்தத்தில் ஜயம் பெற்று விளங்கிய சக்கரத்தை யுடைய கிருஷ்ணபகவான் செலவு கொடுத்து மலைபோலுந் தோளையுடைய காவலர்கள் பறைகளைமுழக்கவோசனைபொருந்திய அன்றலர்ந்த புட்பவணையின் மேல் நித்திரை செய்தார் எ-று.

*குளிரு மாமதி முகத்தெளிர் குமுதவாய் மலர்த்தித்*
*தவள வாணகை பரப்பிவண் சததள மலர்க்கை*
*யளவி லேகுவித் தளியொடு மகன்றிலா மையினற்*
*களிகொ டோள்விலைக்கணிகையைப்போன்றதக்கங்குல்.*

[இ-ள்.] குளிர்ந்த பெரிய சந்திரனாகிய முகத்திலே விளங்குகின்ற செவ்வல்லியாகிய வாயையும் முல்லையரும்பாகிய ஒளியையும் உடைய தந்தபந்திகளையும் காட்டி, தாமரை மலர்களாகிய கைகளை யளவாய்க் குவித்து, அளியுடன் மலர்ந்திராமையினாலே களிப்பைக்கொண்ட தோள்களையுடைய வேசியைப் போன்ற அக்கங்குல். எ-று.

*அலைந்த வாரிருட் கடல்பொறு தொருபுடை யண்டம்*
*பிளந்த தாமெனக் கரும்படாம் பீறிய தென்ன*
*வலைந்த வேழ்கடல் வற்றமேல் வடவையின் முகத்தீக்*
*கிளந்த தாமெனக் கிளர்ந்தன விரவியின் கிரணம்.*

[இ-ள்.] அலையப்பெற்ற நிறைந்த விருளாகிய சமுத்திரத்தைத் தாங்க மாட்டாமல் ஒரு பக்கத்து அண்டம் பிளந்ததாம் எனவும், கரிய வஸ்திரங்கள் கிழிந்ததாம் எனவும், வளைந்திருக்கின்ற ஏழு சமுத்திரமும் வற்றும்படி மேலிருக்கின்ற வடவாமுகாக்கினி பிரகாசித்தது என்று சொல்லவும் விளங்கின சூரிய கிரணங்கள் எ-று. 97

இகலும்வாளர வுயர்த்தவ னிருந்த தொல் பதியில்
அகில நாயக னொருதனி நடந்தவா றறிந்து
மகர வாரிதி யகன்றுமா மருங்குற வணைந்த
திகிரி போலவந் தெழுந்தன னிரவிகீழ்த் திசையில்.

[இ-ள்.] பகைகொண்ட ஒளியை யுடைய சர்ப்பக் கொடியை யுயர்த்த துரியோதனன் இருந்த பழைய அஸ்திநபுரத்திலே லோக நாயகராகிய ஒப்பற்ற கிருஷ்ண பகவான் தனியேவந்தது தெரிந்து மகரமீனை யுடைய சமுத்திரத்தைவிட்டு நீங்கிப் பக்கத்திலே வளைந்த சக்கரத்தைப்போல வந்து உதயமானான் சூரியன் கீழ்த்திசையில் எ-று. 98

சோதி வானநதி மைந்தி னும்பழைய
சுருதியா லுயர் துரோணனு
மாதி யாகவுயி ரினும் வியப்புற
வடுத்த மன்னவர நேகரு
நீதி யாறுவகை யைந்து பத்தொடாறு
பத்தொ ராயிரவர் நிருபருந்
தீதி லாததிற லக்கு ரோணிபதி
னொன்று பெற்றமிகு சேனையும்.

[இ-ள்.] பிரகாசம் பொருந்திய கங்காபுத்திரனாகிய வீஷ்மாச்சாரியரும், பழமையாயுள்ள வேதத்தாலுயர்ந்த துரோணாச்சாரியரும், பரம்பரையாயுள்ள அரசர்களும், பூமியை யாளுகின்ற சிற்றரசர்களும் நீதியினால் உயர்ந்த ஐம்பதினாயிரம் மகுடவர்த்தனரும், அறுபத்தோராயிரம் பட்டவர்த்தனரும், குற்றமற்ற வலியினை யுடைய பதினோர் அக்ரோணியாகிய மிகுந்த சேனைகளும் எ-று. 99

தொக்க வெண்கவரி யால வட்டநிரை
சொட்டை வாள்பரிசை துகிலுடன்
கைக்க ளாசியிவை கொண்டு லாவிவரு
கன்னி மங்கையர்க ளனைவரு
மிக்க வேதியர்கள் வல்ல பல்கலைவி
தததி லுள்ளவர்கள் யாவருந்
தக்க தம்பியரும் வந்து சூழவுயர்
தரணி மேனிருபர் தம்பிரான்.

[இ-ள்.] கூட்டமாகிய வெள்ளிய சாமரங்களும், ஆல வட்டங்களும், வளைதடியும், வாளும், உடைவாளும், வஸ்திரமும், கைகளிலே காளாஞ்சிகொண்டு உலாவி வருகிற இளமையான மங்கையர்கள் அநேகம் பேரும், அளவில்லாத பிராமணர்களும், அநேக கலை ஞானங்களிலே வல்லமை யுடையவர்கள் யாவரும் தகுதியுள்ள தம்பிமார்களும் வந்துசூழ்ந்து கொண்டு இருக்க உயர்ந்த பூமியிலே அரசர்க்கு அரசனாகிய துரியோதன மகாராஜன் எ-று. 100

நிறைக திர்க்கனக நீள்சுவர்ப்பவள
வுத்தி ரத்திடை நிரைத்த வொண்
பரும ணிக்கிரண பற்ப ராகவயி
ரத்து லாமிசை பரப்பிவெண்
டரள வர்க்கவயிடு ரியப்பதிய
கோம ளப்பல்கை தைத்துமா
மரக தத்தினெடு கோடி தூணிரை
யமைத்த மண்டப மருங்கரோ.

[இ-ள்.] வரிசையாகிய கிரணங்களை யுடையபொன்னினாற் செய்த நெடிய சுவரின்மேல், பவளத்தினால் உத்திரம் போட்டு, அதன்மேல் வரிசையாகப் பருத்த ரத்தினங்களும் மாணிக்கங்களாலும் வச்சிரங்களாலும் ஆகிய வயிரத் துலாப் பரப்பி, அதன்மேல் வெள்ளிய முத்து வர்க்கங்களையும் வயிடூரியங்களையும் அழுத்திப் புதிய அழகுள்ள பலகை தைத்து, ககத்தாகிய மரகதத்தினெடு கோடி தூண்களை இடையிலே அமைத்த மண்டபத்தின் அருகிலே எ-று. 101

முட்ட நித்திலநி ரைத்த பந்தரின்
கைத்த சிரறி முகத்தகால்
வட்டமெத்தைகொ டமைத்து பீடமிசை
வாசவன் கொலென வைகினன்
பட்ட வர்த்தனரு மகுட வர்த்தனரும்
வந்து சேவடி பணிந்தபி
னிட்ட பொற்றவிசின் முறைமை யாலினி
திருக்க வென்றவரை யேவியே.

[இ-ள்.] முட்டும்படியாய் முத்தினால் வரிசை செய்த பந்தரில் நகுதலைச் செய்யாநின்ற சிறந்தசிங்கமுகத்தை யுடையதாய் வட்டமாகிய மெத்தையைக் கொண்டு செய்த பீடத்தின்மேல் இந்திரனைப்போல் வீற்றிருந்தான். அந்தச் சமயம் பட்டவர்த்தனர்களும் மகுடவர்த்தனர்களும் வந்து சிவந்த பாதங்களை வணங்கினார்கள். பின்பு வரிசையாக விட்டிருக்கின்ற பொன்னாற் செய்த ஆசனங்களின்மேல் முறைமைப்படி இனிமையோடு இருக்கக் கடவீ ரென்று அவர்களை யேவுதல் செய்தான் எ-று. 102

காவன் மன்னவர் முகங்க டோறுமிரு
கண்ப ரப்பியமர் கருதுவோ
ரேவ லின்கண்வரு தூத னுமிடைய
னின்று தம்மவையி லெய்தினா
லோவ லின்றியெதிர் சென்று கண்டு தொழு
துறவுகூரிலி னியுங்களூர்
தீவ லஞ்செய் வடர்ப்ப னென்றுநனி
சீறினான் முறைமை மாறினான்.

[இ-ள்.] பூமியைக் காக்கின்ற இராஜாக்களுடைய முகங்கள்தோறும் தன்னுடைய இரண்டு கண்களாற் பார்த்து நம்மோடு யுத்தம்செய்து பூமியைக் கவர நினைக்கும் பாண்டவர்களுடைய ஏவலினாலே வருகின்ற தூதனாகிய இடையன் இன்று நம்முடைய சபையிலே வந்தால், ஒழிதல் இல்லாமல் எதிர்கொண்டு கண்டு வணங்கி யுறவு கொண்டாடினால், இனி உங்களூரை நெருப்பு வலங் கொள்ளும்படியாய்க் கொளுத்தி விடுவேனென்று மிகவுஞ் சீறினான் முறைமை மாறினவனாகிய துரியோதனன் எ-று. 103

இந்த வண்ணமுறை செய்து மன்னரு
மிராச ராசனு மிருக்கவே
தந்த வண்ணனுடன்வந்த வண்ணலொளி
தங்கு கண்டுயி லுணர்ந்தபின்
கந்த வண்ணமலர் கொண்டு கைதொழுது
காலையிற்பல கடன்கழித்

திந்த வண்ணமு னிருந்த பேரவையி
லேயினனிசைகொள் வேயினன்.

[இ-ள்.] இந்தப் பிரகாரஞ் சொல்லி அரசசபையில் அரசர்க் கரசனாகிய துரியோதனனு மிருக்க, வெள்ளை மேனியனாகிய பலபத்திரருடனே பிறந்த இசைகொண்ட மூங்கிற் குழலையுடைய ஸ்ரீகிருஷ்ண பகவான், பிரகாசம் பொருந்திய நித்திரை தெளிந்த பின்பு வாசனை பொருந்திய அழகியமலர்களைக்கொண்டு பூசை செய்து காலையிலே செய்ய வேண்டிய கடன்களெல்லாம் செய்துமுடித்து, முன்சொன்ன பிரகாசமிகுந்த துரியோதனன் இருக்கப்பட்ட பெரிய சபைக்கு எழுந்தருளினார் எ-று. 104

துன்னு கங்கைமக னுந்து ரோணனொடு
சுதனு நீதிபுனை விதுரனு
மன்னர் மன்னனை யொழிந்த மன்னவரும்
வந்து சேவடி வணங்கினர்
கன்ன னுந்தலை கவிழ்ந்தி ருந்தன
னமுன்று ளஞ்சகுனி கருகினன்
முன்ன நின்றவர்க ளிட்ட பீடமிசை
மொய் துழாய்முகிலு மெய்தினன்.

[இ-ள்.] நெருங்கிய அச்சபையிலிருந்த வீஷ்மாச்சாரியாரும், துரோணாச்சாரியாரும், அசுவத்தாமாவும், ஞானநெறியுடைய விதுர மகாராஜனும், துரியோதனன் ஒழிந்த மற்ற வரசர்களும் வந்து சிவந்த பாதங்களை வணங்கினார்கள். அப்போது கர்னமகாராஜனுந் தலை கவிழ்ந்துகொண்டு இருந்தான். சகுனி உள்ளங் கொதிப்படைய நினைத்திருந்தான். எதிரே யிருந்தவர்களிட்ட பீடமிசை நெருங்கிய துளபமாலையை யணிந்த மேகவண்ணனாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவான் எழுந்தருளியிருந்தார் எ-று. 105

மூன்ன கங்குடை கவிழ்த்த காளமுகின்
மூன்னிருந்தபின் முகங்கொடா
தென்ன கந்தனை யொழித்து நென்னலிடை
யிந்த மாநகரி லெய்தியும்

பொன்ன கங்கொள்புய விதுர னில்லிடை
புகுந்த தென்கொலிது புகலெனப்
பன்ன கந்தனை யுயர்த்த கோவுமுரை
பகர மாலுமெதிர் பகருவான்.

[இ-ள்.] முன்னே கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்த கரிய மேக வண்ணனாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் எழுந்தருளிய பின்பு, முகங்கொடாமல் என் வீட்டைவிட்டு நேற்றைப்பொழுது இந்த ஊரில் 'வந்தும், வீரலட்சுமியைக் கொட்ட புயத்தையுடைய விதுரன் வீட்டிலே போனதென்ன? சொல்லுமென்று, சர்ப்பக்கொடியை யுயர்த்த துரியோதன ராஜன் கேட்க, ஸ்ரீ கிருஷ்ணபகவான் அதற்கு எதிர் உத்தரஞ் சொல்லுவார் எ-று. 106

என்னி னின்னிலொரு பேதமில்லையிது
வென்னி னின்னிலது வென்னினு
மின்னின் மின்னிலகு விறனெ டும்படை
விதுரன் வந்தெதிர் விளம்பினு
னுன்னி லின்னமுள தொன்றுபஞ்சவ
ருரைக்க வந்தவொரு தூதன்யா
னின்னி லின்னடிசி லுண்டு நின்னுடன்
வெறுக்க வெண்ணுவது நீதியோ.

[இ-ள்] என் வீடென்றும் உன் வீடென்றும் பேதமில்லை. இது என்வீடு, அது உன் வீடென்று சொன்னாலும், மின்னல் போலப் பிரகாசிக்கின்ற வெற்றியுள்ள நெடிய வில்லையுடைய விதுர மகாராஜன் வந்து எதிரே விருந்து சொன்னார். அது அல்லாமல் ஆலோசிக்கும் இடத்தில் இன்னம் ஒரு காரியம் உண்டு. பஞ்ச பாண்டவர்கள் சொல்லிவிட்ட சொல்லைச் சொல்ல வந்தவொரு தூதன் யான், உன்னிடத்தில்இனிமையுள்ள அன்னத்தை யுண்டு உன்னோடுதானே வெறுக்க நினைப்பது நீதியோ வென்றார் ஸ்ரீ கிருஷ்ண பகவான் எ-று.

அரவ மல்கிய பதாகை யாய்மதி
யமைச்ச ராயர ஈழிப்பினுங்
குரவர் நல்லுரை மறுக்கி னும்பிறர்
புரிந்த நன்றியது கொல்லினு

மொருவர் வாழ்மனையி லுண்டு பின்னுமவ
ருடனமுன்றுபொர வுன்னினு
மிரவி யுள்ளளவு மதிய முள்ளளவு
மிவர்க ளேநரகிலெய்துவார்.

[இ-ள்.] சர்ப்பக் கொடியையுடைய துரியோதனனே! புத்தியை யுடைய மந்திரிகளாய் இருந்து இராஜாங்கத்தை யழித்தாலும், ஆசிரியர் சொல்லைத் தடுத்தாலும், ஒருவர் செய்த உபகாரத்தை மறந்தாலும், ஒருவர் வீட்டிற் சாப்பிட்டுப் பின்பு அவருடன்பகைத்து யுத்தஞ் செய்தாலும், சூரிய சந்திரர் உள்ளநாள்வரைக்கும் இவர்களே நகரத்திற் சேருவார்கள் எ-று. 108

சீதநாண்மலர் மடந்தை கேள்வனிவை
செப்ப வுந்தெரிய வொப்பிலா
நாத நாயகன் முகத்தில் வைத்தவிரு
நயன னுகிமிக நகைசெயாத்
தூத னுகிவரு தன்மை சொல்லுகென
மன்னர் மன்னனிது சொன்னபின்
வேத நாறுமல ருந்தி வண்டுபள
விரைசெய்தாரவனு முரை செய்வான்.

[இ-ள்.] குளிர்ச்சி பொருந்திய அன்று அலர்ந்த தாமரை மலரில் இருக்கும் இலட்சுமி காந்தராகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் இந்த வார்த்தைகளைச் சொன்ன மாத்திரத்தில்; ஒப்பில்லாத நாயகராகியமாதவனுடைய திருமுகத்தில்வைத்த இரண்டுவிழிகளை யுடையவனுகி, மீளவும் நகை செய்து தூதனுகி வந்த காரியத்தைச் சொல்லு மென்று துரியோதனன் சொன்ன பின்பு, வேதங்கள் மணக்கின்ற தாமரை மலராகிய உந்தியையும் வாசனை வீசுகின்ற துளப மாலையையும் உடைய ஸ்ரீ கிருஷ்ண பகவான் அருளிச்செய்தார் எ-று. 109

சூதி னுலரசி ழந்து நின்றுணைவர்
சொன்ன சொல்லும்வழு வாதபோ
யேதி லார்களெனநொந்து தண்
ணின்லிலாத கானினிடை யெய்தியுந்

தீதி லாவகை குறித்த நாள்பல
கழித்து வந்தனர் செகத்தினிற்
கோதி லாதகுரு குலம் கிபவவ
ருரிமை நண்பொடு கொடுத்தியே.

[இ-ள்.] உன் துணைவராகிய பஞ்ச பாண்டவர்கள் சூதாடுகையினாலே இராஜ்ஜிய பாரத்தை இழந்து, சொன்ன வார்த்தையுந்தப்பாமற்போய், அயலாரென்று சொல்லும்படி நொந்து குளிர்ந்த நிழலில்லாத காட்டினிடத்தே போயும், குற்ற மில்லாதபடி குறித்த நாள் அனேகமுங் கழித்து வந்தார்கள், பூமியிலே குற்றமற்ற குருகுலத்திலே பிறந்த மகா ராஜனே! அவர்களுடைய உரிய பூமியைச் சினேகத்தோடு கொடுப்பாய் என்று பின்னுஞ் சொல்லுவார் ஸ்ரீ கிருஷ்ணபகவான் எ-று.

சொல்ல வாவுரக துவச நின்னுரிய
துணைவர் தங்களை யழைத்துநீ
வல்ல வாறுசில நாட னித்தவர்க
டம்மு டன்கெழுமி வாழ்தியே
னல்ல வாய்மைநிலை யுடையை யென்றரசர்
நாடொ றும்புகழ்வர் நண்புகொண்
டல்ல வாமென மறுத்தி யேலறமு
மாண்மை யும்புகழு மல்லவே.

[இ-ள்.] சொல்லை விரும்புகின்ற சர்ப்பக்கொடி படைத்த துரியோதன மகாராஜனே! உனக்குஉரிமையான உடன் பிறந்தவர்களை வரவழைத்துக் கூடியமட்டில் நீ சில நாடு கொடுத்து, அவர்களுடன்கூடிவாழ் வாயேயானால்சத்தியத்தையும் நிலைமையையும்உடையாயென்று அரசர்கள் நாடோறும் புகழ்ச்சி செய்வார்கள்; அப்படி யல்லவென்று மறுத்து உரைப்பாயாகில் அது தருமமும் சௌரியமும் கீர்த்தியும் அல்லவென்றார் ஸ்ரீ கிருஷ்ணபகவான் எ-று. 111

என்று கேசவ னியம்ப வங்கெதி
ரிராச ராசனு மியம்புவா
னன்று சூதுபொரு துரிமை யாவையு
மிழந்து போயினர்க ளவரு

மின்று நீவிரகின் மீள வுங்கவர
வெண்ணி னைவரி லெளியனோ
சென்று கானிலவ ரின்னமுந்திரிவ
துறுதி யென்றுநனி சீறியே.

[இ-ள்.] இந்தப் பிரகாரம் ஸ்ரீ கிருஷ்ணதேவர் சொல்லவும் அங்கே எதிரில் இராஜாதிராஜனாகிய துரியோதன மகாராஜன் அன்று சூதாடித் தங்கள் உரிமையெல்லாம் இழந்துபோனவர்களாகிய பஞ்சபாண்டவர்களுக்கு இன்று நீ உபாயத்தினாலே மறுபடியும் கவர நினைத்தால் அவர்களைப்போல் யானும் எளியவனோ? அவர்கள் இன்னமும் காட்டுக்குப் போய்த் திரிவது உறுதியென்று மிகவும் சீறி எ-று. 112

நீவெ றுக்கிலெ னிருந்த மன்னவர்
திகைக்கி லென்பல நினைக்கிலென்
போய்நகைக்கிலெ னுரைத்த வுண்மைமொழி
பொய்த்த தென்றமரர் புகலிலென்
வேய்மலர்த் தொடைய லைவரென் னுடன்
மிகைத்து வெஞ்சமர்வி ளைக்கிலென்
ஈயி ருக்குமிட மெனினுமிப் புவியில்
யான வர்க்கரசி னிக்கொ டேன்.

[இ-ள்.] நீ வெறுத்தாலென்ன, இந்த ராஜாக்கள் திகைத்தா லென்ன, பலவாறாக நினைத்தா லென்ன, போய்ச் சிரித்தாலென்ன, சொல்லிய வாக்குப் பொய்த்துப்போயிற்றென்று தேவர்கள் சொன்னாலென்ன, புட்பமாலையைத் தரித்த பஞ்சபாண்டவர்கள் வெறுத்து வெவ்விய யுத்தம் செய்தாலென்ன, ஓர் ஈயிருக்குமிடமானாலும், இந்தப் பூமியிலே யான் அவர்களுக்கு அரசாட்சி கொடுக்கமாட்டேன் என்றான் துரியோதன மகாராஜன் எ-று. 113

கார்வ ழங்குறுமெ னச்சி னத்தினெடு
கண்ணி லான்மதலை கழறவும்
பார்வ ழங்கினை வில்லை யேலவனும்
பாதி யாயினும் வழங்குவாய்
தார்வ ழங்குதட மார்ப வென்னவது
தானு மன்னவன் மறுக்க வைந்

தூர்வ ழங்குகென வுற்றி ரருந்தனனிவ்
வுலகெ லாமுதவு முந்தியான்.

[இ-ள்] மேகம் முழங்குகின்ற இடியைப் போன்ற கோபத்தோடு திருதராட்டிரனுடைய பிள்ளையாகிய துரியோதனன் சொன்னபோது, பூமியைக் கொடுக்க உனக்கு மனமில்லையாகில், அவர்கள் ஊர்களையாவது கொடுப்பாய், நந்தியாவர்த்த மாலையணிந்த மார்பனே! யென்று சொல்ல, அவைகளையுந் துரியோதனன் மறுக்க, ஐந்தூராவது கொடுப்பாயென்று இரந்துகேட்டார். இவ்வுலகத்தை யெல்லாந் தரப்பட்ட நாபிக் கமலத்தையுடைய ஸ்ரீகிருஷ்ணபகவான் எ-று. 114

மாட ளிக்குலநெ ருங்குபைந் துளவ
மாலை யாய்மகர வேலைசூழ்
நாட ளித்திடவு மைந்து பேருடைய
நகர ளித்திடவும் வேண்டுமோ
காட ளிக்கவத னிடைதி ரிந்துறை
கரந்து போயினர்கள் காணவோர்
வீட ளிக்கினும் வெறுப்ப ரோவிதனை
விடுக வென்றெதிர் விளம் பினான்.

[இ-ள்.] பக்கங்களிலே வண்டுகள் கூட்டங்கள் நெருங்கப்பெற்ற பசிய துளபமாலையணிந்த கிருஷ்ண பகவானே! மகர மீன்களை யுடைய சமுத்திரம் சூழ்ந்த நாட்டைக் கொடுக்கவும், ஐந்து பேருடைய நகரைக் கொடுக்கவும் வேண்டுமோ? நான் காட்டைக் கொடுக்க அதிலே திரிந்து அகமிழந்துபோன பஞ்சபாண்டவர்கள் காணும்படி ஒரு வீடு கொடுத்தாலும் வெறுப்பார்களோ? இதனை விடக் கடவீரென்று எதிரே சொன்னான் துரியோதனன் எ-று. 115

தந்தை காதலுறு தன்மை கண்டிளைய
தாய்ப யந்தவி ருதம்பியர்க்
கிந்த வாழ்வுமர சுங்கொ டுத்தவனு
மின்கு லத்தொருவ னிங்குளான்
முந்த மாநில மனைத்தி னுக்குமுயர்
முறைமை யாலுரிய வரசருக்

கைந்து மாநகரு நீகொ டாதொழியி
னென்ன தாகுமுன தரசியல்.

(இ-ள்.) தன்னுடைய தகப்பனாகிய சந்தனு மகா ராஜன் பரிமளகந்திமே லாசைவைத்த தன்மையைப் பார்த்து, இளைய தாயாகிய மச்சகந்திபெற்ற இரண்டு தம்பிமார்களும் இந்தவாழ்வும் அரசாட்சியுங் கொடுத்தவராகிய வீஷ்மாச்சாரியரும் உன் குலத்திலே ஒருவர் இதோ யிங்கிருக்கின்றார்; பழமையுள்ள மகத்தாகிய பூமிக்கெல்லாம் உயர்ந்த முறைமையாலே உரிமைபெற்றவர்க்கு ஐந்து நகரமாவது நீ கொடாது ஒழிந்தாயானால், உன்னுடைய அரசாட்சி என்ன பிரயோசனத்தை யுடையதாகும் என்றார் ஸ்ரீகிருஷ்ணபகவான்.

ஒருகு லத்தினி லிரண்டு மன்னவ
ருடன்பி றந்துரிமை யெய்தினு
லிருகு லத்தவரு மொக்க வாழ்வுறுத
லெக்கு லத்தினுமி யற்கையே
பொருகு லக்களிறு வளர்தி சைக்கண்மிகு
புகழ்ப ரப்பியெழு புவிபெறுங்
குருகு லத்தவ ரியற்கை நன்றென
மொழிந்த னன்கரிய கோவலன்.

(இ-ள்.) ஒருகுலத்தில் இரண்டு அரசர்களுடனே பிறந்து உரிமையை யடைந்தால் இரண்டு திறத்தோரும் ஒக்கவாழ்வை யடைவது எக்குலத்திற்கு மியற்கையாகும்; பொருகின்ற அட்டகஜங்கள் வளரப்பட்ட திக்குகளிடத்தில் மிகுந்த கீர்த்தியைப் பரப்பி ஏழுலோகத்தையும் பெற்ற குருகுலத்தாருடைய இயல்பு நன்றாயிருக்கிறதென்று சொன்னார் நீலவண்ணரான ஸ்ரீ கிருஷ்ண பகவான் எ-று. 117

பேர ராவணை துறந்த மாயனிவை
பேச வன்பினெடு பின்னையுஞ்
சீர ராவினை யுயர்த்த கோவும்விழி
தீயெ ழும்படி செயிர்த்துள்ளே
போர ராதிருபன் மணிநெ டுஞ்சுடிகை
யாயி ரங்கொடு பொறுத்தபார்

வீர ரானவ ரதல்ல வோவுரிமை
வேண்டு மோவென விளம்பினன்

(இ-ள்.) பெரிய ஆதிசேஷய சயனத்தை விட்டுத் துறந்த ஸ்ரீ கிருஷ்ணபகவான் இவைகளைச் சொல்ல, அன்புடனே பின்னையும் சிறந்த சர்ப்பக் கொடியைப் படைத்த துரியோதனனும் கண்கள் நெருப்பென்னும் படி உள்ளே கோபித்துப் போர் செய்கின்ற சர்ப்ப ராஜனாகிய ஆதிசேஷனால் நெடிய மணிகளையுடைய ஆயிர முச்சியைக் கொண்டு சுமக்கப்பட்ட பூமியானது சுத்த வீரருடைய தல்லவோ? அப் பாண்டவர்களுக்கு உரிமையும் வேண்டுமோ வென்றான் துரியோதனன் எ-று.

பொய்வ ளர்ந்தமொழி மன்னன்மற்றிவை
புகன்ற பின்புபுய வலியினு
லவர் தங்களர சுங்கொ டாமலட
லாண்மை கொண்டதி ரடர்த்தியேன்
மெய்வி ளங்கவரு குருநி லத்திணிடை
வந்து வெஞ்சமர் விளைக்கவே
கைவ ழங்குகென நின்ற தூணிடை
யறைந்து ரைக்குமிவை காவலன்.

(இ-ள்) பொய்யே பேசுகின்ற துரியோதனன் இவை சொன்னபின்பு, புஜபலத்தினாலே பஞ்சபாண்டவர்களுடைய இராஜாங்கத்தைக் கொடாமல் மிகுந்த வலிமை கொண்டு எதிர்த்து யுத்தஞ் செய்ய வருவாயாகில் உண்மைவிளங்க வருகின்ற குரு க்ஷேத்திரத்திலே வந்து வலிய யுத்தஞ் செய்வதற்குச் சம்மதித்துக் கைதட்டிக் கொடு வென்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் கேட்க, எதிரேயிருந்த தூணிலே யறைந்து சொல்வான் துரியோதனன் எ-று. 119

புன்பி றப்புடைய பொதுவர் தங்களொடு
புறவி தானிரை புரந்திடு
முன்பி றப்புமுர லோடு கோவிய
ருனைப் பிணித்தது மறந்துநீ
மன்பி றப்பினுயர் குருகு லத்தவர்தம்
வாய்மை தானுமொரு மாசிலா

வென்பி றப்புமுண ராம லோசபையி
லிந்தவாசக மியம்பினாய்.

(இ-ள்.) இழிந்த பிறப்பை யுடைய இடையர்க ளோடு காட்டினிடத்திற் பசுக்கூட்டங்களை மேய்க்கும் உன்னுடைய ஜனனத்தையும் ஆயர்மாதர்கள் உன்னை உரலுடனே கட்டியதையும், நீ மறந்துவிட்டு இராஜ குலத்திலே யுயர்ந்த குருகுல அரசர்களுடைய சத்தியத் தையும் ஒரு களங்கமு மில்லாத என்னுடைய பிறப்பை யும் அறியாமலல்லவா. சபையிலே இந்த வாசகஞ் சொன்னாயென்றான் துரியோதனன் எ-று. 120

ஏவி லங்குசிலை யைவர் வந்தனுகின்
யான யர்ந்தெளி திருப்பனோ
கோவி லங்குபொர வஞ்சு மோகரட
குஞ்ச ரங்கள் பகை கொண்டகாண்
மேவி லங்குமுன் மலைத்தல் கையறைய
வேண்டு மென்றதுநின் மேன்மையோ
நாவி லக்குமென வெண்ணியோ மிகவு
நன்று நன்றரசர் ஞாயமே.

(இ-ள்.) பிரகாசம்பொருந்திய அம்பையும் வில்லை யும்உடைய பஞ்சபாண்டவர்கள் வந்தால், யான்பயந்து எளிதாக இருப்பேனோ? மதம்பொழிகின்ற யானைகள் பகைகொண் டெதிர்த்துவந்தால், சிங்கம்பொருதற்குப் பயப்படுமோ? யுத்தஞ் செய்வதற்கு வருவதானால், முன் னமே கைபோட்டுக் கொடுக்கவேணுமென்பது உனக்கு மேன்மையோ? இப்படிக் கேட்டது என்னுடைய நாவானது தப்புமென்று நினைத்தோ? மிகவும் நல்லது, நல்லது அரசருடைய நியாயமென்றான் துரி யோதனன் எ-று. 121

அளிவ ருங்குழல் பிடித்து மன்னவைமி
லைவ ருக்குமரி யாளைநா
னெ ளிவருந் துகிலுரித்த போதரு
கிருந்து கண்டவர்க ளல்லவோ
துளிவ ரும்புனல் பரிந் தருந்திமிடு
சோறு தின்றுயர் சுமந்தரோ
ளிளிவ ரும்படி யிருந்த பாவியரு
மின்று மனதிலே யுணர்வரோ.

(இ-ள்.) ஐந்துபேருக்கும் உரியவளாகிய துரௌபதியை இராஜசபையிலே வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலைப் பிடித்து, நானெளிதாகத் துகிலுரித்தபோது அங்கே யிருந்து பார்த்தவர்களல்லவா? துளியாக வருகின்ற நீரை விரும்பியுண்டு இடுவார் சோற்றைத் தின்று உயிரைச் சுமந்துகொண்டு இழிவுண்டாகும்படி யிருந்த பாவிகளாகிய பாண்டவர்களும் இன்று அபிமான நிலையை அறிவார்களோவென்முன் துரியோதனன் எ-று.

அன்னை யானவரு மிருவ ராமுத
லளித்த தந்தையர்களை வராம்
புன்னை யாசைகொடு குருகு லத்துரிமை
பெறுவ ராமொரு பிறப்பிலோர்
மின்னை யாமிவர்க ளைவ ரும்பரிவி
னொடு தனித்தனி விரும்புவா
ரென்னை யாமரோ டொருகு லத்தரச
னென்ப தம்பவிவை யென்கொலாம்

(இ-ள்.) தாய்மார் இருவர்களாய் முன்னேபெற்ற பிதாக்கள் ஐந்துபேராம், பின்பு ஆசைகொண்டு குருகுலத்துரிமை பெறுவாராம், ஒரு பிறப்பிலுமில்லாதவளாகிய ஆ! ஆ! கிரீட மில்லாத ஐந்துபேரு மன்புடனே தனித்தனி இச்சிப்பார்கள்; யாமும் அவரோடு ஒருகுலத்து இராஜாக்களென்பது என்ன ஆண்மை இதுவென்முன் துரியோதனன் எ-று. 123

ஞால முற்றுமுடை யவன்மொ ழிந்திட
நகைத்து வண்டுவரை நாதனுஞ்
சால முற்றுமினி யவர்க ருத்தென
நினைந்து பேரவை தணக்துபோய்க்
கோல முற்றசிலை விதுரன் வாழ்வுபெறு
கோயில் சென்றுநனி குறுகினன்
சீல மற்றவர் சினந்த போதுமொரு
தீதிலாதவர் செயிர்ப்பரோ.

(இ-ள்.) உலகமுற்றும் உடைய துரியோதனன் இவை சொல்ல, அழகிய துவாரகைக்கு அரசராகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் நகை செய்து, அவன் நினைப்

பெல்லாம் விஷமென்று நினைத்து, பெரிய சபையை நீங்கிப்போய் அழகிய வில்லை யுடைய விதுரன் வாழ்கின்ற அரண்மனை சேர்ந்தார், நற்குண மில்லாதவர்கள் கோபித்த போதிலும் யாதொரு குற்ற மில்லாதவர்கள் கோபியார் எ-று. 124

கரிந்து மாலைசரு காகவும் புதிய
கமல வாண்முகம் வெயர்க்கவுந்
திருந்து கண்ணிணை சிவக்க வுங்கொடிய
செய்ய வாயிதழ் துடிக்கவு
மிருந்த பேரவையி னெடிதுயிர்த்திடு
மிராச ராசனவ னுக்கிவன்
விருந்து செய்தவுற வென்கொ லென்றரச
ரெதிர்வி துரனை விளம்புவான்.

(இ-ள்.) அப்போது பூமாலைகள் கருகிச் சருகாகவும், புதிய தாமரை மலர்போன்ற முகம் வியர்க்கவும் திருத்தமாகிய கண்க ளிரண்டும் சிவக்கவும், பெருமூச்சு விடுகின்ற இராஜராஜனாகிய துரியோதனன் ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு விருந்து செய்த உறவென்ன வென்று அரசர்க்கு எதிரே விதுரனைப் பேசுவான். 125

வன்பி னுலவனி வௌவ வென்றுகொலென்
மனையி லுண்டியை மறுத்தவன்
றன்வ தாகினியொ டினித ருந்தும்வகை
தன்னி லின்னமு தியற்றினு
னெம்பி தாவொடு பிறந்து மின்றளவு
மென்கை யோதன மருந்தியு
மன்பு தானுடைய னல்லலென்பனுந்
தனக்கு முற்பகை யல்லனே.

(இ-ள்.) வலிமையினாலே பூமியைக் கவரவேண்டுமென்று என்வீட்டுப் போஜனத்தை நீக்கின ஸ்ரீ கிருஷ்ணபகவான் தன்னுடைய சேனைகளோடு இனிதாகப் புசிக்கும்படி விதுரன் தன்வீட்டிலே இனிமையுள்ள அமுது செய்வித்தான்; என் தந்தையோடு பிறந்தும், இன்றளவும் என் கையன்னத்தைச்சாப்பிட்டும், என்னிடத்திலே எள்ளளவும் அன்பிலாதவனா யிருந்

தான்; எனக்கு வந்த பகையாளி அவனுக்கும் பகை யாளி யல்லவோ வென்றான் துரியோதனன் எ-று. 126

முதல்வி ழைந்தொருவ னுடனி யைந்தபொருள்
பற்றி யின்புற முயங்கினு
மதிக மென்றபொரு ளொருவன் வே றுதரி
னவனை யேயொழிய வறிவரோ
பொதும டந்தையர் தமக்கு மண்ணிலிது
புதுமை யல்லவவர்பு தல்வனும்
விதுர னின்னொடேயுறவு கொண்டகொர்
வியப்பை யென்சொலி வெறுப்பதே.

(இ-ள்.) வேசையர் முன்னே யொருவன் கொடுத்த திரவியத்தைப்பற்றி அவனுடன் இன்பங்கொண்டுகூடி னாலும், மற்றொருவன் அதிக திரவியத்தைக் கொடுப் பானேயாகில், அவனைத் தவிர வேறொருவர்களை யறி வார்களோ? பூமியிலே அவர்களுக்கு இது புதுமை யல்ல, ஆகையால் அப்படிப்பட்ட பொதுமகள் புத்ர னை விதுரன் என்றவனோடு உறவுகொண்ட அதி சயத்தை நானென்ன சொல்லி வெறுப்பது என்றான் துரியோதனன் எ-று. 127

இன்ன வாறிவனுரைத்த போதவ
னெழுந்தி ருந்துவசை யென்னநீ
சொன்ன வாய்குருதி சோர வாள்கொடு
துளைத்து நின்முடி துணிப்பன்யான்
மன்ன வர்குருகு லத்தி லேயொருவன்
மைந்த னுயிரை வௌவின
னென்ன வானவர் நகைப்ப ரேயெனை
யுரைத்த நாவுட னிருத்தியோ.

(இ-ள்.) இந்தப்பிரகாரம் துரியோதனன் சொன்ன போது, அந்த விதுரன் எழுந்து என்னைக் குறறஞ் சொன்ன வாயிலேஇரத்தமொழுக வாளாயுதங்கொண்டு துளைத்து உன்தலையை வெட்டுவேன். ஆனால் அரசர் களில் குருகுலராஜன் ஒருவன் பிள்ளையுயிரைக் கொன் றான் என்று தேவர்கள் நகைப்பார்களோ! அல்லா விட்டால், என்னை வசைசொன்ன நாவுடனே இருப் பாயோவென்று பின்னுஞ் சொல்லுவான் எ-று. 128

ஈண்ட வர்க்குதவி யாய தூதென
விசைப்ப வற்குலக மெங்கனு
நீண்ட வற்குதவி யாயி னேனென
நினைத்து நீயென்னை யடர்த்தியே
மாண்ட வர்க்குதவி யாய பேரறமு
மிசையு மாண்மையும் வளர்த்திடும்
பாண்டவர்க் குதவியாகி லென்னைமுடி
மன்ன ரான்வர் பழிப்பரோ.

(இ-ள்.) இவ்விடத்திலே பஞ்சபாண்டவர்களுக்கு உதவியாகிய தூதனென்று சொல்லப்பட்டவராயும், உலகமெல்லாம் வளர்ந்தவராயும், இருக்கும் ஸ்ரீகிருஷ்ணபகவானுக்கு விருந்துசெய்து உபகார மாயினேன் என்று நினைத்து, என்னை நீ உதாசினமாகப்பேசிக் கோபித்தாயே மாட்சிமையுடைய பெரிய தபோதனர்களுக்கும் முனிவர்களுக்கும் உதவியாகிய பெரிய தருமமும் கீர்த்தியும் சௌரியமும் வளர்கின்ற பஞ்சபாண்டவர்களுக்கு உபகாரியானல், என்னைக் கிரீடந்தரித்த அரசரானவர்கள் பழிப்பரோ வென்று பின்னுஞ் சொல்லுவான் எ-று. 129

சொல்லி ரண்டுபுக லேனி னிச்சமரி
னின்று வெங்கணை தொடேனென
வில்லி ரண்டினு முயர்ந்த வில்லதனை
வேறி ரண்டுபட வெட்டினன்
மல்லி ரண்டினையு மிருவ ராகிமுன்
மலைந்த காளமுகில் வந்துதன்
னல்லி ரண்டுதினம் வைகு தற்குலகி
லெண்ணி லாததவ மெய்தினன்.

(இ-ள்.) இரண்டுவார்த்தை பகரேன் இனி யுத்தகளத்திலே நின்று வெவ்விய பாணந்தொடேன் என்று சிவன் விஷ்ணு வென்று சொல்லப்பட்ட இரண்டுபேர்கள் விற்களிலுஞ் சிறந்த தன்னுடைய வில்லை இரண்டு துண்டாக வெட்டினா; முன்னாலே கஞ்சனால் விடப்பட்ட சாணூரன் முஷ்டியென்ற இரண்டு மல்லர்களையும் பலபத்திரரும் கிருஷ்ணபகவானுமாக வந்து

வென்ற மகாவிஷ்ணு தன் வீட்டில் இரண்டுநாள் விருந்துண்டு இருந்ததற்கு உலகத்தில் எண்ணில்லாத தவத்தைப் பெற்ற விதுர மகாராஜன் எ-று. 130

அந்த வில்லினை முறித்த விதுரன்
வில்லிதன தாலயம்பு குதவச்சுதன்
சந்த வில்லு மரன்வில்லு மொப்பதொரு
தாம வில்லினை முறிப்பதே
முந்த வில்லியரி லெண்ணும் வில்லுடைய
விசயன் வந்தமரின் முடுகினு
லெந்த வில்லியெதிர் நிற்கும் வில்லியினி
யென்று காவல ரிரங்கினர்.

(இ-ள்.) அந்த வில்லை யொடித்துப்போட்ட விதுரன் அரண்மனைக்குப் போக, அப்போது மகாவிஷ்ணுவினுடைய வில்லுக்கும் உருத்திரனுடைய வில்லுக்கும் ஒப்பாகிய வெற்றிமாலையை யணிந்த வில்லை முறிப்பதென்றால் வில்வீரர்கள் முன்னே எண்ணத்தக்க வில்லையுடைய அருச்சுனன் வந்து யுத்தத்திலே ஆரம்பித்தால் இனி எந்த வில்லையுடையவா அவனெதிரே நிற்க வல்லவரென்று இரங்கினர்க ளரசர்களெல்லாம் எ-று.

கார னைத்தும்விடு தாரை யன்னபல
கணைக ளேவியமர் கருதும்வில்
வீரனைப்பழு துரைத்த நீபகையை
யெங்ங னேதள்ளிகொல் வெல்லுவாய்
பாரனைத்து மினியவராளும் வகை
கண்ணுவித்தனை யழிந்ததுன்
பேரனைத்து மெனவுள்ள ழிந்துசில
பேசினு னுயர் பிதாமகன்.

(இ-ள்.) மேகங்களெல்லாம் ஏககாலத்தில் விடப்பட்ட தாரையைப்போல் அனேகம் பாணங்களை யேவி யுத்தஞ் செய்யும் வில்லையுடைய விதுரனைப் பழுது சொன்ன நீ பகையை எவ்வாறு அடங்க ஜயிப்பாய்? உலகம் யாவையும் இனிப் பாண்டவர்களாளும் வகைசெய்து விட்டாய், உன்னுடைய பெயரோடு கீர்த்தியாவும் அழிந்ததென்று மனம் நொந்து சில வார்த்தைகள் பேசினுர் வீஷ்மாச்சாரியார் எ-று. 123

பிதாம கன்பரிவு டன்மு னிந்துசில
பேச நாசமுறு பேரனும்
விதார மொய்ம்பனும் விதுர னல்லதுவில்
வல்ல வீரர்பிற ரில்லையோ
வுதார சீலனுய ரங்கர் கோன்வரிவி
லொன்று மேயமையு முற்றெழும்
பதாதி யோடமரி லைவ ரும்பட்ம
லைந்தி டப்பரணி பாடவே.

(இ-ள்.) இப்படி வீஷ்மாச்சாரியார் அன்புடனே கோபித்துச் சில வார்த்தைகள் பேசத் துரியோதனன் பார்த்து, விசாலமாகிய மார்பையுடைய உயர்ந்தவிதுர னல்லது வில்லிலே வல்லவர் பிறரொவரு மில்லையோ? மிகுந்த சேனைகளோடு யுத்தத்திலே பாண்டவர்க ளிறக் கும்படி போர்புரியவும், பரணிபாடவும், உதார குணத் தையு முடைய உயர்ந்த கர்னன் வில்லொன்றுமே போதுமென்றான் எ-று. 133

நீயி ருக்கநெடு விற்கை யாசிரிய
னவனி ருக்கநிக ரற்றவன்
சேயி ருக்கவிறன் மன்ன ரிப்படி
திரண்டி ருக்கவெதிர் சென்றுநீள்
வேயி ருக்குமித ழிடைய னுக்குநல்
விருந்து செய்தவன் வெறுக்கிலென்
போயி ருக்கிலென் முறிக்கி லென்சிலை
மலைந்து நம்மொடெவர் போர்செய்வார்

(இ-ள்.) வீஷ்மாச்சாரியார் நீர் இருக்க குலகுரு வாகிய துரோணாச்சாரியார் இருக்க,நிகரில்லாத அவர் குமாரன் அசுவத்தாமா இருக்க, வெற்றியையுடைய அரசர்கள் இப்படித் திரண்டிருக்க, நீண்ட மூங்கிற் குழலை இதழிடையில் வைத்தூதும் இடையனுக்கு எதிர்கொண்டுபோய் அழைத்து நல்ல விருந்திட்ட விதுரன் வெறுத்தாலென்ன? போயிருந்தாலென்ன? வில்லை டொடித்தாலென்ன? வெற்றிமாலையைச் உடிய நம்மோடு யார் போர்புரிவார்களென்றார் துரியோதனன்.

என்றுகூறவிற லங்கர் பூபதியும்
யானி ருக்கவிகல் விசயனைச்
சென்று சீறியுயிர் கொள்ள வல்ல வர்கள்
யாவ ரென்றுநனி செப்புவீர்

கன் றி ஞல்விள வெறிந்த கள்வனிவ
னின் று தேர்நனி கடாவினு
மன் று போரினிடை,காண லாகுமென
தாடல் வெஞ்சிலையி ஞண்மையே.

(இ-ள்.) இவ்விதமாகத் துரியோதனன் சொல்லக்கேட்ட கர்னமகாராஜன் சொல்லுவான், யாதொருவனிருக்கப் பகைகொண்டுவரும் அருச்சுனனை உயிர்வாங்க யாவர் இருக்கின்றார்கள் சொல்லுவீர்கள். கன்றினாலே விளாம்பழத்தை உதிர்த்த திருடனாகிய கோபால ஸ்ரீ கிருஷ்ணன் சகாயமாய் இருந்து இரதசாரத்தியம் செய்தாலும் அன்று யுத்த சமயத்தில் காணலாம் என்னுடைய வில்லின் ஆண்மையை என்று பின்னும் சொல்லுவான் எ-று. 135

அம்ப ரத்தவ ருடன் று சீறினுமோ
ரம்பி லேயழி வர் திண்ணம்யான்
வெம்ப ணிப்பகழி யேவி லாவியுடன்
மீளு வானமரில்விசயனே
விம்ப ரிற்புகல விருத ளத்தினு
மெனக்கு நேரொருவ ரில்லையென்
றும்பர் கற்பகமு நாண வண்மையி
லுயர்ந்த வீரனிவை யுரைசெய்தான்.

(இ-ள்.) தேவர்கள் கோபங்கொண்டு சீறினாலும் ஓர் அஸ்திரத்தினால் அழிந்துபோவார்கள். இது சத்தியம் யான் வெப்பத்தை யுடைய நாகாஸ்திரத்தை யேவினனேயானால் அருச்சுனன் யுத்தத்திலே உயிரோடு திரும்புவானோ? இரண்டு திறத்துச் சேனைகளிலும் இவ்வுலகத்தில் எனக்கு நிகராகியவர்கள் ஒருவருமில்லையென்று சொன்னான்; தெய்வலோகத்திலிருக்கும் கற்பக விருக்ஷமும் நாணும்படி கொடையினா லுயர்ந்த கர்னமகாராஜன் எ-று. 136

திசைய னைத்தினும் வளைந்த தானவரை
யிரவி வந்ததொரு திசையின்வாய்
நிசியெ னப்பொருது வான வர்க்கர
சளித்து வந்தவிறனீர்மையான்

விசைய னுக்குநிகர் நீகொ லோகடவுள்
வெண்ம திக்குநிகர் வெள்ளியோ
வசைவில் விற்றொழிலும் வல்லை யோவென
வொரசை விலாதவன றைந்தனன்.

(இ-ள்.) எட்டுத் திசையிலும் சூழ்ந்துகொண்ட அவுணர்களாகிய காலகேய நிவாதகவசர்களைச்சூரியன் உதயமாகிய திக்கிலே கெட்டொழியு மிருளைப்போல, போர்புரிந்து ஜயித்துத் தேவர்களுக்கு அரசு கொடுத்துத் தெய்வலோக மகுடாபிஷேகமும் பெற்றுவந்த காண்டீபனுக்கு நீ ஒப்போ? தெய்வத்தன்மையுள்ள சந்திரனுக்குச் சுக்கிரனொப்பாகுமோ? அசைவில்லாத வில்யுத்தத்திலும் வல்லவன் நீ தானோ? என்று, ஒரு தளர்ச்சியுமில்லாத வீஷ்மாச்சாரியார் சொன்னார். 137

அவன் மொழிந்தமொழி தன்செவிப்படலு
மருகி ருந்தமு தருந்துநீ
யிவனு டன்சிலர் பகைக்கின் மற்றவர்த
மிசையு மாண்மையு மியம்புவாய்
புவன மொன்று படவரினு மென்றனொடு
பொருவ ராயினெதிர் பொரவிடாய்
சிவனு மென்கணையை யஞ்சு மென்றுநனி
சீறி னுனிரவிச் சிறுவனே.

(இ-ள்.) அந்த வீஷ்மாச்சாரியார் சொன்ன சொல்லைக் காதிலே கேட்ட மாத்திரத்திலே, சமபத்தியிலேயிருந்து அன்னத்தையுண்ட நீர், துரியோதனனுடன் சிலர் பகைத்தால், அவர்களுடைய கீர்த்தியையும் வல்லமையும் எடுத்துப் பேசுவீர். திரிலோகத்தாரும் ஒன்றாய்க் கூடிவந்தாலும், என்னோடு யுத்தம் பண்ணுவார்களோ? ஆனால் விட்டுப்பாரும் ஈசுரனும் என்னுடைய பாணத்துக்குப் பயப்படுவா னென்று மிகவுஞ் சீறினான் சூரியன் புதல்வனான கர்னமகாராஜன் எ-று.

இரவி மைந்தனொடு கங்கை மைந்தனெதிர்
வாய்மை யொன்றையு மிசைத்திலன்
பொர வறிந்திடுது மன்று வெஞ்சமரி
லென்றெ ழுந்துதனி போயினு

னரவ வெங்கொடி யுயர்த்த கோவுமிக
லரச ருக்குவிடை நல்கினன்
விரவு பைந்துளப மாலை யான்விதுரன்
மனையி னுற்றது விளம்புவான்.

(இ-ள்.) அப்படிச் சொல்லிய சூரியன் புதல்வனை கர்னனுடனே கங்காபுத்திரனை வீஷ்மாச்சாரியார் ஒரு வீரவார்த்தையுஞ் சொல்லவில்லை. ஏனென்றால் அன்று நடக்கும் கொடிய யுத்தத்தில் சண்டை பண்ணும்போது தெரிந்து கொள்ளுவோம் என்று போனார். அப்போது சர்ப்பக்கொடியையுடைய துரியோதனன் வலிமையுள்ள அரசர்களுக்கெல்லாம் செலவு கொடுத்து விட்டான். முன்பு பசிய துளபமாலையணிந்த ஸ்ரீகிருஷ்ணதேவர் விதுரன் மனைக்கு எழுந்தருளியதை இனிச் சொல்லுவோம் எ-று. 139

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பொருசிலை முறித்த வீரன்
கோயிலிற் புகுந்து நேமிக்
குருசிலை வணங்கி யாங்க
ணிருப்பவர்க் குரிசி னோக்கி
யிருசிலை யுண்டென் றிந்த
விருநிலத் தியம்பும் வில்வி
னொருசிலை முறித்த சீற்ற
மென்கொலோ வுரைசெ யென்றான்.

(இ-ள்.) விதுர மகாராஜனவன் அரண்மனையில் புகுந்து சக்ராயுதத்தையுடைய ஸ்ரீ கிருஷ்ணபகவானை வணங்கி அங்கே யிருக்க, அவரைப் பகவான் நோக்கி இரண்டு வில்லுகள் உண்டு என்று இந்தப் பெரிய பூமியிலே சொல்லப்பட்ட விற்களில் அருச்சுனன் வில்லிருக்க மற்றொரு வில்லை ஒடித்தற்குக் காரணம் யாது சொல்லென்றார் எ-று. 140

ஆவது கருதானகி லமைச்சர்சொற் கேளா னகில்
வீவது குறியா னகில் விளைவது முணரா னகி
னவது காவா னகி லவனுக்கா நடந்து போரிற்
சாவது பழுதென் றன்றோ சகத்துளோர் சாற்றுகின்றார்.

(இ-ள்.) ஒருவன் தனக்கு ஆகவேண்டிய காரியத்தை நினையானாகில், மந்திரிகள் வார்த்தையைக் கேளானாகில், கெடுவது நினையானாகில், அவனுக்காகப் போய் யுத்தத்திற்காவது பழுதென்றல்லவா, பூலோகத்தி லுள்ளவர்கள் சொல்லுகிறார்கள் எ-று. 141

*செல்வம்வந் துற்ற காலைத்*
*தெய்வமுஞ் சிறிது பேணார்*
*சொல்வன வறிந்து சொல்லார்*
*சுற்றமுந் துணையும் நோக்கார்*
*வெல்வதே நினைவ தல்லால்*
*வெம்பகை வலிதென் றெண்ணார்*
*வல்வினை விளையு மோரார்*
*மண்ணின் மேல் வாழு மாந்தர்*

(இ-ள்.) செல்வம் வந்து சேர்ந்த காலத்தில், தெய்வத்தைக் கொஞ்சமாவது வணங்கார், சொல்ல வேண்டியவைகளை அறிந்து சொல்லமாட்டார் பந்துவையுஞ் சிநேகிதரையும் பாரார்கள்; தாங்கள் ஜயிக்கிறதே நினைக்கிறதல்லாமல் நமக்குப் பகைவர் வலிமை யுள்ளவர் என்று நினையார், தீவினை விளைவதும் பாரார் பூமியிலே வாழ்கின்ற மனிதரென்றான் விதுரராஜன் எ-று

*நினைக்கவுந் தொழவு மெட்டா*
*நீயெழுந் தருளப் பெற்றுந்*
*தனக்கிது தகுதி யென்று*
*தருமருடன்வாழ வெண்ணான்*
*மனக்கடுங் கனலி னன்றான்*
*மனத்தி னுரைத்த புன்சொ*
*லெனக்கிசை யாமல் யானு*
*முருஞ்சிலை யிறுத்த தென்றான்*

(இ-ள்.) நினைக்கவுந் தொழவும் எட்டாத நீரே பிரத்தியக்ஷத்தில்எழுந்தருளப்பெற்றிருந்தும், தனக்கு இது தக்கதென்று ஞாதிகளுடன் வாழ்வதற்கு ஆலோசியான் மனத்திலிருக்கும் கோபாக்கினியை யுடைய எனக்குப் பொருந்தாமல், யானும் பெரிய வில்லை ஒடித்தேனென்றான் விதுரமகாராஜன் எ-று.

மாய்னு மகிழ்ந்து நோக்கி மாசுண மூயர்த்த மன்னன்
போயருஞ் சேனை யோடு போர்க்களங் குறுகும் போது
நீயவ னருகு நில்லா தொழியினுன் னேய மைந்தர்
தாயமுஞ் செல்வ மூற்றுந் தரணியும் பெறுவ ரன்றே.

(இ-ள்.) அப்போது ஸ்ரீ கிருஷ்ணபகவான் மகிழ்ந்து விதுரனைப் பார்த்துத் துரியோதனன் சேனையுடனே யுத்த களத்திற்கு வரும்போது, நீ அவனிடத்தில் இல்லாமல் நீங்கினால் உன்னுடைய நேயத்தைப் பெற்ற குந்திமாதேவி புத்திரராகிய பாண்டவர்கள் தங்கள் பங்கு பாக்கியமும் பூமியும் பெறுவார்கள்என்றான்.

ஏற்றிய நறுநெய் வீசி யிந்தன மடுக்கி னாலுங்
காற்றுவந் துறாத போது கடுங்கனல் கதுவ வற்றோ
நீற்றணி நிமல னன்ன நின்கைவில் லிற்ற தாயிற்
சீற்றவே லரசன்சேனை தென்புலம் படர்கை திண்ணம்.

(இ-ள்.) அதிகமாகிய நல்லநெய்யைவிட்டுவிறகையடுக்கினாலும் காற்று வந்து சேராதபோது கடிய அக்கினி மூளாதல்லவா? பரமசிவனுக்குச் சமானமாகிய உன் கைவில் ஒடிந்ததானால் கோபத்தையுடையவேலாயுதம் ஏந்திய துரியோதனன் சேனைகள் எமலோகத்தையடைவது சத்தியம் எ-று. 145

பன்னிய புரையில் கேள்விப் பயனுகர் மனத்தாய்நின்னை
மன்னவன் மொழிந்தவெல்லாம்பொறுத்தியென்றருளிமா
னந்நகர்தன்னில் வண்மையருளழ காண்மைபேசுங் [யோ
கன்னனைப் பயந்த காதற் கன்னிதன் கோயில் புக்கான்.

[இ-ள்.] பன்னப்பட்ட நூல்களின் கேள்விப்பயன் அறிந்த மனமுடைய விதுராஜனைத் துரியோதனன் சொல்லிய பேச்செல்லாம் பொறுக்கக் கடவை யென்று சொல்லிய ஸ்ரீ கிருஷ்ணபகவான், அந்த நகரத்திலே கொடையையும் அழகையும் அருளையும் ஆண்மையையுமுடைய கர்னனைப் பெற்ற ஆசையுள்ள குந்திமாதேவியினுடைய வீட்டுக்குப் போனார் எ-று. 146

மண்டல மதிய மன்ன மாசறு முகத்தி னானுந்
திண்டிறன் மருமகன் தன்னைச்சென்றெதிர்கொண்டுகண்டு
வெண்டிரை மகர வேலை விரிபுனன் முகந்து தோன்றும்
கொண்டலைமகிழ்ந்துகாணுங்குளிர்பசுந்தோகைபோன்றாள்.

[இ-ள்.] பூலோக சந்திரன் போலக் குற்றமற்ற முகத்தையுடைய குந்திமாதேவியும், மிகுந்த வலிமை யுள்ள மருமகனாகிய ஸ்ரீ கிருஷ்ணனைக் கண்டு வெள் ளிய அலைகளையும் மகரமீன்களையுமுடையசமுத்திரத்தி னது விரிந்த ஜலத்தையுண்டு வருகின்ற மேகத்தை மகிழ்ந்து பார்க்கின்ற குளிர்ந்த பசிய மயிலை யொத்தாள் எ-று. 146

யானுறை யில்லின் வந்த தென்னமா தவமென் றேத்திக்
கானுறை மைந்தர் தம்மைக் கண்டனள்போன்று ளாகித்
தேனுறை துளவி னன்றன் செய்யமா முகத்தை நோக்கி
வானுரை புரிசை மூதூர் வந்ததென் னருடி யென்றாள்.

[இ-ள்.] நானிருக்கும்படியாகிய வீட்டில் எழுந்தரு ளியது என்ன மகாதவமென்று வணங்கிக் காட்டிலே யிருக்கின்ற பிள்ளைகளைக் கண்டவள்போல் மன மகிழ்ந்து, தேன் பெறுகின்ற துளபமாலை யணிந்த ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய திருமுகத்தைப் பார்த்து, ஆகாயமளாவிய மதிலையுடைய இவ்வூருக்கு வந்த காரி யம் என்ன? அருளிச்செய்யுமென்றாள் குந்திமாதேவி.

நின்பெரும் புதல்வர் சொல்ல நெடும்புன னாடு வேண்டி
வன்புடை யரசர் கோமான் மனக்கருத் தறிய வந்தேன்
றென்புலவேந்தன்வெஃகச்செருத்தொழில் புரிவனென்று
னென்பலசொல்லினானை யெதிர்க்கவேயியைந்ததென்றான்.

[இ-ள்.] உன்னுடைய பெருமைபொருந்திய குமா ரர்கள் சொல்ல, நெடிய நீர்வளத்தையுடைய நாட்டை வேண்டித் துரியோதனனுடைய உள்ளக் கருத்தை யறி யும்படி வந்தேன், தென்திசையி லிருக்கின்ற கூற்று வன் உயிர்களை விரும்பியுண்ண யுத்தஞ் செய்வதற்குச் சம்மதித்தான், அவனுடன் பல வார்த்தைகள் பேசி என்ன பிரயோஜனம்! நானை யுத்தஞ் செய்யும்படி சம் மதித்து வந்தேனென்றார் ஸ்ரீகிருஷ்ணபகவான். எ-று.

என்றலுங் குந்தி சால விரங்கின ளெதிர்ந்த போரில்
வென்றிடு வார்கள்யாரோ விதியினலமர்க்க ளத்திற்
பொன்றிடுவார்கள் யாரோவென் றுளம் புலர்ந்துகொந்தா
ளன்றவ டன்னைத் தேற்றி யாழியா னுரைக்க லுற்றான்.

[இ-ள்.] இப்படியென்று சொன்னமாத்திரத்திலே, குந்திமாதேவி மிகவும் இரக்கமுற்றவளாய், எதிர்த்துச் செயிப்பவர்கள் யாவரோ? விதியினால் யுத்தகளத்திலே யிறப்பவர்கள் யாவரோ வென்று, மனம்வாடி வருந்தினாள். அன்று அவளுக்குத் தேறுதல் சொல்லி ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்லத் தொடங்கினார் எ-று. 150

*தன்மைநா னுரைப்பக் கேணின் தந்தைதன் மனையினீயுங்*
*கன்னியா யிருந்து வாழுங்காலையோர் முனிவன் வந்து*
*சொன்னமந் திரமோ ரைந்தி னொன்றினாற்சூரன் றன்னை*
*முன்னினை யவனு மன்று வந்துநின் முன்பு நின்றான்.*

[இ-ள்.] அத்தன்மையை நான் சொல்லக்கேட்பாய், உன் தகப்பன் வீட்டிலே நீ கன்னிகையாயிருந்து வாழுங்காலத்தில் தூருவாச முனிவர்வந்து அனுக்கிரகஞ் செய்த ஐந்து மந்திரங்களில் ஒரு மந்திரத்தால் சூரியனை நினைத்தாய்; அவனும் வந்து நின்னெதிருற்றான் எ-று. 151

*கதிரவ னருளி னாலோர் கணத்திடைக் காதல் கூர*
*மதலையங் கொருவன் றன்னைப்பயந்தபின்வடுவென் றஞ்சி*
*மிதவையம் பேழை தன்னிற் பொதிந்துநீ விடவப்போதங்*
*நதியுமம் மகவைக் கங்கை நதியிடைப் படுத்த தன்றே.*

[இ-ள்.] இப்படிவந்த சூரியனது கிருபையினால் ஒரு க்ஷணத்திலே உனக்கு ஆசை அதிகரிக்க அங்கே ஒரு பிள்ளையைப் பெற்றபின்பு, குற்றம் என்று நினைத்து, நீரிலே மிதக்கப்பட்ட பெட்டியிலே குழந்தையை வைத்து ஆற்றிலே விட்டாய். அப்போது அந்தஆறு கங்கையிலே கொண்டுபோய் விட்டது. 152

*காதனின் புதல்வன் றன்னைக்கண்ணிலாவரசன்பொற்றேர்ச்*
*சூதன்வந் தெடுத்துக் கொண்டு சுதனென வளர்த்தகாலை*
*யாதப னிவனை யாருங் கன்னனென் றழைக்கவென்றான்*
*றாதையும் விசும்பிற் சொன்ன நாமமே தக்க தென்றான்.*

[இ-ள்.] அப்பெட்டியிலேவைத்துநதியில் விட்ட ஆசையுள்ள உன் பிள்ளையைத் திருதராட்டிரனுடைய தேர்ப்பாகன் வந்து எடுத்துக் கொண்டுபோய்ப் பிள்ளையாக வளர்த்த காலத்தில் சூரியன் இவனை எல்லோரும்

கர்னனென அழையுங்கள் என்றுசொன்னான். அவன் தகப்பனும் அசரீரியாற் சொல்லிவ நாமதேயமே தகுதி யான தென்று சொன்னான். ஏ-று. 153

பண்புடைக் குமரன் கற்ற படைத்தொழில்பலவுங்கண்டு
நண்புடையுரிமை யெல்லாம் நல்கிமா முடியுஞ் சூட்டி
வண்பணியுயர்த்தகோமான்வாழ்வதற்களித்தான் மற்றைத்
திண்பரித் தேர்வல் லோரி லவனையார் செயிக்க வல்லார்.

[இ-ள்.] குணத்தையுடைய அந்தப் பிள்ளை கற்றிருந்த ஆயுதத்தொழில் அநேகம் பார்த்துச் சிநேகமுடைய உரிமையை எல்லாங் கொடுத்து கிரீடமுந் தரித்து துரியோதனனானவன் செல்வத்தையுங் கொடுத்தான். வலிமையுள்ள புரவிகள் பூட்டிய இரதங்களையுடைய அரசரில் அந்தக் கர்னனை ஜயிக்கவல்லவர் யாரென்றார் ஸ்ரீகிருஷ்ணபகவான் எ-று. 154

அந்தநின் மைந்தன் றானே யருஞ்சிலை விசய னோடு
வந்தெதிர் மலைய நின்றா னுறவுமற் றறிய மாட்டான்
சிந்தையி னையந் தீர விதனைநீ தெளியச் சொல்லிக்
கொந்தவி ழலங்க லானைக் கூட்டுக விரைவி னம்மா.

[இ-ள்.] உன் பிள்ளையாகிய அந்தக் கர்னன் வில்லிலே வல்லவனாகிய அருச்சுனனோடு வந்து யுத்தஞ் செய்ய விரும்புகிறான். தனக்குத் தம்பியென்று அறியான். மனதிலிருக்குஞ் சந்தேகந்தீர இச் செய்தியை நீ தெளியும்படி சொல்லிக் கர்னனைச் சீக்கிரத்தில் ஒன்றாகக் கூட்டிவைப்பாய் என்றார் ஸ்ரீகிருஷ்ணபகவான்.

தம்பிய ரைந்து பேருந் தனித்தனி யேவல் செய்ய
வம்பவி ழலங்க லோடு மாமணி மகுடஞ் சூட்டி
யம்புவி முழுதும் நீயே யாளலாம் வருக வென்றால்
உம்பர்கா வனைய கையா னுன்னுரை மறுத்தா னாகில்

[இ-ள்.] தம்பிமார் ஐந்துபேரும் வெவ்வேறு ஏவற்பணிசெய்ய வாசனை வீசுகின்ற மாலையுடனே ரத்தினம் பதித்த முடி சூட்டிக்கொண்டு பூமிமுழுவதும்நீயேயாளலாம் வாவென்று சொன்னால் தெய்வலோகத்தி லிருக்கும் பஞ்சதருவுக்குச் சமானமாகிய தியாகத்தைத் தருங் கையையுடைய கர்னன் சம்மதிப்பான். அப்படிச் சம்மதியாமல் மறுத்தானாகில் எ-று. 156

எரியமு தருந்தக் கான மெரிந்தநா ளக்ன் று போன
வரவினை யங்கர் கோமா னுக்க மாமகக்கொண்டான்
வரசிலை விஜயன் றன்மேன் மறுகணை தொடுக்காவண்ணை
மொருவரம் வேண்டு கென்றா னுற்றவர்க்குறுதிசூழ்வான்.

[இ-ள்.] அக்கினி புசிக்கும்படி காண்டாவனந் தகித்தநாளில், நீங்கிய சர்ப்பத்தைக் கர்னன் அம்பாக்கிக் கொண்டான். வரிந்த வில்லையுடைய அருச்சுனன் மேல் ஒருகணையேற்றி மறுகணை தொடுக்காதவிதம் ஒரு வரமாத்திரம் வேண்டி வாங்கிக்கொள்வாய் என்றார் அடுத்தவர்களுக்கு உறுதிசெய்யும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் எ-று. 157

மன்றலந் தெரியல் வெய்யோன்
மதலையென் மைந்த னென்ப
தன்றெனக் குரைத்தா யாயி
னயனுட னணுக வொட்டேன்
சென்றுயி ரொழிக்கு மாறு
செருவினை விளைத்துப் பின்னை
யின்றெனக் குரைத்தா யையா
வென்னினைந் தென்செய் தாயே.

[இ-ள்.] வாசமுள்ள மாலையணிந்தசூரியன்புதல்வனாகிய கர்னன் என் பிள்ளையென்பது அன்றே யெனக்குச் சொன்னீரானால், அந்தத் துரியோதனனுடனே சேரவொட்டேன். யுத்தகளத்திற்குப்போய் உயிரை ஒழிக்கும்படி யுத்தத்தை மூட்டிவிட்ட பின்பு இன்று எனக்குச் சொன்னாய் ஐயனே! என்னை நினைத்து என்ன செய்தாயென்றாள் குந்திதேவி எ-று. 158

கான் பட்ட கனலிற் பாயுங் கடுங்கணை விலக்கி னேனேல்
வான்பட்ட புரவித் தேரோன் மகன்படு மகவான் மைந்தன்
றான் பட்டுமடியுஞ்சென்ற தடாதினி யிருந்தேனுகில்
யான்பட்டகொடுமைநன்றென்றென்பட்டாளிரங்கி வீழ்ந்தாள்.

[இ-ள்.] காண்டாவனத்து அக்கினியிலிருந்துவந்த வேகத்தையுடைய சர்ப்பக்கணையை விலக்க நினைத்தேனயோனால், சூரியன் புதல்வனாகியகர்னன் இறந்து விடுவான். நான்போய் அதை விலக்காமல் விடுவேனே

யானால், இந்திரன் புதல்வனாகிய அர்ச்சுனன் இறந்து விடுவான்· யான் படுகின்ற கொடுமை நன்றா யிருக்கின்றதென்று என்ன பாடுபட்டாள், இரக்கமுற்று வீழ்ந்தாள், குந்திமாதேவி எ-று. 159

*தேக்குந்தி யகிலுஞ் சாந்துஞ் சிந்துநீர் நதிசூழ் செல்வக்*
*கோக்குந்தி யரசன் பாவை குலைந்தழுங்கொடுமைகண்டு*
*மீக்குந்தி யுறிக டோறும் வெண்ணெயுந் தயிரு மூண்ட*
*வாக்குந்தி மலரோன் பின்னு மனத்தளர் வகற்றினனே.*

[இ-ள்.] தேக்கு அகில் சந்தனமுதலிய மரங்களைத் தள்ளிக்கொண்டு, செல்லுகின்ற நீரையுடைய சிந்து நதி சூழ்ந்த குந்தி தேசத்து அரசன் புத்திரியானவள் குலைகுலைந்து அழுகின்ற கொடுமையைப் பார்த்து மேலே எட்டி உறிகளிலெல்லாம் வெண்ணெயுந் தயிரும் உண்ட வாயையும் நாபிக்கமலத்தையு முடைய ஸ்ரீகிருஷ்ணபகவான் மறுபடியும் மனத்தளர்ச்சியை நீக்கினார் எ-று. 160

*பைவருந் தலைக ளைந்து படைத்தபன் னகமேபோல*
*வைவரும் படுத னன்றோ வங்கர்கோன் படுத னன்றோ*
*வுய்வருஞ் சமரி லாவி யொருவர்போ யொருவ ருய்யார்*
*நைவருந் துயர மாறி நடப்பதே கரும மென்றான்.*

[இ-ள்·] படத்தையுடைய ஐந்து தலைகளைப்படைத்துள்ள ஒரு சர்ப்பம் போலப் பஞ்சபாண்டவர்களும் இறத்தல்நல்லதோ? அங்க தேசத்திற்கு அதிபதியாகிய கர்னனொருவன் இறப்பது நல்லதோ? பிழைத்தற்கரிய யுத்தத்திலே ஐந்துபேர்களுக்குள்ளே ஒருவர் இறந்து மற்றவர்கள்இருக்கமாட்டார்கள். ஆகையால் நைதற்கு வருகின்ற துக்கத்தை நீக்கிக்கொண்டு போவதே காரிய மென்றார் ஸ்ரீகிருஷ்ணபகவான் எ-று 161

*காளமா முகிலின் மேனி கரியநா யகனுந் தேற்றி*
*மீளமா தவத்தின் மிக்க விதுரன்வாழ் மனையி னெய்த*
*வாளமாலவரையில்வெய்யோன்குறுனன் வருணன்றிக்கி*
*னீளமால் யானை நெற்றி நிறத்தசெந் திலகம்போன்ற.*

[இ-ள்.] கரியமேகவண்ணரான ஸ்ரீகிருஷ்ண பகவானுந் தேறுதல் சொல்லி மறுபடியும் மகத்தாகிய தவத்தில் மிகுந்த விதுரன் வாழ்கின்றஅரண்மனைக்குப்

போக அப்போது மேற்குத் திசையில் இருக்கின்ற பெரிய யானையினுடைய நெற்றியிலிட்ட சிந்தூரப் பொட்டைப்போல் சக்கரவாளகிரியிலே சூரியன் அஸ்தமனமானான் எ-று. 162

நாற்றிசை யுலகுதன்னி
ஞன்மறை யுணர்ந்தோர் தாமும்
போற்றிசை மாலை யென்னும்
பொற்புடை யணங்கு வைக
மாற்றிடை விலாத செம்பொன்
மண்டபந் தன்னி லாதி
மேற்றிசைக் கடவு ளிட்ட
வெயின் மணிப் பீடம் போன்றான்.

[இ-ள்.] நான்கு திசையுள்ள உலகத்தி ல்வேதப் பிராமணர்கள் யாவரும் போற்றுகின்ற கீர்த்தியை யுடைய மாலைப்பொழுதென்னும் அழகுள்ள மங்கை யானவளிருக்க, நிகரற்ற மாற்றுள்ள செம்பொன்னாற் செய்த மண்டபத்தில் சூரியன் வருணனு லிடப்பட்ட ஒளியையுடைய இரத்தின பீடத்தையொத்தான் எ-று.

கொண்டமென் சிறைவண் டென்னுங்
கொழுநருக் கிடங்கொ டாமன்
முண்டகக் குலத்து மாதர்
முகங்குவிந் தூடி நிற்பக்
கண்டெதிர் நின்ற காதற்
கயிரவக் கணிகை மாதர்
வண்டுறை நின்று தங்கள்
வாய்மலர்ந் தழைக்க லுற்றார்.

[இ-ள்.] மெல்லிய சிறகைக் கொண்ட வண்டுகள் என்னும் நாயகருக்கு இடம் கொடாமல், தாமரைக் கூட்டமாகிய மங்கையர்கள் மலராகியமுகத்தைக்குவித்துக்கொண்டு கோபித்து நிற்கப்பார்த்து, அல்லிகளாடிய தாதிகள் எதிர்கொண்டு வளத்தை யுடைய நீர்த்துறையிலிருந்து தங்கள் வாயைத் திறந்து அழைக்கின்றார்கள் எ-று. 164

கானெலா மலர்ந்த முல்லை கனகமீ தெழுந்ததென்ன
வானெலாம் வயங்கு தாரை நிரைநிரை மலர்ந்துதோன்ற
வேனிலான் விழவின் வைத்தவெள்ளிவெண்கும்பமெனத்
தூநிலா மதியம் வந்து குணதிசைத் தோன்னிற் றம்மா.

[இ-ள்] காடெல்லாம் மலர்ந்த முல்லைகள், ஆகாயத்தின் மேலும் எழுந்ததென்று சொல்லும்படி அவ்வாகாயத்தில் பிரகாசம் பொருந்திய தாரைகள் கும்பல் கும்பலாய்ப் பரவித்தோன்ற, மன்மதனுடைய உற்சவத்தில் வைத்த வெள்ளியால் செய்த பூர்ண கும்பமென்று சொல்லப் பரிசுத்தமாகிய இயலையுடைய சந்திர மண்டலமானது கிழக்குத் திசையில்உதயமாயிற்று. 165

*தூவிய நிலவுதோன்றத் துணைவரைப் பிரிந்தோர்கண்கள்*
*காவியு மாம்ப லும்பைங் கருவிள மலரும் போன்ற*
*மேவிய மகளிர் கண்கண் மீனெறிபரவை யேழுந்*
*தாவிய வுழையுங் காதற் சகோரமும் போன்றமாதோ.*

(இ-ள்.)பரிசுத்தமாகிய இயலையுடைய சந்திரன் உதயமாகப் புருஷனை நீங்கின மங்கைய்ருடைய கண்கள் நீலோற்பல மலரையும் அல்லிமலரையும் குளிர்ந்த கருவிள மலரையும் ஒத்தன. புருஷரைக்கூடியமங்கையருடைய, கண்கள் மீனை வீசுகின்ற ஏழுசமுத்திரத்தையும் தாவுகின்ற மானையும் ஆசையுடைய சகோரபட்சியையும் ஒத்திருந்தன எ-று- 166

*அரவிய லல்கு லாரு மகிழ்தரு மன்புகூற*
*விரவிய வமளி யெய்தி வீதிமா நகரி லெங்கும்*
*பரவையி னிமிர்ந்தவோதை யமர்ந்தபின்பரித்தேர் வேந்த*
*னிரவிடைச்சூழ்ந்தவண்ணமின்னதென்றியம்புகின்றோம்*

இ-ள். பாம்பின் படம்போலும் நிதம்பத்தையுடைய மங்கையர்கள் புருஷர்களும் அன்பு சிறக்கச் சப்பிரகூட மஞ்சத்தையடைந்து வீதிகளையுடைய பட்டணமெல்லாஞ் சமுத்திரம்போல முழங்கு முழக்கம் அடங்கிய பின்பு அர்த்தராத்திரியிலே துரியோதனன் ஆலோசனை செய்தது இன்னதென்று சொல்லுவோம்.

*தந்தையுந் தம்பி மாருங் கன்னனுஞ் சகுனி தானுஞ்*
*சிந்தையிற் றெளிந்த கல்விச் செழுமதி யமைச்சர்தாமு*
*முந்தர வுயர்த்தகோமா னேவலான் முழுது மெண்ணி*
*மந்திர மிருப்பான் வந்தோர் மண்டபங் குறுகினரே.*

[இ-ள்.] தகப்பனாகிய திருதராட்டிரனும் தம்பிமார்களும் கர்னனும் சகுனியும் மனதிலே யாராய்ந்துதெளி

வாக அறிந்த கல்வி நிறைந்த செழுமையுள்ள புத்தியை யுடைய மந்திரிகளும் சர்ப்பக்கொடி யுயர்த்த துரியோதன ராஜன் ஏவலாலே முழுதும் ஆலோசனை செய்யும் பொருட்டு ஒரு மண்டபத்திலே வந்திருந்தார் எ-று.

தீதறு மதிவல் லோரைச் செழுமதிக் குடையா னேக்கிப்
பாதவ வனத்திற் போன பாண்டவர் தம்மை மீண்டு
மேதக வழைத்து நாடு வேண்டுமி னென்று மூட்டும்
யாதவன் றனித்து வந்தானென்செய்வதியம்புமென்றான்.

[இ-ள்.] குற்றமற்ற மந்திரிகளைச் செழுமையுள்ள சந்திரவட்டக் குடையையுடைய துரியோதனன் பார்த்துக் கொடுமையாகிய காட்டுக்குப்போன பஞ்சபாண்டவரை இங்கே மேன்மையாக அழைத்து, உங்கள் நாட்டைக் கேளுங்களென்று மூட்டிவிட்ட கோபாலகிருஷ்ணன் தனித்து வந்தான். ஆகவே அதற்கு நாம்என்ன செய்வது சொல்லும்என்றான் எ-று. 169

பொரும்படை மைந்தன் கூறத்
தந்தையும் பொருந்தச் சொல்வா
னிரும்புலி வலையிற் பட்டால்
விடுவரோ வெயின ரானோர்
வரம்பில்வெஞ் சேனை யோடும்
வளைந்தினி மாயன் றன்னைக்
கரும்பொழு தகலு முன்னே
கொல்வதே கரும மென்றான்

[இ-ள்.] யுத்தஞ் செய்கின்ற சேனைகளுடைய துரியோதனன் கேட்க, தகப்பனாகிய திருதராட்டிரனும் பொருந்தும்படி சொல்லுவான், அருமையாகிய புலியானது வலையிலே யகப்பட்டால் வேடரானவர்கள் விட்டு விடுவார்களோ? அளவில்லாத வெள்விய சேனையோடு நீ வளைந்துகொண்டு கோபாலகிருஷ்ணனை இராத்திரியானது நீங்குமுன்னே கொன்றுபோடுவதே நல்ல காரியம் என்றான் எ-று. 170

கண்ணிலா னுரைத்த மாற்றங் கேட்டலுங்காவலோரின்
மண்ணிலா ரிதற்கு முன்பு தூதரை வளைந்து கொன்றா
ரெண்ணிலா விந்தவெண்ண மெவ்வுழிக் கற்றதென்று
வெண்ணிலாமுறுவல்செய்து விகனனும்விளம்பலுற்றான்

(இ-ள்.) கண்ணில்லாததிருதராட்டிரன் சொன்ன பேச்சைக் கேட்டவளவில், இராஜாக்களிலே பூமியிலே எவர்கள் இதற்கு முன்னே தூதர்களை வந்து கொன்றவர்கள்? எண்ணிக்கை யில்லாத இந்தவிதம் எந்த வழிக்கு ஏற்றதென்று வெள்ளியநிலாவைப்போற் சிரித்துச் சொல்லத் தொடங்கினன் விகர்னன் எ-று. 171

*மூத்தவ ரிளையோர் வேத முனிவரர் பிணியின்மிக்கோர்*
*கோத்திரமொழிவோர்மாதர்தூதரென்றிவரைக் கொல்லி*
*பார்த்திவர் தமக்கு வேறு பாவமற் றிதனி னில்லை*
*பூத்தெரி தொடையாய் பின்னு நரகினும்புகுவரென்றான்.*

(இ-ள்.) மூத்தவர்கள்; இளையவர்கள், வேதப்பிராமணர்கள், மிகுத்த நோயாளிகள், துதிசெய்பவர்கள்; மங்கையர்கள், தூதர்களென்று சொல்லப்பட்ட இவர்களைக் கொல்வதென்றால் அரசர்களுக்கு இதைவிட வேறே பாவமில்லை, பூவிற் றொடுத்த மாலையணிந்த அரசனே! அவர்கள் பின்னும் நரகத்திற் புகுவார் எ-று.

*பழியுடைப் பகைஞ ரேனுந்*
*தன்பெரும் பதியில் வந்தா*
*லழிவுறக் கோறல் பாவ*
*மாண்மையு மன்றா மென்பார்*
*கழிகடற் சேனை சூழக்*
*கங்குலின் வளைந்திட் டாலு*
*மெழிலுடைக் கொண்டல் வண்ண*
*னகப்படா னெவர்க்கு மென்றான்.*

(இ-ள்.) பழியையுடைய சத்துருக்களானாலும் தன்னுடைய பெரிய ஊரில் வந்தால் அழிவையடைய அவர்களைக் கொல்லுதல் பாவம், வலிமையும் அல்ல என்று சொல்லுவார்கள், மிகுந்த கடல்போன்ற சேனைகள் சூழ இராத்திரியிலே வளைந்து கொண்டாலும் அழகு பொருந்திய மேகவண்ணனான ஸ்ரீகிருஷ்ணபகவான் ஒருவருக்கும் அகப்படார் என்றான் விகர்னன்.

*வெம்புய வலியான் மாதை விரிதுகி லுரிந்த வீரன்*
*றம்பியை முனிந்து சீறித்தமையனை நோக்கிச்சொல்வான்*
*வம்பவி ழலங்கன் மார்ப மந்தண முரைக்க லுற்றா*
*யிம்பர்மற் றியாதுசொல்லவிளைஞரையழைத்ததென்றான்.*

[இ-ள்.] வெவ்விய புஜத்திஞலே திரௌபதையைத் துகிலுரிந்த துர்ச்சாதனஞனவன் தம்பியைப்பார்த்துக் கோபித்துத் தமையனைப் பார்த்துச் சொல்வான்: வாசனைபொருந்திய மாலையையணிந்த மார்பனே! இரகசியம் பேசத் தொடங்கிஞல் இவ்விடத்திலே, சிறியோர்களை அழைத்தது என்ன காரியஞ் சொல்ல என்முன்.

அதிரதர் முதலா வுள்ள வவனிபர் வளைந்து நிற்ப
வெதிர்முகி றவழும் கோயி லெரியினை யெங்கு மூட்டி
விதுரனு மவனுஞ் சேர வெந்திட லல்லவ தல்லான்
மதியிறி தில்லை யின்னே வல்விரைந் தெழுமி னென்முன்

(இ-ள்.) அதிரதர் முதலாகிய அரசர்கள் எல்லாரும் சூழ்ந்திருக்க மேகம் தவழ்கின்ற அரண்மனையிலே நெருப்பை மூட்டிவிட்டு விதுரனும் கோபாலகிருஷ்ணனுஞ் சேர வெந்து போகும்படி செய்வ தல்லாமல் வேறே யோசனையில்லை, சீக்கிரத்தில் புறப்படு மென்முன் துர்ச்சாதனன் எ-று. 175

செங்கதி ரெழுந்து சீறிற் செறியிரு ணிற்ப துண்டோ
விங்கிவ னிருந்த வில்லி லெரியிடவேண்டுமோ தான்
வெங்கணை யொன்றி ஞலே விளித்திடவென் றுமீள்வேன்
கங்குலினெழுமினென் றுகன்னனுங் கன்றுசொன்ஞன்.

(இ-ள்!) சூரியன்கிரணங்களை வீசிப்புறப்பட்டானேயாஞல் உலகங்களை மூடிய இருளானது நிற்குமோ? இவன் இருந்த வீட்டிலே நெருப்பு போடவேண்டுமோ? வெவ்வியபாண மொன்றிஞலே சாகும்படி செய்துமீள்வேன் இப்பொழுதுதானே புறப்படுங்கள் என்று கோபித்துச் சொன்ஞன் கர்னமகாராஜன் எ-று.

பதிப்பெயர்ந் தேகி நாளைப் பகைவரைக் கூடுமாயின்
விதிப்பய னென்ன நம்மை வெஞ்சமர் வெல்லவொட்டான்
மதிப்பதென் வேறு வேறு கள்ளமாயனைமனையிற்கோலிச்
சதிப்பதேகருமமென் றுசௌபலன்பின்னுஞ்சொல்வான்.

[இ-ள்.] இந்த ஊரை விட்டுப்போய் நாளை நம்முடைய பகையாளிகளுடனேகூடுவேனேயாஞல், தடுக்கக்கூடாத விதிப்பயனைப் போல நம்மை வெவ்விய யுத்தத்திலே ஜயிக்க வொட்டான். வேறே யோசிக்கவேண்டிய தென்ன? கோபாலகிருஷ்ணனை வீட்டிலே

வைத்து வஞ்சிப்பதே காரியமென்று சகுனியானவன் பின்னுஞ் சொல்லுவான் எ-று. 177

கொல்லுவ தியற்கை யன்று குழிபறித் தரக்க ரோடு
மல்லரை யிருத்தி மேலோ ராசனம் வகுத்து நாளை
யெல்லிடை யழைத்து வீழ்த்தி யிகலுடன் விலங்குபூட்டித்
தொல்லருஞ் சிறையில் வைத்தது தூதருக்குரிமையென்றான்.

[இ-ள்.] கொல்வது இயற்கையல்ல குழிவெட்டி இராட்சதர்களுடனே மல்லர்களையும் உள்ளே வைத்து மேலே ஓர் ஆசனஞ் செய்து நாளை ராத்திரியிலே யழைத்து அதிலே விழும்படி செய்து அரிய விலங்கு பூட்டி, அரியசிறையிலே வைப்பது தூதருக்கு இயற்கை என்று சொன்னான் எ-று. 178

மாதுல னுரைத்த மாற்ற மருகனு மிசைந்து கங்குற்
போதிடை யனேக மல்லர் வருகெனப் புகன்று தானு
நீதியி னிருந்து தாழ நிலவறை சமைத்தபின்ன
ராதிநூறாயி ரம்போ ரரக்கரை யதனுள் வைத்தான்.

[இ-ள்.] மாமனாகிய சகுனி சொன்ன சொல்லுக்குத் துரியோதனனும் இசைந்து கேட்டு ராத்திரியிலே அனேக மல்லரை வரச்சொல்லித் தானும் இருந்து கொண்டு நிலவறை யுண்டாக்கி அதிலே முன்னே நூறாயிரம் அரக்கரை வைத்தான் எ-று. 179

மல்லர்பப் பரவர் தம்மை மற்றதி னிரட்டி வைத்தான்
வில்லுடை வீரர்தம்மை வேறதி னிரட்டி வைத்தான்
பல்படை வல்லோர் தம்மைப் பதின்படங்கதனில்வைத்தா
னல்லிலோர் கடிகை தன்னிலறிவனை யழைக்க வென்றே

(இ-ள்.) மல்லரையும் பப்பரவரையும் அதற்கிரட்டிப்பு வைத்தான். வில்வீரரை அதற்கிரட்டிப்பு வைத்தான். ஆயுதத்திலே வல்லவர்கள் பலபேரை அவரிற் பத்துமடங்கு அதிலே வைத்தான். இராத்திரியிலேஒரு நாழிகையில் அறிவுடைய ஸ்ரீ கிருஷ்ண தேவரை அழைக்க வேண்டும் என்றான் எ-று. 180

பெரும்பில வறையை வேயின் பிளப்பினா னிறைத்துமூடி
யரும்பெறன் மணிக ளாலோ ராசன மதன்மே லாக்கிச்
சுரும்பிமிர் மாலை தூக்கித் தொழிலுடை விதான மேற்றி
வரம்பிலாவென்றிவேலான்மாறிலாவண்ணஞ்செய்தான்.

(இ-ள்.)பெரிய பிலத்துவாரத்தினுடைய அறையை மூங்கில் பிளப்பினுல் நிறைத்து மூடிவிட்டுப் பெறுதற்கரிய ரத்தினங்களாலே ஓர் ஆசனம் அதன்மேல்உண்டாக்கி வண்டுகள் மொய்க்கின்ற பூமாலை தொங்கக் கட்டிச் சித்திரவிமானமொன்று மேலே வைத்து அனேகம் வெற்றியைத்தரித்த வேலையுடைய துரியோதனன் மாறுபாடு தெரியாதவிதஞ் செய்தான் எ-று. 181

அடியவர் மனத்தி லுள்ள வாரிருட் கங்கு நீர்க்கு
நெடியவ னிருக்க வென் று நிலவறை விரகிற் செய்த
கடியவ னியற்கை யஞ்சிக் கங்குலுங் கடிதிற் போகப்
படியவர் துயிலும் போகப் பரிதியு முதயஞ் செய்தான்

(இ-ள்.) அடியவர்களுடைய மனத்திலேயுள்ள நிறைந்த அஞ்ஞான இருளை நீக்குகின்ற ஸ்ரீகிருஷ்ண பகவான் இருக்கவேண்டுமென்று உபாயமாய் நிலவறை செய்த கொடியவனுகிய துரியோதனனுடைய குணத்துக்குப் பயந்து இராப்பொழுதுஞ் சீக்கிரத்திலே நீங்கிப் பூமியி லுள்ளவர்கள் நித்திரையும் நீங்கச் சூரியன் உதயஞ் செய்தான் எ-று. 182

சிரந்தரு சுடிகை நாகத் திரண்மணி பலவுஞ் சிந்தி
நிரந்தர மருவி வீழு நிறந்திக ழுதயக் குன்றிற்
பரந்தெழு மருக்கன் சூழ்ந்து படரிருட் கங்குல் கண்டு
புரந்தரன் கோயி லிட்டபொங்கொளித்தீபம்போன்றான்.

(இ-ள்.) சர்ப்பத்தினுடைய உச்சியி லிருக்கின்ற திரட்சியையுடைய அநேக மணிகளுஞ் சிதறி எப்போதும் அருவிகள் ஒழுகுகின்ற நிறத்தையுடையஉதயகிரியிலே பரவியெழுகின்ற சூரியன் எப்படி யிருக்கின்றான் என்னில் இருள் சூழ்ந்த இராத்திரியைக் கண்டு இந்திரனைவன் தன் அரண்மனையிலிட்ட மிகுந்த ஒளியையுடைய தீபத்தை ஒத்தான் எ-று. 183

தொடர்ந்தொளி ருதய ராகத் தோடுற நெருங்கிமேன்மே
லடர்ந்தரி பரந்து காம னுகம வேதம் பாடத்
தடங்கையன் மலைந்து லாவத் தாமரை முகமுங் காதன்
மடந்தையர் முகமுஞ் சேர மணம்பெற மலர்ந்த மாதோ

(இ-ள்.) தொடர்ச்சி கொண்டு பிரகாசிக்கின்ற உதயராகத்துடனே நெருங்கி மேலும்மேலும் வண்டுகள்

பரவிமன்மதனுடைய ஆகமவே தங்களைப்பாடத்தடாகத்திலே சேற்கெண்டைகள் சண்டையிட்டு உலாவுகின்ற தாமரைமுகையினுடைய முகமும் ஆசையையுடைய மாதர்களுடைய முகமும் ஒருங்குற மணம் பெறும்படி மலர்ந்தன எ-று. 148

*இருந்துயி லுணர்ந்து வேந்தர் யாவரு மிரவிற் சற்றும்*
*வருந்துயி லாத கண்ணன் வாழ்பெருங் கோயில் புக்கார்*
*பெருந்துயி லகந்த போகப் பேரணைத் துறந்த மாலு*
*மருந்துயி லெழுந்து காலையருங்கடன்முறையிற்செய்தான்.*

(இ-ள்.) பெரிய நித்திரை நீங்கிய அரசர்களெல்லாம் சற்றாகிலும் நித்திரை யில்லாத ஸ்ரீகிருஷ்ணபகவான் வாழ்கின்ற பெரிய கோயிலுக்குப் போனார்கள். அப்போது சேஷசயனத்திலே அரிய துயில் நீங்கிய மகாவிஷ்ணுவும் அரிய நித்திரை நீங்கிக் காலையிலே செய்யும்கடன் களெல்லாம் செய்தார் எ-று. 185

*மாதவ னிருந்த கோயில்வந்தடி வணங்கிமன்னன்*
*றூதுவ ராழி யங்கைத் தோன்றலே துளப மாலே*
*யாதவ குலத்தோ ரேறேயெழுந்தருள் கென்றானின்றெம்*
*மேதகு மரச னென்றார்முகுந்தனும் விரைந்துசென்றான்.*

[இ-ள்.] இப்படி ஸ்ரீகிருஷ்ணபகவான் இருந்த அரண்மனையில் துரியோதனன் விடுத்த தூதர்கள் வந்து அவர் பாதத்தில் வணங்கிச் சக்ராயுதத்தையுடைய அரசனே! துளபமாலை யணிந்த மார்பனே! யாதவ குலத்தோருக்கு ஓர் ஆண் சிங்கமே! எங்கள் அரசன் உம்மையழைத்துக்கொண்டு வரச்சொன்னான் என்றார்கள். அதுகேட்டு ஸ்ரீகிருஷ்ணபகவானும் சீக்கிரத்திற் போனார் எ-று. 186

*கந்தடு களிற்று வேந்தன் கண்ணிலா வரசுங்கங்கை*
*மைந்தனு முதலா யுள்ள மன்னரு மதிவல் லோருந்*
*தந்திர வகையு மேனை யிளைஞருந்தன்னைச் சூழ*
*விந்திர னிருக்கை யன்ன கோயிலு டினிதி ருந்தான்.*

[இ-ள்.] கட்டுத்தறியை முறிக்கின்ற யானையையுடைய துரியோதனராஜன் திருதராட்டிரனும் வீஷ்மாச்சாரியார் முதலாகிய அரசர்களும் மந்திரிகளும் தந்

திரிகளும் மற்றத் தம்பிமார்களுந் தன்னைச்சூழ இந்திரனுடைய அரசிருக்கை போன்ற கோயிலிலே இனிதாக இருந்தான் எ-று. 187

நாமவே லரசரோடு நால்வகைச் சேனையோடு
மாமுகில் வண்ணன் வந்தானென் றனர் வரவுகண்டோர்
வீமலர்த் தொடையி னனும் வேத்திரத் தவரை நோக்கித்
தாமரைத் தடங்கண் மாயன் றன்னையேவிடுமினென்றான்.

(இ-ள்) அச்சத்தைத் தருகின்ற வேலாயுதத்தையுடைய அரசர்களோடும் ரதகஜ துரக பதாதிகளாகிய நால்வகைச் சேனையோடும் மேகவண்ணரான ஸ்ரீ கிருஷ்ணபகவான் வந்தார் என்று சொன்னார்கள். அது கேட்டு புஷ்பமாலை யணிந்த துரியோதனனும் பிரம்பையுடைய சேவகரைப் பார்த்துத் தாமரை மலர் போன்ற விசாலமாகிய கண்களை யுடைய அந்த ஸ்ரீ கிருஷ்ணனை மாத்திரம் விடுங்களென்று சொன்னான்.

தன்பெருஞ் சேனை நிற்கத் தண்டுழா யலங்கலானு
மின்புற நகைத்து வேந்த ரிருந்தபே ரவையினெய்த
மின்புணர் துவச நாக விடங்கிளர் மனத்தினானு
மன்பொடு திகிரி யானை யதன்மிசை யிருக்கவென்றான்.

(இ-ள்.) தன்னுடைய பெரிய சேனைகளெல்லாம் இருக்கத் துளபமாலை யணிந்த ஸ்ரீகிருஷ்ணபகவானும் இன்பம் பொருந்தப் புன்சிரிப்புக்கொண்டு அரசர்கள் இருந்த பெரிய சபைக்குப்போகப் பிரகாசமுள்ள சர்ப்பக்கொடியையும் விஷத்துக்குச் சமானமாகிய மனத்தையுமுடைய துரியோதனனும் அன்புடனே ஸ்ரீ கிருஷ்ணபகவானை அதன்மேலே யிருப்பீர் என்றான்.

இறைவனெழிற்கதிர் மணிகள
ழுத்திய தவிசினி லிருத்தலுமே
நெறுநெற னக்கொடு நிலவறை
யிற்புக நெடியவ னப்பொழுதே
மறலியெ னத்தகு நிருபனி
யற்றிய விரகை மனத்துணரா
முறுகு சினத்துட னடிய
தலத்துற முடிக்க கனத்துறவே.

[இ-ள்.] ஸ்ரீகிருஷ்ணபகவான்கிரணங்களையுடைய இரத்தினங்களைப்பதித்த ஆசனத்திலிருந்த வளவிலே

நெறு நெறுவென்று கொடிய நிலவறையிலே அது புக, அவர் அப்போது கூற்றுவனென்று சொல்லத் தக்க துரியோதனன் செய்த சூதை மனத்திலே யறிந்து, மிகுந்த கோபத்துடனே பாதங்கள் பாதாளத் திலே பொருந்த, சிரம் ஆகாயத்திலே பொருந்த எ-று.

அஞ்சின மஞ்சின மென்றுவி
ரைந்துய ரண்டர் பணிந்திடவும்
துஞ்சின மின்றென வன்பணி
யின்கிளை துன்ப முழந்திடவும்
வஞ்ச மனங்கொடு வஞ்சக
னின்றிடு வஞ்சனை நன்றிதென
நெஞ்சில் வெகுண்டுல கொன்றுப
டும்படி நின்றுநி மிர்ந்தனனே.

(இ-ள்.) பயந்தோம் பயந்தோமென்று சீக்கிரத்தில் உயர்ந்த தேவர்கள் வணங்கவும், இன்று இறந்தோம் என்று சர்ப்பக்கூட்டங்கள் துன்பப்படவும், வஞ்ச மனத்தைக் கொண்டு துரியோதனன் இன்று செய்த இந்த வஞ்சகம் நன்றாயிருக்கின்றதென்ற மனத்திலே கோபித்து உலகமெல்லாம் ஒன்றுபடும்படி நின்று உயர்ந்தார் ஸ்ரீ கிருஷ்ணபகவான் எ-று. 191

மல்லர ரக்கர்கு லத்தொடு பப்பரர்
வாளினர் வேலினர் போர்
வில்லின ரிப்படி துற்ற
நிலத்தறை மேவிய வீரரெலாந்
தொல்லை யிடிக்கயர் வுற்றுயி
ரிற்றுறு சுடிகை யராவெனவே
கல்லென வுட்கினர் தத்தமு
டற்பலகால்கொடு தைத்திடவே.

(இ-ள்.) மல்லர்கள் ராட்சதர்கள் பப்பரர்கள்வாளை யுடையவர் வேலையுடையவர் பொருகின்ற வில்லையுடை யவர் இப்படிப் பூமியிலே வெட்டிய நிலவறையிலே யிருந்த சுத்த வீரர்கள் எல்லாம் இடிக்குப் பயந்தும் வருத்தமடைந்து உயிரற்றிருந்த சிரத்தையுடைய சர்ப் பங்களைப் போலக் கல்லென்னு மோசையுடனே யஞ்சி னார்கள்; தங்கள் தங்கள் தேகத்திலேபல கால்களைக் கொண்டு உதைத்திட எ-று. 192

அற்புத பங்கய நற்பத
முந்தலி னக்குழி யின்புடையே
சற்பத லந்தொறு மற்றுவி
ழுந்தன தத்தநெடுந்தலைபோய்
முற்பவ னன்பொரமுக்குவ
டுந்துணிபட்டுமு டங்கிபொன்
வெற்பென நின்றனர் வெற்றுட
லங்கொடு விற்படைகொண்டவரே.

(இ-ள்.) அழகிய தாமரை மலர்போன்ற நல்ல பாதத்தினாலே உதைத்தலினால், அந்தக் குழியினிடத்திலே நாகலோகந்தோறும் அற்று விழுந்ததம்முடைய நெடிய தலைகளெல்லாம் போய், முன் வாயுபகவான் போர்செய்ய மூன்று சிகரமுந் துணிபட்டு வளைந்த பொன்மலைபோல் நின்றார்கள், வெற்றுத் தேகம் கொண்டு விற்படை கொண்ட சுத்தவீரர்கள் எ-று. 193

சேல்வலி யுற்றெதிர் வீசியெ
ழிற்கரு மேதநி றத்திருமால்
கால்விசை யிற்பட மோதுத
விற்பொரு காமர்பு யத்துணைபோய்
நீலநி றக்கவின் வாசவன்
வச்சிர நீள்படை யிற்சிறகிர்
மால்வரை யொத்தனர் வாகைபொ
றக்கதிர் வாள்களெடுத்தவரே.

(இ-ள்.) அழகிய கரியமேகவண்ணராகியகிருஷ்ண பகவான் மேலே வலிமை கொண்டு எதிரே வீசிக் கால் விசையினாலே படும்படி மோதுதலினாலே பொருகின்ற அழகிய புஜங்களிரண்டும் போய் நீலநிறத்தையுடைய அழகிய இந்திரனுடைய வச்சிராயுதத்தினாலே சிறகு அறுப்புண்ட பெரிய மலைகளை யொத்தார்கள், வெற்றி பெறும்படிவாளாயுதங்களையெடுத்த சுத்தவீரர்கள். எ-று.

வெயில்விடு பைத்தலை யமளி மிசைத்துயில்
விபுதர்க ளுந்தரி யோன்
பயில வுதைத்தலி னவர்களு
ரத்திடை பதமலர் பட்டுருவா
மயில்கட விக்கட வுளர்பகை
யைக்கதிர் மகுடமு ருக்கியவே
ளயில்கொடு குத்திய நெடுவரை
யொத்தன ரயில்க ளெடுத்தவரே.

(இ-ள்.) ஒளியுள்ள சிரோன்மணியையுடைய ஆதி சேடன்மேல் நித்திரை செய்கின்ற தேவர்களுக்கரிய ஸ்ரீ கிருஷ்ணபகவான் உதைத்த படியால், அவர்கள் மார்பிலே பாதங்கள் பட்டுஊடுருவிமயில்வாகனத்தைச் செலுத்தித்தேவர்கள் பகையாகிய சூரபதுமன் முதலிய அசுரர்களைச் சங்கரித்த சுப்பிரமணிய சுவாமி வேலாயுதங்கொண்டு குத்திய நெடிய கிரௌஞ்சகிரியை ஒத்தார்கள் வேலாயுதங்களெடுத்து வீரர்கள் எ-று. 195

மின்சுடி கைப்புய கங்கள்வெ
 ருக்கொளும் வெங்கரு டக்கொடியோன்
வன்பத பரியன கங்கொடெ டுத்துயர்
 வன்கக னத்திடலான்
முன்புவ னத்திடை வந்துக விக்கிறை
 மொய்ம்புண ரப்புகல்போ
தென்பும லைக்குறு பண்மையெ
 டுத்தனரெஞ்சிய பப்பரரே.

[இ-ள்.] மின்னுகின்ற ரத்னம் விளங்கிய உச்சியையுடைய சர்ப்பங்கள் அஞ்சுகின்ற வெவ்விய கருடக் கொடியோனாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் தம்முடைய பாததாமரையிலிருக்கும் நகத்தைக் கொண்டு எடுத்து உயர்ந்த ஆகாயத்திலே யெறிதலால் முன் காட்டிலே வந்து சுக்ரீவன் வலிமை யறியச் சொன்னபோது, ஸ்ரீராமரால் துந்துபி யெலும்புமலை என்ன பாடுபட்டதோ அதையடுத்தார்கள் வலிமை குறைந்த பப்பரர்.

மைந்து படைத்துயர் பஞ்சவர்சொற்படி
 வந்தம லர்க்கழலா
லுந்தி யுதைத்துட லம்புதை யப்பில
 மொன்றி யொளித்திடலா
லந்தனன் முற்பகல் வந்துபுடைத்திட
 வஞ்சிநி லத்திடைவீழ்
விந்தமொ டொத்தனர் வனகுழி யிற்றிகழ்
 வெங்கண ரக்கருமே

[இ-ள்.]வலிமை படைத்துஉயர்ந்தபஞ்ச பாண்டவர்கள் சொற்படி தூதுவந்த மலர்போன்ற பாதத்தினால் தள்ளி யுதைத்துத்தேகம் புதையப் பிலத்துவாரத்திலே ஒன்று ஒளித்திடும்படி செய்ததாலே, அகஸ்திய

முனிவர் முன்னுளிலே வந்து தள்ளப்பயந்து பூமியிலே வீழ்ந்த விந்தகிரியை யொத்தனர்; நிலவறையிலே அகப்பட்ட வெவ்விய கண்களையுடைய இராட்சதர்கள் எ-று.

அந்தவி டத்தெறி பம்பர மொத்துட
லஞ்சுழ லச் சுழலக்
குந்தியு றித்தயி ருண்டவர் பொற்கழல்
கொண்டுசு ழற்றுதலான்
மூந்தம ரர்க்கமு தந்தர மைக்கடன்
முன்சுழ லச்சுழலு
மந்தர மொத்தனர் குந்தமெ டுத்தெதிர்
வந்தும லைந்தவரே.

(இ-ள்.) அந்த நிலவறையிலே யெறிகின்ற பம்பரத்தை யொத்துத் தேகம் சுழலச் சுழலக் குந்தியிருந்து உறியிலிருந்த தயிரையுண்ட ஸ்ரீ கிருஷ்ணபகவான் பொன்போன்ற பாதத்தைக் கொண்டு சுழற்றுகையினுலே முன்னே தேவர்களுக்கு அமுதுகொடுக்கச் சமுத்திரமானது சுழலச் சுழலுகின்ற மந்திரகிரியை யொத்தார்கள், எறியீட்டி யெடுத்து எதிரேவந்து யுத்தம் செய்த சுத்தவீரர்கள் எ-று. 198

முட்டியதொல் குருதிக்கடன் மல்கலின்
முட்டி கொள் பல்விரலா
னெட்டுல ஸம்வகிர் பட்டத னுள்விழ
நித்தர்செய் கொல்வினையான்
மட்டற வல்விற லுற்றெதிர்
செல்கவி மைக்கட லெல்லையிலே
யிட்டன கல்வரை யொத்தனர்
வெல்கழ லெக்குல மல்லருமே.

(இ-ள்.) இந்த நிலவறையை மூடப்பெற்ற ரத்த சமுத்திரம் நிறைந்தபடியால் முட்டிக்கொள்கின்ற பல விரல்களினுலே நெடியதேகம்பிளவுபட்டு அதினுள்ளே விழ, ஸ்ரீகிருஷ்ணபகவான் செய்த செய்கையினுலே அளவற்ற வலிமைகொண்டு எதிரிட்டுச் சென்ற வானரங்கள் கரிய கடலிலேயிட்ட பர்வதங்களை யொத்தனர், வெல்லுகின்ற வீரக்கழலை யணிந்த கூட்டமாகிய எவ்விதமானவர்களும் எ-று. 199

எப்புவி நிற்பன வெக்கிரி நிற்பன
வெக்கட னிற்பனவென்
றிற்புவ னத்துயிர் முற்றும யக்குற
வுட்கின ரெய்திமையோர்
மைப்புய லொத்தொளிர் பச்சைநி
றத்தினன் வர்க்கம லர்க்கழலா
லொப்பற மட்குழி யுற்றவ ரைப்பட
வொத்திமி தித்தலுமே.

[இ-ள்.] இனி எந்தப் பூமிகள் நிற்கும் எந்த மலைகள் நிற்கும் எந்தக் கடல்கள் நிற்கும் என்று இந்தப் பூமியிலுள்ள உயிர் முழுவதும் மயக்கத்தை யடையத் தேவர்கள் அஞ்சி யிளைத்தார்கள்; கரிய மேகத்தை யொத்து விளங்கிய ஸ்ரீ கிருஷ்ண தேவர் அநேக மலர்போன்ற திருவடிகளால் ஒப்பில்லாமல் நிலவறையில் இருந்தவரைப் படும்படி ஒத்தி மிதித்தலால் எ-று. 200

கொண்டன் முழக்கென வம்புவி யைக்கடல்
கொண்டெடு தற்கெதிருஞ்
சண்டமு ழக்கென வண்டவ னக்கிளை
தந்தமு ழக்கெனவே
வண்டின மொய்த்தெழு வண்டுளளித்
தாடை வண்டுவ ரைத்திருமா
லண்டமு கட்டுற நின்றுசி
ரித்தன னங்கணெ ருப்பெழவே.

[இ-ள்.] மேகமுழக்கம் என்று சொல்லவும், பூமியைக் கடல்கொண்டு எழுதற்கு எதிரும் வேகத்தை யுடைய முழக்கமென்று சொல்லவும், வலிமைபொருந்திய வாயுவின் கூட்டஞ்செய்த முழக்கமென்று சொல்லவும், வண்டுகள் மொய்த்தெழுகின்ற வளத்தையுடைய துளபமாலை யணிந்த துவாரகைக்கு அரசராகிய ஸ்ரீ கிருஷ்ணபகவான் அண்டமுகடளாவ நின்று அழகிய கண்ணில் நெருப்பெழச்சிரித்தார் எ-று. 201

ஒன்றுபடக்கட லம்புமு
கப்பன வும்பர்கு லத்தருவுஞ்
சென்றுமு மிப்பவன வெண்டிசை
யிற்குல சிந்துர மெற்றுபவெண்

குன்ற முடைப்பன பைம்பொ
ஹூ ரக்கிரி கொண்டு திரிப்பனவா
லன் று தனித்தனிநின் று
மலைத்தரு ளங்கைகள் பற்பலவே.

(இ-ள்.) அப்போது வெவ்வேறு யுத்தஞ் செய்த பல கையிலே சில கைகள் சமுத்திர நீரையெல்லாம் ஒன்றுபடும்படி மொள்ளும், சில கைகள் தெய்வலோகத்திலிருக்கும் பஞ்சதருக்களையும்போய் முறிக்கும், சில கைகள் அட்டகுல பர்வதங்களையும் உடைக்கும்; சில கைகள் மகாமேருவைச் சுற்றும் எ-று. 202

துகிரிதழ் வைத்துநல் வளைகண்
முழங்கின தொடர்சில கைத்தலமே
யகிலம் வெருக்கொள வரிமழு
வெற்றின வடுசில கைத்தலமே
புகலும் வடிக்கணை யதனை
மெடுத்தன பொருசில கைத்தலமே
திகழ்விச யத்தோடு சிலைகள்
குனிந்தன சிலசில கைத்தலமே.

(இ-ள்.) சில கைகள் பவளம் போன்ற வாயிலே சங்குகளை வைத்து முழக்கஞ் செய்தன, சில கைகள் பூலோகம் அஞ்சும்படி எரிகின்ற மழுவாயுதங்களை எறிந்தன, சில கைகள் கொல்லுகின்ற கருடாஸ்திரங்களை எடுத்தன, சில கைகள் ஜயத்துடனே வில்லுகளைக் குனிப்பன எ-று. 203

வெங்கணை யத்திரள் குந்தனி
றப்படை வெம்புழ லக்கைகள் போர்
பொங்கிய வச்சிர முந்துக
லப்பைகள் புணக்குழ வர்க்கமயி
லெங்கு மலைத்தெழு செஞ்சுரி
கைத்திர டண்டமி வற்றி னெடுந்
தங்கிய சக்கர யந்தித
ரித்தன தண்பல கைந்தலமே.

(இ-ள்.) வெவ்விய வளைதடிகள் கைவேல்கள்வெம்பச் செய்யும் உலக்கைகள்போரை மிகச்செய்கின்ற வச்சிராயுதங்களை எறிகின்ற கலப்பைகள் குலவர்க்கங்கள் எவ்விடத்தும் போர்செய்தெழுகின்ற உடைவாள்கள்

தண்டாயுதங்கள் பலபேர் தாங்கிய சக்ரபந்திகளாகிய இவைகளைத் தரித்திருந்தன, அனேகம் கைகள் எ-று.

மேலெழு மங்கதிர் வாளுறை
போம்படி வீசின வான்புடையே
தோலின மேந்தின நீள்கவ
ணேந்தின சோரிகள் தோர்ந்திடவே
ஞாலமெ லாம்பொரு தோமரம்
வாங்கின நாமொரு மூன்றனவாஞ்
சூலமொ டோங்கின பாசமொ
டோங்கின சூழசில பூங்கரமே.

(இ-ள்.) சில கைகள் மேலே எழுகின்ற அழகிய கிரணங்களையுடைய வாளாயுதங்களை உறைபோகும்படி வீசுதல் செய்தன, சில கைகள் கேடயங்கள் ஏந்தின, சில கைகள் நெடிய கவண்களேந்தின, சிலகைகள் உதிரம் ஒழுகப் பூமிமுழுவதையும் பொருகின்ற தோமரம் கொண்டன, சில கைகள் நாக்குகள் மூன்று என்னப்பட்ட சூலங்களோடுயர்ந்தன, சில கைகள் பாசங்களோ டுயர்ந்தன எ-று. 205

சிலசில கைந்தல மடுகழ
லிற்பல செறிகழல் கட்டினவே
சிலசில கைத்தல மறுகுபு
யத்திடை செறிதொடை யிட்டனவே
சிலசில கைத்தல மணிகொளு
ரத்திடை பணிகடி ருத்தினவே
சிலசில கைத்தலம் விரல்கொடு
சுட்டின செறுநர்தி கைத்திடவே.

(இ-ள்.) சிலசில கைகள் கொல்லுகின்ற பாதங்களிலே வீரக்கழல்களைக் கட்டின, சிலசில கைகள் புயங்களிலே மலர்மாலைகளிட்டன, சிலசில கைகள் அழகினைக் கொண்ட மார்பிலே ஆபரணங்களைத் தரித்தன, சிலசில கைகள் சத்துருக்கள் திகைக்கும்படி விரல்களைக் கொண்டு சுட்டிக்காண்பித்தன எ-று. 206

மாயிரு ஞாலமெ லாம்வெளி
யாயொளிர் மரகத சோபையுறப்
போயிரு பாலும் வளைந்து
வளைந்தெதிர் பெருமூளை வெம்படையோ

டாயிர மாயிர மங்கைபு
றப்பட வண்டருமாதவரும்
பாயிர நான் மறை பாடிவி
யந்துப ணிந்துபு கழ்ந்தனரே.

(இ-ள்.) மகத்தாகிய பெரிய பூமியெல்லாம் வெளியாய் விளங்குகின்ற மரகதத்தின் பிரகாசம் பொருந்த இரண்டு பக்கத்திலும்போய் வளைந்து வளைந்து எதிரே பொருகின்ற முனையையுடைய வெவ்விய ஆயுதத்துடன் இரண்டாயிரம் கைகள் புறப்படத் தேவர்களும் முனிவர்களும் பாயிரமுள்ள நாலு வேதங்களைப் பாடி அதிசயித்துப் பணிந்து புகழ்ந்தார்கள் எ-று. 207

ஆரண னேயர னேபுவ னங்கள னைத்தையு மன்றுதவுங்
காரண னேகரு ணாகர னேகம லாசனி காதலனே
வாரண மேபொது வேயொரு பேரிட வந்தரு ளும்புயலே
நாரண னேமுனியேன் முனியேலென நாகர்பணிந்தனரே

(இ-ள்.) பிரமதேவனே! உருத்திரமூர்த்தியே! புவனங்களை யெல்லாம் அன்று உதவிய மகாவிஷ்ணுவே! கிருபைக்கு இடமானவனே! இலட்சுமிக்குக் கணவனே! கஜேந்திரன் ஆதிமூலமே யென்று பொதுவாய் ஒரு பெயரிட்டழைக்க நானே அப்பேருக்கு உடையவன் என்று வந்த மேகவண்ணனே! நாராயணனே! கோபியாதே கோபியாதே என்றுதேவர்கள் வணங்கினார்கள்.

மாதவ னேமுனி யேலெமை
யாளுடை வானவ னேமுனியேல்
யாதவ னேமுனி யேலித
யத்திலி ருப்பவ னேமுனியே
லாதவ னேமுனி யேன்மதி
வெங்கன லானவ னேமுனியே
னீதவ னேமுனி யேன்முனி
யேலென நின்றுப ணிந்தனரே.

(இ-ள்.)மாதவனே! கோபியாதே எங்களை அருமையாகவுடையதேவனே! கோபியாதே, யாதவமரபில் வந்தவனே! கோபியாதே, அடியார்கள் மனத்தில் இருப்பவனே! கோபியாதே, சோம சூரியாக்கினியானவனே! கோபியாதே யென்று நின்று பணிந்தார்கள் எ-று. 209

கங்கைமகன்கதி ரோன்மக
னம்பிகை காதன்ம கன்றனய
ரங்கவை யின்கணி ருந்தந
ராதிப ரடையவெ ழுந்தடைவே
செங்கை குவித்த சிரத்தின
ராயுணர் வொன்றிய சிந்தையரா
யெங்கள் பிழைப்பினை யின்று
பொறுத்தரு ளென்றப ணிந்தனரே.

[இ-ள்.] வீஷ்மாச்சாரி, கர்னன் திருதராட்டிரன, அவன் பிள்ளைகள், அங்கே சபையிலிருந்த ராஜாக்கள் எல்லாம் எழுந்திருந்து சிரத்தின்மேல் கைகளைக் கூப்பிக்கொண்டவர்களாய் அறிவு மிகுந்த மனமுடைய வராய் நாங்கள் செய்த தப்பிதத்தை இன்று பொறுத் தருள்வாய் என்று வணங்கினார்கள் எ-று. 210

கண்ணன் பொறுத்தருள் வெண்ணெய
ருந்திய கள்வபொ றுத்தருள்கார்
வண்ணபொ றுத்தருள் வாம
பொறுத்தருள் வரதபொ றுத்தருணீ
திண்ணம னத்துணர் வொன்றுமி
லாதவர் செய்தபெ ரும்பிழையென்
றண்ணன்ம லர்க்கழல் சென்னியில்
வைத்தெதி ரன்றுதுதித்தனரே.

(இ-ள்.) கண்ணனே. பொறுத்தருள், ஆயர்ப்பாடி யில் வெண்ணெய் உண்டகள்வனே! பொறுத்தருள், மேகவண்ணனே! பொருத்தருள், வாமனே! பொறுத் தருள், வரதனே! பொறுத்தருள், சத்தியமாக மனத் திலே அறிவானது எவ்வளவு மில்லாத சிறியவர்கள் செய்த பெரும் பிழையென்று ஸ்ரீ கிருஷ்ணபகவானு டைய தாமரை மலர்போன்ற பாதங்களைச் சிரத்திலே வைத்துக்கொண்டு எதிரே நின்று அன்று துதிசெய் தார்கள். எ-று. 211

தேவரும் வாசவ னுந்தவ ருந்திசை முகனு ந ராதிபரும்
யாவரு மன்பினொடாயிரநாமமுமெண்ணியிறைஞ்சுதலான்
மூவரு மொன்றென நின்றருணந்தனும்முனிவுத்விர்ந்தருளா
மீவரு மண்டமு றுந்திரு மேனியொ டுங்கினன் மீளவுமே.

(இ-ள்.) முப்பத்துமுக்கோடி தேவர்களும், இந்திரனும், திறமையுடைய தேவதேவனாகிய பிரமதேவனும் எல்லாரும் பக்தியுடனே ஆயிரந் திருநாமமும் தியானித்து வணங்கியபடியால் திரிமூர்த்திகளும் ஒன்று என்று சொல்லும்படி நின்ற ஸ்ரீ கிருஷ்ணபகவானும் கோபம் நீங்கிக் கிருபைசெய்து உலகமெல்லாமாகிய திருமேனி மறுபடியும் அடக்கினார் எ-று. 212

*தன்னினு யர்ந்தவர் யாருமி*
*லாமுகில் சதுர்மறை யின்படியே*
*யெந்நில முந்திரு வடியின்ம*
*றைந்திட விப்படி நின்றிடவும்*
*பின்னையு மஞ்சிய யர்ந்தில*
*னெஞ்சுபெ யர்ந்தில னுசனமுஞ்*
*சென்னியி லுங்கரம் வைத்திலன்*
*வண்புகழ் சிறிதுமொ ழிந்திலனே.*

(இ-ள்) தனக்கு உயர்ந்தவர்கள் ஒருவரும் இல்லாத ஸ்ரீ கிருஷ்ணபகவான் நான்கு வேதத்தின்படி எந்தப் பூமியும் திருவடியிலே மறைந்திட இப்படி நிற்கவும் பின்னும் அஞ்சி மனத்தில் வருந்துகிலன், தேக மசைகிலன், சிரத்திலே கரங்களும் கூப்புகிலன், வளத்தையுடைய அவர் கீர்த்தியைச் சிறிதும் சொல்லுகிலன், துரியோதனன் எ-று. 213

*தொல்லவை யின்கணி ருந்தந*
*ராதிப துன்மகி யாலெனைநீ*
*கொல்லநி னைந்தது நன்றெனெ*
*வன்றிறல் கூறின னெம்பெருமா*
*னெல்லையி னின்குல முற்றும*
*லைந்திட வுற்றும லைந்தொர்கணத்*
*தெல்லையின் வெஞ்சவர் நூறுவன்*
*யாவரு மேறுவர் வானுலகே.*

[இ-ள்.] பழமையாயுள்ள இராஜசபையிலேயிருந்த துரியோதன ராஜனே! துற்புத்தியினால் நீ என்னைக் கொல்ல நினைத்தது நல்லதென்று சொல்லி, ஸ்ரீ கிருஷ்ணபகவான் சீக்கிரத்தில் உன்குலம் முழுவதும் மடிய யுத்தம் செய்து ஒரு கணநேரத்திற் கொல்லுவேன், அப்போது எல்லோரும் மேலுலகத்திலே ஏறுவார் என்று பின்னுஞ் சொல்லுவார் எ-று. 214

அஞ்சின நின்னைய ழித்திட
நின்னுட னன்றுபெ ருஞ்சமர்வாய்
வெஞ்சுட ராயுத மொன்றுமெ
டுக்கில மென்றுவி ளம்பியது
வெஞ்சம லேந்தெதிர் வந்துயிர்
கொள்ளுது மென்றுதனித் தனியே
பஞ்சவர் கூறிய வஞ்சின
வாசக மும்பழுதாமெனவே.

[இ-ள்.] உன்னைக் கொல்லுவதற்கு அஞ்சினோம், ஏனெனில் உன்னுடனே அன்று பெரிய யுத்தத்திலே வெவ்விய கிரணத்தையுடைய ஆயுதம் ஒன்றும் எடுக்க மாட்டோம் என்று சொல்லியதும், பாண்டவர்கள் தாம் வந்து சண்டையிட்டு உயிரைக் கொல்லுகிறோம் என்று தனித்தனியே சொல்லிய சபதமுள்ள பேச்சும் பழுதாமென்றல்லவோ? எ-று. 215

என்றுரை யாடிநெ டுங்கடல்
வண்ணனெ ழுந்தரு ளப்பிறகே
சென்றன ரெம்முடி மன்னவ
ரும்பணி சேர்கொடி யோனையலார்
நின்றுப சாரமு ரைத்தவர்
தம்மைநி றுத்திய னந்தரமே
வன்றிற லங்கர்பி ரானொடு
கூறினன் மற்றொரு வாசகமே.

[இ-ள்.] இப்படிச் சொல்லி நெடியகடல் வண்ணரான ஸ்ரீ கிருஷ்ணபகவான் எழுந்தருளப் பின்புஎல்லா அரசர்களும் அவர் பின்னே போனார்கள். சர்ப்பக் கொடி படைத்த அந்தத் துரியோதனனை யல்லாமல் நின்று உபசாரம் சொன்னபேர்களை நிறுத்திப் பின்பு வலிமையுள்ள திறலையுடைய அங்கதேசத்துக்கு அதிபதியாகிய கர்ணனுடன் ஒரு வார்த்தை சொன்னார். 216

வண்மையி னுலுய ரங்கர்க்கு
லாதிப மதிகுலம் வாழ்வுறவந்
துண்மையி னுயர் மன்னவ
ரைவரு முன்னிலு னக்கிளையோர்
பெண்மையி னுயர் குந்திவ
யிற்றிடை பெருமையி னலிதயத்
திண்மையி னுயர் நின்னையு
மன்பொடு தினகர னல்கினனே.

(இ-ள்.) கொடையினுலுயர்ந்த கர்ணமகாராஜனே சந்திரவமிசம் வாழ்வது உண்மையினு லுயர்ந்த பாண்டவர்ஐந்துபேரும் நினக்கு மிடத்தில் உனக்கிளையவர்கள், பெண்மையி லுயர்ந்த குந்திமாதேவி வயிற்றிலே பெருமையினுலும் மனவலியாலும் உயர்ந்த உன்னையும் அன்புடனே சூரியன் பெற்ருன். எ-று. 217

ஏயுநெ டுங்கொடி முரசுடை
யோனையெ ழிற்றரு மன்றரவே
வாயுவ ழங்கினன் வீமனை
நல்கினன் விசயனை வாசவனு
மாயுநி கழ்ந்திடு வேதம்
ருத்துவ ரன்பொட ளித்தனர்செந்
தேயுவெ னுந்திற னகுலனை
யுஞ்சக தேவனை யும்பெரிதே.

[இ-ள்.] நெடிய முரசக்கொடியுடைய தருமராஜாவை அழகிய யமன் பெற்ருன், வீமனை வாயுபகவான் பெற்ருன், அர்ச்சுனனைத் தேவேந்திரன் பெற்ருன், அக்கினியென்னுந் திறலையுடைய நகுலனையும் சகாதேவனையும் ஆயுள்வேதமறிந்த மருத்துவ தேவர்கள் அன்புடனே பெற்ருர்கள். எ-று. 218

அந்தணன் முன்றரு மந்திர
மைந்தினி லறுவரை யுங்கடவுட்
குந்தி பயந்தனள் யானினி
யென்பல கூறுவ துங்களினீ
ரிந்தநி லம்பெறு வீர் தவிர்
கிற்பேற யாரினி வேறுரியார்
வந்தினி நும்பியர் தம்மொடு
சேர்கென மாயன்மொ ழிந்தனனே.

[இ-ள்.] துர்வாசமுனிவர் அருளிய ஐந்துமந்திரத்திலே ஆறு பேரையும் தெய்வத்தன்மையுள்ள குந்திமாதேவி பெற்றனள், யான் பலபேச்சுச் சொல்லவேண்டியதென்ன இருக்கிறது. உங்களுக்குள்ளே நீங்கள் இந்தப் பூமியைப் பெற்ருலும் விட்டுவிட்டாலும் உங்களைவிடப் பெறுதற்கு வேறே எவர் உரிமை யுள்ளவர்களாவார்? இனி வந்து உன்னுடைய தம்பிமாரோடு சேரென்று சொன்னுன் ஸ்ரீகிருஷ்ணபகவான் எ-று. 219

வேறு

கன்றால் விளவின் கனியுகுத்துங்
கழையா னிரையின் கணமழைத்துங்
குன்றான் மழையின் குலந்தடுத்துங்
குலவுஞ் செல்வக் கோபாலா
வின்று லெனது பிறப்புணர்ந்தே
னென்லன் புருகி யெம்பியர்பாற்
சென்று றென்னை நீயறியச்
செகத்தா ரென்றுஞ் சிரியாரோ.

[இ-ள்.] பசுவின் கன்றினால் விளவின் பழத்தை யுதிர்த்தும் மூங்கிற்குழலால் பசுக்கூட்டங்களை யழைத்துக் கோவர்த்தனகிரியால் மேகஞ் சொரிந்தமழையைத் தடுத்தும் பிரகாசிக்கின்ற செல்வத்தையுடைய கோபால கிருஷ்ணரே! நீர் சொல்லுகையினாலேஇன்று என்னுடைய பிறப்பை யறிந்தேன் என்று அன்புருகி என் தம்பியரிடத்திற் போனால், என்னை நீயறிய உலகத்தார் எப்போதுஞ் சிரிக்க மாட்டார்களோ? எ-று. 220

ஆரென் றறியத் தகாதவெனை
யரசு மாக்கி முடிசூட்டிச்
சீருந் திறமுந் தனதுபெருந்
திருவு மெனக்கே தெரிந்தளித்தான்
பாரின் றறிய நூற்றுவர்க்கும்
பழிதீர் வென்றிப் பாண்டவர்க்கும்
போரென் றறிந்துஞ் செய்ந்நன்றி
போற்று தவரிற் போவேனோ.

[இ-ள்.] இன்னானென்று அறியத்தகாத என்னை அரசனாக்கிக் கிரீடந் தரித்துச் சிறப்பையுந் திறத்தையும் தனது பெரிய செல்வத்தையும் எனக்கே தெரிந்து கொடுத்தான். அதுவுமல்லாமல் இன்று பூமியெல்லா மறிய அந்தத் துரியோதனன் முதலிய நூற்றுவர்க்கும் குற்றமற்ற ஜயத்தையுடையபஞ்சபாண்டவர்க்கும்யுத்தம் வந்து நேரிட்டிருக்கிறதென்று அறிந்தும், ஒருவன் செய்த நன்றியைக் காப்பாற்றாத பேர்களைப்போல்நான் போவேனோ என்றான் கர்ணமகாராஜன். எ-று. 221

இரவிக் குரிய திருமதலை
யிவ்வா றுரைக்க விசைவண்டு
விரவிப் பயிலுந் துழாம் முடியோன்
வேறோர் மொழியும் விளம்பாம

ஓரவிற் றடந்தோ ளூரவோனை
யேகென் றருளி யொருசார் வெம்
புரவித் தாமா னின்றானை
வருகென் றழைத்துப் புகல்கின்றான்.

[இ-ள்.] சூரியன் புதல்வனாகிய கர்ணன் இப்படிச் சொல்ல வண்டுகள் இசை பாடுகின்ற துளபமாலையை யணிந்த கிரீடத்தை யுடைய ஸ்ரீ கிருஷ்ணபகவான் மற்றொரு சொல்லுஞ் சொல்லாமல் அவனைப் போவென்றனுப்பி ஒரு பக்கத்திலே நின்ற அசுவத்தாமனை வாவென அழைத்துச் சொல்வார் எ-று. 222

போயே கானம் பலதிரிந்து
புகன்ற விரதம் பொய்யாதோ
ராயே வந்த பாண்டவர்க
ளைந்தூர்வேண்ட மறுத்ததற்குச்
சேயே யனைய சிலைமுனிவன்
சேயே நாளைச் செருக்களத்தி
னீயே கரியென் றெடுத்துரைத்தா
னெடியோன் றுளப முடியோனே.

[இ-ள்.] காடுகளெல்லாம் போய்த் திரிந்தும் சொன்ன விரதம் பொய்யாமல் செலுத்திவந்த பஞ்ச பாண்டவர்கள் ஐந்தூராவது கேட்க, இல்லையென்று துரியோதனன் மறுத்ததற்கு முருகக் கடவுளை யொத்த துரோணாச்சாரி குமாரரான அசவத்தாமாவே; நாளை யுத்த களத்தில் நீயே சாட்சியாக என்று எடுத்துச் சொன்னார். நெடியவனும் துளபமணிந்த முடியை யுடையவனுமாகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் எ-று. 223

ஆனா வுனதாண் மைக்குநிக
ரவனி தலத்தில் வேறுண்டோ
ஞானா திபனே போர்க்களத்தி
னாகக் கொடியோன் பணிந்துன்னைச்
சேனா பதியா கென்றாலுஞ்
செலுத்தே னென்று நீமறுத்தி
யானா லுய்வ ரைவருமற்
றவர்பா லுனக்கு மன்புண்டோ.

(இ-ள்.) நீங்காத உன்னுடைய வலிமைக்குச் சமானமாய்ப் பூமியிலேயொருவருண்டோ? ஞானத்துக் கதிபனே! யுத்தகளத்திலே சர்ப்பக்கொடிபடைத்த துரி

யோதனன் உன்னை வணங்கிச் சேனாதிபதியா யிரு வென்று சொன்னாலும், நான் செலுத்தமாட்டேன் என்று மறுத்தாயானால், பஞ்சபாண்டவர்கள் பிழைப் பார்கள், அவர்களிடத்தில் உனக்கும் விசுவாசம் உண்டே என்றார் ஸ்ரீகிருஷ்ணபகவான் எ-று. 224

ஆயோ தனத்தி லடலரியே
றனையான் றன்னை யிவ்வாறு
மாயோ னுரைத்துத் தன்விரலின்
மணியாழிமைமண் ணிடைவீழ்த்தான்
சேயோ னதனை யெடுத்தவன்றன்
செங்கை கொடுக்க வாங்காமற்
றாயோ யூர்கொள்பரிதிதனைச்
சூழ்ந்த தகல்வான் மீதென்றே.

[இ-ள்.] யுத்தத்திலே பெருமை பொருந்திய ஆண் சிங்கத்தை யொத்த அசுவத்தாமாவை இப்படி ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்லித் தமது விரலிலிருந்த ரத்தி னம் பதித்த மோதிரத்தைப் பூமியிலே நழுவவிட்டார். அசுவத்தாமா அதனை யெடுத்து அவர் கையிலே கொடுக்க வாங்காமல் பரிசுத்தமானவனே! ஆகாயத் திலே சூரியனைப் பரிவேடம்சூழ்ந்ததென்றான் எ-று. 225

வரித்தா மரைக்கட் டிருநெடுமால்
வான்வாய் நோக்க வரிவிறகைப்
பரித்தா மாவு மாழியுடன்
பரிதி வடிவந் தனைப்பார்த்தான்
கிரித்தாழ் கவிகைக் கருங்கள்வன்
கிளர் நூன் முனிவன் மைந்தனையும்
பிரித்தா னவனுஞ் சூளுற்று
னென்று ரிருந்த பேரவையோர்.

[இ-ள்.] செந்தாமரை மலாபோன்ற கண்களை யுடைய ஸ்ரீகிருஷ்ணபகவான் ஆகாயத்திலே பார்க்க நெடிய வில்லைக் கையிலேயுடைய அசுவத்தாமாவும், மோதிரத்துடனே சூரியன் வடிவைப் பார்த்தான், கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்த கள்வனாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவான், துரோணசாரி குமாரனாகிய அசுவத்தாமாவையும் பிரித்தான், அவனும் சபதம் செய்து கொடுத்தான் என்றார்கள் பெரிய சபையிலிருந் தவர்கள் எ-று. 226

தனிவந் தகலுந் தூதனைப் போய்த்
தானே யணுகித் தடஞ்சாப
முனிவன் புதல்வன் மோதிரந்தொட்
டருஞ்சூண் முன்னர் மொழிகின்று
னினிவந் துறவாய் னின்றாலு
மெங்ஙன் றெளிவா திவனையெனத்
துணிவந் தரசர் முகநோக்கிச்
சொன்னு னிடியே றன்னனே.

[இ-ள்.] தனியே வந்துபோகுந் தூதனிடத்தே தானே பலவந்தமாய்ப் போய்த் துரோணுச்சாரி குமாரனுகிய அசுவத்தாமா மோதிரத்தைத் தொட்டு அரிய சபதம் எதிரே சொல்லுகின்றுன். ஆகையால் இனி வந்து நம்முடனே சினேகமாய் நின்றாலும் எப்படி இவனை யோக்கியனென்று அறிவது என்று கோபித்து ராஜாக்களுடைய முகத்தைப் பார்த்துச் சொன்னுன். இடியேற்றை யொத்த துரியோதனன் எ-று. 227

துளியார் மதுவின் வலம்புரித்தார்
துரியோதனன்றுன் சொல்லியது
மெளியா ரவையில் வாள்வேந்த
ரொருவர்க் கொருவ ருரைத்தனவுங்
களியா னையனுன் செவிப்படலுங்
கலங்கிச் சித்த மிவரென்னைத்
தெளியா வண்ணம் போதித்தான்
றிருமா லென்றே சிந்தித்தான்.

[இ-ள்.] துளிகள் நிறைந்வ தேனையுடையநந்தியாவர்த்த மாலையை அணிந்த துரியோதனராஜன் சொல்லியதும், பிரகாசம் நிறைந்த சபையிலே வாளாயுதத்தையுடைய அரசர்கள் ஒருவர்க்கொருவர் பேசியவைகளும் களிப்பினைக் கொண்ட யானைக்குச் சமானமாகிய அசுவத்தாமா காதிலே விழுந்த வளவில் மனம் கலங்கி இந்தச் சபையில் உள்ளவர்கள் என்னைத் தமக்கு அனுகூலனென்று தெளியாவிதம் பேதப் படுத்தினுர், ஸ்ரீகிருஷ்ணபகவான் என்று நினைத்தான்.

தண்ணந் துளப முடியோனுந்
தனித்தங் கிருந்து தன்மனத்தி
லெண்ணம் பலித்த தென மகிழ்ந்தே
யிளையோன் றனக்கு விடைநல்கி

*விண்ணின் றமரர் மிகத்துதிக்க*
*விதுரன் மனையின் மேவியபின்*
*றிண்ணங் கடவுட்குலவரசன்*
*வருமா றறிந்து சிந்தித்தான்.*

[இ-ள்.]குளிர்ந்த துளபமாலையையணிந்த முடியை யுடைய ஸ்ரீ கிருஷ்ணபகவானும் தனிப்பட்டு அங்கே யிருந்து தன் மனத்திலே நினைத்த எண்ணம் பலித்த தென்று சந்தோஷித்து அசுவத்தாமாவுக்குச் செலவு கொடுத்துவிட்டு ஆகாயத்திலிருந்த தேவர்கள் மிகவுந் துதிசெய்ய விதுரன் அரண்மனைக்குப் போனபின்பு தேவர்கட்கு அரசனுகிய இந்திரன் வரும்படி தெரிந்து நினைத்தார் எ-று. 229

*அந்தக் கணத்தில் வந்திறைஞ்சு*
*மாகண் டலனை முகநோக்கிக்*
*கந்தத் துளப முடியோனுங்*
*கண்ணுங் கருத்துங் களிகூரத்*
*தந்தத் தொழிலி னரிசுமந்த*
*தவிசி னிடையே யடனிருத்தி*
*முந்தத் கருது கின்றவினை*
*முடிப்பானுபாய மொழிகின்றான்.*

]இ-ள்.] அந்த க்ஷணத்திலே வந்து வணங்கிய இந்திரன் முகத்தைப் பார்த்து, வாசனை பொருந்திய துளபமாலையை யணிந்த முடியையுடைய ஸ்ரீகிருஷ்ண பகவானும் கண்ணுங் கருத்துங் களிப்பையடைந்து யானைத் தந்தங்களால் செய்த சிங்காசனத்திலே உட்கார வைத்துக் கொண்டு தன் கருத்திலே யிருந்ததை முடிக்கும் பொருட்டு உபாயஞ் சொல்லுகிறார் எ-று. 230

*கிரியின் சிறகை யரிபடையாய்*
*கேண்மோ வாண்மைக்களமீதில்*
*வரிவெஞ் சிலைக்கை விசயனுக்கு*
*மாறய் முனிந்து வருகின்ற*
*வெரியுங் கனல்வாய் விடவரவொன்*
*றிவனுக் குற்ற பகையான*
*வரியின் புதல்வன் றனக்கொருபே*
*ரம்பா கியதா ரறியாதார்.*

[இ-ள்.] மலைகளின் சிறகை யறுத்த வச்சிரா யுதத்தையுடைய இந்திரனே! கேள், ஆண்மையாக

யுத்தகளத்திலே நீண்ட வெவ்விய வில்லையுடைய அர்ச்சுனனுக்கு மாறாகக் கோபித்து வருகின்ற விஷ நெருப்பை வீசுன்கிற வாயையுடைய அச்சுவசேனன் என்கிற சர்ப்பம் ஒன்று இவனுக்குப் பகையாகிய சூரியன் குமாரனான கர்ணனுக்கு ஒரு அம்பாகியிருப்பதை யறியாதவர்கள் யார்? எ-று. 231

கன்னன் விசயன் றனைக்கொல்விற்
கடற்பார் முழுதுங் கண்ணில்லா
மன்னன் புதல்வன் றனக்கேயா
மொழிந்தோர் தாமு மடிந்திடுவார்
முன்னஞ் சூதின் மொழிந்தபகை
முடியா திருக்கி னவர்க்கன்று
நின்னெஞ் சறிய யானறிய
நினக்கே வசையு நிலையாமே.

[இ-ள்.] கர்ணன் அர்ச்சுனனைக் கொன்றால் சமுத்திரம் சூழ்ந்த பூமி முழுவதும் திருதராட்டிரன் புத்திரனாகிய துரியோதனனுக்கே யாகும், மற்றப்பேர் யாவரும் இறந்து விடுவார்கள், சூதினாலே சொன்ன பகையை முடியாதிருந்தால், அவர்களுக்குக் குற்றம் இல்லை. உன் மனமறிய நானறிய உனக்கே குற்றம் நிலையாகும் என்றார்; ஸ்ரீகிருஷ்ணபகவான் எ-று. 232

கவசங் கனக குண்டலமென்
றிரண்டு புனையிற் கற்பாந்த
திவசம் பொரினுங் கன்னனுயிர்
செகுப்பார் மண்ணிற் சிலருண்டோ
வவசங் கிளைஞ ருறத்துணைவ
ரரற்றக் களத்தி லடுகுரங்குத்
துவசம் படைத்தோன் படும்பயந்த
துணைவா வின்னே சொன்னேனே.

[இ-ள்.] கவசம் சொர்னகுண்டலம் என்று சொல்லும் இரண்டுந் தரிப்பானேயானால் கற்பமுடிவுநாள் வரைக்கும் யுத்தம்செய்தாலும் கர்ணனுயிரைப் போக்குவார் பூமியிலே சிலபேருண்டோ? பந்துக்களெல்லாம் அவசரப்பட, உடன்பிறந்தவர்களை யுத்தகளத்தில் அனுமக்கொடி படைத்த அர்ச்சுனன் படுந்துயரத்தைத் துணைவனே! இன்றே சொன்னேன் எ-று. 233

வல்லவர் வல்ல கலைஞருக்கு
மறைநூ லவர்க்குங் கடவுளர்க்கு
மில்லா தவர்க்கு முள்ளவர்க்கு
மிறந்தோர் தமக்குந் துறந்தவர்க்குஞ்
சொல்லா தவர்க்குஞ் சொல்பவர்க்குஞ்
சூழுஞ் சமயா திபர்களுக்கு
மல்லா தவர்க்கு மிரவிமக
னரிய தான மளிக்கின்றான்.

[இ-ள்.] செயல் இல்லாதவர்களுக்கும், கலையிலே வல்லவராகிய வித்துவான்களுக்கும், வேதத்திலே வல்ல பிராமணர்களுக்கும், தேவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும், உள்ளவர்களுக்கும், இறந்தவர்களுக்கும் துறந்தவர்களுக்கும், சொல்லாதவர்களுக்கும், சொல்லுகிறவர்களுக்கும், சமயங்களிலே விசேஷமானவர்களுக்கும், இவை அல்லாதவர்களுக்கும் சூரியன் புத்திரனாகிய கர்ணமகாராஜன் அரியதானம் கொடுக்கின்றான் எ-று. 234

மைந்தற் குறுதி நீவேண்டின்
வல்லே முனிவர் வடிவாகிச்
சந்தப் பனுவ லிசைமாலைத்
தானு கரனை விரைந்தெய்தி
யந்தக் கவச குண்டலங்க
ளளிப்பா யென்றா லவனென்று
மிந்தப் புவியின் மறுத்தறியா
னுயிரே யெனினு மீந்திடுவான்.

[இ-ள்.] உன் புத்திரனாகிய அர்ச்சுனனுக்கு நீ உறுதி செய்ய வேண்டினையாகில் வல்லமையுள்ள இந்திரனே! பிராமணருடைய வடிவம்கொண்டு சந்தத்தையுடையகவிமாலையைக் கொண்ட தானத்துக் கிடமாகிய கர்ணனிடத்தில் சீக்கிரம்போய் அந்தக் கவசகுண்டலங்களைத் தருவாய் என்று கேட்டால், அவன் ஒன்றுவது இந்தப் பூமியிலே இல்லையென்று சொல்லி யறியான், உயிரைக் கேட்டாலும் கொடுப்பான் எ-று. 235

இரண்டு மவன்பா னீகவரி
னிருந்தே ரூர்திப் படியரசர்
திரண்டு வரினும் வெஞ்சமரிற்
றிண்டேர் விசய னெதிர்நில்லார்

முரண்டு பொருவிற் கன்ன னுந்தன்
முன்னே யெய்தி முடிசிதறிப்
புரண்டு மறியு மெனவணங்கிப்
புத்தே ளரசன் போகின்றான்.

[இ-ள்.] அந்தக் கவசகுண்டலங்கள் இரண்டையும் நீ வாங்கிக் கொண்டாயானால் பெரிய தேரிலேறிக் கொண்டு இந்தப் பூமியிலுள்ள அரசர்கள் திரண்டு வந்தாலும் வெவ்விய வில்லைக் கையிலே யுடைய விஜய பலமுள்ள அர்ச்சுனன் முன்னே நிற்கமாட்டார்கள். மாறுபட்டுப் பொருகின்ற வில்லையுடைய கர்ணனும் அவன் முன்னே வந்து தலையறுப்புண்டு மண்ணிற் புரண்டு மடிவான் என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்ல, அதுகேட்டு வணங்கிப் போகின்றான் தேவர்களுக்கு அரசனாகிய இந்திரன் எ-று. 236

வேறு

தண்டு தாளெனக் குனிந்துட லலமரத்
தாளிணை தளர்ந்துதள் ளாடக்
கண்டி யாவருங் கைதொழக் கவித்தகைக்
குடையுடன் கங்கைநீர் நுரைய
மொண்டு மேலுறச் சொரிந்ததா மெனநரை
திரையுடன்மூப்பொரு வடிவங்
கொண்ட தாமென வொருமுனி யாகியே
கொற்றவன் வாயில்சென் றடைந்தான்.

[இ-ள்.] சிவிகையின் தண்டுபோல்த் தேகம் வளைந்து சுழற்சியடைய, கைகள் தளர்ந்து தள்ளாட, எவர்களும் பார்த்துக் கைதொழ, கையிலே ஒரு குடையும் கங்கை நீரிலிருக்கும் நுரையை மொண்டு மேலே சொரித்தாகுமென்று சொல்ல, நரை திரைகளுடனே மூப்புத் தன்மையே ஒரு வடிவம் கொண்டதாம் என்று சொல்ல ஒரு பிராமண வடிவாகிக் கர்ணன் அரண்மனை வாசலிலே போனான் தேவேந்திரன் எ-று. 237

அடுத்த தானமும் பரிசிலு மிரவலர்க்
கருளுடன் முற்பக லளவுங்
கொடுத்து நாயகன் புகுந்தன னிளைநீர்
குறுகுமி னென்றவன் கோயிற்

*றடுத்த வாயிலோர் மீளவு முணர்த்தலிற்*
*றலைவனுந் தருகென விரைவின்*
*விடுத்த நான்மறை முனியைமுன் கண்டாலும்*
*வேந்தனுந் தொழுதடிவீழ்ந்தான்.*

[இ-ள்.] அடுத்திருக்கின்ற தானமும், யாசகமும் இரப்போருக்குக் கிருபையுடனே பதினைந்து நாழிகை யளவுங் கொடுத்துக் கர்ணமகாராஜன் அரண்மனைக்குப் போய்விட்டான். நாளையதினம் நீர் வாரும் என்று அவன் அரண்மனையில் தடுத்த வாசற்காரர் மறுபடியும் சென்று சொன்னதால், கர்ணமகாராஜன் அவரை அழையும் என்று சொல்லச் சீக்கிரத்திலே அவரும் போக, அவரைக் கண்ட மாத்திரத்திலே கர்ணனும் வணங்கினான் எ-று. 238

*என்ன மாதவம் புரிந்தனன் பரிந்துநீ*
*யீண்டெழுந் தருளுதற் கென்று*
*பொன்னி னாசனத் திருத்திமெய் யருளுடன்*
*பூசையு முறைமுறை புரிய*
*வன்ன வேதியன் றளர்ந்தவென் னடையினா*
*லானதே பிற்பகலென்று*
*சொன்ன வேலையி னகைத்தனக் களிப்பனீ*
*சொன்னவை யாவையு மென்றான்*

[இ-ள்.] என்ன தவம் செய்தேன் அன்புவைத்து நீர் இங்கே எழுந்தருளுதற் கென்று பொன்னினால் செய்த ஆசனம்போட்டு, அதிலிருத்தி உண்மைப் பக்தி யுடனே கிரமமாகப் பூசை செய்ய, அந்தப் பிராமணர் தளர்ச்சியையுடையஎன்னுடைய நடையினாலே இங்கே வர இரண்டு சாமத்திற்கு மேற்பட்டதென்று சொன்ன போது கர்ண மகாராஜன் நகைத்து, நீர்கேட்ட பொருளெல்லாம் உமக்குக்கொடுப்பேன் என்றான். எ-று. 239

*அருந்தி யீதல்பொற் சுரதரு வினுக்குமற்*
*றரிதுநீ யளித்தியோ வென்று*
*விருத்த வேதியன் மொழிந்திட நகைத்துநீ*
*மெய்யுயிர் விழைத்திரந் தாலுங்*
*கருத்தி னோடுனக் களித்திலே னெனினெதிர்*
*கறுத்தவர் கண்ணிணை சிவப்ப*
*வுருத்த போரினிற் புறந்தரு கிருபர்போ*
*யுறுபத முறுவனென் றுரைத்தான்.*

(இ-ள்.) ஆசைப் பட்டவைகளைக் கொடுப்பதற்குப் பொன்மயமாகிய தெய்வலோகத்தில் இருக்கும் பஞ்ச தருவுக்கும் அருமையாகும், நீ கொடுப்பையா வென்று அந்த விருத்தப் பிராமணன் சொல்லச் சிரித்து, நீ உடலையும் உயிரையும் விரும்பியாசித்தாலும், உள்ளன்புடனே உனக்குக் கொடாமற் போனேனேயானல்; பகைவர் கண்கள் சிவக்க எதிர்த்துப் பொருகின்றயுத்த களத்திலே முதுகு காட்டுகின்ற அரசர்கள் அடையும் பதத்தை யான் அடைவேன் என்றான் கர்ண மகா ராஜன். எ-று. 240

வந்த வந்தணன் கவசகுண் டலங்களை
வாங்கிநீ வழங்கெனக் கென்னத்
தந்த னன்பெறு கெனவவன் வழங்கவிண்
டலத்திலோர் தனியச ரீரி
யிந்தி ரன்றனை விரகினன் மாயவ
னேவினன் வழங்கனீயெனவுஞ்
சிந்தை யின்கணோர் கலக்கமற் றளித்தனன்
செஞ்சுடர்த் தினகரன் சிறுவன்.

(இ-ள்.) வந்த பிராமணன் நீ தரித்திருக்கின்ற கவச குண்டலங்களை வாங்கிக்கொடு என்று கேட்க, இதோ கொடுத்தேன் கொள்வாயென்று கொடுக்க; ஆகாயத்திலே ஓர் அசரீரிவாக்கு ஸ்ரீகிருஷ்ணபகவான் ஓர் உபாயத்தினலே இந்திரனை அனுப்பி வைத்தார் நீ கொடுக்க வேண்டாம் என்று சொல்லவும், மனத்திலே ஒரு கலக்கம் இல்லாமல் கொடுத்தான், சூரியன் புதல்வனான கர்ணமகாராஜன். எ-று. 241

அண்டர் யாவரு மலர்மழை பொழிந்தன
ரந்தர துந்துபி யார்ப்பக்
கொண்டல்வாகனன் கொண்டமெய் யொழிந்துதன்
கோலமெய் யுடன்வெளி நின்றான்
கண்டுமாமன முருகியே களித்திடுங்
கன்னனுக் கந்நெடுங் கடவுண்
மண்டு போரினில் வயந்தரு மிதுவென
மற்றொரு கொற்றவே லெடுத்தே.

[இ-ள்.] அப்போது தேவர்கள் யாவரும் புஷ்ப மாரி பொழிந்தார். தெய்வ துந்துமி சத்திக்க மேக

வாகனனுன இந்திரன் தான் கொண்ட விருத்தப்பிரா மண வேடம் நீங்கித் தனது நிச்ரூபத்துடனே எதிர் நின்றான். அது கண்டு மனமுருகிச் சந்தோஷித்த கர்ண மகாராஜனுக்கு, அந்த இந்திரன் மிகுந்த யுத்தத் திலே இது ஜயத்தைக் கொடுக்குமென்று வெற்றியுள்ள வேலாயுதத்தை யெடுத்து எ-று. 242

வெலற்க ருந்திறல்விசயன்மே லொழித்துநீ
வெஞ்சின மடங்கல்போ னெஞ்சிற்
கலக மொன்றறப் பொருதிறல் புனைந்திடு
கடோற்கசக் காளைதன் னுயிரே
யிலக்கு வந்தெதிர் மலைந்தபோ திகற்கென
வேவென மறையையு மியம்பிச்
சொலற்க ரும்புகழ்ச் சுரபதி கொடுப்பவத்
தோன்றலுந் தொழுதுகைக் கொண்டான்.

(இ-ள்.) வெல்லுதற்கரிய திறலை யுடைய அர்ச்சு னன்மேலே விடுவதை யொழித்து, நீ வெவ்விய கோபத்தையுடைய சிங்கத்தைப்போல் நெஞ்சிலே ஒரு கலக்க மில்லாமல் போர் செய்கின்ற கடோர்க்கச னுடைய உயிரே இதற்கு லக்ஷியமாகும். அவன் வந்து உன்னை யெதிர்க்கும்போது இதை விடுவா யென்று வேதமந்திரமுஞ் சொல்லிச், சொல்லுதற்கரிய கீர்த்தி யையுடைய இந்திரன் கொடுத்த, அந்தக் கர்ணனும் வணங்கிக் கையிலே வாங்கிக் கொண்டான் எ-று. 243

நிரந்த ரம்புகழ் நிலைபெறுங்கன்னனை
நெஞ்சுற மகிழ்ந்தவ ணிறுத்திப்
புரந்த ரன்பசும் தண்டுழா யணிந்திடும்
புயல்வண னிருந்துழிப் போந்தே
யிரந்து சென்றுதான் மொழிந்தது மவ்வள
வீந்தது மாங்கவற் கிசைத்தான்
வரந்த ருந்திரு மாலதை வினவியவ்
வாசவன் றனக்குரை வழங்கும்.

(இ-ள்.) எப்போதும் நிலைபெற்ற புகழுடைய கர்ண மகாராஜன் செய்கையைக் கண்டு மனமகிழ்ந்து அவனை அங்கே நிறுத்திவிட்டு, இந்திரனைவன் பசிய குளிர்ந்த துளபமாலையை அணிந்த மேகவண்ண ரான ஸ்ரீ கிருஷ்ண பகவானிருந்த இடத்திற்குப்போய்

தான் போய்க் கேட்டதும், கர்ணன் கொடுத்ததும் அவருக்குச் சொன்னான். அப்போது வரத்தைத் தருகின்ற ஸ்ரீ கிருஷ்ணபகவான் அதைக் கேட்டு அந்த இந்திரனுக்குச் சொல்லுவார். எ று. 244

உண்மை யாகவெஞ் சமர்முகத் தெறிபடை
யொன்றும்வந் துடலுற வொட்டாத்
திண்மை யாலுயர் கவசகுண் டலங்களைச்
சென்றிரந் தவற்கிவன் கொடுத்தா
னெண்மை யாயினுங் கிளைஞரே யேற்பினு
மியல்பிலாப் புன்செல்வ ரீயார்
வன்மை யாளர்தம் மாருயிர் மாற்றலார்
கேட்பினு மறுக்கிலா ரென்றே.

[இ-ள்.] சத்தியமாக வெவ்விய யுத்த முகத்திலே வீசுகின்ற ஆயுதங்கள் ஒன்றும் தேகத்திலே படவொட்டாதஉறுதியா லுயர்ந்த கவச குண்டலங்களை இரந்த இந்திரனுக்கு அந்த கர்ணன் கொடுத்தான். ஆகையால் எளிதாய் இருந்தாலும் பந்துக்களே யேற்றாலும் இயற்கை குணமில்லாத அற்ப செல்வத்தை யுடையவர்கள் கொடுக்கமாட்டார்கள். தியாகியானவர்கள் தம்முடைய உயிரைச் சத்துருக்கள் கேட்டாலும் இல்லையென்று மறுக்க மாட்டார்கள் என்று சொல்லினார். 245

வாசவன் றனக்கு விடைகொடுத் ததன்பின்
வந்தகா ரியந்தனை முடிப்பான்
கேசவன் றனது தாதையோ டுதித்த
கேண்மைகூர் தெரிவையைக் கிட்டித்
தேசவன் றந்த குரிசில்பால் விரைவிற்
செல்கெனப் பயந்தசே யிழையும்
பாசமுன் னுறமா வேவலாற் றனது
பாதபங் கயஞ்சிவப் பித்தாள்.

(இ-ள்.) தேவேந்திரனுக்குச் செலவு கொடுத்து அனுப்பிவிட்டுத் தான் வந்த காரியத்தை நிறைவேற்றும் பொருட்டு ஸ்ரீகிருஷ்ண பகவான் தன் தகப்பனோடு பிறந்த உறவு மிகுந்த குந்திதேவியின் இடத்திற்குச் சீக்கிரத்தில் போ என்றார். அவளும் அன்பானது தள்ள ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய ஏவுதலினாலேதன்னுடைய பாதங் சிவக்கப் போனாள். எ-று. 246

வந்து குந்திநின் கோயிலெய் தினளென
வாயிலோ ருரைத்திட மைந்தன்
முந்து மன்புடன ரெழுதெதிர் கொண்டுநன்
முறைமையா லாசனத் திருத்தி
யிந்து வின்கதிர் கண்டுமேன் மேலுமுற்
றிரங்கிவான் கரைகடந் தேறுஞ்
சிந்து வெண்டிரைச் சிந்துவொத் துருகுந்
தெரிவையோ டுரைசில செப்பும்

(இ-ள்.) குந்திமாதேவி உன் அரண்மனையில் வந்தாள் என்று காவற்காரர் சொல்லப் புத்திரனாகிய கர்ணன் முந்திய அன்புடனே வணங்கி எதிர்கொண்டு போய்க் கிரமப்படி ஆசனங் கொடுத்து அதிலேயிருக்கச் சொல்ல, அப்போது சந்திர கிரணங்களைக் கண்டு மனமகிழ்ந்து இரக்கமுற்று வன்மைபொருந்தியகரையைக் கடந்து அலையை வீசுகின்ற சமுத்திரத்தை யொத்து மனமுருகும் அந்தத் தாயுடனேபல பேச்சுகள் பேசுவான் அந்தக் கர்ணமகாராஜன் எ-று. 247

அன்னை வந்ததென் னருந்தவப் பயனென
வன்பினு லின்புற வணங்கி
யென்னை வந்தவா றென்னமற் றவளுமே
யீன்றதா யானுனக் கென்று
முன்னை வந்தொரு மந்திரத் தவமுனி
மொழிந்ததுங் கதிரவ னருளாற்
பின்னை வந்ததும் பேழையில் விடுத்ததும்
பிழையிலா துரைத்திடக் கேட்டே.

(இ-ள்.) தாயே நீ வந்தது யான் செய்த தவத்தின் பிரயோஜனம் என்று அன்பினாலே இன்பம் பொருந்த வணங்கி, வந்த காரியம் என்ன வென்று கேட்க அவள் நான் உனக்குப் பெற்ற தாய் என்றும், முன்னே துர்வாசமுனி வந்து ஒரு மந்திரம் சொன்னதும் சூரியனாலே நீ பிறந்ததும் உன்னைப் பெட்டியில் விடுத்ததும் பிழையில்லாமற் சொல்லக்கேட்டு. எ-று. 248

மாய னார்விர கிதுவென மனத்தினின்
மதித்து விந் தளித்திடும் வள்ள
லீய நாளெனைப் பயந்தவ ளென்னினு
மின்மொழி நெஞ்சுறத் தேறேன்

பேயனார்சிலர் பேரறி வின்மையாற்
பெற்றதா யெனக் குவந்து
தூய நாகரிக மைந்தரோர் துகிலாற்
றுன்பமுற் றென்புரு வானார்.

[இ-ள்.] இது ஸ்ரீ கிருஷ்ண பகவானுடையஉபாயம்என்று மனத்திலே நினைந்து, வேண்டியவைகளைக் கொடுக்கப்பட்ட தியாகியாகிய கர்ணமகாராஜன் நீ அந்த நாளிலே என்னைப் பெற்றவள் என்று சொன்னாலும் உன் பேச்சை என் மனம் பொருந்தத் தெளிய மாட்டேன் பேயையொத்த சிலபேர் நல்ல அறிவில்லாமையால் என்னைப் பெற்ற தாய்மார் என்று வந்து பரிசுத்தமாகிய நாகரிகமாயுள்ள ஒரு வஸ்திரத்தால் அவர்கள் எல்லாம் துன்பப்பட்டு எலும்புருவு ஆனார்கள். எ-று. 249

அடாது செய்தவர் படாதுபட் டனரென
மங்கர்கோ னருள்மொழி கேட்டுத்
தடாத வன்புடைக் கெடாதது மொழிபகர்
தையலு மையலிற் றவிர்ந்து
படாம லென்கையிற் றருகென வருதலும்
பயந்திலே னெனிலெனை முனியென்
றெடாவி ரித்ததைத் துடற்படப் போர்த்தெதி
ரீன்றதா யாமென விருந்தாள்.

[இ-ள்.] அடாத காரியத்தைச் செய்து அவர்கள் படாதபாடும் பட்டார்கள் என்று சொல்லும் அங்க தேசாதிபதியாகிய கர்ணமகாராஜன் சொல்லக்கேட்டுத் தடுக்காத அன்பினையுடைய கெடாத பரிசுத்தமாகிய சொல்லைச் சொல்லிய குந்திமாதேவியும் மயக்கத்தினின்று நீங்கி அந்த வஸ்திரத்தைக் கொண்டுவா என்று வாங்கி உன்னைப் பெறாதிருந்தேனே யானால் என்னைக் கோபிப்பாய் என்று அதையெடுத்து விரித்து உதறித் தேக முழுவதும் போர்த்தும் அன்று பெற்ற தாயென்று சொல்ல விருந்தாள். எ-று. 250

இருந்ததா யீன்ற வன்றுபோ லுருகி
யிருதடங் கொங்கைபால் சொரிந்தா
ளருந்துவான் போல விரவிசேய் விரும்பி
யாதரத் துடன்புள கானுன்

*புரிந்ததா யன்போ டிறருறத் தழுவிப்*
*பொன்முடி மோயின னுயிராப்*
*பரிந்துநா னன்றே யுனைவளர்த் தெடுக்கப்*
*பாக்கியஞ் செய்திலே னென்றாள்.*

[இ-ள்.] இப்படியிருந்த தாயும் அன்றே பெற்றவள் போலே பருத்த இரண்டு கொங்கைகளிலும் பால் சொரிய நின்றாள். அதைப் புசிக்கின்ற இளம்பிள்ளை போலக் கர்ணனும் புளகித்து விதிவழி நீங்கினான். பொன்முடி யணியும் உச்சியை மோந்து, அன்புடையவளாய்ப் பரிவு செய்து, நானும் அன்றுன்னை வளர்த்தெடுக்கப் பாக்கியஞ் செய்யவில்லை என்றாள் குந்திமாதேவி. எ-று. 251

*வருகவென் மதலா யிளைஞரை வருநின்*
*மலரடி யன்பினல் வணங்கி*
*யுரிமையான் மனமொத் தேவலே புரிய*
*வொருதனிச் செங்கோ லோச்சி*
*யரசெலாம் வந்துன் கடைத்தலை வணங்க*
*வண்மையுஞ் செல்வமும் விளங்கக்*
*குருகுலா திபர்க்குங் குரிசிலாய் வாழ்வு*
*கூர்வதே கடனெனக் குறித்தாள்*

[இ-ள்.] புத்திரனே! நீ வரக்கடவாய், உன் தம்பிமாராகிய பஞ்சபாண்டவரும் என்னுடைய மலர் போன்ற பாதத்தைப் பக்தியினாலே வணங்கி ஒருமித்து மனமொத்து ஏவல் செய்ய ஒப்பற்ற செங்கோல் செலுத்தி இராஜாக்களெல்லாம் வந்து உன் கடைவாயிற்படியில் நின்று வணங்க, ஆண்மையுஞ் செல்வமும் விளங்கக் குருகுலத்திலேயிருந்த அரசர்களுக்கு எல்லாம் அரசனாகிய வாழ்வை யடைவது முறையென்று சொன்னாள் குந்திமாதேவி. எ-று. 252

*பெற்றநீர் மகவன் பிலாமையோ வன்றிப்*
*பெரும்பழி நாணியோ விடுத்தீ*
*ரற்றைநாட் டொடங்கி யென்னையின் றளவு*
*மாருயிர்த் துணையெனக் கருதிக்*
*கொற்றமா மகுடம் புனைந்தர சளித்துக்*
*கூடவுண் டுரியதம் பியருஞ்*
*சுற்றமா னவரு மென்னடி வணங்கத்*
*தோற்றமு மேற்றமு மளித்தான்.*

[இ-ள்.] என்னைப் பெற்ற நீர் பிள்ளையாசையில்லாமலோ அல்லாமல் பெரிய பழிக்கு நாணியோ விட்டுவிட்டீர் அன்றுதொடங்கி இன்றளவும் என்னை யுயிர்த்துணையாக நினைத்து வெற்றியுள்ள பெருமை பொருந்திய முடிசூட்டி அரசளித்துக் கூடவுண்டு தன்னுடைய அருமையாகிய தொண்ணூற்றென்பது தம்பிமாரும் பந்துக்களும் என்னுடைய பாதத்தை வணங்கப் பிரகாசத்தையும் உயர்வையும் கொடுத்தான். எ-று.

மடந்தைபொற் றிருமே கலைமணி யுகவே
மாசறத் திகழுமே காந்த
விடந்தனிற் புரிந்தே நானயர்ந் திருப்ப
வெடுக்கவோ கோக்கவோ வென்றான்
றிடம்படுத் திடவே விராசரா சனுக்குச்
செருமுனைச் சென்றுசெஞ் சோற்றுக்
கடன்கழிப் பதுவே யெனக்கினிப் புகழுங்
கருமமுந் தருமமு மென்றான்.

[இ-ள்.] குற்றமற்றுப் பிரகாசிக்கின்ற ஏகாந்தஸ்தானத்தில் அவன் மனைவியினுடைய பொன்னினால் செய்த அழகிய மேகலைமணி யுதிரஞ் செய்து, அவள் வருதலைக் கண்டு நான் வருத்தப்பட்டுக் கொண்டு இருக்க, அப்போது எனக்குத் திடஞ்சொல்லி அந்த மணிகளை எடுக்கவோ எடுத்துக்கோக்கவோ என்றான். அப்படிப்பட்ட மெய்ம்மை படைத்துள்ள அரசர்க்கு அரசனாகிய துரியோதனனுக்கு யுத்தமுகத்திற்போய்ச் செம்மையாகிய சோற்றுக்கடன் கழிப்பதுவே இனி எனக்குக் கீர்த்தியுந் தொழிலுந் தருமமும் என்றான் கர்ணமகாராஜன். எ-று. 254

பின்னையும் பற்பன் பொழிந்தபின் பலவும்
பேசியென் பூசலோ விளைந்த
துன்னிநீ ரிங்கு வந்ததென் காவா
துண்மையா லுள்ளவா றுரைமி
னென்னமைந் தனுமிப் பரிசினா லுரைப்ப
வீன்றறத் துறந்தவன் றையினு
மன்னைநெஞ் சழித்தே யிருகணீர் சொரிய
வலறிவாய் குழறிநொந் தழுதாள்.

[இ-ள்.] மறுபடியும் அனேக வார்த்தைகள் பேசி இனிப் பலவார்த்தைகள் பேசி யாவதென்ன? யுத்தம் விளைந்திருக்கின்றது, என்னை இப்போது நீர் நினைத்து வந்தழைப்பது உண்மையாக உள்ளபடி சொல்லும் என்று கர்ணமகாராஜன் இத்தன்மையினாலே சொல்லப்பெற்று ஆற்றிலேவிட்ட அன்றையினும் மனமகிழ்ந்து இரண்டு கண்களிலும் நீர் சொரிய அலறி வாய்குளறிநொந்தழுதாள் குந்திமாதேவி. எ-று.

ஆண்டுமா மகனு மிருகணீர் துடைத்தவ்
வன்னையைப் பன்முறை தேற்றி
மூண்டவல் வினையின் பயனலா தியார்க்கு
முயற்சியால் வருவதொன் றுண்டோ
வேண்டும்யா வையுமே தருகுவே னீரும்
வேண்டிய வேண்டுக வென்னப்
பாண்டுவின் றிருமா மனைவியு மதற்குப்
பண்பினு லின்னன் பகர்வாள்

[இ-ள்] கர்ணனாகிய புத்திரனும் இரண்டு கண்களினின்று வருகின்ற நீரைத் துடைத்து, அந்தத் தாய்க்குப் பலதரந் தேறுதல் சொல்லி மூண்டிருக்கின்ற தீவினை பயனல்லாமல் யார்க்கும் முயற்சியினாலே வருகின்ற காரியமுண்டோ? நீர் என்னை என்ன கேட்கின்றீரோ அவையெல்லாந் தருவேன்; நீர் விரும்பியதைக் கேளும் என்று சொல்லப் பாண்டு மகாராஜனுடைய மனைவியான குந்திமாதேவியும், அதற்கு இனிய குணத்தோடு இது வேண்டும் என்று சொன்னாள். எ-று. 256

பார்த்தன் வெஞ்சமரி னின்னுடன் மலைந்தாற்
பகைப்பெரும் பாந்தளம் பகழி
கோத்தனும் பிழைத்தான் மறித்துநீ விடுத்துக்
கோறெயின் றொருவரங் குறித்தாள்
வாய்த்தமற் றவர்க ளிளைஞரென் றவரை
மலையலென் றொருவரங் குறித்தாள்
மூத்தவன் காதலி ளைஞர்தம் பொருட்டான்
மொழிந்தமை கேட்டிவை மொழிவான்.

[இ-ள்] அர்ச்சுனன் வெவ்விய யுத்தத்தில் உன்னுடனே யுத்தஞ் செய்தால், பகையையுடைய நாகாஸ்திரத்தைக் கோத்துத் தொடுத்தவளவில் தப்பினுல், இரண்டாந்தாமும் விட்டுக் கொல்லாதே யென்று ஒரு வரங் கேட்டாள். மற்றப் பாண்டவர்களும் தம்பிமாரென்று அவ்ருடனே போர் செய்யாதே யென்று ஒரு வரங் கேட்டாள்; மூத்தவனுகிய கர்ணன் தம்பிமார் பொருட்டுத் தாய் சொன்னவைகளைக் கேட்டு இவை சொல்லுவான் எ-று. 257

தெறுகணை யொன்று தொடுக்கவு மூனந்து
செருச்செய்வோன் சென்னியோ டிருந்தான்
மறுகணை தொடுப்ப தாண்மையோ வலியோ
மானமோ மன்னவர்க் கறமோ
வுறுகணை யொன்றே பார்த்தன்மேற் றொடுப்ப
னொழிந்துளோ ருய்வரென் றுரைத்தான்
தறுகண ரலர்க்குந் தறுகணு னவர்க்குந்
தண்ணளி நிறைந்தசெங் கண்ணன்.

[இ-ள்.] கொல்லப்பட்ட பாணம் ஒன்று தொடுக்கவும், எதிரிட்டு யுத்தஞ் செய்வோன் சிரசுடனே தப்பியிருந்தால் மறுகணை தொடுப்பது ஆண்மையோ? வல்லமையோ? மானமோ? அரசர்க்குத் தருமமோ? ஒரு கணையே அர்ச்சுனன்மேல் விடுவேன்; மற்ற பேர்கள் பிழைப்பார்கள் என்று சொன்னுன்; அவன் யாரென்று சொன்னுல் நல்லவர்களுக்கும் பொல்லாதவர்களுக்கும் தண்ணிய கிருபை நிறைந்த சிவந்த கண்களையுடைய கர்ணமகாராஜன் எ-று 258.

பெருவர மிரண்டும் பெற்றபின் றன்னைப்
பெற்றதா யினைக்கரங் குவித்துத்
தருவர மெனக்கு மிரண்டுள வுலகிற்
சராசரங் களுக்கெல்லாந் தாயீர்
வெருவரு மமரிற் பார்த்தனு லடியேன்
வீழ்ந்தபோ தவனிய ரறிய
மருவரு முலைப்பா லெனக்களித் துந்த
மகனெனும் வாய்மையு முரைப்பீர்.

(இ-ள்.) பெரியவாம் இரண்டும் பெற்றபின்பு தன்னைப் பெற்ற தாயைக் கைகுவித்து வணங்கி, நீர் எனக்குத் தருகின்ற வரங்கள் இரண்டுண்டு- உலகத்திலே சராசரங்களுக்கு எல்லாந் தாயானவரே! அஞ்சத்தக்க யுத்த களத்தில் அர்ச்சுனனாலே நான் வீழ்ந்தபோது இவ்வுலகத்தை யாளும் அரசர்கள் அறிய முலைப்பால் எனக்குக்கொடுத்து நான் உம்முடைய பிள்ளை யென்கின்ற உண்மையைச் சொல்லுவீர் எ-று. 259

உய்வருந் திறல்வெம் போர்முடிப் பளவு
முமக்குநான் மகனெனுந் தன்மை
வையரு மறியா வண்ணநீர் காப்பீ
ரல்லதங் கவர்சிறி தறியின்
மைவருங் கடற்பா ரனைத்தையு மெனக்கே
வழங்குவர் வழங்கினல் யானென்
கைவருந் துணைவன் றனக்கலால் வழங்கேன்
கடைப்பிடி கருமமீ தென்றான்.

(இ-ள்.) பிழைத்தற்கரிய வெவ்விய யுத்த முடிவுவரைக்கும் நான் உமக்குப் பிள்ளை யென்கிற தன்மையைப் பஞ்சபாண்டவர்கள் அறியாவிதம் நீர் காத்தல் வேண்டும். அல்லாமல் அவர் சிறிதாவது அறிந்தால் கருங்கடல் சூழ்ந்த பூமியெல்லாம் எனக்கே கொடுப்பார்கள். கொடுத்தால் யான் என்னுடைய துணைவனாகிய துரியோதனனுக்குக் கொடுப்பேனே யல்லாமல் வேறொருவருக்குக் கொடுக்க மாட்டேன். இந்தக் காரியத்தை மறவாதே யென்றான் கர்ணமகாராஜன் எ-று.

என்றலு மதுகேட் டென்றதா யொக்கு
மென்றுகொண் டிவ்வர நேர்ந்து
வன்றுயர் மேன்மேல் வளரயான் றளரா
வகையுயி ருனக்குமற் பெயர்வ
தென்றினி யெனத்தன் கண்கணீர் சொரிய
விணைந்துணைந் தழுதழு திரங்கி
யென்றருண் மதலை தனைத்தழீஇ நிறுத்தி
யாதவ னிருந்துறச் சென்றாள்.

(இ-ள்.) அப்படிச் சொன்னவளவில் அது கேட்டுப் பெற்ற தாயாகிய குந்தியாதேவியும் சரியென்று இந்த வரங்கள் இரண்டையும் கொடுத்து, வலிமை பொருந்திய துக்கம் மேலுமேலும் உண்டாக இனி யான் தளராதவிதம் உயிருனக்கு முன்னே நீங்குவ தென்று தன் கண்களிலிருந்து நீர் சொரிய நைந்து அழுதழுது இரக்கமுற்று நின்று தன் பிள்ளையைத் தழுவிக் கொண்டு அங்கே நிறுத்திவிட்டு ஸ்ரீ கிருஷ்ண பகவான் இருந்த இடத்திற்குப் போனாள் எ-று. 261

கண்ணனுங் குந்தி கன்னனோ டுரைத்த
கருத்தெலாந் திருத்தமாக் கேட்டாங்
கெண்ணமு முடிந்த தெனமகிழ்ந் தந்த
வணங்கையு மில்லிடை யிருத்தித்
தண்ணளி யுடன்றன் பின்வரு நிருபர்
தம்மையு முறைமுறை நிறுத்திப்
பண்ணமை தடந்தேர் மீதுகொண் டன்றே
பாண்டவ ருறைநக ரடைந்தான்.

(இ-ள்.) ஸ்ரீ கிருஷ்ணபகவானும் குந்திமாதேவி கர்ணனோடு சொல்லிய கருத்தையெல்லாந் திருத்தமாகக் கேட்டு, நம்முடைய எண்ணமெல்லாம் நிறைவேறியதென்று மனமகிழ்ந்து அவளை அந்த வீட்டிலே நிறுத்திவிட்டு, குளிர்ந்த தயையுடன் பின்னே வந்த அரசர்களையும் அங்கங்கே நிறுத்திவிட்டு, உறுப்பமைந்த விலாசம் பொருந்திய தேரின்மேல் ஏறிக்கொண்டு அப்பொழுது பாண்டவர்கள் இருக்கின்ற நகரத்தை யடைந்தார் எ-று. 262

தூதுபோ யரவத் துவசனோ டுறுதி
சொன்னது மறுத்தவன் சினந்து
மோதுபோர் புரியத் துணிந்ததும் விதுரன்
முரிவில் லிறுத்ததுங் கங்குற்
போதுபோர் வஞ்சம் விளைத்ததுங் கன்னன்
புரந்தரற் கீந்ததும் பயந்த
மாதுபோய் வரங்கள் பெற்றவை யொழிய
மற்றெலா மைத்துனர்க் குரைத்தான்.

(இ-ள்.) தூதுபோய் சர்ப்பக்கொடி படைத்த துரியோதனனுக்கு உறுதி சொன்னதும், அதையவன் மறுத்துக் கோபித்து மோதப்பட்ட யுத்தத்துக்கு சம்மதித்துத் துணிந்ததும் விதுரன் வலிமையுள்ள தன் வில்லை யொடித்ததும், இராத்திரியில் நிலவறை வெட்டித் தனக்கு வஞ்சனை செய்ததும், கர்ணன் கவசகுண்டலங்களைத் தேவேந்திரனுக்குக் கொடுத்ததும், பெற்ற குந்திமா தேவி கர்ணன் இடத்திற்குப்போய்ப் பெற்ற வரங்கள் தவிர மற்றவைகளெல்லாம் மைத்துனராகிய பஞ்சபாண்டவர்களுக்குச் சொல்லினர்; ஸ்ரீகிருஷ்ணபகவான் எ-று. 263

## வாழி விருத்தம்

பஞ்சவர் தூதனென்னும் பக்தவச் சலனும் வாழி
கஞ்சதென் முகத்தா ளான கற்புத்தென் பதியும்வாழி
வஞ்சமில் மனத்தோ ரான மன்னரை வர்கள் வாழி
செஞ்சொலாவிகைப்படித்தோர் செகந்தொறும் வாழி மாதோ

## ஸ்ரீ கிருஷ்ணசுவாமி தூது

முற்றிற்று.



ஸ்ரீ ... அச்சகம், சென்னை-1.